# விசேஷித்த பலிகளின்

# ஆசரிப்புக்கூடார நிழல்கள்

# Tabernacle shadows of the “Better Sacrifices”

# விசேஷித்த ப-களின்
# ஆசாரிப்புக்கூடார நிழல்கள்

**இராஜரீக ஆசாரிய கூட்டத்திற்கு**
**உதவும் ஒரு கரம்**

முதற்பதிப்பு : 2009

**சென்னை வேதமாணவர் சபை**
22, முதல் தெரு, ராஜீவ் நகர்,
காலாடிப்பேட்டை, சென்னை-600 019.

# Tabernacle Shadow

Tamil version

I Edition 2009 - 1500 copies

**NOT FOR SALE**

Translated by :
**Connoor Bible Students**

Revised by :
**Chennai Bible Students**

# அர்ப்பணிப்பு

## ராஜாதிராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமானவருக்கும்

புத்திர சுவிகாரத்துக்கு காத்துக்கொண்டிருக்கும்
பிரதிஷ்டைக்குட்பட்ட அவருடைய பரிசுத்தவான்கள்

மற்றும்

கர்த்தரை எங்கும் தொழுதுகொள்ளும் விசுவாச வீட்டார்கள்

மற்றும்

தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்கு மிகுந்த ஆவலோடு காத்திருந்து
தவித்து பிரசவவேதனைப் படுகிற சிருஷ்டிகள் ஆகியோரின் நலன்களுக்காக

இந்தப் பணி அர்ப்பணிக்கப்படுகிறது.

❀ ❀ ❀

“தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம்
இன்னதென்று எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கு,” “அந்தக்
கிருபையை அவர் சகல ஞானத்தோடும் புத்தியோடும் எங்களிடத்தில்
பெருகப்பண்ணினார். காலங்கள் நிறைவேறும்போது
விளங்கும் நியமத்தின்படி சகலமும் கிறிஸ்துவுக்
குள்ளே கூட்டப்படவேண்டு மென்று
தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்
முடைய தயவுள்ள சித்தத்
தின் இரகசியத்தை எங்
களுக்கு அறிவித்தார்.”
(எபே.3:11, 1:8-10)

❀ ❀ ❀

போதகர் ரசல் அவர்களால் 1881ல் எழுதப்பட்டது.

❀ ❀ ❀

# ஆக்கியோனின் முன்னுரை

இச்சிறு புத்தகத்தின் முதல் பதிப்பானது கி.பி. 1881ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. தேவனுடைய ஆசீர்வாதத்தினாலே, "ராஜரீக ஆசாரிய கூட்ட வகுப்பாருக்காகவே" விசேஷமாக எழுதப்பட்டிருக்கிறதனாலே அவ்வகுப்பாருக்கு இது மிகவும் பயன் உள்ளதாக காணப்படுகிறது. இந்த வகுப்பைச் சார்ந்த அநேகருக்கு முன்பு வெளிப்படுத்தப்படாத பழைய ஏற்பாட்டுக் கால நிழல்களுக்கான பொருளை தேவனின் விரல் தெளிவாக சுட்டிக் காட்டுவதாகவும் இவ்வாறாக தங்களை தாங்களே ப-களாக ஒப்புக் கொடுக்கவும், வேதத்தில் உள்ள "நீங்கள் உங்கள் சரீரங்களை ஜீவ ப-களாக ஒப்புக் கொடுங்கள்," "கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக மாம்சத்திலே நிறைவேற்றுங்கள்," "அவரோடே கூடப் பாடுகளை சகித்தோமானால் அவரோடே கூட ஆளுகையும் செய்வோம்," "நாம் அவருடைய நிந்தையைச் சுமந்து பாளையத்துக்குப் புறம்பே அவரிடத்திற்குப் புறப்பட்டுப் போகக் கடவோம்" போன்ற வார்த்தைகளின் பொருளை முழுமையாக அறிந்து கொள்ளவும் இப்புத்தகம் தங்களை நடத்திச் செல்வதாகவும் இதை வாசிப்போர் ஒப்புக் கொண்டுள்ளனர். மேலும், கிறிஸ்துவின் பாடுகளோடும், வருங்கால மகிமையோடும் பங்குகொள்ளும் தேவனுடையப் பிள்ளைகள் பற்றி வேதம் சொல்லுகிற அநேக காரியங்களைப் பற்றியும் இப்புத்தகம் விளக்குகின்றது.

இதன் ஆசிரியர் சந்தோஷத்தோடே தேவனிடத்தில் ஜெபிப்பது யாதெனில் இதற்கு முந்தைய பதிப்பிலே அவருடைய ஆசீர்வாதம் இருந்ததுப் போல இந்தப் பதிப்பிலேயும் இருந்து, வேதாகம பாடங்களின் தொகுதிகளிலே (Studies in the scripture) இதுவும் ஒரு பாகமாக – ஐந்தாவது தொகுதியின் இணைப்பாக இருந்து பயனுள்ளதாக இருக்க

வேண்டும் என்பதே. வசதிக்காக இது ஒரு தனிப் புத்தகமாக வெளியிடப்படுகிறது. எழுத்துக்களின் அச்சு வடிவங்கள், கூடுதலாக ஒரு அதிகாரம் சேர்ப்பு, சில கருத்துக்களை இன்னும் தெளிவாகக் கூற சொற்றொடர்களில் சில வார்த்தைகள் மாற்றம் போன்ற சில சிறு மாற்றங்கள் தவிர வேறு எந்த வித மாற்றமும் இந்த பதிப்பில் செய்யவில்லை.

இதில் அடங்கியிருக்கும் பாடங்கள் தேவனால் போதிக்கப் பட்டதாகவே தெரிகிறது. யுகங்களைப் பற்றிய தேவ திட்டத்தை தெளிவாக தெரிந்து கொள்ளவேண்டிய கால கட்டத்தில் இது அருளப் பட்டிருக்கின்றது. இப்புத்தகத்தினாலே தேவ ஆசீர்வாதங்கள் பெற்றவர்களும் இதை படிப்பதினாலே பெறப் போகிறவர்களும் தேவனால் போதிக்கப்படுகிறவர்கள் என நாம் நம்புகின்றோம். இவைகள் தேவனுடைய வார்த்தையின் படியே சொல்லப்பட்டிருக்கின்றதேயல்லாமல் எழுதியவரின் ஞானத்தினால் அல்ல. தேவனுடைய வார்த்தையின் மூலமாக, நாம் அறிந்து கொண்டதை தக்க வேத ஆதாரத்துடன் ஒவ்வொருவருக்கும் கேட்கிற யாவருக்கும் இக்காரியங்களை எழுதியிருக்கின்றோம்.

இதிலே சொல்லப்பட்டிருக்கும் நிழல்களின் உண்மைப் பொருளானது, யுகங்களைப் பற்றிய தேவஏற்பாட்டிலே சொல்லப் பட்டிருக்கின்றவைகளோடு ஒத்துப் போகக் கூடியதாக இருக்கிறதை ஆழ்ந்து படிக்கின்ற வேத மாணவர் அறிந்துக் கொள்வர். குறிப்பாக நீதிமானாக்கப்படுதல், பரிசுத்தவானாக்கப்படுதல், திருச்சபை மகிமை அடைதல், பின்பு கடைசியாக மனுக்குலம் முழுவதையும் முந்தின சீருக்குக் கொண்டு வருதல் போன்ற சத்தியங்களோடு ஒத்துப் போவதை காணலாம்.

அருமையான வாசகரே, இதிலே சொல்லப்பட்டிருக்கும் காரியங்கள் உங்களுக்கு உண்மையானதாக இருக்குமானால், நிச்சயமாக அவைகள் உங்களை விழித்தெழுப் பண்ணி, உலகப் பிரகாரமான ஆசைகளை ப-யிடச் செய்வதோடு மட்டுமல்லாமல், வேதனையை

அனுபவித்துக் கொண்டிருக்கின்ற இந்த மனுக்குலத்தையும் ஆசீர்வதிக்கத்தக்கதாக, நம்முடைய பிரதான ஆசாரியரோடு ஆசாரியர்களாகும் பரிசைப் பெறுவதற்கு உறுதுணை செய்கிறது. அவ்வாறு நீங்கள் இந்த ஆசீர்வாதத்தை பெறும்போது மற்றவர்களும் அதை பெறும்படிக்கு அவர்களுக்கும் அதை கொடுக்கக் கடவீர்கள். இந்த ஊழியத்தில் நீங்கள் பங்கு பெற விரும்பினால், இந்த புத்தகங்களை குறைந்த விலையில் வாங்கி பயன்படுத்தலாம். தேவனுடைய பந்தியில் ஆகாரம் பெறும் ஒவ்வொருவரும் "தேவனோடு கூட உடன் ஊழியர்கள்" என்ற சிலாக்கியத்தை பெறக் கூடியவர்களாக கருதப்படுகின்றனர்.

கிறிஸ்தவ அன்போடு,

உங்கள் சகோதரனும் கிறிஸ்துவுக்குள்ளான

ஊழியனுமான

**சார்லஸ் டி. ரஸ்ஸல்**

# பொருளடக்கம்


## அத்தியாயம் 1

## நிழலான ஆசரிப்புக் கூடாரம்

பாளையம் – பிரகாரம் – ஆசரிப்புக் கூடாரம் – வெண்கல ப–பீடம் – தண்ணீர் தொட்டி – மேஜை – குத்து விளக்கு – பொன் தூப பீடம் – கிருபாசனமும் உடன்படிக்கை பெட்டியும் – வாசல் – முதல் திரை – இரண்டாம் திரை – இவற்றின் முக்கியத்துவமும் அவற்றின் ஞான அர்த்தங்களும். ,,,, 11

## அத்தியாயம் 2

## இஸ்ரயேலர்கள், லேவியர்கள் மற்றும் ஆசாரியர்கள்

மனுக்குல வகுப்பாருக்கு நிழலாக இருக்கும் இஸ்ரயேலர்கள் – லேவியர்கள் மற்றும் ஆசாரியர்கள் – ஆசாரியர்களின் அபிஷேகம் – பிரதான ஆசாரியனின் மகிமையும் அலங்காரமுமான வஸ்திரங்களின் மகிமை மற்றும் சௌந்தர்யம் இவற்றின் நிழலான காரியங்கள் – ஆபிரகாமின் உடன்படிக்கை, நியாயப்பிரமாண உடன்படிக்கை, புதிய உடன்படிக்கை ஆகியவற்றின் நிழல்கள். ,,,, 27

## அத்தியாயம் 3

## ஆசாரியர்களை பிரதிஷ்டை செய்தல்

தேவனுடைய ஊழியத்திற்காக தனியாக பிரித்தெடுத்தல் – “நீ மரண பரியந்தம் உண்மையுள்ளவனாயிரு” – “உங்களை நீங்களே பரிச்சுத்தப்படுத்துங்கள், நான் உங்களை பரிசுத்தம் பண்ணுவேன்” – பிரதிஷ்டை செய்யப்படும் காளைகளும் வெள்ளாட்டுக்கடாக்களும் – பிரதிஷ்டையின் அபிஷேகத் தைலம். ,,,, 43

## அத்தியாயம் 4

## பாவ நிவாரண மகா நாள்

### லேவி 16:3-33

வரிசை கிரமமான நிழலான காரியங்களும் அவற்றின் ஞான அர்த்தங்களின் முக்கியத்துவமும் – காளை – ஆசாரியன் பரிசுத்த ஸ்தலங்களில் இரத்தத்தோடு

பிரவேசித்தல் – சுகந்த வர்க்கங்கள், சுகந்த வாசனை, மற்றும் துர்நாற்றம் – மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்தல் – கர்த்தரின் வெள்ளாட்டுக் கடா – போக்காடு – ஜனங்களை ஆசீர்வதித்தல். ,,,, 53

## அத்தியாயம் 5

## பாவநிவாரண ப-களுக்கான மற்றொரு நிழல்

### லேவி 9

பாவ நிவாரண ப–களைக் குறித்து விவரமான விளக்கம் –மோசேயும் ஆரோனும் ஆசரிப்பு கூடாரத்தில் பிரவேசித்து பின்பு மீண்டும் வெளியே வந்து ஜனங்களை ஆசீர்வதித்தல் – “தமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு அவர் தரிசனமாவார்” – “மரணத்திற்குப் பிறகு நியாயத் தீர்ப்பு” – பாவ நிவாரண ப–யை தேவன் அங்கீகரித்ததை வெளியரங்கமாக்குதல். ,,,, 87

## அத்தியாயம் 6

## “பாவநிவாரண நாளை” தொடர்ந்து வரும் ப-கள்

இவைகள் ஆயிர வருட அரசாட்சியில் நடக்கும் மனம் திரும்புதல், பொருத்தனைகள், உடன்படிக்கைகள் ஆகியவற்றிற்கு நிழலாக சொல்லப்பட்டிருக்கின்றன – ஜனங்களின் தகன ப–கள் – அவர்களுடைய சமாதான ப–கள் – அவர்களுடைய போஜன ப–கள் – அவர்களுடைய குற்ற நிவாரண ப–கள் – ஆண் பெண் வித்தியாசங்கள் இனி இல்லை என்பதற்கான நிழல்கள். ,,,, 103

## அத்தியாயம் 7

## “தீட்டுப்பட்டவர்கள் மேல் தெளிக்கப்படும் கடாரியின் சாம்பல்”

### எபி 9:13

பாவ நிவாரண நாளின் ப–களில் இது ஒன்றல்ல – அதை தொடர்ந்து வரும் ப–களிலும் இது ஒன்றல்ல – இந்த ப–யினால் நிழலாக சொல்லப்படும் வகுப்பார் – இதனை ஞான அர்த்தமாக சொல்லும் ஆசாரியனாகிய அப்போஸ்தலன் பவுல் – ஆயிரம் வருட யுகத்தில் ஜனங்களை சுத்திகரிப்பதற்காக சாம்பலை தெளித்தல் – இச்சுத்திகரிப்பு எவ்விதமாகச் செய்யப்படும்? ,,,, 117

## அத்தியாயம் 8
## குறிப்பிடத்தக்க இதர நிழல்கள்

பிரகாரத்தின் தூண்கள் – வெள்ளைத்திரைகள் – வெள்ளி கொக்கிகள் – பரிசுத்த, மகா பரிசுத்த ஸ்தலங்களின் நிலைக்கால்கள் – பொன் மேஜை – பொன் குத்துவிளக்கு – ஆழமான காரியங்களை அறியும் நிஜ ஆசாரியர்களும், அறிந்துகொள்ளாத நிஜ லேவியர்களும் – பொற் ப– பீடம் – மகாபரிசுத்த ஸ்தலத்தில் உள்ள உடன்படிக்கை பெட்டி – அதில் அடங்கியுள்ள பொருட்களும் அவற்றின் முக்கியத்துவமும் – கிருபாசனம் – இரண்டு கேரூபீன்கள் – கறைபடாத ஆசாரியன் – யுகாயுகமாய் மறைவாயிருந்த மாபெரும் இரகசியம். ,,,, 127

# மேலான ப-களின் ஆசரிப்புக் கூடார நிழல்கள்

## அத்தியாயம் 1

## நிழலான ஆசரிப்புக் கூடாரம்

பாளையம் – பிரகாரம் – ஆசரிப்புக் கூடாரம் – வெண்கல ப-பீடம் – தண்ணீர் தொட்டி – மேஜை – குத்து விளக்கு – பொன் தூப பீடம் – கிருபாசனமும் உடன்படிக்கை பெட்டியும் – வாசல் – முதல் திரை – இரண்டாம் திரை – இவற்றின் முக்கியத்துவமும் அவற்றின் ஞான அர்த்தங்களும்.

தேவன் இஸ்ரேல் ஜனங்களை சீன் வனாந்தரத்தில் ஆசரிப்பு கூடாரத்தை கட்டச் சொல்- அதிலே நடப்பிக்கும்படி கட்டளையிட்ட ஒவ்வொரு காரியமும் இனி வரப் போகிற நன்மைகளின் நிழலாக இருக்கிறதாக அப்போஸ்தலனாகிய பவுல் நமக்கு உணர்த்துகிறார். (எபி 8:5; 10:1; கொலோ 2:17) உண்மையில், இஸ்ரயேல் ஜாதி முழுவதும் (அதனுடைய நியாய பிரமாணங்கள், பல்வேறு மதச் சடங்குகள் உட்பட) ஒரு நிழலாக இருக்கிறது. வருஷந்தோறும் செய்யும்படி இஸ்ரேல் ஜனங்களை கட்டளையிட்டு அவர்கள் செய்து வந்த ஒவ்வொரு நிழலான காரியமும் தற்காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிற நம்முடைய புரிந்து கொள்ளுதலுக்கும், நடைபெற்று வரும் நமது இரட்சிப்பிற்கும் சுவிசேஷ கால நிறைவேறுதலுக்குமான நிறைவேறுதலாக இருக்கின்றன. – 1 பேது 1:11; எபி 10:1–3.

யூதர்களுடைய வாழ்க்கை அவர்களுடைய சடங்குகள் அவர்களுடைய வழிபாடு முறைகள் ஆகியவை குறித்த வரலாற்று ஞானத்தை பெற்றுக் கொள்வதற்காக மாத்திரம் நாம் இந்த பாடத்தை இவ்வளவு ஆழ்ந்து படிக்கவில்லை. மாறாக தேவன் அவற்றை ஒழுங்குபடுத்தி உருவாக்கியதால் நமக்கு அவர்கள் மூலமாக

சொல்லப்பட்டிருக்கும் நிழல்களின் **பொருளை** அறிந்து கொள்வதற்காகவே ஆகும்.

தேவன் எவ்வளவு கவனத்தோடு இக்காரியங்களை நடத்தினார் என்பதை நாம் உணராமல் இருந்தால், நிச்சயமாக இந்நிழலானவைகளுக்கு தகுந்த முக்கியத்துவத்தை அளிக்க தவறிவிடுவோம். முதலாவதாக அவர் மோசேயை மலைக்கு அழைத்துச் சென்று அங்கே எவ்விதமாக காரியங்கள் செய்யப்பட வேண்டும் என்று அவருக்கு ஒரு மாதிரியை காண்பித்தார். இரண்டாவதாக ஒவ்வொன்றிலும் வெகு கவனத்தோடு இருக்குமாறு அவனுக்கு கட்டளையிட்டார். “மலையிலே உனக்கு காண்பிக்கப்பட்ட மாதிரியின் படியே செய்ய எச்சரிக்கையாயிரு.” (எபி. 8:5; யாத் 25:40) ஆகையினால் ஒவ்வொரு சிறு பாகத்தையும் கவனமாக செய்யவேண்டுமென்று எச்சரித்தார். ஏனெனில் அவை ஒவ்வொன்றும், சிறியதானாலும் பெரியதானாலும் வரப்போகிற விசேஷமானவைகளின் நிழலாக இருப்பதினால் இந்த நிழல்கள் சரியாக அனுசரிக்கப்படவும், ஜனங்கள் இதில் அலட்சியம் காட்டாதிருக்கவும் அவ்வாறு செய்தார். அவர் கட்டளையிட்டதற்கு மாறாக செய்த எவனும் மரண தண்டனையை பெற்றதாக வேதத்தில் பார்க்கலாம். உதாரணமாக யாத் 28:43; எண் 4:15, 20; 17:13; 2 சாமு 6:6,7; லேவி 10:1,2 ஆகிய வசனங்களை பார்க்கவும்.

இந்த நிழலை உருவாக்க தேவன் எடுத்துக்கொண்ட கரிசனத்தை உணர்ந்து கொள்வதானது நமக்கு அதின் சரியான தன்மையில் நம்பிக்கையான ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் அழிந்து போகாது என்பதற்கிசைய, நிறைவேறுவதோடு மட்டுமல்லாது, நமக்குள்ளாக இருக்கும் வாஞ்சையை விழித்தெழப் பண்ணி, அவருடைய நிழ-ல் இருக்கும் ஆழ்ந்த சத்தியங்களை ஆராய்ந்து அறிந்துகொள்ளக்கூடிய உணர்வையும் தருபவைகளாக இருக்கின்றன. ஆகையினால் “கேட்கிற எவனும் பெற்றுக் கொள்கிறான், தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்கு திறக்கப்படும்” (மத் 7:8) என்பது போல தேவனுக்கு தங்களை தத்தம் செய்தவர்களும், தேவனுடைய ஆவியினால் பிறந்த நாம் ஒவ்வொருவரும் அவருடைய ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள முற்படுவோமாக.

# ஆசரிப்பு கூடார நிர்மாணம்

ஆசரிப்பு கூடாரத்தை நிர்மாணிப்பதற்கான முறைகளையும் பயன்படுத்த வேண்டிய பொருட்களையும் தேவன் மோசேக்கு சொன்னவைகளை யாத்திராகம் 25 முதல் 27 வரையிலுள்ள அதிகாரங்களில் காணலாம். நடத்தப்படவேண்டிய பணிகளையும் வழிமுறைகளையும் யாத்திராகமம் 35 முதல் 40 வரையிலுள்ள அதிகாரங்களில் தெளிவாகக் காணலாம். சுருக்கமாக சொல்ல வேண்டுமானால், ஆசரிப்புக் கூடாரம் என்பது சீத்திம் மரத்தால் **(அகேஷியா)** செய்யப்பட்ட பலகைகள் பொன்னினாலே முழுவதுமாக மூடப்பட்டு, பாதங்கள் வெள்ளியினால் செய்யப்பட்ட கட்குழிகளிலே சொருகப்பட்டு அதே மரத்தின் சட்டங்களால் ஒன்றிணைக்கப்பட்டு அமைக்கப்பட்டிருக்கும் ஒரு வீடாகும்.

இந்த கூடாரத்தின் திறந்த முன்பகுதி கிழக்கு திசை நோக்கி இருக்கும். இதன் நீளம் 45 அடி, அகலம் 15 அடி, உயரம் 15 அடி ஆகும். இதை முழுவதுமாக மூடும் வண்ணமாக, திரித்த மெல்-ய பஞ்சு நூ-னாலும், இளநீல நூ-னாலும், இரத்தாம்பர நூ-னாலும், சிவப்பு நூ-னாலும் மூடுதிரைகளை செய்து அதிலே விசித்திர வேலையாக கேரூபீன்களின் உருவங்கள் நெசவு செய்யப்பட்டிருக்கும். இதே பொருட்களால் செய்யப்பட்ட திரையினாலே, இக்கூடாரத்தின் முன் பகுதி மூடப்பட்டிருக்கும். இந்த முன் பகுதியை "கதவு" அல்லது **முதல் திரை** என்ற பெயரினால் அழைக்கலாம். இதே விதமான பொருட்களால் செய்யப்பட்டு கேரூபீன்களின் உருவம் நெசவு செய்யப்பட்ட திரை (அல்லது 2வது திரை) இக் கூடாரத்தை இரு பாகங்களாக பிரிக்கும்படியாக தொங்கவிடப்பட்டிருக்கும். 30 அடி நீளம், 15 அடி அகலம் கொண்ட இந்த முதல் அல்லது பெரிய பாகம் "பரிசுத்த ஸ்தலம்"* என்று அழைக்கப்பட்டது. 15 அடி நீளம், 15 அடி அகலம்,

---

*"பரிசுத்த ஸ்தலம்" என்ற இந்த வார்த்தையானது, தமிழ் வேதாகமத்தில் பிரகாரத்தைக் குறிக்கும்போது, பரிசுத்த ஸ்தலம் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. (லேவி 14:13; 6:27) அதே போல மகா பரிசுத்த ஸ்தலத்தைக் குறிக்கும் போதும் இதே "பரிசுத்த ஸ்தலம்" என்ற வார்த்தையே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (லேவி. 16:17, 20) மொழிபெயர்ப்பாளரின் கவனக் குறைவினால் ஏற்பட்ட விளைவுதான் இது. எனவே குழப்பத்தை நீக்க 'பிரகாரம்,' 'பரிசுத்த ஸ்தலம்,' 'மகா பரிசுத்த ஸ்தலம்' என்ற பதங்கள் இந்த புத்தகத்தில் பின்பற்றப்பட்டிருக்கின்றன.

15 அடி உயரம் கொண்ட இரண்டாவது (அல்லது) பின்பாகம் “மகா பரிசுத்த ஸ்தலம்” என்று அழைக்கப்பட்டது. இந்த இரண்டு பாகங்களும் சேர்ந்து “ஆசரிப்பு கூடாரம்” எனப்பட்டது. இந்த இரு பகுதிகளையும் திரித்த மெல்-ய பஞ்சு நூ-னாலும் இள நீல நூ-னாலும் இரத்தாம்பர சிவப்பு நூ-னாலும் செய்து, சித்திர வேலைபாட்டினால் கேரூபீன்களையும் செய்து தயாரித்த மூடுதிரையை முதல் போர்வையாகவும், சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத் தோ-னால் செய்யப்பட்ட போர்வையை இரண்டாவதாகவும் பின்பு தகசுத் தோலால்* செய்யப்பட்ட போர்வையை மூன்றாவது போர்வையாகவும் மூடி, முழுவதுமாக வெளியில் தெரியாதபடி அமைக்கப்பட்டிருக்கும்.

## பிரகாரம்


ஆசரிப்பு கூடாரத்தை சுற்றி மரத்தூண்கள், -ணன் துணி (நார் நூலால் செய்யப்பட்ட துணி) ஆகியவற்றால் ஆன சுற்றுவே- ஒன்று அமைக்கப்பட்டிருக்கும். இந்தப் பிரகாரம் 150 அடி நீளம், 75 அடி அகலம் கொண்டதாகும். நீளவாக்கில் சீத்திம் மரத்தாலான 20 தூண்களை தாமிரத்தால் (‘வெண்கலம்’ என்று தவறாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது) செய்யப்பட்ட கட்குழிகளினால் சொருகப்பட்டு நிறுத்தப்பட்டிருக்கின்றன. தூண்களின் மேல் உச்சியி-ருந்து வெள்ளியினால் ஆன கொக்கிகளின் மூலமாக பஞ்சு நூலால் செய்யப்பட்ட தொங்கு திரைகள் தொங்கவிடப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு தூணின் உயரம் 7½ அடி ஆகும். இந்த பிரகாரத்தின் வாசல்புறம் ஆசரிப்பு கூடாரத்தின் கதவைப் போல கிழக்குப் பக்கமாக அமைந்திருக்கும். இதன் வாசல் ‘நுழைவாயில்’ என அழைக்கப்படுகிறது. இவ்வாயில் இளநீல நூலாலும் இரத்தாம்பர நூலாலும் சிவப்பு நூலாலும் திரித்த மெல்-ய பஞ்சுநூலாலும் சித்திரத் தையல் வேலையாய்ச் செய்யப்பட்ட நீளமான தொங்கு திரையாலானது.

இப்படியாக, பிரகாரத்திற்குள் நுழைவதற்கான வாயில், பரிசுத்த

---

*தகசுத்தோல் என்பது ஒருவகையான மானின் தோல் ஆகும். தகசுத்தோல் (Badger) என்ற வார்த்தை தவறாக மொழிப் பெயர்க்கப்பட்டிருப்பதாக தெரிகிறது. உண்மையில் நீர் நாய் தோல் (Sealskin) என்றுதான் வரவேண்டும் என்ற பெரும்பான்மையான ஆராய்ச்சியாளர்களின் கருத்து ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

ஸ்தலத்திற்குள் பிரவேசிப்பதற்கான வாயிற்கதவு, மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிப்பதற்கான “திரை” ஆகிய இந்த மூன்று நுழைவாயில்களும் ஒரே வித பொருட்களினாலும், வண்ணத்தாலும் செய்யப்பட்டிருக்கின்றன என்பது மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாக இருக்கின்றது. ஆசரிப்புக்கூடாரம் மற்றும் பிராகாரத்திற்கு வெளியே - குறிப்பிட்ட அளவு தூரம் தள்ளிதான் ‘பாளையம்’ என்று அழைக்கப்படும் இஸ்ரயேல் ஜனங்களின் தங்கும் இடம் இருக்கிறது.



ப-பீடம்

## பணிமுட்டுகள்

பிரகாரத்தில் இரண்டு முக்கியமான பொருட்கள் உள்ளன. ஒன்று வெண்கல ப-பீடம். மற்றொன்று தண்ணீர் தொட்டி.

நுழைவாயி-ல் பிரவேசித்த உடனே அங்கே காணப்படுவது இந்த வெண்கல ப-பீடம் ஆகும். இது சித்தீம் மரத்தால் செய்யப்பட்டு தாமிர உலோகத்தால் முழுவதுமாக மூடப்பட்டிருந்தது. இது 7½ அடி சதுரமும் 4½ அடி உயரமுமாக இருந்தது. அதின் நாலு மூலைகளிலும் நான்கு கொம்புகள் பொருத்தப்பட்டிருக்கும். அதின் சாம்பலை எடுக்கத்தக்க சட்டிகள், கரண்டிகள், கிண்ணிகள், முள்துறடுகள், நெருப்புச் சட்டிகள் ஆகியவை பயன்படுத்துவதற்காக ப-பீடத்தின்


அருகில் வைக்கப்பட்டிருந்தன. அடுத்து, ப-பீடத்திற்கும் ஆசரிப்புக்கூடாரத்தின் கதவிற்கும் மத்தியில் தண்ணீர் தொட்டி வைக்கப்பட்டிருந்தது. இது பளபளப்பாக்கப்பட்ட தாமிரத்தினால் செய்யப்பட்டு, தண்ணீர் நிரப்பப்பட்டு, ஆசாரியர்கள் கூடாரத்தில் நுழையுமுன் தங்களை சுத்திகரித்துச் செல்லும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



தண்ணீர் தொட்டி

ஆசரிப்பு கூடாரத்திற்குள் "மேஜை," "குத்துவிளக்கு," "தூபபீடம்" ஆகியவை பரிசுத்த ஸ்தலத்திலும், 'உடன்படிக்கைப் பெட்டி' மகா பரிசுத்த ஸ்தலத்திலும் வைக்கப்பட்டிருந்தன.

ஆசரிப்பு கூடாரத்திற்குள் முதல் பாகமாகிய பரிசுத்த ஸ்தலத்தில் வலதுபக்கம் (வடக்கு) ஒரு மேஜை போடப்பட்டிருந்தது. அது சீத்திம் மரத்தால் செய்யப்பட்டு, முழுவதுமாக பொன்னினால் மூடப்பட்டிருந்தது. அந்த மேஜையின் மேல் 12 புளிப்பில்லா அப்பங்கள் இரண்டு அடுக்குகளாக - ஒவ்வொரு அடுக்கிலும் ஆறு அப்பங்கள் வைக்கப்பட்டிருந்தன. (லேவி 24:6,7) இந்த அப்பங்கள் ஆசாரியர்கள்



மேசை


தவிர வேறு யாரும் புசிக்கக்கூடாதவையாகயிருந்தன. பரிசுத்தமான இந்த அப்பங்கள் ஒவ்வொரு ஏழாவது நாளிலும் (ஓய்வு நாள்) மாற்றப்பட்டு புதிதாக வைக்கப்பட்டன.

இந்த மேஜைக்கு எதிரில் குத்துவிளக்கு வைக்கப்பட்டிருந்தது. இது முழுவதும் பசும்பொன்னினால் அடிப்பு வேலையாய்ச் செய்யப்பட்டிருந்தது. இது ஏழு கிளைகள் கொண்டதாகவும், ஒவ்வொரு கிளையிலும் ஒருவிளக்கு உடையதாகவும் இருந்தது. பரிசுத்த ஸ்தலத்திற்கு வேண்டிய ஒளி இந்த குத்துவிளக்கி-ருந்துதான் கிடைத்தது. நாம் தெரிந்து கொண்டதுபோல, மதில்கள் மற்றும் திரைகள் மூலமாக இயற்கையான வெளிச்சம் தடுக்கப்பட்டது. ஜன்னல்கள் எதுவும் கிடையாது. ஆகையால் பொற்ப-பீடத்தில் தூபவர்க்கமிடும் நேரங்களில், இந்த ஏழு குத்துவிளக்குகளும் கவனிக்கப்பட்டு, அதற்கு வேண்டிய எண்ணெய் ஊற்றுவது, அதன் திரியை சரிசெய்வது ஆகிய வேலைகள் பிரதான ஆசாரியனால் செய்யப்பட்டது.




குத்துவிளக்கு

அடுத்தபடியாக திரைக்கு அருகாமையில் மரத்தால் செய்யப்பட்டு பொன்னினால் மூடப்பட்ட ‘தூபபீடம்’ அல்லது ‘பொற்பீடம்’ இருந்தது. ஆசாரியர் சுகந்தவர்க்கங் களோடும் நெருப்போடும் வந்து இதன்மேல் நெருப்புமூட்டி தூபவர்க்கங்களை போடும் போது மட்டுமே நெருப்புடன் இருந்தது. அதன்மீது இடப்பட்ட தூபவர்க்கத்தால் சுகந்தவாசனையானது பரிசுத்த ஸ்தலத்தினை நிரப்பி இரண்டாம் திரைவழியாக மகா பரிசுத்தஸ்தலம் அல்லது பரிசுத்தங்களின் பரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்லும்.



தூபபீடம்


திரைக்கு அப்பால், மகா பரிசுத்த ஸ்தலத்தில் உடன்படிக்கை பெட்டி இருந்தது. இது சித்தீம் மரத்தால் செவ்வக வடிவப் பெட்டியாகச் செய்யப்பட்டு, முழுவதுமாக பொன்னினால் மூடப்பட்டிருந்தது. இதனுடைய மூடி சுத்தமான பொன்னினால் செய்யப்பட்டிருந்தது. இது 'கிருபாசனம்' என்று அழைக்கப்பட்டது. இந்த கிருபாசனத்தின் மேல் ஒரே துண்டினால் அடிக்கப்பட்ட வேலையாய் பொன்னால் செய்யப்பட்ட இரண்டு கேரூபீன்கள் அமைக்கப்பட்டிருந்தன. இந்தப் பெட்டிக்குள்ளாக மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரமும், ஆரோனுடைய தளிர்த்த கோலும், உடன்படிக்கையின் கற்பலகைகளும் வைக்கப்பட்டிருந்தன.



உடன்படிக்கை பெட்டி

(எபி 9:4) அந்த கிருபாசனத்தின் மேல் அதிபிரகாசமான ஒளி தோன்றிற்று. அது அந்த இரண்டு கேரூபீன்களின் மத்தியில் ஒளிர்ந்து, மகா பரிசுத்தஸ்தலத்தை பிரகாசமுள்ளதாகச் செய்தது. இதுவே "மகாபரிசுத்த ஸ்தலத்தில்" இருந்த ஒரே வெளிச்சம். இந்த மகிமையான ஒளி தேவனுடைய பிரசன்னத்தை குறிக்கக் கூடியதாக இருந்தது.

இங்கே குறிப்பிடத்தக்க காரியம் என்னவென்றால், ஆசரிப்பு கூடாரத்திற்குள் உள்ள பொருட்கள் அல்லது பணிமூட்டுகள் எல்லாம் பொன்னினாலோ அல்லது பொன்னால் முழுவதுமாக மூடப்பட்டோ இருப்பதுதான். இதற்கு மாறாக பிரகாரத்திற்குள் இருந்த ஒவ்வொரு பணிமுட்டும் தாமிரத்தால் செய்யப்பட்டோ அல்லது அதனால் மூடப்பட்டோ இருந்தன. இதிலுள்ள பொருட்கள் அனைத்தும் சுமந்து செல்ல வசதியாக மரத்தால் செய்து பின்பு இலேசான உலோகங்களினாலே மூடப்பட்டிருக்கின்றன. அவர்களது பிரயாணத்தில் இது ஒரு முக்கிய காரியமாக விளங்கியது. ஆனால் ஆசரிப்புக் கூடாரத்தின் பணிமுட்டுகள் எல்லாம் உறுதியான உலோகங்களால் செய்யப்பட்டதாகவே இருந்தன. (I இராஜா 7:47-50). ஆகவே, ஆசரிப்பு கூடாரத்தில் பயன்படுத்தப்பட்ட இரண்டு உலோகங்களான தாமிரமும், பொன்னும் இரண்டு நிலைகளை நிழலாக காட்டுவதாக அறிகிறோம்.



மூடாத ஆசரிப்புக் கூடாரம்

'தாமிரம்' தேவதூதர்களைப் பார்க்கிலும் சற்று சிறியதாக இருக்கக்கூடிய **மனித நிலையையும்,** 'பொன்' தேவதூதர்கள், அகில உலக வல்லமைகள் ஆகிய எல்லாவற்றிற்கும் மேலாக இருக்கக் கூடிய **தெய்வீக நிலையையும்** காட்டுவதாக இருக்கிறது. பொன்னும் தாமிரமும் தோற்றத்தில் ஒரே மாதிரியாக இருந்தாலும் தன்மையில் வேறாக இருப்பது போல, மனித, தேவசாயலாக இருந்தாலும் தன்மையிலும்

செயல்பாட்டிலும் இந்த பூமியின் நிலைகளுக்கு ஒத்தவனாய் இருக்கிறதை நாம் அறிகிறோம்.

**பாளையம், பிரகாரம், ஆசரிப்பு கூடாரம்** என மூன்று பிரிவுகளாகப் பிரித்தால், அவை மூன்று பொதுப்பிரிவுகளாகவும், தேவனோடு கூட ஒப்புரவாகும்படியான ஆசீர்வதிக்கப்பட்ட மூன்று வகுப்பாரை அது காட்டுவதையும் காணலாம். இதில் ஆசரிப்புக் கூடாரத்தின் இரண்டு பிரிவுகள் இந்த மூன்று வகுப்பாரில் ஒரு வகுப்பாரின் இருநிலைகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

**பாளையமானது** ஆசீர்வதிக்கப்படவும், ஒப்புரவாக்கப்படவும் விடப்பட்டிருக்கின்ற, பாவ நிலையிலுள்ள இந்த மனுக்குலத்தின் உலக **நிலைமையைக்** காட்டுகிறது. இதனுடைய நிழலைப் பார்க்கும் போது, இஸ்ரயேல் ஜனங்கள் நிழலாக குறிப்பிடப்பட்டுள்ளனர். அவர்கள் ஆசரிப்புக் கூடாரத்தை விட்டு மிகவும் தள்ளி இருந்தார்கள். கூடாரத்திற்குள் உள்ள பரிசுத்தமானவற்றை பார்க்காத வண்ணமாக, மெல்-ய வெள்ளை பஞ்சுநூலால் செய்யப்பட்ட திரையால் மறைக்கப்பட்டிருந்தது. இந்த வெள்ளைத் திரை பரிசுத்தமான நீதிக்குரிய காரியங்களுக்கு ஒப்பாக இருக்கின்றது. விசுவாசக்கோட்டைக்குள் இருப்போரை இந்த பரிசுத்தப் பொருட்கள் குறிக்கின்றன. விசுவாசம் இல்லாதோர் இப்பரிசுத்தப் பொருட்களைப் பார்ப்பதி-ருந்து தடுக்கப்பட்டிருந்தனர். ஒரே வழியாகத்தான் பரிசுத்தஸ்தலத்திற்குள்ளும், பிரகாரத்திற்குள்ளும் பிரவேசிக்க வேண்டும். அதுபோல மகா பரிசுத்தமான மெய்தேவனின் சமூகத்திற்கு நாம் வர ஒரேவழிதான் உண்டு - அது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ‘‘நானே வழி... என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்;” “நானே வாசல்...” (யோவா 14: 6; 10:9)

**பிரகாரமானது**, கிறிஸ்து என்னும் நுழைவாச-னுள் பிரவேசித்த, கிறிஸ்துவின் விசுவாசத்திற்குள் வந்த நீதிக்குரிய நிலைமையைக் காட்டியது. பாவநிவாரண நாளிலே, லேவியர்கள் (நீதிமானாக்கப்பட்ட விசுவாசிகளுக்கு ஒப்பாக இருப்பவர்கள்) மாத்திரமே, இந்த ‘பிரகாரத்திற்குள்’ அனுமதிக்கப்பட்டனர். மேலும் இவர்கள் பிரகாரத்திற்குள் இருக்கும் ப-பீடம், தண்ணீர் தொட்டி ஆகியவற்றைப் பார்ப்பதற்கும் பிரகாரத்தில் ஊழியம் செய்வதற்கும் அனுமதிக்கப்பட்டார்கள். ஆனால் ஆசரிப்புக் கூடாரத்திற்குள்

நுழையவோ, அதற்குள்ளாக இருக்கும் பணிமுட்டுகளைப் பார்க்கவோ அனுமதி இல்லை. (எண் 4:19,20) இந்த பிரகாரத்திற்குள் இருக்கும் பணிமுட்டுகள் அனைத்தும் தாமிரத்தினால் செய்யப்பட்டவையாகும். இது விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டவர்களை குறிக்கிறது. ஆசாரியர்கள் பலி செலுத்துவதற்கும், சுத்திகரிப்பதற்கும் பிரகாரத்தைப் பயன்படுத்தினாலும் கூட, பிரகாரம் சுவிசேஷயுகத்தில் இருக்கும் ஆவிக்குரிய வகுப்பாரின் நிலையை குறிப்பிடவில்லை.

இரண்டு பாகங்களைக் கொண்ட **ஆசரிப்புக் கூடாரமானது** மனித நிலையி-ருந்து ஆவிக்குரிய நிலையை அடையும் வகுப்பாரின் இரண்டு **நிலைமைகளை** காண்பிக்கின்றது. முதல் பகுதியான 'பரிசுத்த ஸ்தலமானது,' திவ்விய சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாகும் பொருட்டு, தங்களுடைய மாம்ச சரீரத்தை மரணத்திற்குள்ளாக்கி, மரணபரியந்தம் தேவனுக்காக ஒப்புக் கொடுத்தவர்களின் (லேவியர்கள் – நீதிமானாக்கப்பட்ட விசுவாசிகள்) **நிலைமைக்கு** ஒப்பாக இருக்கிறது. (II பேது. 1:4) இரண்டாவது பகுதியான, மகா பரிசுத்த ஸ்தலமானது, ஜெயங் கொள்ளுகிறவர்களாயிருந்து, தேவசாயலைப் பெற்றுக் கொள்ளப் போகிற, மரணத்திரைக்கு அப்பால் இருக்கிறவர்களின் **நிலைமையை** காண்பித்தது. இப்படிப்பட்டவர்கள், தங்களை மரணத்திற்குள்ளாக்கி விட்டு முழுவதும் மாற்றப்பட்டவர்களாக முதலாம் உயிர்த்தெழுத-ல், தேவசாயலையும், இயக்கத்தையும் பெறுபவர்களாக இருப்பார்கள். முழுமையான விசுவாசத்தை பெற்றிருப்பினும் பாவக் கறைகளி-ருந்து கழுவப்பட்டிருந்தாலும் தேவனுடைய பார்வைக்கு முன்பாக நீதிமானாக்கப்பட்டு பூரணமாக்கப்பட்டவனாகக் கருதப்பட்டாலும் எந்த மனிதனும் ஆசரிப்புக் கூடாரம் மற்றும் ஆலயத்திற்குள் உள்ள எந்த ஆவிக்குரிய காரியத்திலும் பங்கோ, உரிமையோ பெற முடியாது. பாராட்டும்படியாகக்கூட அவன் ஆவிக்குரிய காரியங்களை காண முடியாது. ஆனால், சுவிசேஷயுகத்தில் அப்படிப்பட்டவர்கள் தேவனுடைய ஊழியத்தில் தங்களது மாம்ச சுபாவங்களை ப-யாக்கி, ஒப்புரவாகி கிறிஸ்துவின் சரீரத்தின் உறுப்பினர்களாகும் ஆவிக்குரிய சுபாவத்தை சுதந்தரித்துக்கொள்ள அழைக்கப்படுகிறார்கள். "ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக் கொள்ளான்... அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்." – 1 கொரி. 2:14

ஆசரிப்புக்கூடாரத்திற்குள் இருக்கும் பணிமுட்டுகள் **பொன்னினால்** செய்யப்பட்டிருக்கின்றது. இது திவ்விய சுபாவத்திற்கு அழைக்கப்பட்டவர்களை குறிக்கிறது. லேவியர்களிலே குறிப்பிட்டவர்கள் மட்டும் (ஆசாரியர்கள்) ப-யிடக்கூடிய காரியங்களிலே பங்கு எடுத்து, ஆசரிப்புக் கூடாரத்தோடு தொடர்பு வைத்திருந்ததுபோல, விசுவாசிகளிலேயும் மரணபரியந்தம் தங்களை முழுமையாக ஒப்புகொடுக்கும் விசுவாசிகள் மாத்திரமே ஆசரிப்புக் கூடாரத்திற்குள் இருந்த தெய்வீக நிலைமைகளை அடைய முடியும் என்று காண்பிக்கிறது.

பிரகாரம் குறிப்பிடும் நீதிமானாக்கப்பட்ட நிலைமைக்கு வரவேண்டுமானால் விசுவாசம் தேவைப்படுகிறது. இந்த விசுவாசத்தோடு நின்றுவிடாமல், ''புதிய சிருஷ்டி'' ஆகவும், 'பரம அழைப்பிற்கு பங்குள்ளவர்களாகவும்' தெய்வீக சுபாவத்திற்கு பங்காளிகள் ஆகவும், நாம் இன்னும் அதிகமாக தத்தம் செய்ய வேண்டும். பரிசுத்தத்திற்குள் பிரவேசிப்பது என்பது நாம் செய்துகொண்ட பொருத்தனைகளுக்கு உண்மையாயிருத்தல், நம்முடைய மாம்சத்தை சிலுவையிலே அறைதல், நம்முடைய மாம்சீகமான சித்தங்களையும் சரீரங்களையும் ஜீவப-களாக தேவனுக்கு ஒப்புகொடுத்தல் ஆகிய இந்த நிபந்தனைகளுக்கு கீழ்ப்படியும் மக்களாக பந்தய சாலையிலே ஓடுவோமானால் 'தெய்வீக சாயல்' என்னும் பந்தய பொருளை பெறுபவர்களாகவும், இனி மாம்சீகமான இச்சைகளுக்கும் மகிமைகளுக்கும் மரித்தவர்களாகவும் ஆவிக்குரிய மகிமையான காரியங்களுக்கு பிழைத்தவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதே. இப்படிப்பட்ட புதிய ஜீவியத்திற்கு – புதிய நிலைமைக்கு வரவேண்டுமானாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே வழியாக இருக்கிறார். அவர் தனது இரத்தத்தின் மூலமான விசுவாசத்தால் நீதிமானாக்கப்படுதல் என்ற வாசலை மாத்திரமல்ல, ஆவிக்குரிய ஜீவிகள் என்ற ஒரு புதிய வாழ்க்கைக்கான கூடாரத்தின் கதவையும் (முதல் திரை), நமது நீதியாக்கப்பட்ட மாம்சத்தை ப-கொடுத்து அதன்மூலம் இரண்டாவது திரையையும் திறக்கப் பண்ணினார்.

ஆகவே, ஆசரிப்பு கூடாரத்தின் இரண்டு பகுதிகளான "பரிசுத்தஸ்தலம்," "மகா பரிசுத்த ஸ்தலம்" எனப்படுபவை பரிசுத்த ஆவியினால் ஜெநிபிக்கப்படும் புதிய ஜீவியத்தின் இரண்டு வெவ்வேறு நிலைகளை குறிக்கின்றது.

**பரிசுத்த ஸ்தலமானது**, சத்திய வசனத்தினாலே தேவனால்

ஜெநிபிக்கப்படும் தற்கால நிலைமையைக் காண்பிக்கின்றது. (யாக் 1:18) பரத்திற்குரிய மனதுள்ள இந்த "புதிய சிருஷ்டிகள்" மாம்சத்திலே இருந்தாலும் அவர்கள் உண்மையான ஜீவியத்துடன் உலகம் மற்றும் அவிசுவாசிகளின் பார்வைக்கு அப்பாற்பட்டவர்களாய் அறிந்து கொள்ளக் கூடாதவர்களாய் தேவனுடன் ஒப்புக் கொடுத்தல் என்னும் முதல்திரைக்குள் நடக்கின்றனர். இவர்கள் பொன்குத்து விளக்கின் உள்வெளிச்சத்தில் களிகூறுகிறார்கள். வெளியில் இருப்பவர்கள் இருளில் மூழ்கிக் கிடப்பவர்களாக உள்ளனர். இவர்கள் கிறிஸ்து இயேசு மூலம் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய "சமூகத்து அப்பங்களாகிய" புளிப்பில்லாத விசேஷ ஆவிக்குரிய ஆகாரத்தை உண்கிறவர்களாயும் பொன் பீடத்தில் சுகந்தவர்க்கங்களை போடுகிறவர்களாகவும் இருக்கின்றனர்.

**மகா பரிசுத்த ஸ்தலமானது**, மரணபரியந்தமும் உண்மையுள்ளவர்களாயிருந்து, பரம அழைப்பிற்குரிய பந்தய பொருளை பெற்று, முதலாம் உயிர்த்தெழுத-ல் பங்கு கொள்ளும் பூரணராக்கப்பட்ட புதிய சிருஷ்டிகளைக் குறிக்கிறது. (வெளி 20:6) இவர்கள் மாம்சீக சிந்தை, மாம்சீக சரீரம் என்னும் இரண்டு திரைகளுக்கு அப்பால் - மகிமையான ஆவிக்குரிய சரீரத்தையும் ஆவிக்குரிய சிந்தையையும் பெறக்கூடியவர்களாக இருப்பார்கள். இவர்கள், திரைக்குப் பின்னால் பிரவேசித்து, தங்களது புது ஜீவியத்திற்காக தம்மை ஒப்புக்கொடுத்த தமது இரட்சகரான வழிகாட்டி மற்றும் முன்னோடியைப் போ-ருப்பார்கள். (எபி 10:20; 1 யோவான் 3:2)

**விசுவாசத்தின்** மூலம் பரிசுத்த ஸ்தலத்தில் உள்ள ஆவிக்குரிய சிந்தையுடைய சிருஷ்டியானது, திரையின் துவாரத்தின் வழியே, "மகா பரிசுத்த ஸ்தலத்தின்" மகிமை, கனம், சாவாமை பற்றி அறிந்து கொள்கிறது. இந்த விசுவாசம் திரைக்கு அப்பால் நுழைவதற்கு ஆத்துமாவுக்கும், நிச்சயத்திற்கும், உறுதிக்குமான நங்கூரமாக உள்ளது. எபி. 6:19; 10:20.

நாம் பார்க்கிறபிரகாரமாக, விசுவாசத்தினால் நீதிமானாவது, பரிசுத்தம் ஆவதற்கு முதல்படியாகவும், கிறிஸ்துவின் மூலம் தேவனோடு சமாதானமாவதற்கு வழிவகுக்கக்கூடியதாகவும் இருக்கின்றது. (ரோம. 5:1) நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படும் போதும் அல்லது கிறிஸ்துவின் நீதியினால் மூடப்படும்போதும், நாம் மற்றும் ஒருபடி தேவனை நெருங்குகின்றோம். ஆனாலும் நாம் **மாம்ச சரீரத்தில்,**

பிரகாரத்தில் தான் இருக்கிறோம். தேவனாலே, **கிறிஸ்துவுக்குள்** இருக்கிற பரம அழைப்பின் பந்தய பொருளை பெறவேண்டுமானால் - பரிசுத்த ஸ்தலத்தி-ருந்து மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்க வேண்டுமானால், நாம் நம்முடைய வழிகாட்டியும், தலையும் - "பிரதான ஆசாரியனுமாக" (எபி 3:1 ; 1 பேது 2:9) இருக்கக்கூடிய **"இயேசு கிறிஸ்துவின்" அடிச்சுவடுகளை பின்பற்ற வேண்டும்.**

(1) ப-பீடத்தில் காட்டப்பட்டது போன்று கிறிஸ்துவின் ஈடுப-யில் விசுவாசமுள்ளவர்களாக நுழைவாசல் வழியாக (கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம்) பிரகாரத்தில் நுழைகிறோம். அவிசுவாசம் மற்றும் பாவம் எனும் திரை நீங்கிவிட்டது. இத்தகைய ஒரு அடியை நமது கர்த்தராகிய இயேசு ஒருபோதும் எடுக்கவில்லை. ஏனென்றால் அவர் ஆதாம் வழியில் வந்தவர் அல்ல. அவர் பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாயிருந்தார். (எபி. 7:26) அவர் பிரகாரத்திற்கு வெளியே ஒருக்காலும் செல்லவில்லை.

(2) நம்முடைய சித்தங்களையும், விருப்பு வெறுப்புகளையும் முழுவதுமாக விட்டுவிட்டு முதல் திரையாகிய மனித சிந்தை நிலையை கடந்து தேவசித்தத்தை தவிர மற்றவைகள் செத்தவை என கருதி செல்கிறோம். இப்படி செய்யும்போது, நாம் பரிசுத்தத்தில் **"புதிய சிருஷ்டிகளாக"** - மாறுகிறோம். (எபேசி 2:6 - டயக்லாட்) அதோடு கூட, பொன் குத்துவிளக்கினால் (தேவனுடைய வார்த்தை) ஒளியுள்ளவர்களாகி தேவனுடைய ஆழ்ந்த காரியங்களை தெரிந்து கொள்வதோடு, அனுதினமும் சத்தியத்தினாலே (ஆசாரியர்கள் மட்டும் உண்ணத்தக்க சமூகத்து அப்பங்கள்) புத்துணர்ச்சி பெறவும், பெலப்படவும் நடத்தப்படுகிறோம். (மத் 12:4) இவ்விதமாக நாம் பிரகாசமுள்ளவர்களாகவும், பலமுள்ளவர்களாகவும் ஆக்கப்படும் போது, நம்மை நாமே பொன் ப-பீடத்தில் அனுதினமும் கிறிஸ்துவின் மூலம் தேவனுக்கு பிரியமான ப-களாக, நமது பிதாவிற்கு சுகந்த வாசனையாக செலுத்த வேண்டும். - I பேது. 2:5 #

இப்படியாக பரிசுத்த **நிலையிலுள்ள** கிறிஸ்துவுடன் அமர்ந்துள்ள

---

# இவ்வசனத்தில் "ஆவிக்கேற்ற ப-களை" என்று வரும் பாகத்தில் உள்ள "ஆவிக்கேற்ற" என்ற வார்த்தையானது மூல கிரேக்க பைபிளில் (MS) காணப்படவில்லை. ஆவிக்கேற்ற ப-களையல்ல, மாம்சீகமான ப-களான உரிமைகள், அந்தஸ்துகள், வாழ்க்கை போன்றவை ப-யிடப்படுகின்றன.

பரிசுத்தவான்கள் அனைவரும் இன்னும் மகாபரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிக்கவில்லை. மற்றும் ஒரு திரையை கடந்தாக வேண்டும். முதலாம் திரையாகிய மனித **சித்தத்தை மரிக்க** செய்து கடந்து வந்தவர்கள் இப்பொழுது இரண்டாம் திரையாகிய **மனித சரீரத்தை** மரிக்கச் செய்ய வேண்டும். இவை இரண்டும் சேர்ந்து தான் நம்முடைய **பy|ைய** முழுமையாக்குகின்றன. மாம்ச சிந்தை மற்றும் மாம்ச சரீரம் ஆகியவை மகா பரிசுத்தத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்பே விடப்படவேண்டும். மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிரவேசிக்க முடியாததினாலே, அவற்றை மகாபரிசுத்த ஸ்தலத்தில் நுழையுமுன்பே விட்டுவிட வேண்டும். (1 கொரி. 15:50; யோவா. 3:5, 8,13 ஒப்பிட்டு பார்க்கவும்)

மேற்கண்ட பாளையம், பிரகாரம், ஆசரிப்பு கூடாரம் என்ற மூன்று இடங்களின் ஞானர்த்தமான காரியங்களை நினைவில் வைத்துக்கொண்டு இவைகளுக்கு கீழாக வரும் அவிசுவாசிகளாகிய இவ்வுலகம், நீதிமான்கள் ஆக்கப்பட்ட விசுவாசிகள் மற்றும் பரிசுத்தவான்கள் அல்லது முழுமையாக தத்தம் செய்தவர்கள் ஆகியோருக்கு ஒப்பாக இருக்கும் இஸ்ரயேலர்கள், லேவியர்கள் மற்றும் ஆசாரியர்கள் என்னும் வரம்பிற்குள் வருகின்ற மூன்று வகுப்பினரைக் குறித்து இப்பொழுது அடுத்த பாடமாக பார்ப்போம்.

# ஆசரிப்புக் கூடாரம்

“இது என்ன இரகசியமான தனியான வீடாக இருக்கிறது
தூய வெண் சுவரால் சூழப்பட்டிருக்கிறது;
பக-ல் வனாந்திரத்தில் ஒரு ப-பீடம்,
இரவில் சமவெளியில் ஒரு அமைதியான காவற்காரர்.

“கட்டப்பட்ட இதன் கூடாரத்திற்குள் யார் வாசம் பண்ணுவது,
அந்நியனும் புறஜாதியானும் அங்கே அனுமதிக்கப்படாமல்?
செலுத்தப்பட்ட ஆடு, மாடுகளின் இரத்தத்தை தெளித்த,
வெண்மையும் மங்கலுமான அங்கியுடைய ஆசாரியனுக்கு பதிலளிப்பது யார்?

“அவரது நாமம் சர்வ வல்லமையுள்ளவர் என்பதை நீ நினை
பயனில்லாத அடிக்கடி செய்யப்படும் இந்த சடங்குகள் தேவையோ,
அல்லது வீண் டம்பமான இந்த வாசனை திரவியமும்
ப-பீட வெளிச்சமும் சித்திர வேலையான அங்கியும் சந்தோஷப்படுத்துமோ?

“இல்லை, மெய்யாகவே! புதுமையான சித்திரை தொங்கலாடையும்,
பொன், வெள்ளி, தாமிரத்தால் செய்யப்பட்ட பாத்திரங்களும்,
ப-யின் சடங்காச்சார மாதிரிகள் எல்லாம்
சுவிசேஷ காலத்தின் மேன்மையானவைகளைப் பற்றி முன் சொல்லப்பட்டவை.

“அவர் சந்தோஷமாயிருக்கிறார், மங்களாக தென்படுகிற
முன்னடையாளத்தையும், நிழலையும் கூர்மையான கண்கள் காண்கிறதினால்;
அவரது ப-கள் பொன் தூபகலசத்தில் எரிகின்றன,
பரிசுத்த ஸ்தலத்தின் இரகசியத்தை விடுவிக்கிறார்.

“இரத்தம் சம்பந்தப்பட்ட கிருபாசனத்தில் அவர் காண்கிறார்
முன்னே சென்றவரால் பாவ நிவாரணம் முத்திரிக்கப்பட்டதை
திறந்த பரலோகத்தி-ருந்து பிதா துரிதப்படுத்துகிறார்.
அவரது அன்பும் கிருபையுமாகிய ஐசுவரியத்தை ஊற்றுவதற்கு.”

# அத்தியாயம் 2

# இஸ்ரயேலர்கள், லேவியர்கள் மற்றும் ஆசாரியர்கள்

பல்வேறு மனுக்குல வகுப்பாருக்கு நிழலாக இருக்கும் இஸ்ரயேலர்கள், லேவியர்கள் மற்றும் ஆசாரியர்கள் – ஆசாரியர்களை அபிஷேகம் செய்தல் – பிரதான ஆசாரியனின் “மகிமையும் அலங்காரமுமான” வஸ்திரங்களின் முக்கியத்துவம் – இவற்றின் நிழல்கள் – ஆபிரகாமின் உடன்படிக்கை, நியாயப் பிரமாண உடன்படிக்கை, புதிய உடன்படிக்கை ஆகியவற்றின் நிழல்கள்.

ஆசரிப்புக் கூடாரம், அதன் பணிமுட்டுகள் ஆகியவற்றையும் அவற்றின் முக்கியத்துவத்தையும் அறிந்து கொள்வதோடு மட்டுமல்லாமல் அதில் பங்கு கொண்டவர்களைப் பற்றியும் அவர்களின் முக்கியத்துவத்தை பற்றியும் தெரிந்து கொள்வது மிகவும் இன்றியமையாததாக இருக்கிறது.

**இஸ்ரயேல்** ஜனம் பல இடங்களில் கிறிஸ்தவ சபைக்கு நிழலாக இருக்கிறது. உதாரணமாக, அவர்கள் எகிப்தின் அடிமைத்தனத்தில் இருந்து விடுதலையாகி வரும் காரியமானது, தேவனுடைய பிள்ளைகள் அவரது அழைப்பைக் கேட்டு, இவ்வுலக அடிமைத்தனத்தி–ருந்து விடுதலையாகி, தேவனை சேவிப்பதில் ஈடுபடுத்திக் கொள்வதற்கு நிழலாக இருக்கிறது.

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்தை பெற்றுக்கொள்ள பலவித கடினமான தடைகளைக் கடந்து மேற்கொண்ட வனாந்திர பிரயாணமானது, “என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்” என்ற வாக்குத்தத்தத்தை நோக்கி போகக் கூடிய இவ்வுலகத்தின் கடினமான வாழ்க்கைக்கு நிழலாக உள்ளது. நிழலான கானான் எவ்விதமாக உண்மையாகவே தூரமாக இல்லையோ அதே போல், பொருளாக இருக்கும் கானான், தேவனை உண்மையாக விசுவாசித்து நடப்பவர்களுக்கு வெகு அருகில் இருப்பதாக நாம்

அறியலாம். இஸ்ரயேல் ஜனங்களுக்கு தேவன் திரளான நன்மைகளை கொடுத்திருந்த போதிலும் அவர்களின் விசுவாசக் குறைவினாலே சீனாய் வனாந்திரப் பிரயாணத்தில் கிடைக்காததை தேடினர். அதேபோல இப்பொழுதும் அநேகர் அவிசுவாசத்தினால் அலையக் கூடியவர்களாகவும், கானானை அடையமுடியாதவர்களாகவும் தவிக்கிறார்கள். ஆகவே, மாம்ச இஸ்ரயேலர்கள் இவ்வாறு பல்வேறு வகையில் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கு நிழலாக இருந்த போதிலும், ஆசரிப்பு கூடாரத்தை பொறுத்த வரையில் அவர்கள் முற்றிலும் மாறுபட்ட ஒரு காரியத்திற்கு நிழலாக இருப்பதாக நாம் அறிகிறோம். இங்கே அந்த இஸ்ரயேலர்கள் கேள்விக்கு இடமில்லாமல், இவ்வுலகத்தின் **முழு மனுக்குலத்திற்கும்** நிழலாக இருக்கிறார்கள். அவர்களுக்கு மாத்திரமே செய்யப்பட்ட பாவநிவாரண ப–, ப–, பரிகாரம் போன்றவைகள் வரப்போகிற நாளிலே, இவ்வுலகத்திற்காக செய்யப்படும் மேலான ப–களுக்கு நிழலாக இருக்கிறது. ஏனெனில் வேதத்தில் நாம் இவ்விதமாக வாசிக்கிறோம். “நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரப– அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற ப–யாயிருக்கிறார்.” – 1 யோவா 2:2; எபி. 9:23

சுருக்கமாக சொல்லப் போனால், **இஸ்ரயேலர்கள்**, ஆசரிப்புக் கூடாரம், ஆசாரியர்கள், லேவியர்கள் மற்றும் ப–கள் எல்லாமே ஒரு நிழல்தான். இஸ்ரயேலர்களுடன் இஸ்ரயேலர்களுக்காக மாதிரியாகச் செய்யப்பட்டதானது, கிறிஸ்துவின் முதல் வருகையில் மேலான நிழ–ல், அதிக அளவில் நிகழ்த்தப்பட்டன. பின்பு வந்த உண்மைக்கு இவை நிழலாக இருந்தன.

இஸ்ரயேலர்கள் உலகத்திற்கு நிழலாக இருந்ததால் லேவியர்கள் விசுவாசக் குடும்பத்தார் அல்லது இயேசு கிறிஸ்து மற்றும் அவரது ஈடுப–யில் விசுவாசமுள்ள விசுவாசிகளுக்கு நிழலாக இருக்கிறார்கள். பிரதான ஆசாரியனை தங்களுக்கு தலையாக கொண்டிருந்த ஆசாரியர்கள், தங்களுக்கு தலையாகவும் பிரதான ஆசாரியனாகவும் கொண்டிருக்கக்கூடிய ‘‘சிறு மந்தையாகிய’’ ராஜரீக ஆசாரிய கூட்டத்தாருக்கு நிழலாக இருக்கிறார்கள். இந்த ஆசாரிய கூட்டத்தாரே இக்கால ப–களுக்குபின், **ராஜாக்களும் ஆசாரியர்களுமாய்** கிறிஸ்துவோடு இவ்வுலகத்தில் ஆளுகை செய்யக்கூடியவர்களாக இருப்பார்கள். (வெளி 5:10) இப்படியாக பார்த்தால், கர்த்தராகிய

இயேசுகிறிஸ்து ஆரோனின் முறைமையின் பிரகாரமான ஒரு ஆசாரியனாக இல்லாமல், விசேஷமான பணிக்கான பிரதான ஆசாரியராக இருக்கிறார் என்று அறிகிறோம். (எபி 3:1; 4:14) ஆரோனின் ஆசாரிய ஊழியமானது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அடைந்த சிறுமையையும் உபத்திரவங்களையும் நிழலாகக் காண்பிக்கின்றது. மெல்கிசெதேக் கிறிஸ்துவுக்கு நிழலாக ஆசாரியனுமாகவும் இராஜாவுமாகவும் இருந்ததுபோல், இயேசு கிறிஸ்துவும் இராஜாவும், ஆசாரியனுமாக இருப்பார்.

ஆனால் ஆசாரியர்கள் - கிறிஸ்துவின் அங்கங்களாக இருக்கக்கூடிய ராஜரீக ஆசாரியர்கள், தலையோடு சேர்ந்து ஆளுகையை ஆரம்பிக்குமுன், **அவரோடு கூட பாடுபட** வேண்டும். (2 தீமோ 2:12) இதுகுறித்து நாம் விரைவில் பார்க்கப் போகின்றோம்.

**பாவநிவிர்த்தி செய்யப்பட்டவர்கள்** மத்தியில் பேசும்போது ஆரோனுக்குரிய ஆசாரியர்கள் யாருக்கு ஒப்பாக உள்ளனர் என்பதைக் குறித்து அப்போஸ்தலர் பேதுரு, "இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனுக்கு பிரியமான ஆவிக்கேற்ற ப-களைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும்''... ''**நீங்கள்** ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாக.... இருக்கிறீர்கள்" (1 பேதுரு 1:2; 2:5,9) என்று சொல்கிறார். இவர்கள் எல்லாரும் சத்தியத்தின் **ஊழியக்காரர்களாக** இருக்கிறார்கள். எல்லாரும் தெய்வீகத்தன்மை தெரிந்த அறிஞர்களாகவும், போதகர்களாகவும் இல்லாவிட்டாலும் கிறிஸ்துவோடு கூட உடன் சுதந்திரவாளியாக இருக்க தன்னுடைய பங்காக தன்னைத்தானே ஒவ்வொருவரும் ப-யாக ஒப்புக் கொடுக்க வேண்டும். அவரோடு கூடப் பாடுபட்டால் மாத்திரமே அப்படியாகும். - ரோமர் 8:17

இந்த ஆசாரியர்களின் - "சிறு மந்தையின்" தலை அல்லது பிரதான ஆசாரியர் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே என்று அப்போஸ்தலர்களால் திரும்பத்திரும்ப சொல்லப்பட்டிருக்கின்றது. உதாரணத்திற்கு ஒன்றை குறிப்பிடுகிறோம். "இப்படியிருக்க, பரம அழைப்பிற்குப் பங்குள்ளவர்களாகிய **பரிசுத்த** சகோதரரே, (ராஜரீக ஆசாரிய கூட்டத்தாரே) நாம் அறிக்கை பண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப் பாருங்கள்." - எபி. 3:1

ஆசாரியத்துவ நிழலை நாம் பரிசீ-க்க கடந்து செல்லும்போது

நாம் ஒரு காரியத்தை கவனிக்கின்றோம். லேவி கோத்திரத்தார் (இவர்கள் விசுவாசத்தினால் **நீதிமானாக்கப்பட்டவர்களுக்கு** முன் அடையாளமானவர்கள்). ஆசாரியர்களை பணிக்காக தெரிந்து கொள்ளப்பட்டதற்கு முன்பிருந்தே இருக்கிறார்கள். அதேபோல, அதனுடைய பொருளாகப் பார்க்கும்போது, **ராஜரீக ஆசாரியக் கூட்டத்தார்**, பிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்துவின் அபிஷேகத்துடன் (ஞானஸ்நானத்தில் லூக். 3:22, அப். 10:38) தெரிந்து கொள்ளப்பட்டவர்களாக இருக்கிறார்கள். ஆனால் கிறிஸ்துவுக்குள்ளான விசுவாசத்தால் **நீதிமானாக்கப்பட்ட** விசுவாசிகள் அதற்கு முன்பிருந்தே இருந்து வருகிறார்கள். உதாரணமாக, ஆபிரகாம் தேவனை விசுவாசித்ததினால் **நீதிமானாகக்** கருதப்பட்டான். (ரோமர் (4:2,3). இந்த நிழலான காரியங்கள் ஆபிரகாம் காலத்தில் நடவாமல் இருந்த போதிலும், லேவியர்களால் நிழலாகக் காட்டப்பட்ட விசுவாசக் குடும்பத்தாரில் ஆபிரகாமும் ஒருவராக கருதப்படுகிறான். ஆனால், ராஜரீக ஆசாரிய கூட்டத்தாரில் ஒருவர் கூட தலைமை அல்லது பிரதான ஆசாரியர் முத-ல் நியமிக்கப்படும் வரை தெரிந்து கொள்ளப்படவில்லை. அதி-ருந்து தான், இந்த சுவிசேஷ யுகத்தின் உடன் ஆசாரியர்கள் தெரிந்து கொள்ளப்பட்டு வருகிறார்கள். இப்படியாக தெரிந்து கொள்ளப்படுகிறவர்கள் தங்களைத் தாங்களே முழுமையான ப-களாக மரணபரியந்தம் ஒப்புக் கொடுப்பதனாலேயே, தேவனுடைய ராஜ்ஜியத்தில் ராஜாக்களாக இருந்து, இந்த பூமியின் முழு மனுக்குலத்தையும் ஆசீர்வதிக்கக் கூடியவர்களாக தேவனுடைய கருவிகளாக உருவாக்கப்பட்டு வருகிறார்கள்.

## ஆசாரியக் கூட்டம்

ஆசாரியர்களை பணிக்காக நியமிக்குமுன் **முத-ல்** பிரதான ஆசாரியனை ஆயத்தப்படுத்தி அபிஷேகம் செய்தது போன்று, பிரதான ஆசாரியராக, தலைவரும், முன்னோடியுமான இயேசு தெரிந்து கொள்ளப்பட்டார். ஆதலால் மனசாட்சி காலத்தார், தீர்க்கத்தரிசிகள் எவரும், “சிறுமந்தை,” “ராஜரீக ஆசாரிய வகுப்பு” மற்றும் “மணவாட்டி,” ‘‘ஆட்டுக்குட்டியானவரின் மனைவி’’ என்பனவற்றில் பங்கு இல்லாதவர்களாக இருக்கிறார்கள் என்று பார்க்கிறோம். அவர்கள் தேவனின் ஊழியக்காரர்கள் போன்று வெகுவாக ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்ற போதிலும், அவர்களுடைய ஊழியம்

ஆசாரியர்களின் ஊழியத்தின் உயர்வைப் போன்றதல்ல. அவர்களது கனமும் அவ்வளவு உயர்ந்ததல்ல. லேவியரில் பிரதிநிதித்துவப்பட்டது போல் அவர்களது வருங்காலத்திய வேலையும், மதிப்பும் வெளிப்படையாகவே உயர்ந்ததாக இருக்கும்.

"ஜீவனுக்குப் போகிற இடுக்கமான வழியானது" (சாவாமை) கிறிஸ்து வரும்வரைக்கும் திறந்துவிடப்படவில்லை. அவ்வழியில் முத-ல் நடந்தவர் அவரே. அவர் ''ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே **வெளியரங்கமாக்கினார்**.'' (2 தீமோ 1:10) விசுவாசிகள் (லேவியர்கள்) எல்லோரும் நித்தியஜீவனைப் பெறக் கூடியவர்களாக இருந்தாலும் இவ்வுலக ஜனங்களும் (இஸ்ரயேலர்களின் பாளையம் காண்பிப்பது போல) அதே ஜீவனை ஆயிரவருட அரசாட்சியில் பெற்றாலும், பிரதான ஆசாரியனைப் பின்பற்றி மேற்கொண்டு மாம்ச இச்சைகளை ப-யிட்டு, மகிமை, கனம், சாவாமையை (ரோம. 2:7) நாடும் இடுக்கமான வாசல் வழியாகப் பிரவேசிக்கிற ஆசாரியர்கள் மட்டும் சாவாமை எனும் ஜீவியத்தை தரித்துக் கொள்வார்கள். இந்த அழியாமையானது, முதலாவதாக யேகோவா தேவனுக்கு மாத்திரமே இருந்தது. பின்பு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிற்கும் அவருடைய உயிர்த்தெழுத-ல் அருளப்பட்டது. - "யுகங்களைப்பற்றி தேவ ஏற்பாடு" என்ற புத்தகத்திலுள்ள 10 மற்றும் 11ஆம் அத்தியாயங்களைப் பார்க்கவும்.

## அபிஷேகம் செய்தல்

நியாயப்பிரமாணத்தின்படி, ஆசாரியர்கள் தேவனுடைய பணிக்காக நியமிக்கும்பொருட்டு **அபிஷேகம்** செய்யப்பட்டனர். ஆசாரியர்களை அவ்விதமாக அபிஷேகம் செய்வதற்கு, "பரிசுத்த அபிஷேக தைலம்" எனும் வினோதமான ஒருவகை எண்ணெய் பயன்படுத்தப்பட்டது. வேறு யாரும் இந்த எண்ணெயை பெற்றுக் கொள்ளவோ, செய்யவோ கூடாது. (யாத். 30 : 25-33, 38). இந்த தைலம் அல்லது எண்ணெயானது, பரிசுத்த ஆவிக்கு நிழலாக இருக்கிறது. இந்த பரிசுத்த ஆவியால்தான் நாம் உண்மையான ராஜரீக ஆசாரியக்கூட்டமாக, தேவனுடைய புத்திரராக இருப்பதற்கு, முத்திரையாக குத்தப்பட்டிருக்கிறோம். தங்களை முழுமையாக ஒப்பு கொடுப்பவர்களாகிய, ஆசாரியர்கள் மாத்திரமே இந்த அபிஷேகத்தைப் பெற்று கொள்ள முடியும்.

பிரதான ஆசாரியருக்கு நிழலாக இருக்கும் ஆரோன் தலை மற்றும் சரீர அங்கங்களடங்கிய சபையான இயேசுவை பிரதிநிதித்துவப்படுத்தினான். மற்றவர்களைப் போல, பாவ மனிதனாக இருந்ததினால், அவன் சுத்திகரிக்கப்பட்ட நிஜமான பாவம் அறியாத இயேசுவை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் கழுவப்பட வேண்டியவனாக இருந்தான். அவரது திருச்சபை, அவரது விலையேறப்பட்ட இரத்தத்தினாலும், திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினாலும் சுத்திகரிக்கப்பட்டது. (எபே. 5:26)

ஆரோன் முழுமையாக சுத்திகரிக்கப்பட்ட பின் "மகிமையும் அலங்காரமுமான" வஸ்திரங்களினால் உடுத்தப்பட்டு, (யாத்.28) பின்பு கடைசியாக அவனது தலையில் அபிஷேக தைலம் ஊற்றப்பட்டது. (யாத். 29:7) இந்த வஸ்திரங்களின் ஒவ்வொரு பகுதியும், மகா பெரிய இரட்சகரின் தலை மற்றும் சரீரத்தின் தன்மைகளையும் வல்லமைகளையும் காண்பிக்கக்கூடியதாக உள்ளது. தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நிறைவேறும்படியாகவும், தேவனுடைய புத்திரர் வெளிப்படும் காலங்களின் நிறைவேறுதல்களை காண்பிப்பவையாகவும் அவைகள் இருக்கின்றன.

## நிழலான "மகிமையும் அலங்காரமுமான" வஸ்திரங்களில் பிரதான ஆசாரியன்

''அவர்கள் உண்டாக்க வேண்டிய வஸ்திரங்களாவன : மார்ப்பதக்கமும், ஏபோத்தும், அங்கியும், விசித்திரமான உள்சட்டையும், பாகையும், இடைக்கச்சையுமே." - யாத். 28:4.


வெள்ளைப் பஞ்சுநூலால் ஆன உள்சட்டை, பிரதான ஆசாரியரின் பரிசுத்தத்தையும், விசித்திர வேலைப்பாடு, கிருபையின் கிரியைகளில் சுத்த நற்குணத்தையும் காண்பிக்கின்றது.

வெள்ளைப் பஞ்சுநூலால் பட்டையாக முன்தலையைச் சுற்றி அணியப்பட்ட பாகையானது நீதிக்கு நிழலாக உள்ளது. பசும்பொன்னினால் ஒரு பட்டத்தைப் பண்ணி, "கர்த்தருக்கு பரிசுத்தம்" என்று அதிலே முத்திரை வெட்டாக வெட்டி, அது பாகையி-ருக்கும்படி இளநீல நாடாவினால் பாகையின் முகப்பில் கட்டப்பட்டிருக்கும். பிரதான ஆசாரியர் யேகோவாவின் நோக்கங்கள் நிறைவேற முழுமையாக

தன்னை அர்ப்பணிப்பதை இது அறிவிக்கிறது. இந்த பொன் கிரீடமானது கிறிஸ்துவின் ராஜரீகத்தை குறிக்கிறது. இளநீல நாடாவினால் கட்டப்படுவதானது, இந்த ராஜரீகமான காரியம் கிறிஸ்துவுக்கு **நீதியாக** அவருடையதாக இருப்பதைக் குறிக்கிறது. இவ்வாறாக, "அவர் மகிமை பொருந்தினவராய், தம்முடைய சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்து ஆளுகை செய்வார்," "நீர் மெல்கிசெதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர்" என்பதற்கு ஒப்பாக இருக்கிறது. – சகரியா. 6:13; சங். 110:4; எபி. 7:17.

பஞ்சுநூலால் ஆன இடைக்கச்சையானது நீதிமானாக்கப்பட்ட ஊழியக்காரனைக் குறிக்கும். பஞ்சுநூல் – நீதி, இடைக்கச்சை – சேவை மனப்பான்மை. **நீல நிறமாக** இருக்கும் மேலங்கியானது, அவரது விசுவாசத்தைக் காண்பிக்கின்றது. அங்கியின் ஓரங்களில் சுற்றிலும் பொன்மணிகளும் மாதளம் பழங்களும் தொங்க விடப்பட்டிருக்கும். இந்த மாதளம் பழமானது தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட கனியாக உள்ளது. இது, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் ஈடுப–யானது, இழந்துபோன ஜீவியத்தை திரும்ப பெற்றுக்கொண்ட மிகப்பெரிய கனியை தந்ததைக் காண்பிக்கின்றது. பொன்மணிகள், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, மகிமையும் அலங்காரமுமான நிலையில் இருக்கும்போது, மணிகள் இஸ்ரயேலர்களுக்கு அறிவித்தது போன்று உலக ஜனங்கள் உட்பட எல்லோருக்கும் அவருடைய ஈடுப–யின் முக்கியத்துவத்தை **அறிவிக்கப்படுதலைக்** குறிக்கின்றது. இதன் சம்பந்தமாகத்தான் கனியும் மணியும் ஒன்றன் அருகே ஒன்றாக தொங்க விடப்பட்டன.

ஏபோத்து இளநீலநூலாலும், இரத்தாம்பர நூலாலும் சிவப்பு நூலாலும் திரிந்த மெல்–ய பஞ்சு நூலாலும் மற்றும் பொன் நூலாலும் நேர்த்தியாயும் அழகாயும் நெசவு செய்யப்பட்ட துணியால் விசித்தரவேலையாய் செய்யப்பட்டிருந்தது. இது இரண்டு பாகங்களாக, ஒன்று முன்புறமாகவும் மற்றொன்று பின்புறமாகவும் தொங்கவிடப்பட்டிருந்தது. தோள்பட்டையில் இருபொன் கொக்கிகளால் இருபாகங்களும் ஒன்றாக இணைக்கப்பட்டிருந்தன. இந்த ஏபோத்து **இரண்டு பெரிய உடன்படிக்கைகளை** நிழலாகக் காண்பிக்கின்றது. அதாவது, ஆபிரகாமோடு தேவன் செய்து கொண்ட உடன்படிக்கையை ஏபோத்தின் முன்பாகமும், புதிய உடன்படிக்கையை ஏபோத்தின் பின்பாகமும் காண்பிக்கின்றது. இவ்வாறாக ஏபோத்தின் இந்த இரண்டு



பரிசுத்த ஸ்தலம்

பாகங்களும் அந்த இரண்டு உடன்படிக்கைகளாக நம்முடைய பிரதான ஆசாரியரை **சார்ந்து இருப்பது** போல் காண்பிக்கப்பட்டிருக்கின்றன. இவ்விரண்டு உடன்படிக்கைகளும் அவர்மேல் சுமத்தப்பட்டிருக்கின்றன. அவைகளை தாங்காமல் இருந்தாலோ அவற்றின் விதிமுறைகளை செயல்படுத்தாம-ருந்தாலோ அவைகள் கீழே விழ நேரிடும். ஆனாலும் அவ்விருபாகங்கள் கீழே விழாதபடி, தெய்வீக வல்லமை எனும் பொன் கொக்கிகளினாலே இறுக்கமாக கட்டப்பட்டு இருப்பதோடு மட்டுமல்லாது, விசித்திரமான இடைக்கச்சையினாலேயும் சுற்றிக் கட்டப்பட்டிருக்கும். இந்த கச்சையும் ஏபோத்து செய்யப்பட்ட அதேவிதமான பொருளினாலே தான் செய்யப்பட்டிருக்கும்.

விசித்திர கச்சையானது, இவரே **ஊழியக்காரன்** என்றும் "நீங்கள் விரும்பும் உடன்படிக்கையின் தூதனுமானவர் (ஊழியக்காரர்)'' (மல் 3:1) என்றும் சொல்வது போன்றுள்ளது.

ஏபோத்தின் ஒருபாகமான புதிய உடன்படிக்கை கல்வாரியிலே உத்தரவாதமாக்கப்படடது. ஏனெனில் ஆண்டவரின் மரணம் பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற நமது கர்த்தரின் புது உடன்படிக்கையின் இரத்தமல்லவா? அதில் அவரது அங்கங்களாகிய நீங்களும் பங்கு பெறுகிறீர்களல்லவா? - மத். 26:28; 1 கொரி 10:16

பரலோகப்பிதா இனி வருங்காலத்தில் நிறைவேற்ற சித்தம் கொண்டிருப்பதால், ஏபோத்தின் மற்றொரு பாகம் முழுமையற்றதாக வுள்ளது. எப்படியென்றால், ஆபிரகாமின் உடன்படிக்கையின்படி ஒரு சந்ததி (வித்து) வரவேண்டும். அந்த சந்ததியின் மூலமாகத்தான், புதிய உடன்படிக்கையின்படி, உலகத்தில் சகல ஜாதிகளையும் ஆசீர்வதிக்க வேண்டும். அப்படிப்பட்ட சந்ததியானது இன்னும் பூரணப்படவில்லை. அந்த சந்ததி நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்பது உண்மைதான். ஆனால் தேவன், சரீரத்தை உள்ளடக்கிய, தலையுடன் கூடிய திருச்சபை எனும் ஆவிக்குரிய பெரிய வித்தை எதிர்நோக்கினார். (கலா. 3:16,29) அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுவது போல, ஆபிரகாமின் பூமிக்குரிய சந்ததியானது உலகத்தை ஆசீர்வதிப்பதில் பங்கு பெறும். இருப்பினும் ஆவிக்குரிய ஞான இஸ்ரயேலரே உண்மையான சந்ததியாவார்கள்." "அடிமையானவளின் மகள் சுயாதீனமுள்ளவளுடைய குமாரனோடே சுதந்திரவாளியாயிருப்பதில்லை." - கலா. 4:22-31.




பிரதான ஆசாரியனின் வரைபடம்

ஆபிரகாமின் மாம்சீக சந்ததியாரான மாம்ச இஸ்ரயேலர்கள், ஆசீர்வதிக்கும் பணியில் இருக்க மாட்டார்கள். அப்போஸ்தலன் சொல்கிறார் : "சுவிசேஷத்தைக் குறித்து (உடன்படிக்கையின் ஆவிக்குரிய பாகம்) அவர்கள் (மாம்ச வித்து) உங்கள் நிமித்தம் பகைஞராயிருக்கிறார்கள்; தெரிந்து கொள்ளுதலைக் குறித்து அவர்கள் (இன்னும்) பிதாக்களினிமித்தம் அன்புகூறப்பட்டவர்களா யிருக்கிறார்கள். தேவனுடைய கிருபைவரங்களும், அவர்களை அழைத்த அழைப்பும் மாறாதவைகளே. நான் அவர்களுடைய பாவங்களை நீக்கும்போது, இதுவே **நான் அவர்களுடனே செய்யும் உடன்படிக்கை** – இந்த பிரகாரம் இஸ்ரயேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள். மீட்கிறவர் (இந்த

மகா பெரிய பிரதான ஆசாரியர் - உடன்படிக்கையின் ஊழியக்காரர், தலையாகிய இயேசுகிறிஸ்துவும் அவருடைய சரீரமாகிய "சிறுமந்தையும்") சீயோனி-ருந்து (ஆவிக்குரிய திருச்சபை) வந்து, அவபக்தியை யாக்கோபை விட்டு விலக்குவார்.'' இவர்கள்தான் **முதலாவது** ஆவிக்குரிய அல்லது உண்மையான வித்தினால் ஆசீர்வதிக்கப்பட போகிறவர்கள்; பின்னர் உடன் ஊழியர்களாவார்கள். - ரோமர் 11:26-29

ஆகையினால், ஆவிக்குரிய சந்ததியாகிய கிறிஸ்துவின் சரீரம் ஆவிக்குரிய வித்தை பூரணமாக்கும் போது - ''வானத்து நட்சத்திரங்களைப் போல பெருகும்போது" (ஆதி. 22:17) மாம்சீக இஸ்ரயேலர்களும் "கடற்கரை மணலைப்போல" பெருகி பூமிக்குரிய ஆசீர்வாதத்தைப் பெற்று கொள்கிறார்கள். ஆவிக்குரிய சந்ததியானது, நீதியினாலும், சத்தியத்தினாலும், நிரப்பப்பட்ட இஸ்ரயேலர் சந்ததியின் மூலம், உலக ஜனங்களை சத்தியத்திலும், தேவகிருபையிலும் வழிநடத்தும்.

ஏபோத்தை உருவாக்கிய இரத்தாம்பரம், நீலம், சிவப்பு, வெண்மை, பொன் ஆகியவை இரண்டு உடன்படிக்கைகளின் நிலைமையை காண்பிக்கின்றன. **சிவப்பானது** ஆதாம் பெற்றுக்கொண்ட சாபத்தி-ருந்து தேவன் மனுக்குலத்தை இரட்சிப்பதற்காக ஈடுப-யின் இரத்தத்தை எவ்விதமாக வழங்கினார் என்பதைக் காட்டுகின்றது. **வெண்மையான** பஞ்சு நூலானது மனிதன் முன்பு இருந்த பரிசுத்த நிலைக்கு கொண்டுவரப்படுதலைக் காண்பிக்கின்றது. **நீலமானது**, மனிதன் தன்னுடைய நீதியான நடத்தையைத் தன்னுடைய திறமையினாலும், விசுவாசத்தினாலும் காத்துக் கொள்வதைக் காண்பிக்கின்றது. **இரத்தாம்பரமானது**, தேவனுடைய இராஜ்ஜியத்திற்குரிய ராஜரீக வல்லமையைக் காண்பிக்கின்றது. இந்த ஆசீர்வாதங்கள் எல்லாம் அபிஷேகம் பண்ணப்பட்ட ஆசாரியருடைய தெய்வீக வல்லமையினால் ஒருங்கே நெசவு செய்யப்பட்டுள்ள **பொன்** நூ-னால் காண்பிக்கப்பட்டுள்ளன. இந்த இரண்டு உடன்படிக்கைகளும் மனிதன் சம்பந்தப்பட்டவை என்பதால் வல்லமையுள்ளவரும், மகிமையான உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களை ஏற்ற காலத்தில் விருப்பத்துடன் செயல்படுத்துபவருமான ஒருவர்மேல் இவைகளை யேகோவா தேவன் வைத்துள்ளார்.

''நியாயவிதி மார்ப்பதக்கம்'' ஏபோத்தின் முன்புறம்

வைக்கப்பட்டிருந்தது. தோள்களில் உள்ள பொன் கொக்கிகளி-ருந்து, பொன் சங்கி-யினால் இது தொங்கவிடப்பட்டிருந்தது. இரண்டு பொன் வளையங்கள் ஊடாக ஒரு கயிற்றால் ஏபோத்துடன் இணைக்கப்பட்டிருந்தது. சாதாரணமாக பார்ப்பவர்களுக்கு இந்த இணைப்பானது ஏபோத்தின் ஒரு பகுதியாக தோன்றும் விதத்தில் அடிப்பாகத்தில் இவ்வாறு இணைக்கப்பட்டிருந்தது. (யாத். 28:26-28) இந்த நியாயவிதி மார்ப்பதக்கமானது. **நியாயப் பிரமாணத்தை** அழகாக நிழலாகக் காண்பித்தது. இந்நியாயப் பிரமாணமானது ஆபிரகாமின் உடன்படிக்கையின் (ஏபோத்தின் முன்பாகம்), ஒரு பாகமாக இராமல், அதோடே கூட ''கூட்டப்பட்டதாக'' (கலா 3:19) இருந்தது. (மறைக்கப்பட்டிருந்த தொடர்பை கவனிக்காமல்) இஸ்ரயேலர்கள் அதை ஆபிரகாமின் உடன்படிக்கை, மற்றும் 430 வருஷத்திற்கு பிறகு வந்த நியாயப்பிரமாணம் ஆகிய இரண்டும் ஒன்று என கருதிக் கொண்டார்கள். ஆனால் அப்போஸ்தலனாகிய பவுல் தேவன் ஆவிக்குரிய மற்றும் மாம்சமான இரண்டு வேறு வித்துக்களை மனதில் வைத்திருப்பதாக கூறுகிறார். உடன்படிக்கையும், நியாயப் பிரமாணமும் வேறுப்பட்டதாக ''**நியாயப்பிரமாணத்தை** சார்ந்தவர்களாகிய சந்ததியினருக்கு மட்டுமல்ல, விசுவாசத்தைச் சார்ந்தவர்களான எல்லா சந்ததியாருக்கும் அந்த வாக்குத்தத்தம் நிச்சயமாயிருக்கும்படிக்கு அப்படி வருகிறது." (ரோமர் 4:16)

இந்த நியாயப் பிரமாண அடையாளமானது (மார்பதக்கம்) பிரதான ஆசாரியரின் வஸ்திரங்களிலேயே மிகவும் அழகானதாக இருந்தது. இது ஏபோத்து செய்யப்பட்ட அதே பொருட்களால் செய்யப்பட்டது. இதில் பன்னிரண்டு கோத்திரங்களின் நாமங்கள் பொறிக்கப்பட்டு பொன்னில் பதிக்கப்பட்ட பன்னிரண்டு மதிப்பு மிக்க இரத்தினங்களைப் பெற்றிருந்தது. இது அவனுக்கு மதிப்பு வாய்ந்தது என்பதைக் காட்டும் வகையில் பிரதான ஆசாரியனின் நெஞ்சின் மேல் கட்டப்பட்டிருந்தது. "நீதியின் மார்க் கவசத்தைப்" போலவும் அபூரணம் அவனுடைய சந்தோஷம் என்பதைக் கண்டிப்பதைப் போலவும் அவனுடைய இருதயத்தை மூடியிருந்தது.' "என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன். **உமது நியாயப் பிரமாணம்** என் உள்ளத்திற்குள் இருக்கிறது என்று சொன்னேன்." - சங் 40:8

இந்த மார்பதக்கம் இரண்டு சாண் நீளமாகவும், ஒரு சாண் அகலமாகவும் மையத்தில் மடிக்கப்பட்டதாகவும் இருந்தது. அதாவது

**இரட்டிப்பாக்கப்படும்**. அதை இரண்டாக மையத்தில் மடிக்கும் போது நீளம் அகலம் ஒரு சாண் அளவே இருக்கும். இந்த ஒரு சாண் அளவு ஒரு **பூரண மனிதனின் திறமையை** அளக்கக் கூடிய தேவனின் பிரமாணத்தை குறிக்கிறது. கிறிஸ்து இயேசு ஒருவரே தேவனுடைய பிரமாணத்தை மீறாமல் அதைப் பூரணமாக கடைப்பிடித்ததால் பூரணமான மனுஷனாக இருக்கிறார். அதே வேளையில் ‘‘சிறு மந்தை”யாக்கப்படும் அவருடைய சரீரம், பெற்றுக் கொள்ளப்பட்ட அவரது நீதியால் “பிரமாணத்தின் நீதியானது எங்களில் நிறைவேற்றப்பட்டது” என்று உண்மையில் சொல்கின்றனர்.

மார்பதக்கம் இரட்டிப்பாகவும், பாகங்கள் ஒரே அளவாகவும் இருந்ததானது, பிரமாணத்தின் **எழுத்துக்களையும்**, அதன் **ஆவியையும்** காண்பித்தது. இரத்தின கற்கள் பதித்து உள்ள ஏபோத்தின் பொற்கொக்கிகளுடன், பொன் சங்கி-களினால் தொங்கவிடப்பட்டிருந்தது. அதன் கீழ்ப்பகுதி ஏபோத்துடன் இணைக்கப்பட்டது. ஏபோத்தோடு (உடன்படிக்கை) கட்டப்பட்ட அடிப்பாகமானது, மாம்ச இஸ்ரயேலர்களுக்கு தேவன் கொடுத்த எழுத்து வடிவமான நியாயப்பிரமாணத்தை குறிக்கிறதாக உள்ளது. முன் பாகம் “மாம்சத்தில் நடவாமல் ஆவியில் நடக்கிறவர்களுக்காக (ரோமர் 8:4) தேவன் கொடுத்த நியாயப் பிரமாணத்தின் ஆவி - **நம்மில் நிறைவேறின** பிரமாணத்தை காட்டுவதாக அமைந்துள்ளது. இவைகள் இரண்டு பாகங்களாக இருந்தாலும் நன்றாக பார்க்கும்போது J**ரே** பொருளாகத்தான் இருக்கிறது. ஆனாலும் முன்பகுதி மாத்திரமே விலையுயர்ந்த இரத்தின கற்களை பெற்றிருக்கிறது.

பசும் பொன் **தெய்வீகத்தைக்** குறிப்பதினாலே நியாயப் பிரமாணத்தின் இந்தப் பகுதி பொற்கொக்கிகளி-ருந்து வரும் பொன் சங்கி-களைச் சார்ந்துள்ளதானது, நியாயப் பிரமாணமானது **தெய்வீகத்தினாலே** உண்டாயிருக்கிறதென்பதை நிழலாகக் காட்டுகின்றது. நாமும்கூட, தெய்வீகத்தின் உதவியால் மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்க முடிகிறது என்பதை அறிவோம். பொன்னில் பதிக்கப்பட்ட இரத்தின கற்களைப் பெற்றுள்ள நியாயப் பிரமாணம் - தேவனுடைய உண்மையான இஸ்ரயேலர்கள் என்ற சிறுமந்தைக்குரிய மக்கள் தெரிந்துக் கொள்ளப்பட்டிருக்கின்றனர் என்பதைக் காட்டுகின்றது. “என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளிலே அவர்கள் என்னுடையவர்களா யிருப்பார்கள் என்று சேனைகளின்

கர்த்தர் சொல்லுகிறார்.'' (மல் 3:17) இப்படியாக தேவனுடைய சுபாவத்திற்குரியவர்களாக, தேவனுடைய வல்லமையினால் "நியாயப் பிரமாணத்தின் நீதி நம்மிடத்தில் எவ்வளவு அழகாக நிறைவேறுகிறது!" ரோ.8:1,4.

ஆரோன் அலங்காரமான வஸ்திரங்களிலே நின்றது குறிப்பிடத்தக்க நிழலாகவும், அவன் எண்ணெயால் அபிஷேகம் பண்ணப்பட்டதானது, அவனது தலை நம்முடைய பிரதான ஆசாரியராகிய இயேசு கிறிஸ்துவையும், அவனுடைய சரீரமானது, கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையாரையும் நிழலாக காண்பித்து கிறிஸ்துவில் பூரணப்படுகிறது. இது எவ்வளவு அழகாக, யேகோவா தேவனுடைய உடன்படிக்கைகளை நிறைவேற்றக் கூடியவராகவும் குற்றமற்ற, வல்லமையினாலும், அதிகாரத்தினாலும், வஸ்திரம் தரிப்பிக்கப்பட்ட உலகத்தின் பிரதான ஆசாரியராகவும் இருக்கும் இயேசு கிறிஸ்துவுக்கு ஒரு குறிப்பிடத்தக்க நிழலாக இருக்கின்றது!

## உடன் ஆசாரியர்கள் - "சரீரம்"

**சரீரம்** அல்லது பிரதான ஆசாரியரின் உறுப்பினர்களும், மறுபடியும் தனித்தனியாக உடன் ஆசாரியர்களை குறிப்பதாக நாம் பார்க்கின்றோம். குல்லா அணிந்து தனது தலையை மூடியுள்ள உடன் ஆசாரியர்கள் ஒவ்வொருவரும் ஆசாரியக் கூட்டத்தின் தலையாக இல்லாமல், ஒரு உறுப்பினராக மாத்திரம் இருக்கிறார்கள் என்பதைக் குறிக்கின்றது. "தேவன் இயேசுவை சரீரமாகிய சபைக்கு எல்லாவற்றிற்கும் மேலான **தலையாகத்** தந்தருளினார்." – எபே. 1:22,23. இதற்காகத்தான் அப்போஸ்தலனாகிய பவுல், ஸ்திரீகள் தங்கள் புருஷர்களுக்கு தலையாக இராமல் அவர்களுக்கு கீழாகத்தான் இருக்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்டுவதற்கு தங்களுடைய தலையை முக்காடினால் மூட வேண்டும் என்று வற்புறுத்துகிறார். கணவனும் மனைவியும் இயேசுவுக்கும், முதற்பிறப்பின் சபை, எனும் மணவாட்டிக்கும் நிழலாகவுள்ளது.

உடன் ஆசாரியர்கள் பஞ்சு நூலால் நெய்யப்பட்ட வஸ்திரங்களினாலே உடுத்தப்பட்டு, கச்சைகள் தங்கள் இடையிலே கட்டப்பட்டவர்களாக இருந்தார்கள். அவர்களுடைய அங்கி அவர்களுக்கு அளிக்கப்பட்ட இயேசுவின் **நீதியையும்**, அவர்கள் அணிந்திருந்த கச்சைகள் அவர்கள் நீதிக்கு **ஊழியக்காரர்களாக** இருப்பதையும்

குறிப்பிடுகிறதாயிருக்கிறது. பிரதான ஆசாரியன் பாவநிவாரண நாளிலே ப-யிடும்போது இதுபோன்ற உடைகளை உடுத்திக் கொள்வார். பாவங்களை நிவர்த்தி செய்தபிறகு மகிமையான உடைகளை அணிந்து கொள்வார்.

## ஆசாரியனை அபிஷேகம் செய்தல்

ஆரோனின் தலையிலே பரிசுத்த தைலம் ஊற்றி, அபிஷேகம் செய்ததுபோல, நம்முடைய தலையாகிய கர்த்தராகிய இயேசுவும் பரிசுத்த ஆவி என்ற நிஜமான தைலத்தாலே யோர்தான் நதியிலே தேவனுடைய ஊழியத்திற்காக தத்தம் செய்த நேரத்திலே முப்பது வயதுள்ளவராக இருந்தபோது அபிஷேகம் பண்ணப்பட்டார். அங்கே அவரது உடன்சுதந்திரர்களுக்கெல்லாம் தலையாக, "அவரது தோழரைப் பார்க்கிலும் ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணப்பட்டார்." இவ்வாறு – தத்தம் செய்கிற ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஆவி **அளவாக** கொடுக்கப்படுகிறது. ஆனால் யேகோவா தேவன் அவருக்கு தம்முடைய ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார். (யோவா. 3:34) யோவான் நமது பிரதான ஆசாரியர் அபிஷேகம் செய்யப்பட்டதை கண்டு உறுதிப்படுத்துகிறார். பேதுரு இதை சாட்சியாகச் சொல்லும்போது, "நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் **அபிஷேகம் பண்ணினார்**" என்கிறார். – (யோவா. 1:32 ; லூக். 4:1 ; அப். 10:38).

அபிஷேக தைலமானது **தலையின்**மேல் **மாத்திரமே** ஊற்றப்பட்டது. உடன் ஆசாரியர்கள் தனித்தனியாக அபிஷேகம் பண்ணப்படவில்லை.* இவர்கள் பிரதான ஆசாரியரின் சரீரத்தின் உறுப்பினர்களாக அங்கீகரிக்கப்பட்டு அவரை தலையாகக் கொண்டு அவருக்குள் அபிஷேகம் பெற்றார்கள். அதேபோல், சத்தியத்தைக் கேட்டு, விசுவாசிகளான பிறகு தங்களை முழுமையாக அர்ப்பணித்த ஒவ்வொருவரும் பரிசுத்த ஆவியினால் கிறிஸ்துவுக்குள் முத்திரைப் போடப்பட்டவர்களாக கருதப்படுகிறார்கள். இவர்களே கிறிஸ்துவின் உடன்

---

*யாத்திராகமம் 30:30ம் வசனம் ஆரோனையும் அவன் குமாரரையும் அபிஷேகம் பண்ணுவதைக் குறிக்கிறது. இதன் கருத்தானது பிரதான ஆசாரியரின் இடத்திற்கு வந்த ஆரோனின் குமாரர்கள் அவர்களுடைய வரிசையில் ஆரோனைப் போன்றே அபிஷேகம் பண்ணப்படுவதை குறிப்பதாகும்.

சுதந்தரர்களாக கிறிஸ்துவிற்குள் தேவனால் தெரிந்துகொள்ளப் பட்டவர்களாக இருக்கிறார்கள். - எபேசியர் 1:13,14; 4:30

அந்த அபிஷேக தைலமானது சிரசின்மேல் ஊற்றப்பட்டு... அவனுடைய (பிரதான ஆசாரியரின்) அங்கிகளின் மேல் வடிகிறதுமாக இருக்கிறது. (சங் 133:2) இது கிறிஸ்துவின் உடன் ஆசாரியர்கள் எவ்விதமாக தலையாகிய கிறிஸ்துவிற்குப் **பிறகு** அபிஷேகம் பண்ணப்படுகிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறது. "நீங்கள் **அவராலே பெற்ற அபிஷேகம்** உங்களில் நிலைத்திருக்கிறது." (1 யோவா. 2:27) இந்த அபிஷேக தைலம் பெந்தெகொஸ்தே நாளிலே **சரீரத்தை** அடையத் தொடங்கி இந்த சுவிசேஷயுகம் முழுதும் ஓடி, **கிறிஸ்துவுக்குள்** உண்மையாக ஞானஸ்நானம் பெற்ற அனைவரையும் அபிஷேகம் பண்ணுகிறது. இவர்களே கிறிஸ்துவோடு கூட ராஜாக்களாகவும், ஆசாரியர்களுமாகி, ஆயிர வருஷ அரசாட்சியை செய்யப் போகிறவர்களாக இருக்கிறார்கள். - வெளி. 20:6

இவ்வாறாக வஸ்திரங்கள் உடுத்தப்பட்டு, அபிஷேகம் செய்யப்பட்டவராக இருக்கக்கூடிய ஆரோன், முழுகிறிஸ்துவை - உலக ஜனங்களனைத்தையும் ஆசீர்வதிக்கப் போகிற ஆபிரகாமுடைய முழுமையான அந்த வித்தை - நிழலாகக் காண்பிக்கக் கூடியவராக இருக்கிறார். ஆனால் உலகத்தின் பெரிய இரட்சகர் வெளிப்படப் போவதையும், ஆயிரவருட அரசாட்சியையும், சரீரத்திற்குள் அனைவரும் வந்தடைந்து சரீரம் பூரணப்படப் போவதையும், பரிசுத்த தைலம் ஒவ்வொருவரையும் அபிஷேகம் செய்து அங்கியின் கீழ்பாகம் வரைக்கும் வழிந்து முடிவடைவதையும், தேவனின் எண்ணத்தி-ருந்து பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதை நாம் மறக்கக்கூடாது. (லேவி. 10:7) அதன் பிறகு மனித குலத்தை அவர் ஆசீர்வதிக்க ஆரம்பிப்பார். "உம்முடைய ராஜ்ஜியம் வருவதாக, உம்முடைய சித்தம் பூமியிலேயும் செய்யப்படுவதாக" என்று மகிமையான ராஜரீக ஆசாரியரின் அரசாட்சிக்காகத்தான் நாம் ஜெபித்துக் கொண்டிருக்கிறோம்.

# அத்தியாயம் 3

# ஆசாரியர்களை பிரதிஷ்டை செய்தல்

## லேவியராகமம் 8:14-33

தேவனுடைய ஊழியத்திற்காக தனியாக பிரித்தெடுத்தல் – "நீ மரணபரியந்தம் உண்மையுள்ளவனாயிரு" – "உங்களை நீங்களே பரிசுத்தப்படுத்துங்கள்," "நான் உங்களை பரிசுத்தம் பண்ணுவேன்" – பிரதிஷ்டை செய்யப்படும் காளைகளும் ஆட்டுக்கடாக்களும் – பிரதிஷ்டையின் அபிஷேகத் தைலம்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்மை – தம்முடைய மனித சித்தத்தை யெகோவா தேவனுக்காக மரணபரியந்தம் கீழ்ப்படிந்து ஒப்பு கொடுத்ததையும், அவருடைய சரீரமாக அழைக்கப்பட்ட நீதிக்காக உபத்திரவப்பட்டு, தங்களுடைய மாம்ச சிந்தையனைத்தையும் தேவனுக்காக மரணபரியந்தம் கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுத்த திருச்சபையையும், நிழலாகக் காட்டுவதுதான் இந்த ஆசாரியர்களின் பிரதிஷ்டை ஆகும். ஆரோனின் குமாரர்களால் பிரதிநித்துவப்படுத்தப்படும் இந்த முழு சரீர அங்கத்தினர்கள் (மற்றும் ஆரோனால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் தலை) இந்த சுவிசேஷ யுகத்தில் செய்த மெய்யான ப-யால் திரும்பக் கொடுத்தல், ஆட்சி செய்தல், மனுக்குலத்தை ஆசீர்வதித்தல் போன்ற வருங்கால வேலைக்காக ராஜரீக ஆசாரியர்களாக இப்பொழுதே **பிரதிஷ்டை செய்துகொள்கிறார்கள்.** இந்தவிதமான பிரதிஷ்டையானது, தேவனுடைய சித்தத்திற்காகவும், அவருடைய ஊழியத்திற்காகவும் தங்களுக்குரிய **எல்லாவற்றையும்** அர்ப்பணிப்பதை குறிக்கிறது. இப்படி தங்களையும், தங்களுடையவைகளையும், தங்களுடைய மாம்சீக நம்பிக்கைகளையும், உலகத்திற்காக அழித்துவிட்டு, கிறிஸ்துவோடுகூட உடன் ப-செலுத்துபவர்களாக ஆனவர்களை, யேகோவா தேவன் ஒரு புதிய நிலைக்குள் – ஆவிக்குரிய நிலைமைக்குள் **ஜநிப்பிக்கிறார்.** அதுமாத்திரமல்ல, அவரின் வாக்குத்தத்தத்தின்படியே கடைசிவரைக்கும் விசுவாசமுள்ளவர்களாக இருக்கும் ஒவ்வொருவருக்கும் மிகவும் மேலான ஆசீர்வாதத்தை – தெய்வீக சுபாவத்தை அருளக்கூடியவராக இருக்கிறார்.

இவ்விதமாக இவர்கள் எல்லோரும் தேவனுடைய புத்திரராக எண்ணப்படுவார்கள். - கலா. 4:4-7; 2 பேது 1:4

## "மரணபரியந்தம் நீ உண்மையுள்ளவனாயிரு"

ப-யிடுவதற்காக பிரதிஷ்டை செய்யப்பட்ட சிலர் - ராஜரீக ஆசாரிய கூட்டத்தில் சேர்ந்த சிலர் வருங்காலத்தில் அந்த ராஜரீக ஊழியத்தில் பங்கு பெறமாட்டார்கள் என்பதை இவ்வித நிழலான பாடங்களில் மாத்திரம் அல்லாமல் புதிய ஏற்பாடு புஸ்தகத்திலும் அழுத்தமாக பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. ஒரு வகுப்பார் அக்கினியி-ருந்து மீட்கப்பட்டது போன்று மிகுந்த உபத்திரவத்தி-ருந்து வந்தாலும், மேலான பந்தய பொருளைப் பெற தவறிவிடுவதாகவும் பார்க்கிறோம். இப்படிப்பட்டவர்கள் தங்களை பிரதிஷ்டை செய்தபோதிலும் ஆசாரியராக முழுமையாக அப்பணிக்கு அர்ப்பணம் செய்யாததினாலே - பிரதான ஆசாரியரோடு கூட பாடுபடுவதற்கு போதிய அளவு ஆர்வம் காட்டாததினாலே இப்படிப்பட்ட நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். இந்த காரியங்களைக் குறித்து, குறிப்பாக பின்னால் பாவநிவாரண நாளிலே நடக்கும் ப-களைக் குறித்துப் பார்க்கும்போது தெளிவாக அறியலாம்.

ஆசாரியாக பிரதிஷ்டை செய்துகொண்ட வேறு ஒரு வகுப்பார், அவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட **ராஜரீக** ஆசீர்வாதத்தை பெறத்தவறி இரண்டாம் மரணத்திற்கு ஒப்புக் கொடுக்கப்படுவார்கள். இது, புதிய ஏற்பாட்டிலே தெளிவாக நமது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. (எபி 6:4-6; 10:28-31; 1 யோவான் 5:16) இப்படிப்பட்டவர்களும், இந்த ஆசரிப்பு கூடார நிழல்களிலே காண்பிக்கப்படுகிறார்கள்.

ஆரோனுடைய நான்கு குமாரர்கள் முத-லே உடன் ஆசாரியர்களாகக் காண்பிக்கப்பட்டனர். அவர்களில் இருவர் அழிக்கப்பட்டனர். இதற்கு ஒப்பாகத்தான் மேலே சொன்ன தோல்வி அடைந்த இருவகுப்பார் உள்ளனர். ஒரு வகுப்பார் இரண்டாம் மரணத்தைச் சந்திக்கிறார்கள். மற்றொரு வகுப்பார் நெருப்பி-ருந்து காப்பாற்றப்பட்டவர்களைப் போ-ருப்பார்கள். ஆரோனும் அவனுடைய மற்ற இரு குமாரர்களும், இறந்து போனவர்களுக்காக புலம்பாதபடிக்கு எச்சரிக்கப்பட்ட விதமாக, தேவனுடைய உண்மையான ஆசாரியர்கள், அவருடைய நியாயத் தீர்ப்பிலே குறைகளைக் காணதபடி, அவருடைய நீதியான தீர்மானத்தின் திட்டங்களுக்கு செவிசாய்த்து இணங்கக்

கூடியவர்களாகி "பரிசுத்தவான்களின் ராஜாவே, தேவருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்" என்றும், "அவருடைய இளைப்பாறுத-ல் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப் போனவனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்கக்கடவோம்'' என்றும் சொல்லக் கூடியவர்களாக இருப்பார்கள். - லேவி. 10:1-7; வெளி. 15:13; எபி. 4:1

## "உங்களை நீங்களே பரிசுத்தப்படுத்துங்கள்" - "நான் உங்களைப் பரிசுத்தப்படுத்துவேன்"

நீதிமானாக்கப்பட்ட விசுவாசிகளுக்கு தேவனுடைய ஊழியத்திற்காகவும், அவரை சேவிப்பதற்காகவும் கொடுக்கப்படும் அழைப்பானது அவர்கள் தங்களுடைய **உலக விருப்பங்கள் அனைத்தையும் ப-யிட்டுவிட** வேண்டும் என்பதற்கான அழைப்பாகும். இப்படிப்பட்டவர்களுக்கு தேவனுடைய வாக்குத்தத்தம் என்னவெனில், இத்தகைய ப-கள் பரிசுத்தமானவையாகவும், நமது மீட்பருக்கு உகந்ததாகவும், இதன்மூலம் அவர் நம்மை புதிய சிருஷ்டியாக அங்கீகரித்து, சத்தியத்தின் பரிசுத்த ஆவியால் நம்மை புதிய சாயலுக்கு ஜெநிப்பிப்பார் என்பதாகும். இவ்விதமாக தேவன் **பரிசுத்த புதிய சிருஷ்டிகளை தூய்மையாக்குகிறார்**.

ஆசாரியர்கள் அபிஷேகம் செய்யப்படும் போது மேற்கொள்ளப்படும் சடங்குகளில், இரண்டு முக்கிய காரியங்கள் நமக்கு காட்டப்படுகின்றன. நம்முடைய மனித சுபாவத்தையும் அதனுடைய உரிமைகளையும் ஒப்பு கொடுப்பது ஒரு பாகமாகவும், நம்முடைய இந்த ப-களை தேவன் ஏற்று அங்கீகரித்து நம்மை பிறரிடத்தி-ருந்து தனித்துக் காட்டுவது மற்றொரு பாகவும் இருக்கிறது. **புதிய** சிருஷ்டிக்குரிய நிலை ஆரோன் மற்றும் அவனுடைய குமாரரிலும், நம்முடைய உலக சுபாவங்களை ப-யிட செய்வது, காளை மற்றும் ஆட்டுக்கடாக்களின் ப-களிலும் காட்டப்பட்டது. - லேவி. 8:14-33.

பாவநிவாரண ப-க்கான **காளை** கொண்டு வரப்பட்டு அதனுடைய தலையின்மேல் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளை வைத்தார்கள். இவ்விதமாக "இந்த ப- எங்களுக்கு ஒப்பாக இருக்கிறது" என்று அவர்கள் சொன்னார்கள். அந்த வேளையி-ருந்து அந்த காளைக்குச் செய்த ஒவ்வொரு காரியமும் நம்முடைய

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் அவரது சரீரமான சபையாருக்கும் மாம்சத்தில் இருக்கும்போது செய்யவேண்டியவைகளுக்கு ஒப்பாக இருந்தது. இந்த காளையானது (மோசேயால் காண்பிக்கப்பட்டபடி) நியாயப்பிரமாணத்திடம் பொதுவாக மனுக்குலத்தை அடையாளப்படுத்திய இஸ்ரயேலரின் தேவைகளைச் சந்திக்கும் விதமாக ஒப்படைக்கப்பட்டது. நியாயப் பிரமாணத்தின் தேவைகளைச் சந்திக்க இது கொல்லப்படவேண்டியதா யிருந்தது – "மோசே அதைக் கொன்றான்," அவன், அடுத்ததாக, ப-பீடத்தின் கொம்புகளில் இரத்தத்தை பூசினான். இவ்வாறாக **நியாயப்பிரமாணத்தின்** விரலானது உலகப்பிரகாரமான ப-களின் இரத்தம் சிந்துத-னால் ப-பீடம் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதையும் (ஜீவன் கொடுக்கப்பட்டது), ப-பீடத்தின் வல்லமையை உணரும் அனைவரும் முத-ல் இதை சுத்திகரிக்கும் இரத்தத்தை அங்கீகரிக்க வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டியது. ப-யின் இரத்தத்தின மூலம் இந்த **பூமிகூட** திரும்ப **வாங்கப்பட்டது** என்பதை ப-பீடத்தின் அடியில் ஊற்றப்பட்ட இரத்தம் குறிப்பிட்டது. "அவருக்கு சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள்." எபே. 1:14ஐப் பார்க்கவும்.

மோசே காளையையும் அதின் தோலையும், சாணியையும், மாம்சத்தையும் "பாளையத்திற்கு" புறம்பே அக்கினியிலே சுட்டெரித்தான். (வசனம் 17) இப்படியாக முழு கிறிஸ்துவும் தலையும் சரீரமும் சேர்ந்து பாவப-யாக உலகத்தின் பாவங்களுக்காக – பாவத்தை போக்குவதற்காக ப-யாக்கப்படுகின்றனர். இதன் மூலம் கர்த்தராகிய இயேசுவும் அவருடைய ''சகோதரர்களாகிய'' நாமும், ''**அவருடைய சரீர** அங்கங்களாக'' அவருடைய உபத்திரவங்களில் குறைவானதை நிறைவேற்றுகிறோம். (கொலோ. 1:24). ஆனால் ராஜரீக ஆசாரியத்துவத்தின் மனிதத்தன்மை அழிக்கப்படும்போது, உலகத்தின் கண்களுக்கு ஒரு மறைக்கப்பட்ட காரியமாக பாளயத்திற்கு புறம்பே சுட்டெரிக்கப்பட்ட காளையின் மூலம் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. ப-யை முறைப்படுத்தும் இருதய சமர்ப்பணத்தை தேவன் அங்கீகரிக்கிறார். இதுகுறித்து வேதம் கூறுகிறதாவது: "தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ வருகிறேன்," "என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்.'' (சங். 40:8) இது ப-பீடத்தின் மேல் தகனிக்கப்பட்ட காளையின் கொழுப்பு, உயிர் உறுப்புகள் கர்த்தருக்கு "சுகந்த வாசனை" யாக உள்ளது.



பிரதான ஆசாரியன் மற்றும் உதவி ஆசாரியனின் வஸ்திரம்

இதே பிரதிஷ்டையின் மற்ற சிறப்புகள் வசனம் 18 மற்றும் 20ல் தெரிவிக்கப்பட்டுள்ள இரண்டு ஆட்டுக்கடாக்களின் மூலம் காட்டப்பட்டுள்ளது. முதலாவது கொல்லப்பட்ட ஆட்டுக் கடா தகனப்ப-க்கானது. ஆரோனும் அவனது குமாரரும் அதன்மேல் கைகளை வைத்ததன் மூலம் அது தங்களை குறிப்பிட்டதைக் காண்பிக்கிறார்கள். அது கொல்லப்பட்டது ; அதன் இரத்தம் ப-பீடத்தின் மேல் தெளிக்கப்பட்டது. மேலும், மோசே, “ஆட்டுக்கடாவை சந்து சந்தாக துண்டித்து, அதின் உள் உறுப்புக்களையும், மற்றும் கால்களையும் கழுவி,” “அதின் தலையையும், துண்டங்களையும், கொழுப்பையும் தகனித்தான்.” இதே விதமாக இயேசுவும் அவருடைய சரீரமாகிய சபையும் இந்த சுவிசேஷ யுகத்தில் ஒவ்வொரு உறுப்பினராக இருந்தாலும்,

எல்லோரையும் **சேர்த்து** ஒரே ப-யாக தேவனுக்கு முன்பாக ப-யிடப்பட்டு வருகிறார்கள். இவ்வாறு அநேகர் செய்தாலும், முதலாவதாக தலை ப-பீடத்தில் வைக்கப்பட்டது. பின்பு அவருடன் மரித்தவர்கள் திருவசனம் என்னும் தண்ணீரில், நிழ-ல் செய்யப்பட்டது போல கழுவப்பட்டு தலை வைக்கப்பட்டது போல் ப-பீடத்தின் மேல் வைக்கப்படுகிறார்கள். ப-பீடத்தின் மேல் தகனிப்பதானது தேவன் எவ்வாறு இவ்வித ப-யை "சுகந்த வாசனையாக" அங்கீகரிக்கின்றார் என்பதை காட்டுகிறது.

"பிரதிஷ்டையின் ஆட்டுக்கடாவான" இரண்டாவது ஆட்டுக்கடா நமது ப-யை தேவன் எவ்வாறு பெற்றுக்கொள்கிறார் என முத-ல் காண்பிக்கப்பட்டது போல், அந்த ப- நம்மீது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை காட்டியது. ஆரோனும் அவன் குமாரரும் அதன் மேல் கையை வைத்து, இது அவர்களை குறிப்பிடுவதாக காட்டினார்கள். பின்பு மோசே அதை கொன்று, அதன் இரத்தத்தை (பிரதிஷ்டை செய்யப்பட்ட **உயிரை**) எடுத்து அதைத் தனித்தனியாக வார்த்தான். எனவே, நமது பிரதிஷ்டை தனிப்பட்ட ஒவ்வொருவருடைய காரியம் என்பதை இது எடுத்துக் காட்டுகிறது. மோசே அதை ஒவ்வொருவரின் வலதுகாதிலும், வலது கையின் பெருவிர-லும், வலதுகா-ன் பெருவிர-லும் பூசினான். இப்படியாக நம்முடைய அர்ப்பணிப்பு மூலம் "**விசுவாச கேள்வி**"யைப் பெறவும் பிரதிஷ்டை செய்யப்பட்டவர்கள் மட்டுமே செய்யக்கூடிய தேவனுடைய வாக்குத்தத்தத்தை மெச்சக் கூடிய தகுதியை பெறவும் முடிகிறது. செய்ய வேண்டிய எதையும் நமது முழுபலத்துடன் தேவனுக்குப் பிரியமான விதத்தில் **செய்வதற்கு** நமது கரங்கள் பிரதிஷ்டை செய்யப்படுகின்றன. நாம் இனி புறஜாதியாரைப் போல **நடவாமல்** புதிய ஜீவியத்திற்குள் **நடக்கவும்**, விசுவாசித்து **நடக்கவும்**, ஆவியில் **நடக்கவும்** ''வெளிச்சத்தில் **நடக்கவும்**'' கிறிஸ்துவை பெற்றிருப்பதினாலே, அவருக்குள் **நடக்கவும்** நம்முடைய கால்கள் பிரதிஷ்டை செய்யப்படுகின்றன. - வசனங்கள் 23, 24

ஆட்டுக்கடாவின் விசேஷ பாகங்களான கொழுப்பும், உள் உறுப்புகளும் நம்முடைய இருதயத்தின் விசேஷமான எண்ணங்களையும், **விசேஷ வல்லமைகளையும்** காண்பிக்கிறதாக இருந்தன. இந்த விசேஷ பாகங்கள் ஆசாரியர்கள் தங்கள் கைகளில் ஏந்திச் சென்று தேவனுடைய சமூகத்திற்கு முன்பாக முன்னும் பின்னும் **அசைவாட்டினார்கள்**. இந்த காரியமானது, நம்முடைய

அர்ப்பணிப்புகள் தேவனுக்கு முன்பாக ஒரு நாளுக்கோ, ஒரு வருடத்திற்கோ மாத்திரம் இல்லாமல், கடைசிபரியந்தமும் நமது உயர்த்தப்பட்ட வாஞ்சை மற்றும் வல்லமைகளுடன் தேவன் ஏற்றுக் கொள்ளுமட்டும் விடாது செய்யப்படுவதைக் காண்பிக்கின்றது. மோசே அந்த அசைவாட்டும் ப-யை அவர்களிடமிருந்து எடுத்தான் (ஆசாரியர்கள் அதை கீழே வைக்கவில்லை) தேவனே அதை அங்கீகரிப்பதை அக்கினி காண்பித்தது. எனவே, போதும் மேலே வாருங்கள் என தேவன் கூறும்வரை, ராஜரீக ஆசாரியர்களான நாம் கீழே வைக்கவோ, நாம் தேவ ஊழியத்தில் பெற்றுள்ள நமது எல்லா சக்தியையும் விலக்கி ஓய்ந்திருக்க விரும்புவதோ முடியாத காரியமாகும். அதுபோல, நம்முடைய உள்ளான கொழுப்பாகிய அன்பு அதிகமாக ப-பீடத்தில் வைக்கப்படும்போது, தேவனின் அங்கீகரிப்பு எனும் அக்கினியை அதிகரிக்க உதவுகிறது. தேவனுக்கான நமது பிரதிஷ்டையில் அதிகரிக்கும் அன்பைப் பொறுத்து நமது ப-யையும் விரைவாக இது தகனிக்கிறது.

“அசைவாட்டும் ப-” ஆசாரியர்களின் கைகளில் இருக்கும்போது அவைகளின் மேல் நிறைகூடையி-ருந்து மூன்று அப்பங்கள் வைக்கப்பட்டன. இந்த ப- பிரதான ஆசாரியரின் கைகளிலும், ஆசாரியர்களின் கைகளிலும் மோசேயால் வைக்கப்பட்டன.

முதலாவதான புளிப்பில்லா அப்பம், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மனிதனாக இருக்கும்போது அவர் இருந்த தூய்மையான நிலைமையை காண்பிக்கின்றது. இது அப்படியே அவருடைய திருச்சபையாருக்கும் பொருந்துவதாக இருக்கிறது. இங்கே மோசே நியாயப்பிரமாணத்திற்கு நிழலாக இருக்கிறார். அதன்படி “நியாயப்பிரமாணத்தின் நீதியானது நம்மிடத்தில் நிறைவேறினது'' (ரோமர் 8:4) என்பதற்கிணங்க மாம்சத்தின்படி இருக்கிற நாம் அனைவரும் நியாயப்பிரமாணத்தின்படியும் **நீதிமானாக்கப்படும்படி** எந்த கறைகளும் இல்லாமல் இருக்க வேண்டும் என்ற காரியத்தை எடுத்துக் காண்பிக்கின்றது. இரண்டாவதாக **எண்ணெய்** கலந்த புளிப்பில்லா அப்பம், உள்ளாக வாசம் செய்யும் தேவஆவியினால் **பரிசுத்தப்படுதலைக்** குறித்தது. மூன்றாவதான அடை, மகா மேன்மையும் அருமையுமான மகிமை, கனம், சாகாமை என்னும் வாக்குத்தத்தங்களின் மேலுள்ள நம்முடைய விசுவாசத்தையும் நம்பிக்கையையும் குறித்தது.

இவையன்றி நம்முடைய பிரதிஷ்டை முழுமை அடைவது சாத்தியமல்ல என்பதால் **நீதிமானாக்கப்படுதல்** (பரிசுத்தம்) ஆவியால் **பரிசுத்தமாக்கப்படுதல்**, சத்தியத்தின் மேலான விசுவாசம் மற்றும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட **மகிமையில்** நம்பிக்கை ஆகியவை இவ்வாறாக அங்கீகரிக்கப்படக்கூடியவையாக உள்ளன.

நம்முடைய பிரதிஷ்டையானது கிறிஸ்துவினுடைய இரத்தத்தினால் மாத்திரமே நீதிக்குரியதாக எண்ணப்பட்டு, தேவனால் அங்கீகரிக்கப்படும் என்பதை போதிக்கிற விதமாக ஒப்புக்கொடுக்கப்பட்ட இரத்தம் கலக்கப்பட்ட அபிஷேகத் தைலம் ஆசாரியர்கள் மேல் தெளிக்கப்பட்டது. (வசனம் 30) "அவருடைய பிரியமுள்ளவருக்குள் மட்டும் நாம் தெரிந்துக் கொள்ளப்பட்டு, அங்கீகரிக்கப்படுகிறோம்." (எபேசி 1:6)

ஒப்புக்கொடுக்கப்பட்ட மாமிசத்தை வேகவைப்பது (வசனம் 31) ப-யின் ஒரு பங்கு அல்ல. இது புசிக்கப்படுவதற்காக தயார் செய்யப்படுவதேயாகும். நாம் நமது நேரம் மற்றும் சக்தியின் எந்தப்பகுதியையும் வீணாக்காமல், நம்மை முழுமையாக ஒருசேர ஒப்புக் கொடுக்க வேண்டும் என்பதை காண்பிக்கும் விதத்தில், மீதியானது அனைத்தும் சுட்டெரிக்கப்பட்டன. (வசனம் 32)

அர்ப்பணிப்பின் நாட்கள் மொத்தம் **ஏழு**. (வச. 33, 35) நாம் தேவனிடத்தில் செய்யும் அர்ப்பணம் நமது காலத்தின் ஒரு பகுதிக்கு மாத்திரம் அல்லாமல் முழுவதுமாக - நம்முடைய ஜீவநாட்கள் முடியுமட்டும் இருக்கவேண்டும் என்பதை இது எடுத்துக் காட்டுகிறது. வேதாகமத்தில் ஏழு என்ற எண்ணானது, முழுமைக்கு, பூரணத்திற்கு, ஒப்பாகச் சொல்லப்படுகிறது. ("ஏழு முத்திரைகள்," "ஏழு எக்காளங்கள்," "ஏழு வாதைகள்") 36-ம் வசனம் அர்ப்பணத்தின் சகல வேலைகளும் முடிவடைந்ததைக் குறிக்கிறது.

முன் எப்போதும் இல்லாதபடி, இப்பொழுது ஒப்புக்கொடுக்கப்படும் ஆசாரியக் கூட்டத்தார் "கிறிஸ்துவோடே கூட மரித்ததையும்," தேவனுக்கு முன்பாக அசைவாட்டப்பட்ட நம்முடைய ஒவ்வொரு திறமையையும் தேவன் ஏற்றுக்கொண்டு நமது **தாலந்துகளை** அவருடைய மகிமைக்காக பயன்படுத்துவதையும் உணரவேண்டும். விசேஷமாக, வேதவாக்கியங்கள் விளங்கப்பெற்று, விரைவில் **தலையுடன் சரீரத்தின்** அங்கத்தினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். அது தேவனுக்கு

ஒரு சுகந்த வாசனை என்றும், சுயப-யிடும் வேலை முடிந்து, மனுக்குலத்தை ஆசீர்வதிக்கும் மகிமையான வேலையும், தேவனுடைய உடன்படிக்கை நிறைவேற்றப்படுதல் ஆரம்பமாகிறது என்பதையும், உணர்ந்து கொள்பவர்களுக்கு ஒரு விருப்பமான விஷயமாக இருக்கும்.

நிழலான ஆசாரியர்கள் நிழலாக ஒப்புக்கொடுக்கப்படுவது தற்போதைய சுவிசேஷ யுகத்திற்கு உரியது. நம்முடைய முன்னோடியான கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அவர் தன்னையே அளித்ததி-ருந்து இது உறுதியாக முன்னேறியுள்ளது. இந்த யுகத்தின் முடிவிற்குள் அந்தக் காரியம் நிறைவடையும். ஒப்புக்கொடுக்கும் நாளில் அந்த ஆசாரிய கூட்டத்தாரில் ஒருவராக நாம் இருக்க தவறினால், ராஜ்யத்திலுள்ள மக்களுக்கான தங்களது சேவையை அவர்கள் ஆரம்பிக்கும்போது, இதே ஆசாரியர்கள் ராஜா எனும் நாமத்தை சேர்த்து, தரித்துக்கொள்ளும்போது, அவர்களது தலையான இயேசுவோடு சகல ஜாதிகளையும் ஆளுகை செய்து ஆசீர்வதிக்கும் போது, நாம் அவர்களாக இருக்க முடியாது. (வெளி. 20:6) “எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினார், நாங்கள் பூமியை அரசாளுவோம்” என்று பாடுபடுபவர்களில் நாமும் ஒருவராக இருந்து நமது மகத்தான பிரதான ஆசாரியரை மகிமைப்படுத்த உண்மையாகவே விரும்புகிறோமா? அப்படியானால் நாம் இப்போது முழுவதுமாக ஒப்புக்கொடுக்கப்படுவோம். ஏனெனில் “அவரோடே கூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடே கூட ஆளுகையும் செய்வோம்.” – 2 தீமோ. 2:12

## உடன் ஆசாரியர்களின் ஜெபம்

“ஜெயங்கொண்ட பிரதான ஆசாரியரே! வஸ்திரங்கள் இனி
மாசு அடைவதில்லை
உங்களுக்காக ப– நெருங்கிக் கொண்டிருக்கிறது ;
பாவத்தின் பயங்கர தண்டனையில் நீங்கள் ஒருபோதும்
துன்பமடைவதில்லை.
மகா மீட்பின் **கிரையம்** கொடுக்கப்பட்டது மகிமையின்
உன்னதங்கள், பெறப்பட்டது.
சீக்கிரமே ஆசீர்வதிப்பிற்காக நீவிர் தோன்றப் போகிறீர் !

“அனைத்து மகிமையின் பிரதான ஆசாரியரே! அனைத்து
மகிமையும், வானத்திலும் பூமியிலும்
அனைத்து தயையும், அன்பும் நீங்கள் பெற்றுள்ளீர் !
நியாயமான ராஜாதி ராஜனாகவும் கர்த்தாதி கர்த்தராகவும் நிற்கிறீர் !
சந்தோஷமான எக்காளங்கள் உங்கள் நாமத்தையும்
தகுதியையும் பறைசாற்றும் போது,
விழுந்து போன சேனை உம்மை ஸ்தோத்தரித்து ஏற்றுக்
கொள்ளும்.
ஓ தயையுள்ள பிரதான ஆசாரியரே! ஓ மென்மையான
மத்தியஸ்தரே !
மனம் வருந்துபவர்களின் மாறா நண்பா !

❀ ❀ ❀

“இன்னும் நம் கவலைகளினாலும், தாழ்ந்த நிலமையின்
உணர்வுகளாலும் தொடப்பட்டவர் !
வருங்கால தயையின் காரியங்கள் அனைவருக்காகவும்
எதிர்பார்க்கப்படுகிறது
மேலும் இப்போது நம்மீது தங்கள் ஆசீர்வாதங்கள் அனுப்பப்படுகிறது.

## அத்தியாயம் 4

# பாவநிவாரண மகாநாள்

### லேவி. 16:3-33

வரிசைகிரமமான நிழலான காரியங்களும் அவற்றின் ஞான அர்த்தங்களின் முக்கியத்துவமும் – காளை – ஆசாரியன் பரிசுத்த ஸ்தலங்களில் இரத்தத்தோடு பிரவேசித்தல் – சுகந்தவர்க்கங்கள், சுகந்த வாசனை மற்றும் துர்நாற்றம் – மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்தல் – கர்த்தரின் வெள்ளாட்டுக்கடா – போக்காடு – ஜனங்களை ஆசீர்வதித்தல்.

பாவநிவாரண நாள் ஒரு நிழலாக தனியாகக் கருதப்பட வேண்டும். இருப்பினும் மற்றைய ஆசரிப்புக் கூடார நிழல்களின் ஒருபகுதியாகவும் மற்றும் அவற்றுடன் சம்பந்தப்பட்டவையாகவும் கருதப்பட வேண்டும். உண்மையில் சொல்லப் போனால், இவைகள் ஒவ்வொன்றும் தனித்தனி **சித்திரங்களாகும்**. இவை ஒவ்வொன்றும் இவற்றுக்கே உரிய பொருளை உடையனவாக இருக்கின்றன. அவற்றிற்குரிய பாடங்களை போதிக்கின்றன. இருப்பினும் அனைத்தும் இசைவாக இருக்கின்றன. ஒரு கூடத்தின் பலபாகங்கள் போல ஒரே மகாபெரிய கைவினைஞனால் செய்யப்பட்ட இசைவான வேலையைப்போல இருக்கிறது. இவையெல்லாவற்றிலும் முதலாவதாக தலையையும் பின்பு அதன் சரீரமாகிய உடன் ஆசாரியர்களாகிய திருச்சபையையும் பார்க்க வேண்டும்.

பாவநிவாரண நாளின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ள வேண்டுமானால் "அவரது சரீரம்" என்றும், சுவிசேஷ சபை என்றும் சொல்லப்படும் உடன் ஆசாரியத்துவத்திற்கு பிரதான ஆசாரியராக நமது கர்த்தராகிய இயேசு விளங்குகிறார் என்பதை நாம் முதலாவதாக உணர்ந்து கொள்ள வேண்டும். அவர் தலையாகவும், நாம் உலகத்தின் பிரதான ஆசாரியரின் சரீரத்தின் அங்கத்தினர்கள் என்பதும் இதனுடைய முழுமையான மற்றும் நிறைவான பொருளாகும். இதேபோன்று தனது உடன் ஆசாரியத்துவத்திற்கு ஆரோன் தலைவனாக இருந்தான். பொதுவான மற்றும் சரியான கருத்தில் சொல்லப் போனால், உடன்

ஆசாரியர்களை பிரதிநிதித்துவப்படுத்தி அவன் இஸ்ரே-ன் **எல்லா ஜனங்களுக்கும்** பிரதான ஆசாரியனாக ஊழியம் செய்ய நியமிக்கப்பட்டான். இவர்கள், தங்களது பாவங்களுக்கு சுத்திகரிப்பை தேட விரும்பி தேவகிருபைக்கும், கீழ்ப்படிதலுக்கும் திரும்பும் எல்லா மனிதகுலத்தின் பிரதிநிதிகளாவார்கள்.

நிஜமான ஆசாரியத்துவத்தின் பிரதிஷ்டையானது சரீரத்தின் எல்லா அங்கத்தினர்களையும் உள்ளடக்குவது போலவும், சுவிசேஷ யுகம் முழுவதும் இதனை பூரணமாக்கத் தேவைப்படுவது போலவும், இந்த பாவநிவாரண ப-யும் அவசியமாயிற்று. இது முத-ல் தலையி-ருந்து ஆரம்பித்தது. பின்பு நாம் அவருடைய அங்கத்தினர்களாக கிறிஸ்துவின் உபத்திரவங்களில் குறைவானதை நம் மாம்சத்தில் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். இவ்வித உபத்திரவங்கள் முழுமைப் பெற, இந்த சுவிசேஷ யுகம் எல்லாமே தேவைப்படக் கூடியதாக உள்ளது. – I பேது. 4:13; ரோமர் 8:17; 2 கொரி 1:7; 4:10; பி- 3:10; கொலோ. 1:24; 2 தீமோ. 2:12; 1 பேது 5:1, 10

பாவநிவாரண நாள் என்பது இருபத்துநான்கு மணிநேர காலஅளவைக் கொண்ட ஒருநாள் ஆகும். இது முழு சுவிசேஷ யுகத்திற்கு ஒப்பாக இருக்கின்றது. இதன் முடிவில் ப-கள் அனைத்தும் முடிந்து, மகிமை, ஆசீர்வாதம் ஆரம்பிக்கிறது. உலகத்தின் மகத்தான பிரதான ஆசாரியர் (இயேசு மற்றும் அவரது மணவாட்டி **ஒன்றாக்கப்பட்டு**, தலையும், அங்கத்தினர்களும் முழுமையாதல்) எழுந்து, மெல்கிசேதேக்கின் முறைமையின்படி சமாதானத்தின் ராஜாவாகவும் ஆசாரியராகவும் சிங்காசனத்தின் மேல் உட்காருவார். – எபி. 5:10

அங்கே உலகத்தின் முன்பாக (வெளிப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டு, ஆனால் இயற்கையான வெளிச்சத்தினால் **காணப்படாமல்**) ராஜாவாகவும் ஆசாரியராகவும் மாத்திரம் இல்லாமல் ஒரு தீர்க்கத்தரிசியாகவும் நிற்பார். “உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல (மோசே) ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக உங்கள் சகோதரரி-ருந்து எழும்பப் பண்ணுவார்...... அந்தத் தீர்க்கதரிசியின் சொற் கேளாதவனெவனோ, அவன் ஜனத்தி-ராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவான்.” தேவனுடைய அந்த ஆயிரவருட அரசாட்சியில், ஆசாரியனாகவும், தீர்க்கதரிசியாகவும், ராஜாவாகவும், இருக்கும் கிறிஸ்துவின் கீழாக உள்ள அரசாங்கத்திலுள்ளவர்கள் அனைவரும் பூரண ஞானத்திற்குள்ளாக நடத்தப்படுவார்கள். முழுமையாக கீழ்படியாத எவனும் ஜனத்தி-ராதபடிக்கு

இரண்டாம் மரணத்தில் நிர்மூலமாக்கப்படுவான். - (அப்போஸ்தலர் 3:22, 23)

யூத யுகத்தின் முடிவில் இயேசு கிறிஸ்து தம்மை தனியாக ஒரு தீர்க்கதரிசியாகவும், ஆசாரியனாகவும், ராஜாவாகவும் இஸ்ரேலுக்கு காண்பித்தார். சரீரம் முழுவதையும் முழு உலகத்திற்கும் அளித்து பூரணமான, மகிமை பெற்ற கிறிஸ்துவானார். தீர்க்கதரிசியாக அவர் அவர்களுக்கு போதித்தார். ஆசாரியனாக அவர் தம்மைத்தாமே ப-யாக்கினார். (எபி. 7:27) தனது ஊழியத்தின் முடிவிலே ஒரு ராஜாவாக அவர்களது நகரத்திற்குள் பிரவேசித்தார். ஆனால் அவர்கள் இவற்றின் எந்த வெளிப்பாட்டிலும் அவரை வரவேற்கவில்லை. சுவிசேஷ உலகத்தில் அவரது சபை அல்லது கிறிஸ்துவின் சரீரம் அவரை “தேவனிடத்தி-ருந்து அனுப்பப்பட்ட போதகராக,'' மகத்தான தீர்க்கதரிசியாக, நமது முறைமையின்படியான பிரதான ஆசாரியராக, உரிமையுடைய ராஜாவாக ஏற்றுக் கொண்டிருக்கிறது. சபையால் மாத்திரமல்ல, (சபையாகிய சரீரத்துடன்) அவர் **எல்லா ஜனங்களின்** தீர்க்கதரிசியாகவும், **எல்லா ஜனங்களின்** ஆசாரியராகவும், **எல்லா ஜனங்களின் தேசங்களின் பாஷைக்காரரின்** மேல் இராஜாவாகவும், **எல்லாருடைய** கர்த்தராகவும், ஆசாரியராகவும், தீர்க்கதரிசியாகவும் அல்லது போதகராகவும் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளார்.

நிழலான பிரதிஷ்டையில் ஆரோனும், அவனுடைய குமாரரும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவிற்கும், புதிய சிருஷ்டியான அவரது சரீரத்துக்கும் ஒப்பாக இருக்கிறார்கள். காளையானது மனிதநிலையை எடுத்துக் காட்டுவதாக இருந்தது. ஆனால் இப்பொழுது நிழ-லே ஆரோன் மாத்திரம் முழுமையாக அபிஷேகம் பண்ணப்பட்டவரை (தலை மற்றும் சரீரம் உட்பட) நிழலாகக் காட்டுகிறான். இரண்டு வெவ்வேறு ப-களான - ஒரு காளை மற்றும் ஒரு ஆட்டுக்கடா பாவநிவாரணமாக இருக்கப்போகிற - தலை மற்றும் சரீரத்தின் உபத்திரவங்களை தனித்தனியாகவும், இருப்பினும் உபத்திரவத்திலுள்ள ஒற்றுமையையும் நிழலாகக் காண்பிக்கின்றன.

## முதலாம் பாவநிவாரண நாளின் ப-காளை

காளையானது, முப்பது வயதில் **பூரணமனிதனாக** இருந்து நமது சார்பாக மரித்த இயேசுவை நிழலாகக் காட்டுகின்றது. நாம் முன்பே

பார்த்த பிரகாரம் பிரதான ஆசாரியர் என்பது அபிஷேகம் பண்ணப்பட்ட தலையாகிய புது சுபாவத்தையுடைய இயேசுவையும், தேவனால் முன்பே தெரிந்து கொள்ளப்பட்ட அவரது சரீரத்தின் அங்கத்தினர்களையும் குறிக்கின்றது. இங்கே, **மனித** நிலைமைக்கும், **புதிய** சிருஷ்டியின் நிலைமைக்கும் உள்ள வித்தியாசத்தை நன்றாக புரிந்துகொள்ளுதல், நினைவுக்கு கொண்டுவருதல் அவசியமாகும்.* முப்பது வயதில் "தம்மைதாமே ஒப்புக் கொடுத்த மனுஷனாகிய இயேசு கிறிஸ்து" இதற்கு முன்பாக ஐசுவரியவானாக (மேலான நிலைமையில்) இருந்தும் நமக்காக தரித்திரரானார். அதாவது ஒரு **மனிதனாக** மாறி, பூரண மனிதனாக தம்மை தகுந்த ஈடுப-யாகக் கொடுத்தார். – 1 கொரி. 15:21

மனிதனுடைய பாவத்தின் தண்டனையாக மரணம் இருந்ததினாலே, நம்முடைய இரட்சகரும் அதேபோல மனிதனாக – **மாம்சமாக வேண்டிய** அவசியம் ஏற்பட்டது. இல்லையென்றால் இந்த மனுக்குலத்தை அவர் இரட்சித்திருக்க முடியாது. ஒரு மனிதன் பாவம் செய்திருந்தான். **மரணம்** தண்டனையானது. நமது கர்த்தர் அதற்குண்டான அபராதத்தைச் செலுத்த வேண்டுமானால் அவர் அதே போன்ற நிலையாகி (ஆனால் மாசற்று, பாவத்திற்கும் பாவிகளின் சந்ததிக்கும் விலகி) ஆதாமிற்கு **பதிலாக** மரிக்க வேண்டும். இல்லையெனில், மனுக்குலம் மரணத்தி-ருந்து விடுதலையாக்கப்பட முடியாது. இதைச் செய்வதற்காக மனிதனான இயேசு **தாம் பெற்றிருந்த அனைத்தையும்** ப-யாக்கினார் – ஒரு பூரண மனிதனுக்கான மகிமை, ஒரு பூரண மனிதன் பெற முடிகிற கனம், முடிவாக **ஒரு பூரண மனிதனுக்கான** வாழ்வு எனும் எல்லாவற்றையும் ப-யாக்கினார். அவர் பெற்றிருந்த எல்லாவற்றையும், (**புதிய** சிருஷ்டி என்ற தேவனின் வாக்குத்தத்தம் மற்றும் இந்த வாக்குத்தத்தம் உருவாக்கிய **நம்பிக்கை** இவற்றைத்தவிர) அவர் தனது ஆவிக்குரிய நிலை அல்லது வாழ்வை மனிதனுக்காக பாவ நிவாரண ப-யாகக் கொடுத்தார். இது பாவ நிவாரண நாளின் காளையை நிழலாகக் காண்பித்தது. – யோவான் 1:14 ; ஏசா. 53:10

**மனுஷகுமாரனாகிய** இயேசுகிறிஸ்து **தம்மைத்தாமே** நமது **மீட்பின் பொருளாக** கொடுத்ததினாலே, அவரும் அவர் கொடுத்த **அதே மனிதநிலைக்கு** மீண்டும் கொண்டுவரப்பட மாட்டார். அவர் மீட்பின்

---

* வேதபாடங்கள் (Studies in the scriptures) தொகுதி 1 அத்தியாயம் 10 மற்றும் தொகுதி 2 பக்கம் 127ஐ பார்க்கவும்.

பொருளை திரும்ப எடுத்துக்கொள்வாராகில் மீட்கப்பட்ட நாம் மீண்டும் அதே மரணத்தின், சாபத்தின் நிலையில் வைக்கப்படுவோம். ஆனால், தேவனுக்கு ஸ்தோத்திரம். அவரது ப- என்றென்றும் நிலைத்திருக்கும். நாம் ஆதாமிய குற்றத்தி-ருந்தும், அதன் மரண தண்டனையி-ருந்தும் என்றென்றும் விடுதலையாயிருப்போம். அப்படியானால், பிதா இயேசுவிற்கு **எவ்விதமான** கனம், மகிமை அல்லது ஜீவனை, மரணபரியந்தமும் கீழ்ப்படிந்ததற்கு ஒரு பரிசாக அளிப்பாரானால் அது மனிதனாக இல்லாத வேறு சாயலுக்கு அளிக்கப்பட்ட ஒரு மகிமை, கனம் மற்றும் ஜீவனாகத்தான் இருக்க வேண்டும்.

இயேசு கிறிஸ்துவிற்கான யேகோவா தேவனுடைய திட்டமானது இவ்விதமாக இருக்கிறது. மனிதநிலை, அவரது மனிதநிலைக்கு முற்பட்ட நிலைக்கும் மேலாக, எல்லா தூதர்களுக்கும் மேலாக, கர்த்தத்துவங்கள் மற்றும் வல்லமைகள் எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தி தம்முடைய வலது பாரிசத்தில் (**முதன்மையானவராக**, யேகோவாவிற்கு அடுத்ததாக) உட்கார வைத்து, சாகாமையை தரித்து, தெய்வீக நிலையை அடையவும் கிருபை செய்திருக்கிறார். தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு இயேசுகிறிஸ்து, “அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்,” – எபி. 12:2; பி-. 2:9; எபி. 1:3,4

இயேசுகிறிஸ்து தனது ப-யினிமித்தம் மனித சுபாவத்துக்குப் பதிலாக பரிசாகப் பெற்ற புதிய சுபாவத்தைத்தான் இங்கே ஆசாரியனால் நமக்கு நிழலாக காண்பிக்கப்படுகிறது. சிலுவையில் முடிக்கப்படும்வரை **மனிதனில் ப-** முடிக்கப்படவில்லை என்பதும் அவரது பரிசான **தெய்வீக** சுபாவம் மூன்று நாட்களுக்குப்பின் உயிர்த்தெழும்பும் வரை முழுவதுமாக பெறப்படவில்லை என்பதும் உண்மைதான். இருப்பினும், இந்த நிழ-ல் காண்பிக்கப்பட்டிருப்பது போல, தேவனுடைய எண்ணத்தில் இயேசுவின் மரணத்தில் (காளை) **ஜீவப-யாக ஒப்புக்கொடுத்ததை** முழுமையாக ஏற்கப்பட்டதை காண்பிக்கிறது. இது அவரது மரணம் ஞானஸ்நானத்தில் ஒப்புகொடுக்கப்பட்டதற்கு நிழலாக இருக்கின்றது. அங்கே அவர் அவரையே எல்லா – மனித எண்ணங்களுக்கும், நோக்கங்களுக்கும், மனித கனத்திற்கும் ஜீவனுக்கும் **மரித்தவராக** தம்மைக் காண்பித்தார். அவரைப் பின்பற்றும் நாமும் உலகத்திற்காக உண்மையாகவே மரித்தவர்களாக எண்ணி தேவனுக்காக **புதிய** சிருஷ்டியாக,

ஜீவனுள்ளவர்களாக எண்ணிக் கொள்ள தூண்டப்படுகிறோம். – ரோமர் 6:11

கிறிஸ்துவின் ஞானஸ்நானத்தில் அவர் தம்மை தேவனுக்காக ஒப்புக் கொடுத்ததை, தம்மை உலகத்திற்காக மரித்தவராக எண்ணியதை தேவன் அங்கீகரித்ததாக காட்டும்படியாக, பரிசுத்த ஆவியை அவர்மேல் வரப்பண்ணினார். மரணத்திற்குப் பிறகு அவர் பெறப்போகிற பரிசுப் பொருளுக்கு உத்தரவாதமாக இவ்வாறு தேவன் செய்துக் காண்பித்தார்.

இப்படியாக கவனித்தால், காளையின் மரணமானது கிறிஸ்து தம்மைதாமே ஞானஸ்நானத்தில் ஒப்புக்கொடுத்ததற்கு நிழலாக இருந்தது. இது அப்போஸ்தலர், இயேசு தன்னைத்தானே ஒப்புக்கொடுத்ததாக அல்லது அர்ப்பணித்ததாக கூறுகிறதற்கு ஒத்ததாக இருக்கிறது. தீர்க்கத்தரிசி சொல்வதை இங்கே அவர் குறிப்பிடுகிறார். “தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது'' – மரித்து அநேகரை இரட்சிப்பதற்காக அங்கே ''அவர் இரண்டாவதை (நிஜமான, பாவங்களுக்கான உண்மையான ப–யை) நிலை நிறுத்துவதற்காக முதலாவதை (நிழலான ப–களை) நீக்கிப் போடுகிறார்.” – எபி. 10:7,9,14

ஆம். காளையின் மூலம் நிழலாகக் காட்டப்பட்ட, கொல்லப்பட்ட பாவநிவாரண ப– அங்கே நிகழ்ந்தது. இயேசுவின் அந்த மூன்றரை வருட ஊழியம் அவர் அர்ப்பணம் செய்த அந்த நேரத்தி–ருந்து எல்லா **மாம்சீக சித்தமும்,** மனித சரீரமும் **மரித்த** நிலையைக் காண்பித்தது.

அபிஷேகம் பண்ணப்பட்ட இயேசு பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, ஞானஸ்நானம் பெற்ற அந்த கணத்தில் **தெய்வீக “புதிய சிருஷ்டி”** ஆனார். (உயிர்த்தெழுப்புதல் வரை தெய்வீகத் தன்மையாக **பூரணமாக்கப்**படாவிட்டாலும்) அந்த உறவை, அவர் எப்பொழுதும் சொல்–க் கொண்டு வந்தார். “நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என் சுயமாய் (ஒரு மனிதனாக) சொல்லவில்லை. என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிரதாவானவரே (அவருடைய ஆவியால்) இந்த கிரியைகளைச் செய்துவருகிறார். நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பின பிரதாவினுடையதாக இருக்கிறது.” – யோவா. 14:10,24. “என்னுடைய (மனித) சித்தத்தின்படி அல்ல, உம்முடைய (பிதா–தெய்வீகம்) சித்தத்தின்படியே மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட இந்த பூமிக்குரிய பாத்திரத்திற்கு ஆகக்கடவது” (லூக். 22:42) என சொன்னார்.

காளையானது "பிரகாரத்தில்" கொல்லப்பட்டது. இது மாம்சத்தின் உயர்ந்த நிலையான மனித சுபாவமான விசுவாசத்தின் நிலைமையையும், தேவனுடனான இசைவான நிலைமையையும் நிழலாகக் காட்டுவதாக நாம் பார்த்திருக்கிறோம். இயேசு கிறிஸ்து தம்மைதாமே தேவனுக்காக ஒப்புக்கொடுத்தபோது இந்த பூரண மனிதநிலையில் இருந்தார். (நிழ-ல் காளையைப் போல).

நிழலாகிய பாவ நிவாரண நாளின் வேலைகளைப்பற்றி நாம் ஆராயும்போது இந்த அம்சங்களை நினைவில் கொண்டால்தான், நிஜமான உண்மைகளை நாம் மிகத்தெளிவாக புரிந்து கொள்ளலாம். தலை மற்றும் அவரது சரீர அங்கத்தினர்களான பாவமற்ற புதிய சிருஷ்டியின் சுத்தத்தன்மையை குறிக்கும் வகையில் ஆரோன் கழுவப்பட்டான். ("தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான், ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யான்." - 1 யோவா 3:9 Diaglott). புதிய சிருஷ்டியானது பாவஞ்செய்ய முடியாது. மரித்ததாக எண்ணப்பட்ட பழைய சுபாவத்தின் மேல் இடைவிடாது கவனம் செலுத்தி அது உயிர்பெறாதபடிக்கு பார்த்துக் கொள்ள வேண்டியதே புதிய சிருஷ்டியின் வேலையாகும். பழையதானது புதியதுடன் கட்டுப்பாட்டை பகிர்ந்து கொள்வது, பழையது சாகவில்லை என்றும், புதியது மேற்கொள்ளவில்லை என்றும் அர்த்தப்படுத்துவதாகிவிடும். பழையது **ஜெயங்கொள்வது**, புதிய சிருஷ்டியின் **மரணத்தை** - இரண்டாம் மரணத்தை - குறிப்பதாக ஆகிவிடும்.

"பாவநிவாரண ப-யின் நாளிலே" வழக்கமான "மகிமையும் அகங்காரமுள்ள" உடை அணிவிக்கப்படாமல், பரிசுத்தவான்களின் நீதி மற்றும் பரிசுத்தத்தின் அடையாளமாக ப-யின் ஆடையாகிய சணல்நூல் உடையால் ஆரோன் அணிவிக்கப்பட்டான். இந்த சணல் வஸ்திரமானது பின்வரும் மகிமையான வஸ்திரத்திற்கு ஒரு அச்சாரமாகும். பாவநிவாரண நாளின் முடிவில் அவன் அணியப் போகிற விசித்திர இடைக்கச்சையைப் போல வலுவானதாக இல்லை என்றாலும், 'சணல்நூல் இடைக்கச்சை' அவன் ஒரு ஊழியன் என்பதைக் காட்டியது. சணல்நூல் தலைப்பானது அந்த மகிமையான வஸ்திரத்திற்குண்டானதுபோல, ப-யின்போதும், அதற்குப் பின்னும் தலையின் பூரண நீதியினை பறைசாற்றுகிறது. எனவே, தெய்வீக சிந்தை, ஆவியால் ஜநிப்பிக்கப்பட்ட ஆனாலும் ஆவியால் இன்னும் பிறக்காமல் இருக்கின்ற நிஜமான பிரதான

ஆசாரியன், ஆரோனில் நிழல்படுத்தப்பட்டபடி, தயாராக இருந்து முதலாம் வருகையில் பாவநிவாரணத்திற்கான ப-யையும் செலுத்தமுடிந்து, தொடர்ந்து அதைச் செய்யவும் முடிந்தது.

“ஆரோன் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்க வேண்டிய விதமாவது : அவன் ஒரு காளையைப் பாவநிவாரண ப-யாகவும், ஒரு ஆட்டுக்கடாவைச் சர்வாங்க தகனப-யாகவும் செலுத்திப் பிரவேசிக்க வேண்டும். பின்பு ஆரோன் தனக்காகவும் தன் வீட்டாருக்காகவும் (லேவியர், அனைத்து விசுவாசிகள், விசுவாச வீட்டார்) பாவநிவர்த்தி செய்யும்படி, தன்னுடைய பாவ நிவாரண ப-யின் காளையைச் சேரப்பண்ணி, பின்பு ஆரோன் தனக்காகவும் தன் வீட்டாருக்காகவும் பாவநிவர்த்தி செய்யும்படி தன்னுடைய பாவநிவாரணத்துக்கான காளையைக் கொண்டுவந்து, அதைக் கொன்று, கர்த்தருடைய சந்நிதியி-ருக்கும் ப-பீடத்தின் மேலுள்ள நெருப்பத்தண-னால் தூபகலசத்தை நிரப்பி, பொடியாக்கப்பட்ட சுகந்த தூபவர்க்கத்திலே தன் கைப்பிடிகள் நிறைய எடுத்து, திரைக்கு உட்புறமாக (முதல்திரை அல்ல வாசல்) (நெருப்புத்தணல் பரிசுத்த ஸ்தலத்தின் பொற்பீடத்தில் வைக்கப்பட்டு அதன் மே-டப்படும் சுகந்தவர்க்கம் படிப்படியாக இனிய நறுமணத்தை கொடுத்தது) கொண்டு வந்து, தான் சாகாதபடிக்கு தூபமேகமானது சாட்சிப்பெட்டியின் மேல் இருக்கும் கிருபாசனத்தை மூடத்தக்கதாக (இரண்டாவது திரைக்குப் பின்னால் நுழைந்து) கர்த்தருடைய சந்நிதியில் அக்கினியின் மேல் தூபவர்க்கத்தை போடக்கடவன்.” - லேவியராகமம் 16 : 3,6,11-13

இப்பொழுது நிழலாக நடந்த இச்சம்பவங்களை படிப்படியாக பார்த்து இயேசுவின் செயல்களுடன் இந்த தீர்க்கதரிசன ஓவியத்தை அவரது ஊழியத்துடன் ஒப்பிட முயல்வோம். இயேசுகிறிஸ்து மாம்சத்தில் இருக்கும்போது, அவருடைய ஞானஸ்நானத்தில், நம்முடைய பாவங்களுக்காக மாத்திரமல்ல, சர்வலோகத்தின் பாவங்களுக்காகவும் தம்முடைய மனித வாழ்க்கையை (காளையின் இரத்தம்) பரிசுத்த ஆவியால் ஜெநிப்பிக்கப்பட்ட புது சிருஷ்டியாக தேவனுக்கு முன்பாக உடனே ஈடுப-யாக அர்ப்பணித்தார். ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட அவர் “பிரகாரம்” என்கிற நிலையி-ருந்து மாறி, ‘பரிசுத்த ஸ்தலம்” என்று சொல்லும் ஆவிக்குரிய நிலைக்குள்ளானார். பூரண ஆவிக்குரிய நிலை என்ற “மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள்” நுழையும் முன் அங்கே அவர் ஜெநிப்பிக்கப்பட்ட குமாரனாக உபத்திரவங்களுக்குட்பட்டு, நெருப்பின்

மே-ட்ட சுகந்தவர்க்கம் அளித்ததுபோல, தேவன் மேல் அவருக்குள்ள விசுவாசத்தையும் நீதியையும் மெய்ப்பிக்க வேண்டும். எபி. 5:8.

பிரதான ஆசாரியன் (இரத்தத்தோடு கூட) பீடத்தின் மே-ருந்து நெருப்பையும் தன் இரண்டு கைகள் நிறைய நறுமணம் அளிப்பதற்காக சுகந்தவர்க்கங்களையும் எடுத்துச் சென்றான். அதேபோல இயேசு கிறிஸ்துவின் பொருத்தனையின் நிறைவேறுதலானது, அவரது மூன்றரை வருட ஊழிய காலத்தில் பிதாவுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு இனிய சுகந்த வாசனையானது. முழுமையான ஒப்புக்கொடுத்த-ன் நிறைவையும், ப-யின் பூரணத்தையும் இது பிரதிப-க்கிறது. பொடியாக்கப்பட்ட சுகந்தவர்க்கம் மனிதனாகிய கிறிஸ்துவின் பூரண நிலையை காண்பிக்கின்றது. ப-பீடத்தின் நெருப்பானது அவர் அடைந்த சோதனைகளையும், ஆசாரியன் அவற்றை எடுத்துக் கொண்டு போவது தம்முடைய சொந்த விசுவாச மார்க்கத்தால் கிறிஸ்து தம்முடைய பாடுகளை தாமே தாங்கிச் செல்ல வேண்டும் என்பதையும் காட்டுகின்றது. அவருடைய பூரணத்துவங்கள் (சுகந்த வர்க்கம்) வாழ்க்கையின் பலவிதமான சோதனைகளோடு (நெருப்பு) சேர்ந்தபோது, அவர் தேவனின் விருப்பத்திற்கு தன்னை பூரணமாகக் கீழ்ப்படுத்தினார் (சுகந்த வாசனை). இவ்வாறாக அவர் எல்லாவகையிலும் ஆனால் பாவமில்லாமல் பொறுமையுடன் இருந்தது காட்டப்படுகிறது. சுகந்தவர்க்கம் முழுமையாக அக்கினியினாலே எரிக்கப்பட வேண்டும் என்பதுபோல, அவர் தனக்குரிய **அனைத்தையும்** கீழ்ப்படித-ல் கொடுத்தார். ஆசாரியன் தன்னுடைய “இரண்டு கைகள் நிறைய” தூபவர்க்கங்களை போட்டான். இது கேட்கப்பட்டு கொடுக்கப்பட்ட நமது கர்த்தரின் முழு ஆற்றலையும் நீதியின் வல்லமையையும் காண்பிக்கின்றது.

ஆனால் இவ்விதமாக ஒரு புது சிருஷ்டியாக இயேசு பரிசுத்த ஸ்தலத்தில் இருந்து பொற்குத்துவிளக்கின் வெளிச்சத்தில் களிகூர்ந்து, சத்தியம் என்னும் அப்பத்தால் போஷிக்கப்பட்டு, யேகோவாவிற்கு உகந்த வாசனையாக ஒப்புக்கொடுத்த வேளையிலே, நாம் பிரகாரத்திற்குள்ளும், பாளையத்திற்கு பின்புறமாக அதிக தொலைவிலும் பார்த்து இன்னும் ஒரு வேலை அதனுடன் கூடவே நடைபெற்றுக் கொண்டிருப்பதை பார்ப்போமாக. முப்பதாவது வயதில் தனது ஞானஸ்நானத்தில் ஒப்புக்கொடுத்த இயேசு எனும் மனிதனை பிரதிநிதித்துவப்படுத்திய காளை பிரகாரத்திலே மரித்ததை நாம் முன்பு பார்த்தோம். தற்போது அதனுடைய கொழுப்பு, காய்கள் மற்றும் ஜீவ உறுப்புக்களுடன் வெண்கல

ப–பீடத்தின்மேல் வைக்கப்பட்டுள்ளது. ஒரு காளை அதிக கொழுப்பைக் கொண்டிருப்பதால் அவை தீவிரமாக எரிந்து கொண்டிருக்கின்றன. “தேவனுக்குப் பிரியமான சுகந்த வாசனை” என்னும் புகைமண்டலம், பிரகாரத்திலுள்ள அனைத்து லேவியர் – விசுவாச வீட்டார், விசுவாசிகள் – முன்பாகவும் எழும்புகிறது.

இது **விசுவாசிக்கும் மனிதர்களுக்கு** இயேசுவின் ப– எவ்வாறு தோன்றியது என்பதைக் காட்டுகிறது. நமது கர்த்தருடைய மூன்றரை வருட ஊழியத்தின் போது தேவனுக்குப் பிரியமானதும், அங்கீகரிக்கப்பட்டதுமான ஒரு ப–யாக மேலே எழும்பிய அன்பின் வைராக்கியத்தை (கொழுப்பு), சுயப–யை, பக்திவைராக்கியத்தை அவர்கள் கண்டார்கள். அவர்மேல் பிதா எப்போதும் அதிக மகிழ்ச்சியாய் இருந்தார் என்பதை அவர்கள் தெளிவாக தெரிந்து கொண்டார்கள். யேகோவாவின் பார்வையில் (பரிசுத்த ஸ்தலத்தில்) பொற்ப–பீடத்தின்மேல் ஒரு இனிய வாசனையாக தோன்றிய அந்த ப–யின் கம்பீரத்தையும், பரிபூரணத்தையும் அவர்கள் பார்க்க முடியாவிட்டாலும், அவர்கள் பிரகாரத்தில் (மாம்சத்தில்) என்ன பார்த்தார்களோ, அதில் அவர் ஏற்றுக்கொள்ளப்படத் தக்கவரானார் என்பதை அறிந்தார்கள்.

இவ்விதமாக இந்த இரண்டு இடங்களில் நெருப்பு எரிந்து கொண்டிருக்க (பிரகாரத்தில் கொழுப்பும், பரிசுத்த ஸ்தலத்தில் ‘வர்க்கங்களும்’ எரிந்து அவற்றின் புகை **ஒரே சமயத்தில்** மேலே சென்று கொண்டிருக்க), “பாளையத்திற்கு புறம்பே” வேறு ஒரு நெருப்பும் எரிந்து கொண்டிருக்கின்றது. அங்கே காளையின் வேண்டாத பாகங்கள் சுட்டு எரிக்கப்படுகிறது. (வச. 27) இது இயேசுவின் பணியை உலகம் எவ்விதமாக பார்த்தது என்பதை சுட்டிக்காட்டுகின்றது. அவர்களுக்கு அவர் தனது வாழ்நாளை ப–யில் செலவிடுவது முட்டாள்தனமாகத்தான் தெரிகிறது. பிதா பார்த்தவிதத்தில் மனிதனின் மீட்பிற்கு ப– அவசியம் என்பதையோ அல்லது இதை உணரச்செய்த தாழ்மையின் ஆவியையோ அவர்கள் உணருவதில்லை. விசுவாசிகள் (பிரகார நிலையில்) பார்ப்பது போன்று நமது கர்த்தரின் அன்பின் பூரணங்களையும், தன்னைத்தான் வெறுப்பதையும் அவர்கள் பார்ப்பதில்லை. அவருடைய நாளில் அவரை தங்களது நாயகனாகவோ, தலைவனாகவோ அவர்கள் பார்க்கவில்லை. பலவீனம் என அவர்கள் நினைத்த அவரது குணாதிசயத்தின் கூறுகளையே அவர்கள் பிரதானமாகக் கண்டார்கள். அவரை நேசித்து அவரை போற்றும் நிலையில் இல்லை. அவரது ப– அவர்களுக்கு

வேண்டாததாகவும், இழிவானதாகவும் தெரிந்தது. அவர் மனிதர்களால் இழிவுபடுத்தப்பட்டு ஒதுக்கித்தள்ளப்பட்டார். இஸ்ரேல் ஜனங்கள் எரிகின்ற உட–ன் நாற்றத்தினால் அருவருப்புற்று திரும்பியது போன்று அவர்கள் வெட்கப்பட்டு அவரிடமிருந்து தங்களது முகங்களை மறைத்தார்கள்.

இயேசுகிறிஸ்துவின் மூன்றரை வருட ஊழியம் இவ்விதமாக மூன்று பாகங்களாக சித்தரிக்கப்பட்டுள்ளதை அறிகிறோம். அதாவது அவருடைய ப– உலகத்தாரின் பார்வையில் முட்டாள்தனமாகவும், அருவருப்பாகவும் இருந்ததையும், விசுவாசிகளின் பார்வையில் தேவனுக்கு பிரியமான ப–யாக இருந்ததையும், யேகோவா தேவனுடைய பார்வையில் "சுகந்த வாசனையான" ப–யாக இருப்பதையும், நாம் பார்க்க முடிகிறது. இவை அனைத்தும் ஒரே சமயத்தில் சிலுவையில் நடந்து முடிந்தது. இயேசு **"எல்லாம் முடிந்தது"** என்று சொல்– உயிரை விட்டபொழுது காளை ப– முழுமையாக முடிக்கப்பட்டது, கொழுப்பு முழுவதுமாக எரிக்கப்பட்டது, சுகந்தவாசனை முழுமையாக அளிக்கப்பட்டது. இவ்வாறாக **மனிதனான** இயேசுகிறிஸ்து எல்லாருக்காகவும் தன்னை ஒரு மீட்கும் பொருளாகக் கொடுத்தார்.

பொற்பீடத்தி–ருந்து சுகந்த வாசனை தனக்கு முன்சென்று திருப்தி அளித்ததினால், பிரதான ஆசாரியன் இரண்டாம்திரை வழியாக மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்தான். அதுபோல இயேசுவும் மூன்றரை வருட காலத்தில் பரிசுத்த ஸ்தலத்தில், ஒப்புக்கொடுக்கப்பட்ட ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட நிலையில் தேவனுக்கு பிரியமான சுகந்தவாசனையாக இருந்து மரணம் என்னும் இரண்டாவது திரைக்குப் பின்னால் கடந்து சென்றார். மூன்றுநாள் மரணம் என்னும் திரையின்கீழ் அவர் இருந்தார். அடுத்ததாக, மாம்சத்திற்கு மாறாக திரைக்குப் பின்னால், "தேவனின் தற்சொரூபம்" என்னும் தெய்வீகத்தன்மையின் பூரணப்பட்ட நிலையில் அவர் எழுந்தார். "அவர் **மாம்சத்தில்** கொலையுண்டு, **ஆவியில்** உயிர்ப்பிக்கப்பட்டார்." "ஜென்மசரீரம் (மனித சரீரம்) விதைக்கப்பட்டு ஆவிக்குரிய சரீரம் எழுப்பப்பட்டது." இவ்வாறாக நமது கர்த்தர் அவரது உயிர்த்தெழுத–ல் மகா பரிசுத்த **நிலை** என்ற ஆவிக்குரிய பரிபூரணத்தை அடைந்தார். – 1 பேது 3:18; I கொரி. 15:44.

ஆசாரியனின் அடுத்தப்பணியானது, சுத்திகரிப்பின் இரத்தத்தை, நமது மீட்பின் விலையை தேவனுக்கு அளிப்பதாகும். "கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தின்மூலம் நீங்கள் மீட்கப்பட்டீர்கள்." (1 பேதுரு 1:19) கிருபாசனத்தின் மேலுள்ள இரண்டு கேரூபின்களின் மத்தியில்

இருக்கும் “ஷெகினா” என்னும் ஒளி குறிப்பிடும் யேகோவா தேவனுடைய பிரசன்னத்தில் ஆசாரியன், கிருபாசனத்தின் மேலும், அதற்கு முன்பாகவும் தெளித்து யேகோவா தேவனுக்கு இரத்தத்தை அளித்தான். எனவே நமது கர்த்தராகிய இயேசு நாற்பது நாட்களுக்குப் பிறகு மேலே போய், “**நமக்காகத்** தேவனுடைய சமூகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்து” கல்வாரியிலே அவர் செய்த ஈடுப-யாகிய மீட்கும் பொருளை, நமக்காக, நம்முடைய இரட்சிப்பிற்காக தேவனுடைய சமூகத்தில் அர்ப்பணித்தார். – எபி. 9:24.

## பாவநிவாரண நாளின் இரண்டாவது ப-கர்த்தருடைய வெள்ளாட்டுக்கடா

பிரதான ஆசாரியனை மகாபரிசுத்த ஸ்தலத்திலுள்ள கிருபாசனத்திற்கு முன்பாக விட்டுவிட்டு, இப்பொழுது நாம் வெளியே, பிரகாரத்தில் நடக்கும் மற்றொரு செயலை கவனிப்போம்.

“இஸ்ரயேல் புத்திரராகிய சபையாரிடத்திலே, பாவநிவாரண ப-யாக இரண்டு வெள்ளாட்டுக்கடாக்களையும், சர்வாங்க தகனப-யாக ஒரு ஆட்டுக்கடாவையும் வாங்கக்கடவன். பின்பு ஆரோன் தனக்காகவும் தன் வீட்டாருக்காகவும் பாவநிவிர்த்தி செய்யும்படிக்கு, தன்னுடைய பாவநிவாரண ப-யின் காளையை சேரப்பண்ணி, அந்த இரண்டு வெள்ளாட்டுக்கடாக்களையும் கொண்டுவந்து, ஆசரிப்புக் கூடார வாச-லே, கர்த்தருடைய சந்நிதியில் நிறுத்தி, அந்த இரண்டு வெள்ளாட்டுக்கடாக்களையுங்குறித்துக் கர்த்தருக்கென்று ஒரு சீட்டும், போக்காடாக விடப்படும் வெள்ளாட்டுக்கடாவுக்கென்று ஒரு சீட்டும் போட்டு, கர்த்தருக்கென்று சீட்டு விழுந்த வெள்ளாட்டுக்கடாவைப் **பாவநிவாரண ப-யாகச்** சேரப்பண்ணி, போக்காடாக விடப்படச் சீட்டு விழுந்த வெள்ளாட்டுக்கடாவை, அதைக்கொண்டு பாவநிவிர்த்தி உண்டாக்கவும் அதைப் போக்காடாக வனாந்தரத்திலே போகவிடவும், கர்த்தருடைய சந்நிதியில் உயிரோடே நிறுத்த வேண்டும்.” – வசனங்கள் லேவி. 16:5–10 வரை.

இஸ்ரயேல் ஜனத்தாரிடத்தி-ருந்து “பிரகாரத்திற்குள்” கொண்டு வரப்பட்ட இந்த இரண்டு வெள்ளாட்டுக்கடாக்கள், இந்த உலகத்தி-ருந்து வந்து, இயேசுவின் மீட்பை ஏற்றுக்கொண்டு இந்த சுவிசேஷயுகத்தில் மரணபரியந்தம் தேவனுடைய ஊழியத்திற்கு தங்களது ஜீவியத்தை

முழுவதுமாக ஒப்புக்கொடுக்கின்ற அனைவருக்கும் நிழலாக இருக்கின்றன. “பாளையம்” ஆகிய இந்த உலகத்தி-ருந்து முத-ல் பிரிக்கப்பட்ட “பாவிகள் மற்றும் உலகத்தார் “பிரகாரமாகிய” **நீதிமானாக்கப்பட்ட** நிலைக்கு கொண்டுவரப்படுகிறார்கள். அங்கே அவர்கள் தேவனுக்கு முன்பாக **மனிதர்களைப்**போல தங்களது மீட்பராகிய இயேசுகிறிஸ்துவுடன் மரிக்கவிரும்பி அவர் செய்ததுபோல பரலோகத்திற்கு அல்லது ஆவிக்குரிய நிலைகளில் நுழைந்திட தங்களைத் தாங்களே அர்ப்பணிக்கிறார்கள். (கூடாரத்தின் வாச-ல் கொண்டுவரப்பட்ட வெள்ளாட்டுக்கடாக்கள் போல) முத-ல், ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட ஆவிக்குரிய சிந்தை நிலை இரண்டாவது, ஆவியில் பிறப்பிக்கப்பட்ட ஆவிக்குரிய சரீரநிலை, இவைகள் முறையே பரிசுத்த ஸ்தலம், மகாபரிசுத்தஸ்தம் ஆகிய நிலைகளை விளக்கிக் காண்பிக்கின்றன.

ஆனால் நம்முடைய போதகர், “கர்த்தாவே கர்த்தாவே” என்று சொல்லுகிறவன் இராஜ்ஜியத்தில் பிரவேசிப்பதில்லை என கூறுகிறார். அதைப் போலதான் இது. “கர்த்தாவே, இங்கே நான் என்னையும், என்னுடையவைகளையும் உமக்காக அர்ப்பணிக்கிறேன்” என்று தாங்கள் செய்வதைக்காட்டிலும் அளவில் அதிகமாக சொல்லுகிறவர்களை குறிக்கிறது. அவர்கள் என்ன வாக்கு கொடுக்கிறோம் என்பதை அறிவதில்லை. தன்னைத்தானே வெறுத்து அனுதினமும் சிலுவையை எடுத்துக் கொண்டு (**காளையான**) இயேசுவின் அடிச்சுவட்டை பின்பற்றிச் செல்ல வேண்டும் என்றால் என்ன என்பதையோ, “நாம் அவருடைய நிந்தையைச் சுமந்து (மனித நம்பிக்கைகளை முற்றிலும் மறுத்து அழிப்பது முதலான) பாளையத்துக்குப் புறம்பே அவரிடத்திற்கு புறப்பட்டுப் போகக்கடவோம்'' என்ற இவ்வசனத்தின் பொருளையோ உணராதிருக்கிறார்கள். – எபி. 13:13

இவ்விரண்டு ஆடுகளும் இரண்டுவித வகுப்பாருக்கு நிழலாக இருக்கின்றன. அவ்விரண்டு வகுப்பாரும் கிறிஸ்துவுடனே கூட மரிக்க **உடன்படிக்கை** செய்து கொண்டவர்களே. கிறிஸ்து வைத்துவிட்டுப் போன மாதிரியின்படியே நடக்க மனதுள்ளவர்களே. இவர்கள் “ஜீவகாலமெல்லாம் (இந்த) **மரணபயத்தினாலே** அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள்.” – (எபி. 2:15) முதல் வகுப்பார் “கர்த்தருடைய வெள்ளாட்டுக்கடா.” இரண்டாவது வகுப்பார் ‘‘போக்காடாக விடப்படும் வெள்ளாட்டுக்கடா,'' இரண்டு வகுப்பாராகிய இந்த இரண்டு வெள்ளாட்டுக்கடாக்களும் பாவநிவாரண நாளாகிய இந்த சுவிசேஷ யுகத்தின் முடிவில் இவ்வுலகத்தை தேவனுக்கும்,

அவருடைய நியாயப்பிரமாணத்திற்கும் ஒத்தவர்களாக்கும் பாவநிவாரண **பணியில்** பங்குள்ளவர்களாக இருக்கின்றனர். ஆனாலும் தலைவனைப் பின்பற்றும் முதல் வகுப்பார் மாத்திரமே, **பாவநிவிர்த்தி** செய்யும் பணியில் பங்கு கொண்டு, அவரது மகிமையான சரீரத்தின் அங்கங்களாக ஆகக்கூடிய சிலாக்கியத்தைப் பெறுகின்றனர்.

"கர்த்தருடைய வெள்ளாட்டுக்கடா" எதுவென்றும் 'போக்காடாக விடப்படும் ஆடு" எதுவென்றும் பார்க்கும்படி சீட்டுப் போடப்படுகிறது. இது அங்கே நின்ற ஆடுகளில் எது பரிசைப்பெறும் என்று தேவனால் தேர்வு செய்யப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டியது. இந்த காரியமானது. தெய்வீக சுபாவத்திற்கு இன்னார் சுதந்தரவாளியாக இருக்க வேண்டும், இன்னார் இருக்கக்கூடாது என்றும், இன்னார் நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடன் உடன் பங்காளிகளாக இருக்க வேண்டும், இன்னார் இருக்கக்கூடாது என்றும் தேவன் **தன்னிச்சையாக** தீர்மானிக்கிறதில்லை என்பதையும் காட்டுகிறது. அவரோடு உபத்திரப்படுபவர்கள், அவரோடுகூட ஆளுகை செய்வார்கள். சமரசப்போக்குடன் கடும்சோதனைகளை தவிர்ப்பவர்கள் மகிமையின் உடன்பங்கை இழப்பார்கள். – ரோமர் 8:17

பாவநிவாரண நாளாகிய இந்த சுவிசேஷயுகத்தில் தன்னைத்தானே ஒப்புக்கொடுக்கும் "பிராகாரத்தில்" இருக்கும் ஒவ்வொரு **விசுவாசி**யும், **நீதிமானாக்கப்பட்டவனும்**, (லேவியன்) அந்த பிரியமான ப-யாக ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். இதுவே ப- ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான ஏற்ற தருணம். தன்னுடைய உடன்படிக்கையைக் கைக்கொண்டு ப-யை சீராக செய்யும் ஒவ்வொருவனும் ''தேவனுடைய ஆடாக'' குறிப்பிடப்பட்டுள்ளான். யார் தங்களுடைய ப-யை முழுசித்தத்தோடு செய்யாதிருக்கிறார்களோ, யார் இவ்வுலகத்தை நேசிக்கிறவர்களாக இருக்கிறார்களோ, அவர்கள் போக்காடாக குறிக்கப்பட்டுள்ளனர்.

இப்பொழுது மீண்டும் நாம் பிரதான ஆசாரியனிடத்திற்கு வருவோம். கிருபாசனத்தில் (சாந்தமான அல்லது திருப்தி செய்யும் இடம் என்று பொருள்) ஏழுதரம் காளையின் இரத்தத்தை தெளித்துவிட்டு (பூரணமாக), ''பின்பு **ஜனத்தினுடைய** பாவநிவாரண ப-யான வெள்ளாட்டுக்கடாவை அவன் கொன்று, அதின் இரத்தத்தை திரைக்கு உட்புறமாக கொண்டுவந்து, காளையின் இரத்தத்தை **தெளித்ததுபோல** அதின் இரத்தத்தையும் கிருபாசனத்தின் மேலும் அதற்கு முன்பாகவும் தெளித்தான்.'' (வசனங்கள் 14,15). ஒரே வார்த்தையில் சொல்ல

வேண்டுமானால், காளைக்கு என்ன என்ன பிரகாரமாக செய்யப்பட்டதோ அவையனைத்தும் தேவனின் வெள்ளாட்டுக்கடாவிற்கும் செய்யப்பட்டது. அது அதே பிரதான ஆசாரியனாலே கொல்லப்பட்டது. அதின் இரத்தம் அதேவிதமாக தெளிக்கப்பட்டது. அதின் கொழுப்பு முத-யன பிரகாரத்தில் அதேவிதமாக ப-பீடத்தில் எரிக்கப்பட்டது. (இங்கே குறிப்பிடப்பட வேண்டிய அம்சம் என்னவென்றால், காளை பொதுவாக பெரிதும் பருத்தும் இருக்கும். அதுபோல, காளைக்கு பொருளாக இருக்கும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் வைராக்கியம் என்ற அதிகபலம் உள்ளவரும், தாம் செய்யக்கூடிய ப-யிலே அதிக அன்பு (கொழுப்பு) உள்ளவருமாக இருக்கிறார். அதே சமயத்தில் ஆடாக குறிப்பிடப்பட்டுள்ள அவரை பின்பற்றி போகிறவர்கள் ஒப்பிடும்போது மெ-ந்தவர்களாகவும் இருக்கின்றனர்.) காளையின் வேண்டாத உறுப்புகள், பாளையத்திற்கு புறம்பே எரிக்கப்பட்டதுபோல, தேவனின் ஆட்டின் வேண்டாத உறுப்புகளும் அதேவிதமாக எரிக்கப்பட்டன.

**பாவநிவாரணத்திற்காக** பயன்படுத்தப்பட்ட மிருகங்கள் மாத்திரமே பாளையத்திற்கு புறம்பே எரிக்கப்பட்டன என்று அப்போஸ்தலனாகிய பவுல் விளக்குகிறார். அவ்விதம் சொல்-விட்டு மேலும் தொடர்கிறார் : “ஆகையால், **நாம்** நிந்தையைச் சுமந்து, பாளையத்திற்கு புறம்பே **அவரிடத்திற்குப்** புறப்பட்டு போகக்கடவோம். (எபி. 13:11-13) இப்படியாக கிறிஸ்து இயேசுவை **பின்பற்றுகிறவர்கள்** தேவனுடைய வெள்ளாட்டுக்கடாவிற்கு ஒப்பிட்டு காட்டப்படுவதோடு அல்லாமல் தலையாகிய இயேசுவோடு கொடுக்கப்படும் அவர்களுடைய ப-, உலகத்தின் பாவநிவாரணத்திற்காக கொடுத்த ப-யில், ஒரு பங்காகவும் இடம் பெறுகிறது என காட்டப்படுகிறது. “உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தனைகள் என்மேல் விழுந்தது.” - சங். 69:9.

பாவநிவாரண ப-யில், காளைக்கு எப்படியோ அப்படியே வெள்ளாட்டுக்கடாவிற்கும் செய்யப்படுகிறது. பாளையத்திற்கு புறம்பே **எரிக்கப்படுவதானது**, பாளையத்திற்கு புறம்பே உள்ள தேவனோடுகூட உடன்படிக்கை செய்துகொள்ளாமல் இருக்கிற அவிசுவாசிகள், அப்ப-யை எவ்விதமாக பார்க்கிறார்கள் என்பதை காண்பிக்கின்றது. (1) தேவனுடைய பார்வையில் தேவனுக்கு உகந்த வாசனையாக கிருபாசனத்திற்கும் அப்பாலும் ஊடுருவக்கூடிய வகையில் கிறிஸ்துவின் சரீரத்தின் ப-யை தெரிந்து கொள்ளுபவர்கள் ஒரு சிலரே. “பரிசுத்த ஸ்தலத்தில்” தாங்களாகவே இருப்பவர்கள் மட்டுமே, “கிறிஸ்துவோடு கூட பரலோகத்தில்

அமர்ந்திருப்பார்கள்.” (2) பிரகாரத்தில் இருக்கும் வெண்கல ப-பீடத்தில் இடப்படும் பாவநிவாரண ப-யை அங்கீகரிப்பவர்கள், கர்த்தருடைய வெள்ளாட்டுக்கடாவினுடைய கொழுப்பிற்கு ஒப்பாக இருக்கும் பரிசுத்தவான்களின் ப-களையும், தேவனுக்குப் பிரியமாக தன்னையே வெறுத்துள்ளதையும் உணர்பவர்கள் அநேகராயிருக்கிறார்கள். விசுவாசக்குடும்பத்தாராகிய இவர்கள் அனைவரும் பாளையத்தின் நிலையில் உள்ள நீதிமானாக்கப்படும் நிலையில் உள்ளவர்கள் (3) பாளையத்திற்கு புறம்பே இருந்து இந்த ப-யினரையும் அவர்களது சுயவெறுத்தலையும் அசுத்தம் நிறைந்ததாகவும், நாற்றம் வீசுகிறவைகளாகவும் பார்க்கிறவர்கள் தேவனுக்கு வெகுதூரமான ஒரு வகுப்பினராகவும் தீயசெயல்கள் மூலம் அவருக்கு பகைவர்களுமாய் இருக்கிறார்கள். இவர்களைக் குறித்து தான் கர்த்தர் சொல்கிறார், “என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் சொல்வார்கள்.” - மத். 5:11

இப்பாடங்கள் என்ன உணர்த்துகின்றன? “பரிசுத்த ஸ்தலத்திற்குள்” நாம் உண்மையான ப-களை செலுத்துபவர்களாக இருக்கும் வரை அல்லது “பிரகாரத்திற்குள்” நாம் உண்மையான விசுவாசக்குடும்பத்தாராக இருக்கும்வரை இந்த நிகழ்காலத்தில் நாம் மற்ற உண்மையாக ப-யாகும் எவரையும் நிந்திப்பவர்களாக நாம் ஆகமாட்டோம். குரோதம், வெறுப்பு, பொறாமை, சண்டை போன்ற துன்மார்க்கமான காரியங்களால், நாம் குருடாக்கப்பட்டு தேவன் ஏற்றுக் கொள்கிற ப-களை பார்க்க முடியாதவர்களாக இருக்கமாட்டோம். ஒருதரம் சகோதரர்களாக அதே ப-களிலும், தேவனுடைய “பொற்பீடத்தின்” ப-களிலும் பங்குகொண்டு, ராஜரீக ஆசாரியக் கூட்டத்தாரின் முறைமையின்படி நடந்து, பின்பு மறுத-த்து, தேவனுடைய ஆவிக்கு விரோதமான ஆவியை உடையவர்களாகி, உடன் ஆசாரியர்களை தீமையான சொற்களால் புண்படுத்துபவர்களைக் குறித்து நாம் என்ன சொல்வோம்! பரிசுத்த நிலையையும், பிரகார நிலையையும் விட்டு தேவனோடுகூடிய எல்லா உறவுகளையும் விட்டு, இருளுக்குள்ளாக போகிறவர்களுக்காக நாம் **பயப்பட** வேண்டும். (எபி 4:1) அவர்களை மீட்பதற்காக, நம்மால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும். (யாக். 5:20) ஆனால் ஒருக்காலும் நாம் பரிசுத்த ஸ்தலத்தை விட்டு **விலகி** தீமைக்குத் தீமையையும், நிந்தனைக்கு நிந்தனையையும் செய்பவர்களாக ஆகக்கூடாது. நம்முடைய பிரதான ஆசாரியனைப் போல பகைவர்களையும் சிநேகிக்கக் கூடிய

அன்பை உடைய ஆசாரியர்களாக இருந்து, உபத்திரவம் செய்பவர்களுக்கும் நன்மை செய்ய வேண்டும். நாம் அவரை அப்படியே பின்பற்றுகிறவர்களாக ஜீவிக்க வேண்டும். “அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்பு செய்கிறவருக்குத் தம்மை ஒப்புகொடுத்தார்.” – 1 பேதுரு. 2:23.

கர்த்தருடைய வெள்ளாட்டுக்கடா கர்த்தருடைய “சிறுமந்தையிலுள்ள” எல்லா ஆடுகளுக்கும் நிழலாக இருக்கின்றது. அந்த எல்லா ஆடுகளும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கின்றன. அவைகள் எல்லாமே அதே **குறுகலான பாதையில்** வந்தவைகளே. ஆகையால், மொத்தமாக இவர்களுக்கு என்ன சம்பவிக்கின்றதோ. அதே தான் ஒவ்வொருவருக்கும் பொருந்தும். ஆகவே, அந்த ஆடானது சிறுமந்தையிலுள்ள ஒவ்வொருவரையும் குறிக்கும். அந்த ஆடு எவ்விதமாக முழுமையாக ப-யிட்ட பிறகு அதனுடைய இரத்தம் கிருபாசனத்தண்டைக்கு கொண்டு போகப்படுகிறதோ, அதேபோல, சிறுமந்தையிலுள்ள அனைத்து ஆடுகளின் ப-களும் முழுமையாக நிறைவேறின பிறகுதான், மகிமைக்குரிய நிலையை அடைய முடியும்.

“கிருபாசனத்தின்” மேலும் அதற்கு முன்பாகவும் தெளிக்கப்பட்ட இரத்தமானது, சிலுவையின் வடிவத்தில் சிலுவையின் மேற்பகுதி அல்லது தலை கிருபாசனத்தின் மேல் இருக்கும்படி தெளிக்கப்பட்டது. இதைக்குறித்து பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கின்றது. ‘‘பின்பு காளையின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, கீழ்புறமாக நின்று, (திரையை நோக்கி) தன் விர-னால் கிருபாசனத்தின்மேல் தெளித்து, அந்த இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, கிருபாசனத்திற்கு முன்பாக (குறுக்காக, முன்னணியில்) ஏழுதரம் தன் விர-னால் தெளிக்கக்கடவன்.’’ – (லேவியராகமம் 16:14) இப்படியாக இஸ்ரயேலரின் பாவங்கள் நிவிர்த்தி செய்யப்பட்டன. காளை பிரதான ஆசாரியரின் சரீரமாகிய **ஆசாரியர்களுக்கும்**, இந்த யுகத்தின் விசுவாசக்குடும்பத்தாராகிய லேவியருக்கும் ஆன ப-யாகும். ஆட்டுக்கடா அறிந்துகொள்ளுதல், எதிர்கால வாய்ப்புகள் இவற்றின் மூலம் தேவஜனங்களாக ஆகவுள்ள இஸ்ரயேல் என்ற முழுஉலகத்தின் ஜனத்திற்குமான ப-களாகும்.

இப்படியாக, இந்த முழு சுவிசேஷ யுகமானது, தங்களுடைய மாம்சீக, உலக பிரகாரமானவைகளை ப-செலுத்தி ஆவிக்குரிய, பரத்திற்குரிய நிலையை அடைபவர்களுக்கு உபத்திரவத்தின் மற்றும் மரணத்தின் யுகமாக இருக்கிறது. இயேசுகிறிஸ்து தம் சரீரம் மற்றும்

வீட்டாரின் சார்பாக செய்த ப–, பூரணமானவுடன் தேவன் அதனை ஏற்றுக்கொண்டதற்கு அடையாளமாக, கிறிஸ்து பரமேறிய பிறகு, அவருடைய சரீரம் மற்றும் வீடாக உள்ள சபையின் அங்கத்தினருக்கு, பெந்தெகொஸ்தே நாளிலே, பரிசுத்த ஆவியானது அனுப்பப்பட்டது. அப்பொழுது தொடங்கிய சபைமீதான (அபிஷேக தைலத்தினால் குறிக்கப்பட்ட) அந்த அபிஷேகமானது, அன்றி–ருந்து பிரதான ஆசாரியருடைய சரீரமாக இருக்கும் அனைவர் மேலும் பொழியப்படுகிறது. ஒவ்வொருவரும் கிறிஸ்துவுக்குள் அவருடைய சரீரத்தின் அங்கமாக முழுக்காட்டப்படுவதாலும், அதன்மூலம் அவரது பரிசுத்த ஆவிக்குள் முழுக்காட்டப்படுவதாலும் சரீரத்தின் ஒவ்வொரு அங்கத்தினரையும் ஆவி அபிஷேகம் செய்விப்பதினால் இதை திரும்ப செய்திட அவசியமில்லை.

பரிசுத்த ஆவியை தேவன் தந்தருளியதானது, ஏற்கனவே இயேசுவுக்குள் தங்களை ஒப்புக்கொடுத்து, தங்கள் ஆண்டவர் காட்டிய வழியில் தரித்திருந்து தங்களது ப–களை பிதா அங்கீகரிப்பதற்காகவும் (பிரியமானவரில் ஏற்றுக்கொள்ளத்தக்கது) புத்திர சுவிகாரத்தின் ஆவியினால் பிள்ளையாக ஜெநிப்பிக்கப்படுவதற்காகவும் காத்திருப்பதற்கு அடையாளமாகும். இந்த பரிசுத்த ஆவி, இவ்வாறு பெந்தெகொஸ்தே நாளிலே அவர்கள்மேல் ஒரு வல்லமையாக, ஒரு “கரமாக” வந்த காரியத்தை, பிரதான ஆசாரியன் ஆசரிப்பு கூடாரத்தின் கதவு வழியாக வந்து, கர்த்தருடைய ஆட்டுக்கடாவின் மேல் தன் கைகளை வைத்து அதை அடித்ததைக் காட்டியது. லேவி. 16:15 பிதாவாகிய தேவனுடைய பரிசுத்த ஆவியானது எவ்விதமாக இயேசுகிறிஸ்துவை வழிநடத்தி, காளையின் ப– குறிப்பிடுகிற அனைத்தையும் செய்ய உறுதுணை செய்ததோ, அதேவிதமாக, அதே ஆவி, அதே சத்திய ஆவி, கிறிஸ்துவின் மூலமாக, கர்த்தருடைய வெள்ளாட்டுக்கடாவிற்கு ஒப்பாக இருக்கும் வகுப்பாரையும் வழிநடத்தி, தங்களைத் தாங்களே சிலுவையில் அறையச்செய்து, தேவனுக்குப் பிரியமானவர்களாக வழிநடத்துகின்றது. இவர்களே “கிறிஸ்துவுக்குள்ளான புதிய சிருஷ்டிகளாக” இருந்து, தேவனுடைய சாயலாகிய, மகிமையையும், கனத்தையும், சாகாமையையும் பெற்றுக் கொள்ளும் நம்பிக்கையில் இருக்கின்றனர்.

உதாரணமாக, அப்போஸ்தலனாகிய பவுலும், தலையாகிய கிறிஸ்துவின் ஆவியை பெற்றிருந்து, அவருக்கு லாபமாயிருந்தவை களெவைகளோ அவைகளை கிறிஸ்துவிற்காக நஷ்டமென்று எண்ணி **கிறிஸ்துவிற்குள் தாம்** காணப்படவேண்டும் (ஒரு உறுப்பினராக)

என்பதற்காக அவ்வாறு செய்தார். ஆவியினால் ஏவப்பட்டு அவர் சொல்கிறார் : "...பிழைத்திருக்கிறேன் (புதிய சிருஷ்டியாக), இனி நான் (பழைய சிருஷ்டி, பிரதிஷ்டை செய்யப்பட்ட வெள்ளாட்டுக்கடாவிற்கு ஒப்பாக) அல்ல." (கலா. 2:20) பாளையத்திற்கு புறம்பாக - உலகத்தின் நிந்தைகளாலும், அருவறுப்பினாலும் அவைகள் எரிக்கப்பட்டன. பலி-ன் **உலகபிரகாரமான** ஆசாபாசங்கள் வல்லமைகள் அனைத்தும் தேவனுக்கு, ஜீவப-யாக ஒப்புகொடுக்கப்பட்டன. அதற்கு பின்பு, கிறிஸ்துவே அவருக்குள் பிழைத்திருந்தார். அதாவது மகிமையின் நம்பிக்கையாகிய, மாம்சீக சுபாவத்தையும் அதன் விருப்பங்களையும் சிலுவையில் அறைந்த **கிறிஸ்துவின் சிந்தையே** அவருக்குள் பிழைத்திருந்தது.

உண்மையிலேயே அவர் உலகத்தில் இருந்தும் உலகத்திற்கு சம்பந்தபடாதவராக ஜீவித்தார். "நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்பு கூர்ந்து, எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் **விசுவாசத்தினாலே** பிழைத்திருக்கிறேன்" (கலா. 2:20) என்று சொல்லும் அளவிற்கு அவருடைய ஜீவியம் இருந்தது. ஆம், விசுவாசத்தினாலே அவர் ஒரு புதிய சிருஷ்டியாக தெரிந்து கொள்ளப்பட்டார். இப்படிப்பட்டவர்களுக்கே, திவ்விய சுபாவத்திற்குரிய மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அருளப்பட்டிருக்கிறது. (2 பேது 1:4) அவர் "பரிசுத்த ஸ்தலத்திற்குரிய" நிலையில் இருந்து, சமூகத்து அப்பங்களால் போஷிக்கப்பட்டு பொன் குத்துவிளக்கினால் தொடர்ச்சியாக ஒளியூட்டப்பட்டவராக இருந்தார். இப்படியாக, ஞானத்தினாலும் பலத்தினாலும் நிரப்பப்பட்டவராக இருந்ததினாலே, தேவனுக்கு பிரியமான "சுகந்த" வாசனையான ப-களை இயேசுகிறிஸ்துவின் மூலமாக செய்யக்கூடியவராக இருந்தார்; அதாவது, கிறிஸ்துவினுடைய புண்ணியம் அதன்மேல் இருந்ததினால் அது தேவனால் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது. இவ்வாறாக ஆட்டுக்கடாவின் சுபாவத்தை எப்போதும் **ப-யாக்கி வந்தார்**. அவர் மாம்ச **சித்தத்தை** மரித்த நிலையில் மாத்திரமல்ல, தனது மாம்ச சரீரத்தை புதிய சித்தத்திற்குட்பட்ட கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். அதே போல தான், வெகுவாக அறியப்படாதிருந்தாலும், கர்த்தருடைய வெள்ளாட்டுக்கடா வகுப்பாரின் மற்ற அங்கத்தினர்கள் இதையே செய்து வருகின்றனர். பவு-ன் ப-யானது, உயர்ந்த ரகமான வாசனையை மேலே அனுப்பியது. அவருடைய ப-யானது தேவனுக்கு பிரியமான சுகந்த வாசனையாக இருந்தது. நம்முடைய ப-களும்

அதேவிதமாகத் தான் தேவனால் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது. அதனுடைய சொந்த மதிப்பினால் அல்ல, பொற்ப–பீடமும் மீட்பருமாகிய கிறிஸ்துவின் புண்ணியத்தில் பங்கெடுத்து கொடுக்கப்படுவதினால்தான்.

பாவநிவாரணப–யாக பின்னால் இருந்த வெள்ளாட்டுக் கடாவானது, காளை துவக்கி வைத்த ப–யின் பணியை நிறைவாக்கினதுபோல, சிறுமந்தையும் கிறிஸ்துவைப் பின்பற்றி, அவருக்கு பிறகு, "கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களின் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக நிறைவேற்றுகிறது." – கொலோ. 1:24. நமது ப–கள் நமது கர்த்தருடையவைகளைப் போல இயல்பாகவே மதிப்புமிக்கதல்ல. அவர் ஒருவரே ஒரு ஈடுப–யாக, ஒரு பாவநிவாரண ப–யாக ஆவதற்கு பூரணமானவரும், பொருத்தமானவருமாக இருந்தார். நமது ப–கள் நமக்கு அளிக்கப்பட்ட அவரது தகுதியின் மூலமே ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. கிறிஸ்து முத–ல் நம்மை நீதிமான்கள் ஆக்கி பின்பு அவருடைய கிருபையினாலே, **நீதிமானாக்கப்பட்ட** நம்மை அவருடனேகூட ப–யாக்குவதற்கு அனுமதிக்கிறார். நாம் அவருடைய சரீர அங்கமாக இருப்பதினாலே, அவருடைய பாடுகளில் நமக்கும் ஒரு பங்கை வழங்குகிறார். இவ்விதமாக பங்கு கொள்வதினாலே, வரப்போகிற அவருடைய மகிமையிலும் பங்கு கொடுத்து உலக மனுக்குலத்தை ஆசீர்வதிக்கும் பணியிலும் வாய்ப்பு கொடுத்து இவ்விதமாக நம்மை நடத்துகிறார்.

கர்த்தரின் இந்த ஆட்டுக்கடாவின் இறுதி அங்கத்தினர்களின் ப–தகனிக்கப்பட்டு பாவநிவாரண ப– முற்றிலுமாக முடிவுக்கு வரும்பொழுது இந்த நேரம் வரும். நாம் இப்பொழுது, பாவநிவாரண நாளின் கடைசி கட்டத்தில், கர்த்தரின் ஆட்டுக்கடாவின் கடைசி உறுப்பினர் ப–யிடப்பட்டுக் கொண்டிருக்கும் காலகட்டத்தில் இருக்கிறோம். வேதத்தில் பல இடங்களில் சொல்லப்பட்டிருக்கும் அடையாளங்களை வைத்து, இதை நாம் திடமாக விசுவாசிக்கிறோம். வெகுசீக்கிரத்தில், கிறிஸ்துவினுடைய சரீரமாகிய இந்த வகுப்பாரின் கடைசி உறுப்பினர்கள் இரண்டாம் "திரை" வழியாக மாம்சத்திற்கு அப்பால் பிரவேசித்து ஆவிக்குரிய பூரண நிலையை அடையப் போகிறார்கள். இது புதிய சிந்தனையில் ஏற்கனவே ஆரம்பமானதாகும். தற்போது அவர்களது அழியக்கூடிய சரீரத்தை கட்டுப்படுத்துவதாகும். அதுமாத்திரமல்ல, இவர்கள் ஆவிக்குரிய நிலையிலேயே மிக உயர்ந்த நிலையாகிய "திவ்விய சுபாவத்தை" பெறத்தக்கதான வாக்குத்தத்தங்கள் இவர்களுக்கு

பண்ணப்பட்டிருக்கின்றன. - 2 பேது. 1:4

''திரைக்குள்ளாக'' நுழைவது ''தலைக்கு'' எந்த கருத்தில் சொல்லப்பட்டதோ அதே கருத்தில் சரீரத்திற்கும் சொல்லப்படுவதாகும். காளையின் இரத்தம் அர்ப்பணித்த காரியம் எதைக் குறித்ததோ அதே பொருளைத்தான் வெள்ளாட்டுக் கடாவினுடைய இரத்தமும் குறிக்கிறது. இரண்டாவது திரைவழியாக, வெள்ளாட்டுக்கடாவின் இரத்தத்தை எடுத்துச்செல்லும் ஆசாரியனுடைய சரீரமானது, மனித நிலைக்கு முற்றிலும் மாறுபட்ட தெய்வீக நிலைக்குள் செல்லும் கிறிஸ்துவின் சரீரத்தைக் (சபையை) குறிக்கிறது. அப்பொழுது, நாம் "தேவனுடைய தற்சொரூபமாக" இருக்கும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப் போல இருப்போம். எவ்வளவு பெரிய ஆசீர்வாதமான நம்பிக்கை! "நான் விழிக்கும்போது உமது சாயலால் திருப்தியாவேன்'' என்று உரைக்கப்பட்டதானது இயேசுகிறிஸ்துவிற்காக தீர்க்கதரிசனமாக சொல்லப்பட்டதாகும். "அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரை தரிசிப்போம்" என்று சொல்லக்கூடிய இந்த வாக்குத்தத்தம் எவ்வளவு மேன்மையானதாக இருக்கிறது! - எபி. 1:3; ரோம. 8:29; சங். 17:15; 1 யோவா 3:2

பந்தய பொருளுக்காக ஓடி அதில் நாம் ஜெயங்கொண்டால், பின்பு:-

"இச்சையான எண்ணம் யாவும் அழிவதாக,
இவ்வையத்தில் தேடிய அனைத்தும் வீழ்வதாக.
எனினும் எத்தகுநிலையில் நாம் உள்ளோம்.
பரத்தின் பொருளை நமதாக்கி யுள்ளோம்" என்பதாகிவிடும்.

மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்தாகிவிட்டது. ஜனங்களுக்கான ப-யாக **சரீரத்தின்** ப-யானது, வெள்ளாட்டுக் கடாவினுடைய இரத்தம் கிருபாசனத்தண்டையில் தெளிக்கப்படுவதைப் போல அர்ப்பணிக்கப்படும். "இஸ்ரயேல் புத்திரருடைய தீட்டுகளினிமித்தமும், அவர்களுடைய சகல பாவங்களினாலும் உண்டான அவர்களுடைய மீறுதல்களினிமித்தமும், பரிசுத்த ஸ்தலத்திற்காகப் பிராயசித்தஞ் செய்து, அவர்களிடத்தில் அவர்களுடைய தீட்டுகளுக்குள்ளே நிற்கிற ஆசரிப்புக் கூடாரத்திற்காகவும் அப்படியே செய்யக்கடவன்." - லேவி. 16:16

இவ்விதமாக வெள்ளாட்டுக்கடா ''**ஜனங்களுக்காக**'' அர்ப்பணிக்கப்படும்போது, இயேசு, நமது மகிமையான தலைவர்

தமக்காகவும், தன் வீட்டாருக்காகவும் (விசுவாசக் குடும்பத்தாருக்காகவும்) ஏற்றுக் கொள்ளப்பட்டது போல அதுவும் ஏற்றுக் கொள்ளப்படும். இப்படியாக, சமாதானத்தை உண்டுபண்ணுகிற வேலையானது நிறைவேற்றப்படும். பாவமும் சாபமும் அனைவருக்காகவும் முழுமையாக மூடப்படும். இயேசு கிறிஸ்துவின் ப– ஏற்றுக்கொள்ளப்பட்டவுடனேயே பெந்தெகொஸ்தே நாளின் ஆசீர்வாதம் சரீரத்தின் மேலும், விசுவாசக்குடும்பத்தின் மேலும் வந்ததுபோல, அவர் மாம்சீக திரைக்குப் பின்னால் சென்று ஈடுப–யை தேவனுக்கு முன்பாக சமர்ப்பித்த பிறகு, ஒப்புரவாகுத–ன் பலனை உலகுக்குக் கொடுக்கும் மகா பெரிய வேலை விரைவாகத் தொடரும்.

அனைத்துப் பொருட்களின் மேலும் இரத்தம் தெளிக்கப்பட்ட இக்காரியமானது, அந்த இரத்தம் முழு திருப்தியை ஏற்படுத்துகிறதை காண்பிக்கின்றது. அதே நேரத்தில், இதற்கு பின்பு போக்காடாக விடப்படும் ஆட்டினிடத்தில் நடத்தப்பட்ட பணி, பாவநிவாரணத்தில் அதற்கு பங்கில்லை என்பதையும் சமாதானத்தை உண்டு பண்ணக் கூடிய பணியிலும் அதற்கு பங்கில்லை என்பதையும் சுட்டிக் காட்டுகின்றது. அதனால், அதனுடைய வேறு நோக்கத்தையும் முக்கியத்துவத்தையும் நாம் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

## போக்காடு (THE SCAPE - GOAT)

“அவன் இப்படிப் பரிசுத்த ஸ்தலத்துக்கும் ஆசரிப்புக் கூடாரத்திற்கும் ப–பீடத்துக்கும் பிராயச்சித்தஞ்செய்து தீர்ந்த பின்பு, உயிரோடிருக்கிற வெள்ளாட்டுக்கடாவைச் சேரப்பண்ணி, அதின் தலையின் மேல் ஆரோன் தன் இரண்டு கைகளையும் வைத்து, அதின்மேல் இஸ்ரயேல் புத்திரருடைய சகல அக்கிரமங்களையும், அவர்களுடைய எல்லா பாவங்களினாலும் உண்டான அவர்களுடைய சகல மீறுதல்களையும் அறிக்கையிட்டு, அவைகளை வெள்ளாட்டுக் கடாவினுடைய தலையின் மேல் சுமத்தி, அதை **அதற்கான** ஆள்வசமாய் வனாந்திரத்துக்கு அனுப்பிவிடக்கடவன். அந்த வெள்ளாட்டுக்கடா அவர்களுடைய அக்கிரமங்களையெல்லாம் தன்மேல் சுமந்து கொண்டு குடியில்லாத தேசத்திற்கு போவதாக; அவன் அந்த வெள்ளாட்டுக்கடாவை வனாந்திரத்திலே போகவிடக் கடவன்.” – லே–. 16:20–22

முன்பு சொன்னதுபோல ப–யிடுவதற்காக மற்றொன்றுடன்

அர்ப்பணிக்கப்பட்ட இந்த போக்காடு ப-யிடப்படாமல் இருந்தது. இப்போக்காடு காளையைப் போலத்தான் ப-யிடப்பட்டிருக்க வேண்டும். இப்போக்காடு, உலகத்திற்காக மரிக்கிறோம் என்று தேவனோடுகூட உடன்படிக்கை செய்து கொண்டு, அவ்விதம் தங்களை ஜீவப-களாக முழுமனதோடு ஒப்புக் கொடுக்காமல், தவறிப் போகிறவர்களுக்கு நிழலாக இருக்கிறது. ஆனால் இந்த போக்காடு, கெட்டுப்போக பின்வாங்குகிறவர்களுக்கும், கழுவப்பட்ட பன்றியைப் போல் பாவச்சேற்றிலே புரள திரும்பினவர்களுக்கும் (எபி. 10:39; 2 பேது. 2:22) ஒப்பாக இல்லாமல், பாவம் இல்லாமல், தூய வாழ்க்கையுடன் தேவனை கனம்பண்ணி அவரையே சேவிக்க வேண்டும் என்று ஜீவிப்பவர்களானாலும் இவ்வளவு செய்தும், உலகத்தின் கனத்தையும், செல்வாக்கையும் தேடி, தங்களுடைய ஜீவப-யை செய்யத் தவறுகிறவர்களுக்கு ஒப்பாக இருக்கிறார்கள். இவர்கள் தேவனுக்காகவும், அவரது ஊழியத்திற்காகவும் இந்த உலக மகிமையையும், கனத்தையும் ப-யிடுவதில் பின்வாங்குகிறவர்களாகவும் இருக்கிறார்கள்.

இந்த போக்காடு **வகுப்பார்**, இச்சுவிசேஷ யுகம் முழுவதிலுமாக இருந்து வருகின்றனர். இந்த ஆடும் அதனோடு செய்யப்பட்ட பணியும் பாவநிவாரண நாளின் முடிவில் ஜீவித்துக் கொண்டிருக்கிற இவ் வகுப்பாரிலுள்ள ஒவ்வொரு தனிப்பட்டோருக்கும் நிழலாக இருக்கிறது. பாவநிவாரண வேலைகள் முற்றுப் பெறும்போது வாழ்ந்து கொண்டிருக்கிற கடைசி அங்கத்தினராக இருக்கும் இந்தப் போக்காடு வகுப்பாரிலுள்ள அங்கத்தினரோடு தேவன் எவ்விதமான தொடர்பு வைத்திருக்கிறார் என்று நாம் முத-ல் பார்ப்போம். பின்பு இதே வகுப்பைச் சேர்ந்த மற்ற முந்திய அங்கத்தினருக்கு போக்காட்டினுடைய நிழல் எவ்விதமாக பொருந்தும் என்று பார்ப்போம்.

"பாவநிவாரண ப-கள்" முடிந்த பிறகு வரப்போகிற காரியங்களைக் குறித்து நாம் இப்பொழுது பார்த்துக் கொண்டிருக்கின்றோம் என்பதை ஞாபகத்தில் கொள்ள வேண்டும். மேலும் "கர்த்தருடைய வெள்ளாட்டுக்கடா" இன்னும் முழுமையாக எரிந்து முடியவில்லை. "சிறு மந்தைக்கு" நிழலாக இருக்கும் பிரதான ஆசாரியனுடைய சரீரம், ஆவிக்குரிய பூரண நிலைக்குள் இரண்டாவது திரைக்குப் பின்னால் பிரவேசிக்கவில்லை. அதுவரை ஜீவித்துக் கொண்டிருக்கிற "போக்காடு" உடனான சிறப்பு வேலை நடைபெறாது.

மற்ற வேதவசனங்கள் (வெளி. 7:9, 13-17 மற்றும் 1 கொரி,

3:15) 'திரள் கூட்டம்' உண்டென்றும் அவ்வகுப்பார், கிறிஸ்துவின் உடன் சுதந்திரராகும்படி இப்பந்தயத்தில் ஓடினாலும், கிறிஸ்துவைப் போல ஓடாததினாலே, கிறிஸ்து பெற்ற அதே பந்தயப் பொருளை பெறுவதில்லை என்று கூறுகிறது. ஆனாலும் இவர்கள் பந்தயப் பொருளுக்கு ஆகாதவர்களானாலும் (1 கொரி. 9:27) இவர்கள் தேவனுடைய அன்பிற்குரியவர்கள். இவர்கள் இருதயத்தில் நீதியின் சிநேகிதர்களாக உள்ளனரேயல்லாமல் பாவத்தின் சிநேகிதர்களாக அல்ல. அவர் ஏற்படுத்தி வைத்திருக்கும் வாழ்க்கைச் சூழ்நிலைகளில் ஜீவிக்கிற இவர்கள், "மகா உபத்திரவத்தின்" வழியாய் வந்து, "அவர்களுடைய ஆவி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே இரட்சிக்கப்படும்படி மாம்சத்தின் அழிவை" நிறைவேற்றி (1 கொரி. 5:5) தேவனுக்காகவே ஜீவிக்கக் கூடியவர்களாக இருக்க தேவன் தூண்டுகிறார். இவர்கள் நீதியாக்கப்பட்ட தங்கள் மனித வாழ்க்கையை தேவனுக்காக அர்ப்பணித்தனர். தேவன் அதை ஏற்றுக்கொண்டு அவர்களுடைய உடன்படிக்கையின்படி மாம்சத்திற்கு மரித்த அவர்களை **புதிய** ஆவிக்குரிய சிருஷ்டிகளாகத் **தெரிந்து கொண்டார்**. ஆனால் சுயசித்தத்தை முழுமையாக ப- கொடுக்கிறோம் என்று செய்து கொண்ட ஒப்பந்தத்தை முறிப்பதினாலே, "ராஜரீக" ஆசாரியக் கூட்டத்தாரி-ருந்து தங்களையே பிரித்து கொள்கிறார்கள். அதாவது கிறிஸ்துவின் சரீர அங்கத்தினர்கள் என்ற தகுதியை இழக்கிறார்கள். "**என்னில்** கனி கொடாதிருக்கிற கொடி எதுவோ, அதை அவர் அறுத்துப் போடுகிறார்." - யோவா. 15:2

இவர்கள் பரிதாபப்படத்தக்க நிலையில் இருக்கிறார்கள். பந்தயப் பொருளைப் பெற தவறிவிட்டார்கள். ஆதலால், தெய்வீக சுபாவத்தை பெற அவர்களால் முடியாது. உலகத்தோடு கூட அவர்களும் மனிதனுடைய **முந்தின சீருக்கும்** அவர்கள் வரப்போவதில்லை. ஏனெனில் அவர்களுடைய மனித உரிமைகளை, ஆவிக்குரிய நிலையையும், **தெய்வீகச்** சாயலையும் பெற்றுக் கொள்ள ஓடுவதற்காக தியாகம் செய்திருக்கின்றனர். அவர்கள் தாங்களாகவே முன்வந்து ஜெயங்கொள்பவர்களாக இல்லாமல் இருப்பினும் தேவன் அவர்களை நேசிக்கிறார். மரண பயத்தினாலே (அவதூறு செய்கிறார்கள் என்ற பயம் - பாளையத்திற்கு புறம்பே வீசும் துர்நாற்றத்தின் மேல் அவர்கள் கொள்ளும் வெறுப்பு, மரித்துப் போனவர்களாக கருதப்படுதல்) ஜீவகாலமெல்லாம் அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் அதாவது **மனிதனுக்கும்** மனிதனுடைய பாரம்பரியத்திற்கும் பயந்து

இருக்கிற இக்கூட்டத்தாரை தேவன் **விடுதலைப்** பண்ணுகிறார். - எபி. 2:15

பிரதான ஆசாரியனுடைய கிருபையினாலே, இந்த திரள் கூட்டத்தார் 'மகா பெரிய உபத்திரவத்திற்குள்' பிரவேசித்து, தங்களுடைய மாம்சத்தை **அழித்துக் கொள்கிறார்கள்**. இது இவர்களை தாமாக முன்வந்து ஜெயங்கொள்ளுகிறவர்களாகவோ, அல்லது கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கங்களாகவோ - கிறிஸ்துவின் மணவாட்டியாகவோ ஆக்குவதில்லை. இவர்கள் ஆசாரியர்களின், இராஜாக்களின், **சிங்காசனத்தில்** ஒரு இடத்தைப் பெறாதபடி, அச்சிங்காசனத்திற்கு **முன்பாக** இடம் கொடுக்கப்படுகிறது. ஆவிக்குரிய உயரிய நிலையான தெய்வீக சுபாவத்தை பெறமுடியவில்லை என்றாலும் இங்கே அவர்கள் ஆவிக்குரிய பூரண நிலையில் இருப்பார்கள். **ஜீவகிரீடம்** மற்றும் சாகாமையை அவர்கள் பெற்றுக் கொள்ளாதிருப்பினும் சரியான உபத்திரவத்தின் பயிற்சியை பெற்றவுடனே அவர்கள் தேவதூதர்களுக்குரிய நிலையை அடைவார்கள். கிறிஸ்து என்னும் ஆவிக்குரிய ஆலயத்தின் பங்காளிகளாக அவர்கள் இல்லாதிருப்பினும், தேவனுடைய ஆலயத்தில் அவருக்கு ஊழியம் செய்வார்கள். - வெளி. 7:14,15

'போக்காட்டிற்கு' ஒப்பாக சொல்லப்படும் இந்த வகுப்பார், வனாந்தர நிலைக்கு, உலகத்தாரை விட்டு பிரித்து மகாபெரிய உபத்திரவத்திற்கு **அனுப்பப்படுவார்கள்**. இவ்விதமான கிருபையற்ற நிலைக்குத் தள்ளப்பட்டு, உலகத்தின் சகல மாயமான காரியங்களையும், தந்திரமான காரியங்களையும் அதன் முழு பிரயோஜனமற்ற தன்மையையும் நன்றாக உணர்ந்து, அவை யாவும் தேவையற்றவை என்று அறிந்துகொண்டு, மனந்திரும்பி, மனிதனுக்குரிய சகல இச்சைகளையும் ஆசைகளையும், உயர்வான எண்ணங்களையும் மரிக்கச் செய்யும் வரைக்கும் அவர்கள் அதே வனாந்திரமாகிய உபத்திரவத்திலே உட்படுத்தப்பட்டு இனி என் சித்தமல்ல தேவனுடைய சித்தமே ஆகக்கடவது என்று சொல்லும் நிலைக்கு வருகிறார்கள். உலகத்தின் ஏமாற்றும் புன்னகை மற்றும் அதன் வெற்று கௌரவம் அவர்களால் பேராசையுடன் விரும்பப்பட்டாலும், தண்டிக்கப்பட்டு, வேதனைப்பட்டு திருந்திய அவர்களை ஏளனமாகப் பாவித்து வெளியே எறிய இந்த உலகம் எப்போதும் தயாராக உள்ளது. போக்காட்டின் உடலானது வனாந்திரத்திலே **எரிக்கப்படவில்லை**. பாவநிவாரண ப-யான காளை மற்றும் தேவனின் ஆட்டின் உடல்கள்தான் எரிக்கப்பட்டன. (எபி. 13:11) ''மரணபரியந்தம்

உண்மையுள்ளவர்களாக” தங்களை அதிக உபத்திரவத்திற்கு அர்ப்பணிக்கிறவர்களைத் தான் (முழு சித்த ப-) பாவநிவாரண ப-கள் எரிவதானது நிழலாகக் காண்பிக்கின்றது. இரண்டு வகுப்பாரும் மனித சித்தமும் மற்றும் சரீரமும் மரிக்கும் வரைக்கும் உபத்திரவப்படுகிறார்கள். ஆனாலும் முதல் வகுப்பார், முழு விருப்பத்தோடு மரிக்கிறார்கள். எரிப்பதற்கு ஒன்றும் இல்லாமல் போகும் வரை அக்கினி எரிவது போன்று தங்களுடைய மாம்சம் எல்லாமே சிலுவையில் அறையப்பட்டு முடியும் வரை எரிக்கப்படுகிறார்கள். ஆனால், இரண்டாம் வகுப்பினர் (போக்காடு) வனாந்திரத்திற்கு அனுப்பப்பட்டு அங்கு விருப்பமில்லாமல் மரிப்பதற்கு விடப்படுகிறார்கள். உலகத்தின் மீதான அவர்களது ஆசையானது, உலகத்தின் உதாசீனம், பரியாசம், அவதூறு ஆகியவற்றுடன் மரிக்கிறது. ஆனாலும் அதேசமயம் புதிய ஆவிக்குரிய சுபாவம் உயிர்பெறுகிறது. ‘‘கர்த்தருடைய ஆட்டின்’’ வகுப்பார், தாங்களாகவே முன்வந்து, தங்களுடைய சொந்த விருப்பத்துடன் தேவனுக்காக மனித சுபாவத்தை ப-யிடுகிறார்கள். தெய்வீக திட்டத்தின் கீழ் ஆவி காக்கப்படத்தக்கதாக போக்காடு வகுப்பினரின் மாம்சம் **அழிக்கப்படுகிறது**.

இது, போக்காடு வகுப்பின் கடைசி அங்கத்தினர்களுடன் விரைவில் நிறைவடையும் என்பது மட்டுமல்ல, இந்த சுவிசேஷ யுகத்தில் இது ஓரளவுக்கு நிறைவேறியுள்ளது. தானாகவே ப-செலுத்துவதற்கு பதிலாக **வற்புறுத்த-னால்** மாம்சம் **அழிவுக்குள்ளாகும்** (1 கொரி 5:5) ஒரு பெரிய வகுப்பு எப்போதும் இருந்து வருகிறது. இந்த யுகம் முழுவதும் இந்த இரண்டு ஆடு வகுப்பினர் அருகருகே உருவாகிக் கொண்டிருக்கிறார்கள்.

‘சிறுமந்தை’ திரைக்குள்ளாக பிரவேசிக்கும் போது தேவனுடைய கரமானது, “ஜீவகாலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத்தனத்திற்கு உள்ளானவர்கள் யாவரையும்” விடுவித்து அவர்களுடைய தத்துவங்கள், கொள்கைகள், மனித பாரம்பரியங்கள் மற்றும் பெரிய பேர் கிறிஸ்தவ அமைப்புகள் ஆகிய அனைத்தையும் அழித்துப்போடும். ஏனெனில், இப்படிப்பட்டவைகளினாலே தான் போக்காடு வகுப்பார் பிடிபட்டவர்களாக இருந்திருக்கிறார்கள்.

பாபிலோனின் வீழ்ச்சியினால் விடுதலை பெற்ற இந்த உபத்திரவத்திற்குள்ளான பரிசுத்தவான்கள் **மகத்தான பரிசு** இழக்கப்பட்டுவிட்டதை உணரும்போது பிரதான ஆசாரியரின் சத்தத்தை கேட்பார்கள். அப்போது வனாந்திரத்தில் தனித்து விடப்பட்டு மாம்ச அழிவை

அவர்கள் காண்பார்கள். தற்போது **ஒப்புக்கொடுத்து கட்டுண்டவர்களைப்** போல இதற்கு முன்பு இருந்ததில்லை. இருப்பினும், இந்த யுகம் முழுவதுமாக சிலர் இருக்கிறார்கள்.

ஒப்புக்கொடுத்த இருவகுப்பைச் (தேவனின் ஆடு மற்றும் போக்காடு வகுப்பார்) சேர்ந்த அனைவரும் பெரிய சோதனைகள் மற்றும் உபத்திரவங்கள் ஊடாக கடந்துபோகிறார்கள். இருப்பினும், உபத்திரவப்படுவதற்கு தாங்கள் தகுதியானவர்கள் என்பதாக சந்தோஷத்துடன் அவர்கள் எடுத்துக் கொண்டு ஒரேவகுப்பாக உபத்திரவத்தை இலேசானதாக ஆக்கிக்கொள்கிறார்கள். அவர்களது **ப** - அவர்களது தலைவரைப்போன்று **விருப்பத்துடன்** அளிக்கப்படுவதாகும். மற்ற வகுப்பினருக்கோ அவை சுமையான, மிகுந்த உபத்திரவங்களான ஏறக்குறைய சந்தோஷமில்லாத – **கட்டாயமான** மாம்ச **அழிவாகும்**. இதற்குத் தக்கவாறு இவர்களது பந்தய ஓட்டத்தின் முடிவில் இவர்களின் அந்தஸ்துகளும், பரிசுகளும் வேறுபடுகின்றன.

## பாவநிவாரண நாளின் தகனப-கள்

"ஆரோன் ஆசரிப்புக் கூடாரத்துக்குள் வந்து, தான் பரிசுத்த **ஸ்தலத்துக்குள்** பிரவேசிக்கும்போது, ("மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள்") உடுத்தியிருந்த சணல்நூல் வஸ்திரங்களைக் களைந்து, அங்கே வைத்துவிட்டு, பரிசுத்த இடத்திலே (பிரகாரத்திலே) ஜலத்தில் ஸ்நானம் பண்ணி, தன் (வழக்கமான) வஸ்திரங்களை (மகிமையும் அலங்காரமுமான வஸ்திரங்களை) உடுத்திக்கொண்டு வெளியே வந்து, தன் சர்வாங்க தகலப–யையும் ஜனங்களின் சர்வாங்க தகனப–யையும் இட்டு, தனக்காகவும் (சரீரமாகிய திருச்சபை–சிறுமந்தை) ஜனங்களுக்காகவும் பாவநிவிர்த்தி செய்யக்கடவன். (லேவி. 16:23,24) இதே பாவநிவாரணம் வேறு ஒருவிதத்தில் விவரிக்கப்பட்டுள்ளது அல்லது நிழலாக்கப்பட்டுள்ளது.

தகனப–யின் போது இரண்டு வெள்ளாட்டுக்கடாக்கள் (வச 3,5) பயன்படுத்தப்படுகின்றன. ஒன்று காளையையும் மற்றொன்று கர்த்தருடைய ஆட்டையும் காண்பிக்கின்றது. இவையிரண்டும் ஒரே மாதிரியாக இருப்பதினாலே. இயேசுகிறிஸ்துவின் ப–களும் அவரைப் பின்பற்றுகிறவர்களின் ப–களும் தேவனுக்கு முன்பாக ஒரே ப–யாக எண்ணப்படுவதை காட்டுகின்றன. "எப்படியெனில் பரிசுத்தஞ் செய்கிறவரும் (இயேசு) பரிசுத்தஞ்செய்யப்படுகிறவர்களுமாகிய (சிறுமந்தை) யாவரும்

ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள்; இதினிமித்தம் அவர்களைச் சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படவில்லை." - எபி 2:11

இவைகளில் ஒவ்வொரு ப-யும் எடுத்துக் கொள்ளப்படும் விதத்தில் இது மேலும் காண்பிக்கப்படுகிறது. தகன ப-களுக்குரிய ஆடுகளை துண்டு துண்டாக வெட்டி, தண்ணீரால் கழுவி பின்பு தலையோடு சேர்த்து ப-பீடத்தின் மேல் வைத்து தகனிக்கப்பட்டு யேகோவா தேவனுக்கு சுகந்த வாசனையாக ஏறெடுக்கப்பட்டது. இவ்விதம் இரண்டு கடாக்களும் செய்யப்படுவதால், தேவனுடைய பார்வையில் இவை ஒரேப-யின் பல பாகங்களாக இருக்கின்றன. அங்கத்தினர்கள் தலையோடு இணைக்கப்பட்டு இந்த உலகத்தின் பாவங்களுக்காக ஏற்றுக்கொள்ளத்தக்க **பாவநிவாரணமாகிறது**. இவ்விதமாக இவை பாவிகளின் முழு உலகத்தின் சார்பாகவும் நீதியை திருப்திப்படுத்துகின்றன.

பாவ நிவாரண ப-கள், நம்முடைய இரட்சகரின் மரணத்தை விவரித்து காண்பிப்பதைப் போல, தகனப-கள் **அதே** ப-யை தேவன் முழு மனதுடன் ஏற்றுக்கொண்டதை விவரிக்கின்றது. பாவங்களுக்கான ப-கள் பூர்த்தியாகி உண்மையான பிரதான ஆசாரியரது வஸ்திரங்கள் மாற்றப்படுவதில் தெரிவிக்கப்பட்டது போல, தனது பணியில் கனத்தையும், மகிமையையும் அணிந்து கொள்ளும் வரை காளைகள் மற்றும் ஆட்டுக்கடாக்களை தவிர்த்து வேறு "**மேலான** ப-களை" தேவன் **ஏற்றுக்கொள்ள** மாட்டார் என தேவன் இவ்விதம் குறிப்பிடுவதை நாம் மறந்துவிடலாகாது. பாவநிவாரண ப-யை செலுத்தும்போது, அவன் வெறும் வெள்ளை வஸ்திரங்களை மட்டும் உடுத்தினான். பின்புதான் கனத்தையும், மகிமையையும் விவரிக்கும் (வழக்கமான) அலங்காரமான ஆடைகளை அணிந்தான். சுவிசேஷ காலத்தில் பாவநிவாரண ப-அபிவிருத்தியடைந்தது. ஆசாரியனுக்கு எவ்வித கனமும் செலுத்தப்படுவதில்லை. ஆனால் ஜனங்களின் பாவங்களுக்காக பாவநிவாரணம் செய்து, அந்த **ஜனங்களை** ஆசீர்வதிப்பதில் அவர்களுக்காக ப-கள் செலுத்திய ஆசாரியர்கள் மீது மகிமையையும், கனத்தையும் வைத்து தேவன் வெளிப்படையாக அங்கீகாரம் செய்வது இதன் முடிவில் வருகிறது.

தகனப-, "பிரகாரத்தில்" உள்ள ப-பீடத்தில் தகனிக்கப்பட்டது. "பிரகார" நிலையிலுள்ள **எல்லா விசுவாசிகளின்** பார்வையிலும் சரீரம் முழுவதும் (தலை, துண்டங்கள் அல்லது அங்கத்தினர்கள்) ப-யாகக் கொடுக்கப்பட்டதை தேவன் அங்கீகரிப்பார் என்று இவ்வாறு

போதிக்கப்படுகிறது. ஆனால், விசுவாசிகளுக்கு தேவன் அவர்களது பணியை ஆமோதிப்பதை **வெளிப்படுத்துவதற்கு** முன்பே, "போக்காடு" வகுப்பார் அங்கிருந்து அனுப்பப்படுகின்றனர்; ஆசாரியனுடைய வஸ்திரம் மாற்றப்படுகிறது.

ப–யிடும் வேலை முழுமைக்கும் அணியப்பட்ட வெள்ளை வஸ்திரம் **சரீரத்தை மூடி, சரீரம்** தேவனின் பார்வையில் கிறிஸ்து மூலமான பரிசுத்தம் என்ற நீதிக்குரிய நிலையில் இருப்பதை எடுத்துக் காண்பித்தது போல், மகிமையும் அலங்காரமுமான வஸ்திரங்கள் அணிந்து கொள்வது, பூரணப்பட்ட புதிய சிருஷ்டியானது "திரைக்"குள்ளாக பிரவேசித்து, தன்பணியை செய்த பிறகு சபை மகிமை அடைந்ததையும், வருங்கால பணிகளையும் காட்டுகின்றது. இச்சமயத்தில் கழுவுவதானது, வெள்ளை வஸ்திரங்கள் தற்போது நீக்கப்பட்டாலும் (சரீரத்தின் சுமத்தப்பட்ட அநீதி பாவம் திரும்பவும் சுமத்தப்படுவதாக அர்த்தப்படாது. ஆனால், உயிர்த்தெழுத–ன் முழுமையில் சுத்திகரிப்பு நிறைவடைந்து சரீரத்தை **பூரணத்திற்கு** கொண்டு வருவதாகும். மகிமை மற்றும் அலங்காரமான வஸ்திரங்கள், அதே தெய்வீக சுபாவத்திற்கான முதலாம் உயிர்த்தெழுத–ன் மகிமை, கனம் மற்றும் அழியாமையைக் குறிக்கிறது. மேலும், இந்த சுத்திகரிப்பானது ஜனங்களின் பாவங்களுக்காக செய்யப்படும் பாவநிவாரணமானது ஆசாரியனின் சுத்தத்தன்மையை மாற்றவோ அல்லது கெடுக்கவோ இல்லை என்பதை காட்டுகிறது.

இவ்விதமாக உலகமக்களின் பாவங்களுக்கான பரிகாரமும் மற்றும் ஆசாரியத்துவ வளர்ச்சியும் முடிவடைகிறது. ஆனால் இந்த அதிகாரத்தில் (லேவி.16) நமது பாடத்திற்கு நேரடியாக சம்பந்தம் இல்லாத சில வசனங்களைப் பார்க்கலாம்.

வசனம் 17 ''பாவநிவிர்த்தி செய்யும்படி அவன் பரிசுத்த **ஸ்தலத்துக்குள்** (மகா பரிசுத்த ஸ்தலம்) பிரவேசித்து, தனக்காகவும் தன் வீட்டாருக்காகவும் இஸ்ரயேல் சபையார் அனைவருக்காகவும் பாவநிவிர்த்தி செய்து, வெளியே வருமளவும் ஆசரிப்புக் கூடாரத்தில் **ஒருவரும்** இருக்கலாகாது."

இந்த கட்டுப்பாடு அந்த விசேஷ நாளுக்கு மட்டுமே பொருந்தும். இதனை ''....ஆசாரியர்கள் ஆராதனை முறைமைகளை நிறைவேற்றும்படிக்கு முதலாங் கூடாரத்திலே (பரிசுத்த ஸ்தலம்) நித்தமும் பிரவேசிப்பார்கள். இரண்டாங்கூடாரத்திலோ (மகா பரிசுத்த ஸ்தலம்)

பிரதான ஆசாரியன் மாத்திரம் வருஷத்திற்கு ஒரு தரம் இரத்தத்தோடே பிரவேசித்து, அந்த இரத்தத்தை தனக்காகவும் ஜனங்களுடைய தப்பிதங்களுக்காகவும் செலுத்துவான்'' - (எபி. 9:6,7) என அப்போஸ்தலன் சொல்கிறார்.

உண்மையான ஆசரிப்புக் கூடாரத்தின் சிலாக்கியங்கள், ஆசாரியர்களுக்கு மாத்திரமே உரியது - இவர்கள் பிரதான ஆசாரியனின் அவயவங்களாக உள்ளனர். ஆகையால் முதல் நிலையிலோ (ஆவிக்குரிய **சிந்தையுள்ளவர்கள்**, கிறிஸ்துவிற்குள்ளான புதிய சிருஷ்டிகள்) அல்லது நாம் விரைவில் எதிர்நோக்கியிருக்கும் இரண்டாம் நிலை என்ற ஆவிக்குரிய பூரண நிலையிலோ இருக்கும். ஏனென்றால் நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் புதுசிருஷ்டியாக இருக்கிறோம். இனிமேல் மனிதர்கள் அல்ல. "தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் **மாம்சத்துக்குட்**பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களா யிருப்பீர்கள்." (ஆவிக்குரிய, புதிய சிருஷ்டிகள்) - ரோமர் 8:9

வசனம் 28 "அவைகளை (பாவநிவாரண ப-யாகிய காளையையும் கடாவையும்) சுட்டெரித்தவன் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, ஜலத்திலே ஸ்நானம் பண்ணி, பின் பாளயத்துக்குள் வருவானாக."

கிறிஸ்துவின் (காளை) **மனிதத்தன்மை**யும் "சிறுமந்தை" (கடா)யின் மனிதத்தன்மையையும் அழிப்பவர்கள், தாங்கள் அறியாமல் செய்வதினாலே, அவர்களுக்கு **விசேஷ** தண்டனை எதையும் பெறமாட்டார்கள் என்பதை காட்டுவதாக அவ்வசனம் சொல்கிறது. ஏனெனில் அவர்கள் அதை அறியாமையினால் செய்கிறார்கள். அதேசமயம் தேவதிட்டத்தை நிறைவேற்றுகிறார்கள். அவர்கள் தங்களைச் சுத்திகரித்துக் கொண்டு மீண்டும் பாளையத்திற்குள் பிரவேசிக்கலாம். அதாவது அதே பாவ உலக மனித நிலைமைக்குத் திரும்பலாம். அவர்கள் எல்லோரும் பரம்பரை பாவிகளாக, ஆதாமின் சீரழிவி-ருந்தும் மரணத்தி-ருந்தும் மீட்கப்பட்டவர்களாக, பிரதான ஆசாரியரின் வருகைக்காகவும், அப்பொழுது கொடுக்கப்படப் போகிற ஆசீர்வாதத்திற்கு காத்துக் கொண்டிருப்பவர்களாகவும் இருக்கிறார்கள்.

வசனம் 26. ''போகவிடப்படும் போக்காடாகிய வெள்ளாட்டுக்கடாவைக் கொண்டு போய்விட்டவன், தன் வஸ்திரங்களைத் தோய்த்து, ஜலத்தில் ஸ்நானம் பண்ணி, பின்பு பாளையத்துக்குள் வருவானாக."

இவ்வசனமும் மேலே சொன்ன அதே பாடத்தையே விளக்குகிறது. இங்கே 'போக்காடு' குறிப்பிடுகிற திரள் கூட்டத்தின்மேல் உபத்திரவத்தையும் அதினால் **மாம்சீக அழிவையும்** கொண்டு வருகின்றவர்களை குறிக்கின்றது. அவர்கள் விசேஷ மன்னிப்பை கர்த்தரிடத்தி-ருந்து பெற்று மற்ற பாவிகளைப் போல நிற்கக்கூடியவர்களாக இருப்பார்கள்.

## பாவநிவாரண நாளின் ப-களை தொடர்ந்து நடக்கும் ஆசீர்வாதம்

இவ்விதம் நிழலான "பாவநிவாரண நாள்" முடிந்தது. தற்போது இஸ்ரயேல் ஜனங்களின் பாவங்கள் நிவிர்த்தி செய்யப்பட்டு, இனி அவர்கள் பாவிகளாக, தேவனிடத்தி-ருந்து பிரிந்தவர்கள் என்று எண்ணப்படாமல், அவரோடு ஒன்றிணைந்தவர்களாக எண்ணப்பட்டார்கள். நீதி குற்றப்படுத்தப்படுவதில்லை. மாறாக, தேவனுடைய பிரசன்னம் அவர்கள் மத்தியில் இருந்து, அவர்களை ஆசீர்வதித்து, பாதுகாத்து, இளைப்பாறுதலும் சமாதானமும் உள்ள கானானை நோக்கி நடத்திச் செல்வதாக அவர்களை உணரச் செய்தது.

இந்த சுவிசேஷ யுகம், "பாவநிவாரண நாளுக்கு" உண்மைப் பொருளாக உள்ளது. இந்த காலத்தில் இயேசுவும் "அவருடைய சரீரமான" சபையும் (மீட்பினால் நியாயப்படுத்தப்பட்டதால்) நீதிக்காக, ஆதாமின் பாவத்திற்கு பரிகாரமாக ப-யாகிறார்கள். தேவன் உலக ஜனங்களோடு ஒப்புரவாகுதலுக்கான பணி நிறைவேறின உடனே, அவர் உலக மனிதகுலத்தை அங்கீகரித்து, தம்முடைய பிரசன்னத்தை மனிதர்கள் மத்தியில் ஏற்படுத்துவார். அதன்பிறகு, "இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது (தேவனின் வாசஸ்தலமான மகிமை அடைந்த திருச்சபை), அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள் (ஆவார்கள்). தேவன்தாமே அவர்களோடே கூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார். அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை; துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் (சாத்தானின் ஆட்சி, பாவம், மரணம்) ஒழிந்து போயின என்று விளம்பினது. சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்தவர்: இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார்" (வெளி. 21:3-5) என்று எழுதப்பட்டவை நிறைவேற்றப்படும்.

மனிதர் மத்தியில் தேவனுடைய இருப்பிடம், பிரசன்னம் உண்டாகி ஆசீர்வாதங்கள் பெருகினாலும் ("என் பாதஸ்தானத்தை மகிமைப்படுத்துவேன்:" "பூமி எனக்கு பாதபடி" - ஏசா. 60:13; 66:1) அவ்வாசீர்வாதத்தின் பணியானது படிப்படியாக இருந்து நிறைவு பெறுவதற்கு ஒரு ஆயிரம் வருடங்கள் ஆகும். அதாவது, ஆதாமுக்குரிய பாவம், வேதனை, கண்ணீர் யாவும் அழிந்து கொண்டே வரும் (துடைக்கப்படும்). இது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில், ராஜரீக ஆசாரியாக வரும்போது ஆரம்பிக்கும். ஆனால் 1000 வருட அரசாட்சி நிறைவு பெறும்போதுதான் முற்றிலுமாக துடைத்தெறியப்படும்.

**மனிதன்** படிப்படியாக யேகோவாவோடு முழுவதும் ஒத்த நிலைக்கு **கொண்டு வரப்படுவதை** பாவநிவாரண நாளுக்குப் பிறகு செய்யப்படும் இஸ்ரயே-ன் நிழலான ப-களில் அருமையாக சித்தரித்து காட்டப்படுகிறது. நாம் விரைவில் பார்க்கப் போகின்ற நிஜமான ப-கள், ஆயிரம் வருட யுகத்தில் நிறைவேற்றப்படும்.

இந்த நிழலான ப-களின் பொருளை நன்றாக பகுத்தறிந்து புரிந்து கொள்ள மனுக்குலத்தின் பொதுவான பாவத்திற்குரிய, தேவனுக்கான பாவநிவாரண நாளாக, தற்போதைய சுவிசேஷயுகம் இருப்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். தேவனோடு பாவிகளின் உலகம் ஒப்புரவாகுதலை, சுவிசேஷயுகம் முடிந்தபிறகு ஆயிரவருட யுகத்தில் நடைபெறும் நிறைவேறுதல்கள் அல்லது நிஜங்களை பாவநிவாரண நாளுக்குப் பின்வரும் எல்லா நிழலான ப-களும் குறித்தன.

இவ்வாறாக **ஒப்புரவாகுதல்** இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளதை பார்க்கலாம். நீதியோடு **ஒன்றிருத்தல்** முதல் பகுதியாகும். இனிமேலும், ஆதாமின் பாவத்திற்காக ஆதாமையும் அவனது பிள்ளைகளையும் தண்டித்து அழிக்காம-ருத்தல் என்பதே அது. தேவனின் நீதியான பிரமாணங்களை அங்கீகரித்து அவற்றுக்குப் பணிந்து **ஒப்புரவாகுதலுக்கு** பாவிகள் திரும்புதல் இரண்டாவது பகுதியாகும். இந்த ஒப்புரவாகுத-ன் முதலாவது பகுதியானது, ஆசாரியரின் **பாவநிவாரண நாளின் ப-களின்** ஊழியத்தினால் முழுவதுமாக கொண்டுவரப்படுகின்றது. அடுத்தது **தேவனுடன்** உலகம் ஒருங்கிணைதல் அல்லது தேவனுடன் முழு **ஒப்புரவாகுதலையும்,** இணக்கத்தையும் விரும்புகிறவர்கள் எவ்வளவு பேரோ அவ்வளவு

பேரையும் கொண்டுவருதல் - ராஜரீக ஆசாரிய வகுப்பால் அடுத்த யுகத்தில் நிறைவேற்றப்படும். இவர்கள் மகிமையின் ராஜாக்களும், ஆசாரியர்களுமாவர். இவர்கள் மோசேயால் நிழல்படுத்தப்பட்டவர்கள். மகத்தான தீர்க்கத்தரிசியாகப் போகும் இவர்களை ஜனங்களுக்கு போதிக்கவும், அவர்களை பராமரிக்கவும் தேவன் எழுப்புவார். அவருக்கு செவி சாய்க்காவிட்டால், அவர்கள் வாழ்வு அறுப்புண்டு இரண்டாம் மரணத்தில் மரிப்பார்கள். - அப்போஸ். 3:23

"தேவனின் ஆட்டினால்" குறிப்பிடப்பட்டுள்ள பரிசுத்தவான்கள், இயேசுவைப் பின்பற்றுபவர்கள், இந்த உலகத்தின் சார்பாக பாவநிவாரணத்தில் பங்கேற்க அனுமதிக்கப்பட்டார்கள். ஆனால் அவர்கள் இந்த உலகத்தைக் காட்டிலும் மேலானவர்கள் அல்லது இயற்கையாக சுத்தமானவர்கள் என்பதால் அல்ல. ஏனென்றால், ஆதாமின் இனம் முழுவதும் அவனில் தண்டிக்கப்பட்டுள்ளது. அவர்களில், "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை." (ரோமர். 3:10) அவனது சகோதரனுக்காக ஒருவனும் ஒரு **மீட்கும் பொருளை** கொடுக்க முடியாது. (சங். 49:7) இவைகளையெல்லாம் தெளிவாகப் பார்க்க வேண்டும்.

பாவங்களுக்கான ப-யில் பங்குபெறுவது அவர்களுக்கு ஒரு சாதகமாகும். இவ்விதமாக செய்வதன்மூலம் அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தெய்வீக சாய-லும், அவரது உடன் பங்காளியாகவும் உடன் சுதந்திரராகவும் பங்கு பெறுவார்கள். தங்களைத் தாங்களே ஏற்றுக்கொள்ளத்தக்க ப-களாக அளிப்பதற்கு அனுமதிப்பதற்காக அவர்கள் நிதானிக்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டபடியால், இயேசுவின் மரணத்தின் பலன்கள் அவர்களுக்கு முத-ல் அளிக்கப்பட்டன. இவ்வாறாக **அவரது மரணம்,** சபையாகிய அவரது சரீரம் **மூலம்** இந்த உலகத்தை ஆசீர்வதிக்கின்றது.

# #



பாவ நிவாரண ப-க்கான காளை

# அத்தியாயம் 5

# பாவநிவாரண ப□களின் மற்றொரு நிழல்

## லேவியராகமம் 9

பாவநிவாரண ப-களை பல்வேறு விவரங்களுடன் மீண்டும் விளக்குதல் - மோசேயும் ஆரோனும் ஆசரிப்பு கூடாரத்தில் பிரவேசித்து பின்பு வெளியே வந்து ஜனங்களை ஆசீர்வதித்தல் - "தமக்காகக் காத்து கொண்டிருக்கிறவர்களுக்கு அவர் தரிசனமாவார்" - "மரணத்திற்குப் பிறகு நியாயத்தீர்ப்பு" - பாவநிவாரண ப- குறித்த தெய்வீக அங்கீகாரம் வெளிப்படல்.

நாம் முன்பு பரிசீ-த்ததைக் காட்டிலும் (லேவி. 16) இந்த அத்தியாயத்தில் பாவநிவாரண ப-களின்மேலும் செறிவூட்டப்பட்ட சித்திரத்தை நாம் பார்க்க முடிகிறது. அத்துடன், நமக்கு பிரயோஜனமாகவும், இலாபமாகவும் இருக்கின்ற சில முக்கிய அம்சங்களையும் அறிந்து கொள்ள முடிகிறது. இது பாவநிவாரண ப-களின் மற்றொரு சித்திரமாகும்.

"அப்பொழுது மோசே : கர்த்தர் கட்டளையிட்ட இந்தக் காரியத்தைச் செய்யுங்கள்; கர்த்தருடைய மகிமை உங்களுக்குக் காணப்படும் என்றான். மோசே ஆரோனை நோக்கி : நீ ப-பீடத்தண்டையில் சேர்ந்து... உன் பாவநிவாரண ப-யையும் உன் சர்வாங்க தகனப-யையும் செலுத்தி, **உனக்காகவும்** (''அவருடைய சரீர'' உறுப்பினர்களாக அழைக்கப்பட போகிறவர்கள்) **ஜனங்களுக்காகவும்** (உலகம்) பாவநிவிர்த்தி செய் என்றான்." லேவி. 9:6,7.

இந்த நிழல், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து (பாவத்திற்காக ப-யிடப்படும் காளை) "அவருடைய சரீரம்" எனப்படும் ''சிறுமந்தை'' மற்றும் முழு மானிட உலகம் ஆகிய இரண்டு வகுப்பாரையும் இரட்சிக்கப் போதுமானவராக இருக்கிறார் என்பதை விவரிக்கிறது. திருச்சபையின் பங்கு பாவநிவாரண ப-யில் முழுவதுமாக

இல்லாதவாறு தள்ளிவிடப்பட்டிருக்க முடியும்; நமது "குறுகலான வழி"க்கான விசேஷ உபத்திரவங்களி-ருந்து நாம் விடுபட்டிருக்கலாம்; ப-யாகும் வேதனைகளி-ருந்து விடப்பட்டிருக்க முடியும். மற்ற உலக மனுக்குலத்தைப் போலவே நாமும் மனிதனுடைய பூரண சாயலை பெற்றுக் கொள்ளும்படிக்கு முந்தின சீருக்குக் கொண்டுவரப்படிருக்க முடியும். ஆனாலும் யேகோவா தேவன், இந்த மகாபெரிய பாவநிவாரணப் பணிக்கு இயேசுகிறிஸ்துவை மட்டுமல்ல, அவரோடுகூட அவருடைய சரீரமாகிய திருச்சபையையும் தெரிந்து கொண்டு, அத்திருச்சபைக்கு அவரை தலையாக்கி, இவர்கள் மாம்சத்தில் உபத்திரவப்பட்டு, பாவநிவாரணர்களாகி, பின் **பூரண ஆவிக்குரிய நிலையை** அடைய சித்தங்கொண்டார். - எபி. 2:10; கொலோ, 1:24.

அப்போஸ்தலனாகிய பவுல், நமக்கும் நம்முடைய தலையாகிய கிறிஸ்துவிற்கும் உள்ள நெருங்கிய உறவைக் குறித்து சொல்லும்போது "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ("பரிசுத்த ஸ்தலம்" மற்றும் "மகா பரிசுத்த ஸ்தலம்") ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும், **நம்மை** ஆசீர்வதித்திருக்கிறார்... அவர் உலகத்தோற்றத்திற்கு முன்னே கிறிஸ்துவுக்குள் **நம்மை தெரிந்து கொண்டபடியே**, பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக... முன்குறித்திருக்கிறார்" என்று சொல்கிறார். எபே. 1:3,4,5. மேலும் தேவன் "நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் **மகிமையை அடையும் பொருட்டாக** எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார்." (2. தெச. 2:14) ஆகையால் "அவரோடே கூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்." - 2 தீமோத். 2:12

பிரதான ஆசாரியன், தன்னுடைய ப-யை **முழுமையாக** செலுத்திய பிறகு ஜனங்களுடைய ப-யை (கடாவை) அவர்களுக்காக (இஸ்ரயேல்) யேகோவா தேவன் கட்டளைப்படி செலுத்தி, பாவநிவிர்த்தி செய்ய வேண்டும். பாவநிவாரண ப-யில் நமது பங்கு குறித்த ஒழுங்குமுறையானது நமது பிதாவினுடைய கட்டளை அல்லது அசலான திட்டத்தின் ஒரு பகுதியாகும். இதைத்தான் அப்போஸ்தலனாகிய பவுலும் சொல்கிறார். - கொலோ. 1:24-26.

“அப்பொழுது ஆரோன் ப-பீடத்தண்டையில் சேர்ந்து, தனது (பதிலாக அல்லது மாற்றாக) பாவநிவாரண ப-யாகிய கன்றுகுட்டியை (எபிரெயு பாஷையில் : இளங்காளை)க் கொன்றான். ஆரோனின் குமாரர் அதின் இரத்தத்தை அவனிடத்தில் கொண்டுவந்தார்கள்; அவன் தன் விரலை அந்த இரத்தத்தில் தோய்த்து, ப-பீடத்தின் கொம்புகளின் மேல் பூசி... (கொழுப்பையும் மற்றவற்றையும் ப-பீடத்தின் மேல் தகனித்தான்) மாம்சத்தையும் தோலையும் பாளயத்துக்குப் புறம்பே அக்கினியிலே சுட்டெரித்தான். பின் சர்வாங்க தகனப-யையும் (ஒரு கடா) கொன்றான்; ஆரோனின் குமாரர் அதின் இரத்தத்தை அவனிடத்தில் கொண்டு வந்தார்கள்; அதை அவன் ப-பீடத்தின்மேல் சுற்றிலும் தெளித்தான். சர்வாங்க தகனப-யின் துண்டங்களையும் தலையையும அவனிடத்தில் கொண்டு வந்தார்கள்; அவன் அவைகளைப் ப-பீடத்தின் மேல் தகனித்து, குடல்களையும் தொடைகளையும் கழுவி ப-பீடத்தின் மே-ருந்த சர்வாங்க தகனப-யின் மேல் தகனித்தான்.” (லேவி 16ம் அதிகாரத்தில் பெரும்பாலும் சொல்லப்பட்டிருப்பவை போலவே பொருளும் குறிப்பிடத்தக்க அதே கருத்தையே கொண்டிருக்கின்றது.)

இவ்விதமாக, இயேசுகிறிஸ்துவின் தகனப-, சுவிசேஷ யுகம் முழுவதும் எரிந்துக் கொண்டே இருக்கிறது. ‘‘பிரகாரத்தில்’’ (நீதிமானாக்கப்பட்ட **நிலை**) உள்ள அனைவருக்கும் சாட்சி கொடுக்கும் விதத்தில் அவரையும், அவரைப் போல ‘‘அவருடைய சரீர’’ அங்கங்களையும் தேவன் அங்கீகரித்தார் என்பதற்கு தலையோடுகூட சரீரமும் ப-பீடத்தில் வைக்கப்படுகிறது.

‘‘பின்பு அவன் **ஜனங்களின்** ப-யைக் கொண்டுவந்து, ஜனங்களின் பாவநிவிர்த்திக்குரிய வெள்ளாட்டுக் கடாவைக் கொன்று, முந்தினதைப் ப-யிட்டது போல, அதைப் பாவநிவாரண ப-யாக்கினான்.” – (15 வச) அதாவது, காளையைப் போல இதையும் செய்தான். இந்த வெள்ளாட்டுக்கடா முன்பு சொல்லப்பட்ட “கர்த்தருடைய வெள்ளாட்டுக்கடா” போன்றதே. ஆனால் போக்காடும் மற்றவைகளும் இந்த பொதுவான கருத்தி-ருந்து நீக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால், இது கர்த்தராகிய இயேசுவைப் பின்பற்றி செல்லும் ஒவ்வொருவரும் பாவநிவாரண ப-யில் பங்குபெறுகிறார்கள் என்ற போதனைக்கு மேலும் ஒரு உறுதியை தருகிறது.

“சர்வாங்க தகனப-யையும் கொண்டுவந்து, நியமத்தின்படி (வழக்கம்போல்) அதைப் ப-யிட்டு, போஜன ப-யையும் கொண்டு

வந்து, அதில் கைநிறைய எடுத்து, அதைக் காலையில் செலுத்தும் சர்வாங்க தகனப-யுடனே ப-பீடத்தின்மேல் தகனித்தான். பின்பு ஜனங்களின் சமாதானப-களாகிய காளையையும் ஆட்டுக்கடாவையும் கொன்றான்." - 16-18 வசனங்கள்

சமாதான ப- ஏற்கனவே விவரித்தபடி, பொருத்தனை அல்லது உடன்படிக்கையை குறிக்கின்றது. பிரதான ஆசாரியரின் பாவநிவாரண ப- தொடர்பாக செய்யப்பட்ட இது, பாவநிவாரண ப-யை அடிப்படையாகக் கொண்ட, ஆசாரியனால் எடுத்துக் கொண்ட பொருத்தனைகள், பொறுப்புகள் மற்றும் உடன்படிக்கைகளை குறிப்பிடுகிறது. கீழ்க்கண்டவாறு யேகோவாவுக்கும் இஸ்ரயேலருக்கும் இடையே **சமாதானமானது** நிழலாக ஏற்படுத்தப்பட்டது; பாவநிவாரண ப- செய்யப்பட்டிருக்கிறது. தேவனால் ஏற்றுக்கொள்ளத்தக்கவாறு தகனப-யும் செய்யப்பட்டிருக்கிறது. முந்தைய ஆதாம் பாவம் நிழல் ரீதியில் நீக்கப்பட்டதால் தேவனுக்கும், இஸ்ரயேல் ஜனத்திற்கும் இடையில் சமாதானம் ஏற்பட்டிருக்கிறது. மன்னிப்பைப் பெற்றுக் கொண்டதன் அடிப்படையில் அவர்களும் இனிமேலும் பாவம் செய்யாதவாறு, எப்பொழுதும் ஒரு உடன்படிக்கைக்கு கீழ்ப்படிந்து வாழும்படி பொறுப்பாளிகளாக்கப்பட்டனர். அதாவது நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்கிறவன் அதினாலே **பிழைப்பான்** (அல்லது கைக்கொள்வதினால் கிடைக்கும் வெகுமதி). ஆனால் நிழலான ப-களைப் பார்க்கிலும் நாம் செய்யும் பாவப-கள் விசேஷித்தவைகளாக இருப்பது போல, சமாதான ப-கள் அல்லது அந்த ப-களால் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையைக் காட்டிலும் மேலானவையாக இருக்கிறது. இது ஒரு மேலான உடன்படிக்கையாக உள்ளது. இவ்வாறு, சமாதானப- அல்லது உடன்படிக்கையின் ப-யில் மேலான உடன்படிக்கையின் மத்தியஸ்தர் (எபி. 8:6-13) என்ற **ஆவிக்குரியவற்றின்** உதாரணமாகவும், நிழலாகவும் ஆசாரிய ஊழியம் செய்பவராக காணப்படுகிறார். மேலான உடன்படிக்கையின் கீழ் எல்லா ஜனங்களும் **இழந்ததை திரும்ப பெறுவதின்** மூலம் ஆசீர்வதிக்கப்படுவார்கள். எனவே, பூரண பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்து என்றென்றும் ஜீவித்திருக்க சாத்தியம் உண்டாக்கப்படும்.

"பின்பு ஆரோன் ஜனங்களுக்கு நேராகத் தன் கைகளை உயர்த்தி, **அவர்களை ஆசீர்வதித்து,** தான் பாவநிவாரண ப-யையும், சர்வாங்க தகனப-யையும், சமாதான ப-களையும் செலுத்தின

இடத்தி-ருந்து இறங்கினான்." - 22ம் வசனம். இந்த நிழ-ல், ஒரு உண்மை நமக்கு விளக்கிக் காண்பிக்கப்படுகிறது. ப-கள் அனைத்தும் செய்து முடிக்கும் வரைக்கும் **ஆசீர்வாதம்** ஜனங்கள் மேல் வராதிருந்தாலும், ஓரளவு ஆசீர்வாதம் ஆசாரியனின் அங்கத்தினர்களிடமிருந்து மனுக்குலத்தின் மீது வருகிறது. நாம் அனைவரும் மகா பரிசுத்தஸ்தலம் அல்லது ஆவிக்குரிய நிலைக்குள் செல்வதற்கு முன்பாக ப-யின் காலமான **இப்போதும்** கூட இது நிகழ்கிறது என்பதை இங்கு சித்தரிக்கப்பட்டுள்ளதாக நாம் காண்கின்றோம். எங்கெல்லாம் இராஜரீக ஆசாரியர்கள் இருக்கின்றார்களோ அங்கு அருகில் உள்ளவர்களுக்கெல்லாம் இவர்களிடமிருந்து குறிப்பிடத்தகுந்த ஆசீர்வாதம் பொழிகிறது.

## "பின்பு மோசேயும் ஆரோனும் ஆசரிப்புக் கூடாரத்திற்குள் பிரவேசித்து, வெளியே வந்து, ஜனங்களை ஆசீர்வதித்தார்கள்"

ப-களின் இந்த நாள் (யுகம்) முடிந்தவுடனே, முழுமையான ஆசாரியன் (தலை மற்றும் சரீரம்) தேவனுக்கு முன்பாக தோன்றி, ஜனங்களுக்கு எதிரான (உலகம்) நியாயத்தை சந்தித்துள்ளதாக சாட்சி கொடுப்பார். லேவி 16, பாவநிவாரண நாள் பகுக்கப்பட்டு நம்முடையதை அங்கீகரிப்பதற்கு தகுதியானது என கர்த்தரின் ப- முதன்முதலாக எப்படி ஏற்படுத்தப்பட்டது போன்ற விவரங்கள் காண்பிக்கப்பட்ட பொழுது, இந்த நிழல், சுவிசேஷயுகம் முழுவதும் நடந்த பணிகளை தொடர்ச்சியான ஒப்புக்கொடுத்தலாக காண்பித்தது என்பதை கவனிக்க வேண்டும். இருப்பினும், முழு கிறிஸ்துவின் உபத்திரவங்களை தொடர்ந்து திரும்பப் பெறுத-ன் (Restitution) ஆசீர்வாதங்கள் வருகின்றன. மோசே ஆரோனுடன் ஆசரிப்புக் கூடாரத்துக்குள் நுழைந்ததானது, கிறிஸ்துவின் ப-யில் **நியாயப் பிரமாணமானது** முழுவதாக திருப்திபடுத்தப்படுகிறது என்பதையும் அதனுடைய நீதி மெய்ப்பித்துக் காட்டப்பட்டது என்பதையும் கூறுவதாக தெரிகிறது. ஒருதரம் அனைவருக்காகவும் "தன்னைத்தானே ஒப்புக்கொடுத்த" ஆசாரியரின் ப-கள் மூலமாக தண்டனைக்குள்ளான அனைவரும் நீதிமானாக்கப்பட்டு ஜீவனுக்குள் வருவார்கள் என்பதை நியாயப்பிரமாணத்தின்கீழ் இருந்தவர்கள் - மாம்சீக இஸ்ரயேலர் சார்பாக நியாயப்பிரமாணம் (மோசேயால் நிழல்படுத்தப்பட்டது) சாட்சி கூறும்.

அர்ப்பணிக்கப்பட்ட பொழுது முழுப-யும் பரிசுத்தமானதும்

தேவனுக்கு பிரியமானதாகவும் இருந்தது. ஆரோனும் மோசேயும் மகாபரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்தும் சாகாமல் இருந்த செயல் இதற்கு சாட்சியாகும். மேலும் மோசேயும் ஆரோனும் வெளியே வந்து ஏகமாக ஜனங்களை ஆசீர்வதித்தார்கள். எனவே, இனிவரும் யுகத்திலும், கிறிஸ்து உலகத்தில் உள்ள சகல ஜாதி ஜனங்களையும் ஆசீர்வதிக்கப் போகிறார். (கலா. 3:8,16,29 ; ஆதி. 12:13); ஆனால் நியாயப்பிரமாணத்தை ஒருபுறமாக ஒதுக்கி வைத்துவிட்டோ, தேவனின் நியாயப்பிரமாணத்தை மறுத-த்தோ, பாவத்தை மன்னித்தோ அல்ல. படிப்படியாக மனிதன் மானுட பூரண நிலைக்கு கொண்டு வரப்பட்டு, அந்தச் சூழ்நிலையில் தேவனின் பூரண நியாயப்பிரமாணத்தை அவன் கைக்கொண்டு அதனால் ஆசீர்வதிக்கப்படுவான். ஆசாரியனால் ஆசீர்வதிக்கப்பட்டு பூரணமாக்கப்பட்டு "கீழ்ப்படி – பிழைத்துக் கொள்" என்ற நியாயப் பிரமாணத்தை கைக்கொள்வான். ''நீதியைச் செய்கிறவன் நீதியுள்ளவனாயிருக்கிறான்." அவன் ஒரு ஆசீர்வாதமாய் இருப்பான். யாராக இருந்தாலும் கீழ்ப்படிந்து யேகோவா தேவனுடன் சதாகாலம் சந்தோஷத்தோடிருப்பான்.

## "அப்பொழுது கர்த்தருடைய மகிமை சகல ஜனங்களுக்கும் காணப்பட்டது"

ஆசீர்வாதம் அபிவிருத்தி அடைகிறதால் (மனுக்குலத்தை சிந்தனையிலும், சரீரத்திலும் மறுசீரமைத்து உயர்த்துதல்) அதனுடைய விளைவுகளும் வெளியரங்கமாகும். இந்த ஜனங்கள் – பொதுவாக இந்த உலகம் – தேவனின் கிருபை நிறைந்த அன்பை ஒவ்வொரு நாளும் அதிகமதிகமாய் உணர்ந்து கொள்ளுவார்கள். இப்படியாக, "கர்த்தரின் **மகிமை** வெளியரங்கமாகும், மாம்சமான யாவும் அதை ஏகமாய்க் காணும்." (ஏசா. 40:5) அவர்கள் படிப்படியாக தேவனுடைய அன்பின் நீளத்தையும் அகலத்தையும் உயரத்தையும் ஆழத்தையும் அறிந்து கொள்வார்கள். மற்ற எல்லாக் காரியங்களைவிட இதை ஈடுஇணையில்லாததாகக் காண்பார்கள்.

இங்கே குறிப்பிடத்தகுந்த காரியம் என்னவெனில், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஆசீர்வாதம் உடன் ஆசாரியர்களுக்கான ஒரு ஆசீர்வாதம் அல்ல. அவர்கள் ஆசீர்வதிக்கும் அவ்வாசீர்வாதம் எல்லா இஸ்ரயேல் **ஜனங்கள்** மேலும் வந்தது. அந்த இஸ்ரயேல் ஜனங்கள் உலகத்திலுள்ள ஜனங்களுக்கு நிழலாக இருக்கின்றனர். கிறிஸ்துவின்

உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபை நிறைவேற்றினவுடனே - முழு கிறிஸ்து - என்ற **வித்தினால்** உலக ஜனங்களை ஆசீர்வதிக்கும் ஆசீர்வாதமே இது. (கொலோ. 1:24) அப்போஸ்தலனாகிய பவுல் சொல்கிறார் : "மேலும் தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்கு சிருஷ்டியானது (மனுக்குலம்) மிகுந்த ஆவலோடு காத்துக் கொண்டிருக்கிறது... சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்து பிரசவ வேதனைப்படுகிறது.'' பாவம் மற்றும் மரணம் எனும் கேட்டின் அடிமைத்தனத்தி-ருந்து அவர்கள் விடுதலை அனுபவத்தைப் பெற்று தேவனுடைய புத்திரரின் விடுதலை போன்ற நிலைக்கு திருப்பப்பட்டு தேவனின் முதல் மனுஷனான ஆதாமைப்போல் களிகூறுவதற்கு பாவநிவாரண நாளின் ப-கள் முடிக்கப்பட வேண்டும். அவர்களை விடுதலையாக்கும் விதமாக ப- கொடுத்த ஆசாரியர்கள் ராஜரீகம், தெய்வீக அதிகாரம் மற்றும் வல்லமை போன்ற மகிமையான வஸ்திரங்களால் அணிவிக்கப்பட வேண்டும். (ரோமர். 8:19-22).

சந்தேகமின்றி மரணம் மற்றும் அதன் கூரி-ருந்து எல்லா ஜனங்களும் பெற்றுக்கொள்ளும் ஆசீர்வாத இரட்சிப்பைத்தான் பவுல் - **"கிறிஸ்துவும், தமக்காகப் பார்த்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்"** (எபி. 9:28) என்று குறிப்பிடுகின்றார். இந்த யுகத்தில் ஒரு பாவப-யாக உபத்திரவப்பட்ட தலை மற்றும் சரீரமாகிய ஆசாரியரை இந்த உலகம் கண்டுள்ளது. (பாவ நிவாரணமாக) இயேசு யூதர்களுக்கு மாம்சத்தில் வெளிப்படுத்தப்பட்டார். ஆதலால், பவுல் சொல்வது போல, அவரைப் பின்பற்றும் எல்லோரும் "சாவுக்கினமான எங்களது மாம்சத்திலே கிறிஸ்து வெளிப்படுத்தப்பட்டார்" என்று சொல்கின்றனர். (2 கொரிந்தியர் 4:11) இவ்விதம் முழு கிறிஸ்துவும் மாம்சத்தில் வெளிப்படுத்தப்பட்டு உபத்திரவப்பட்டிருக்கிறபடியால், அவர்கள் உலகத்திற்கு முன்பாக மகிமையும் அடைவார்கள்." ஏனெனில் "கர்த்தரின் மகிமை (ஆசீர்வாதம் மற்றும் இரட்சிப்பு) வெளிரங்கமாகும். **மாம்சமான யாவும்** அதை ஏகமாய்க் காணும்." "அவர் **வெளிப்படும்போது**, நாமும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவோம்." கொலோ. 3:4

யார் யார் "அவரை நோக்கி பார்ப்பார்களோ" அவர்களால் மட்டும்தான் இந்த மகத்தான பிரதான ஆசாரியனை அறிந்து கொள்ள முடியும். வானத்திலோ அல்லது வேறு எங்கேயோ அவர் மாம்சத்தில் வெளிப்பட வேண்டியதிருந்ததானால், அவருக்காக காத்துக்

கொண்டிருந்தாலும், இல்லாவிட்டாலும் அனைவருக்கும் முன்பான ஒரு தோற்றமாக இருக்கும். ஆனால் ஆவியின் ஜீவியாக இந்த தலையானது பூரணப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அவரது “சிறுமந்தையும்” அவரைப் போலவே எந்த மனிதனும் கண்டிராத, காணக்கூடாத ஆவியின் ஜீவிகளாக (Spirit beings) மாற்றப்படுவார்கள் என்பதையும் வேத வசனங்கள் போதிப்பதாக ஏற்கனவே நாம் பார்த்திருக்கின்றோம். ஒரு குருடன் பார்க்கிறது போல ஞான உணர்வின் (Mental perception) மூலமாக மகிமையடைந்த திருச்சபையை இந்த உலகம் காணும் என்பதை நாம் பார்த்திருக்கிறோம். அதே அர்த்தத்தில் “ஜீவக்கிரீடம்” என்ற பரிசுப்பொருளை நாம் பார்க்கின்றோம். ‘‘மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை (மாம்சக்கண்களால்) நோக்கியிருக்கிற நமக்கு... நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது... காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள். (2 கொரி. 4:18) இந்த பிரகாரமாகத்தான், இந்த யுகத்தின் முழு சபையும், இயேசுவை பார்த்துக் கொண்டிருக்கிறது. இப்படியாக “நாம் இயேசுவை பார்க்கிறோம்.” (எபி. 2:9; 12:2) இதேவிதமாகத்தான், “விழித்திருக்கிறவர்கள்” கிறிஸ்துவினுடைய இரண்டாம் பிரசன்னத்தை ஞானக்கண்களினாலே தெய்வீக வசனம் என்னும் வெளிச்சத்தால் ஏற்றக் காலத்தில் உணர்கின்றனர். இதற்கு பிற்பாடு உலகத்திலுள்ள ஒவ்வொரு கண்ணும் இதேவிதமாக, ஆனால் அவரது நியாயத் தீர்ப்பின் “ஜீவா–த்து எரிகிற அக்கினி” மூலமாக அறிந்து கொள்வார்கள். (2 தெச 1:8)

மாம்சத்தில் இருக்கும் மனுக்குலம், ஆவிக்குரிய நிலையிலுள்ளவைகளை பார்க்க வேண்டுமெனில் இதுதான் ஒரேவழி. அவரது ஆவியை அல்லது சிந்தையை உணர்ந்தவர்கள் அவ்வாறே தன்னை தெரிந்துகொள்வார்கள். மேலும் அதேவழியில் பிதாவுடன் பரிச்சயம் ஆவார்கள் என்கிற இதே கருத்தையே தனது சீஷர்களுக்கு வெளிப்படுத்தினார். “என்னை அறிந்திருந்தீர்களானால், என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள். இதுமுதல் நீங்கள் அவரை அறிந்தும் **கண்டும்** இருக்கிறீர்கள்” என்றார். (யோவா. 8:19; 14:7) இந்த ஒரே அறிவில் தான் இந்த உலகம் தேவனைக் காணும். ஏனெனில் “தேவனை **ஒருவனும்** ஒருக்காலும் கண்டதில்லை” (“அவரை **மனுஷரில்** ஒருவனும் காணவில்லை” – காணக்கூடாதவர்) – “ஒரே பேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார் (காண்பித்தார்).” (I தீமோ. 6:16; யோவா. 1:18). பிதாவினுடைய குணாதிசயங்களை வசனங்களின் மூலமும்,

செயல்களின் மூலமும் அன்பின் தேவனாக பிதாவை வெளிப்படுத்தி – அவரை தனது சீடர்கள் **பார்க்கும்படியாக** இயேசு வெளிப்படுத்தினார்.

இதேவிதமாகத்தான், போப்பு மார்க்கம் அந்தி கிறிஸ்துவாக லூத்தர் போன்றவர்களால் காண்பிக்கப்பட்டது. அல்லது அப்போஸ்தலனாகிய பவுல் **முன்னறிவித்தபடி**, கேட்டின் மகனாகிய, பாவமனுஷன் வெளிப்பட்டிருந்தாலும், அநேகர் இன்னும் அதை **காணாமல்** இருக்கின்றனர்.

இவ்விதம் (தற்போது தனது சம்பத்தை ஒன்றுசேர்க்க பிரசன்னமாகியிருக்கும்) நமது ஆண்டவர் இயேசு, மற்றவர்கள் அவருடைய பிரசன்னத்தை **பார்க்காமல்** இருந்தாலும், "சிறுமந்தையின்" வாழும் அங்கத்தினர்களுக்கு இந்த நேரத்தில் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றார். லூக். 17:26-30; மல்கியா 3:17.

ஆசாரியராகிய முழுகிறிஸ்து வெளிப்படுத்தப்படும்போது ஆயிரவருட அரசாட்சியிலும் இவ்விதமாகத்தான் இருக்கும். அவரை எதிர்பார்ப்பவர்களுக்கு மட்டுமே அவர் வெளிப்படுத்தப்படுவார். அவர்கள் மட்டுமே அவரைக் **காண்பார்கள்**. அவர்கள் மாம்ச கண்களினாலே பார்க்காதபடி விசுவாசக் கண்ணால் நாம் ஆவிக்குரிய காரியங்களை – இயேசுவையும் பிதாவையும் பந்தயப் பொருளையும் – பார்க்கிறதுபோல பார்ப்பார்கள். மாம்சநிலையில் இருக்கும் மனிதர்கள் ஆவிக்குரிய நிலையில் இருக்கும் **கிறிஸ்துவை** பார்க்க முடியாது. அதேவிதமாக, யேகோவா தேவனையும் அவர்கள் ஒருக்காலும் பார்க்க முடியாது. ஆனால் (மகிமை அடையும்போது சிறுமந்தையான) **நாமோ அவர் இருக்கிறவண்ணமாக**வே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போம். – I யோவா. 3:2

ஆனால் அவரை நோக்கி பார்க்கிறவர்கள் மாத்திரமே இயேசுகிறிஸ்துவை மரணத்தின் பிடி-ருந்து காப்பாற்றக்கூடிய இரட்சகர் என அங்கீகரித்தாலும், இது முழு உலகையும் உள்ளடக்கியதாகும். எல்லோரும் பார்க்கத்தக்க வகையில் அந்த வெளிப்படுத்துதல் இருக்கும். ''கண்கள் யாவும் அவரைக் காணும்.'' அப்பொழுது பிரேதக் குழியி-ருந்து எழுப்பப்பட்டவர்களும், அவரைக் குத்தினவர்களும் கூட மகிமையின் கர்த்தரைத்தான் சிலுவையில் அறைந்தோம் என்று உணருவார்கள். "அவர் (வானத்திலா? இல்லை)... ஜீவா-த்து எரிகிற அக்கினியில் (நியாயத்தீர்ப்புகள்) தேவனை அறியாதவர்களையும்"

(அறிக்கையிடாதவர்கள்), கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாதவர்களையும் ஆக்கினைக்கு உட்படுத்தும்படி வெளிப்படுத்தப்படுவார். இத்தகைய சூழ்நிலையின்கீழ் மனுக்குலம் எல்லாம் அவரை அறிந்துகொள்ள அதிக காலம் ஆகாது. இப்பொழுது நல்லவர்கள் உபத்திரவப்படுகிறார்கள். ஆனால், “தேவனுக்கு ஊழியம் செய்கிறவனுக்கும், அவருக்கு ஊழியம் செய்யாதவனுக்கும் இருக்கிற வித்தியாசத்தை அப்பொழுது காண்போம். ஏனெனில் அந்நாளில்தான் இந்த வித்தியாசம் வெளிப்படுத்தப்படும். (மல்கியா 3:15-18) அப்பொழுது, புதிய உடன்படிக்கையின் கீழ் கிறிஸ்துவையும், அவர் ஜீவனைக் கொடுத்ததையும் அங்கீகரிப்பதன்மூலம் தெளிவாகப் பார்க்கின்ற அனைவரும் நித்திய ஜீவனைப் பெறுவார்கள். ஏனெனில் “எல்லா மனுஷருக்கும், விசேஷமாக விசுவாசிகளுக்கு இரட்சகராகிய ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறோம்.” - I தீமோத். 4:10

## மரணத்திற்குப் பின் நியாயத்தீர்ப்பு

நம்முடைய பாடத்திற்கு நேரடியாக சம்பந்தப்பட்ட வசனமாக மேற்கண்ட சொற்றொடர் இருந்தாலும், வேதாகமத்திலுள்ள மற்ற எந்த வசனங்களைக் காட்டிலும், தவறாகப் பொருத்தப்படுகின்ற, தவறாகப் புரிந்து கொள்ளப்படுகின்ற வசனம் “அன்றியும் ஒரே தரம் மரிப்பதும் (மிருக ப-யில் நிழலாக குறிப்பிடப்பட்டது) பின்பு (இந்த ப-களின் விளைவாக) நியாயத்தீர்ப்படைவதும் (தேவனால் ப-ஏற்றுக்கொள்ளப்படுதல் அல்லது ஏற்றுக்கொள்ளப்படாதிருத்தல்) மனுஷருக்கு (புதிய சிருஷ்டியின் பிரதான ஆசாரியருக்கு நிழலாக இருக்கும் ஆரோனும் அவனுக்கு பின்வந்தவர்களும்) நியமிக்கப்பட்டிருக் கிறபடியே, கிறிஸ்துவும் அநேகருடைய (“ஒவ்வொரு மனிதனுக்கும்”) பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு **ஒரேதரம்** ப-யிடப்பட்டு (ஒருக்காலும் இன்னொரு முறை செய்யப்பட மாட்டாது) தமக்காக **காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு** இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் (சுமந்த பாவங்களால் கறைபடாது, பாவப-யை திரும்ப கொடுக்காது) தரிசனமாவார்.” - எபி. 9:27,28.

பிரதான ஆசாரியன் ஒவ்வொரு முறையும் “மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள்” நுழையும்போது தன்னுடைய ஜீவனையே அபாயத்திற்கு ஏதுவாக்கினான். ஏனெனில் அவன் செய்த ப- பூரணமில்லாமல் போகுமேயானால், இரண்டாவது திரைவழியாக நுழைந்த உடனே

மரித்துப் போவான். ''மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள்'' அவனே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்க மாட்டான். ஜனங்களின் பாவங்களுக்காக நிவாரணமாக அளிக்கப்பட்ட அபூர்ணமான ப-யும் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்காது. இவ்வாறாக, எந்தவிதமான தோல்வியும் அவனது மரணம் மற்றும் யாருடைய பாவங்களுக்காக நிவிர்த்தி செய்ய இருந்தானோ அவர்களது ஆக்கினைக்கும் காரணமாக ஆகிவிடும். இந்த விதமான **நியாயத் தீர்ப்புதான்** இந்தப் பாடத்தில் சொல்லப்பட்டது. இந்த நியாயத் தீர்ப்புதான் ஆசாரியர்களால் ஒவ்வொரு வருடமும் நிறைவேற்றப்பட்டது. சாதகமான நியாயத்தீர்ப்பு ஆசாரியரின் ஜீவனையும் ஜனங்களுக்காக செய்யப்பட்ட வருடாந்திர பாவநிவிர்த்தியையும் சார்ந்திருந்தது.

நம்முடைய பிரதான ஆசாரியராகிய இயேசு கிறிஸ்துவும் கல்வாரியில் மரித்தபோது, நிழலாகிய அந்த இரண்டாவது திரை வழியாக பிரவேசித்தார். கல்வாரியில் அவர் மரித்து, எவ்வகையிலேனும் பூரணம் இல்லாமல் போயிருக்குமேயானால், அவர் மரணத்தி-ருந்து எழுப்பப்பட்டிருக்கவே மாட்டார். நீதியின் தீர்ப்பு, கிறிஸ்துவுக்கு எதிராகப் போயிருக்கும். ஆனால், மூன்றாம் நாளிலே அவர் உயிர்த்தெழுந்தது, அவருடைய பணியானது பூரணமாகச் செய்யப்பட்டது. தெய்வீகத்தின் "தீர்ப்பின்" பரிசோதனையில் அது நிலைத்து நின்றது. அப். 17:31ஐ பார்க்கவும்.

நமது கர்த்தர் ஒரே தடவையில் இந்த தீர்ப்பில் வெற்றிகரமாக தேறினார் என்பதற்கும், அவரது ப- ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதற்கும், பெந்தெகோஸ்தே நாளில் பொழியப்பட்ட ஆசீர்வாதம் மற்றும் ஒரு சாட்சியாகும். அது எல்லா மாம்சமானவர் மேலும் வரப்போகின்ற நாளில் பொழியப்படவிருக்கின்ற மகா ஆசீர்வாதத்திற்கு முன்அனுபவம் ஆகும். (யோவே. 2:28) அவர் முழுமையாகவும், ஏற்றுக்கொள்ளும்படி பாவநிவிர்த்தி செய்த இந்த உலக ஜனங்களை ஆசீர்வதிக்க அவர் (அவருக்குள் நாமும்) வருவார் என்பதற்கு இது ஒரு அத்தாட்சியாகும்.

மானுடத்தின் பொதுவான மரணத்தைக் குறிக்கக்கூடிய இந்தப் பாடத்திற்கு எவ்விதமான விளக்கமும் இந்த சூழ்நிலைக்கு முற்றிலும் மாறுபாடானதாகவும், விரோதமாகவும் அமைந்திருக்கின்றது.

ஏதோ ஒருவகையில் பாவம், மரணம் என்ற சாபத்தி-ருந்தும், பொதுவான தீமையி-ருந்தும் விடுதலை கிடைக்கும். ஒரு நல்ல

நேரத்துக்கான ஒரு நிச்சயமற்ற வழியை அநேகர் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் இந்த நீண்ட மகிமையும், ஆசீர்வாதமும் வருவதற்கு முன்பாகவே "பாவநிவாரண நாளின்" **ப** - அவசியம் என்பதையும், அது முடிக்கப்பட வேண்டும் என்பதையும் அவர்கள் உணர்வதில்லை. ''தெரிந்து கொள்ளப்பட்ட,'' ''சிறுமந்தை''யான திருச்சபையும், கிறிஸ்துவின் ப-யிலும், அவரது உபத்திரவங்களிலும் பங்குள்ளவர்கள் என்பதையும், அவர்கள் வரப்போகிற மகிமையிலும் இருப்பார்கள் என்பதையும் அவர்கள் பார்ப்பதில்லை. மேலும் தேவனுடைய புத்திரர் (திருச்சபை) வெளிப்படுவதற்குச் சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே (அறியாமையில் இருந்தாலும்) காத்துக்கொண்டிருக்கிறது. இதுவரைக்கும் சர்வசிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவவேதனைப்படுகிறது." - ரோமர். 8:19,22.

மேலும் நிழலான ஆசாரியன் "சரீரம்" மற்றும் 'தலை' எனப்படும் கிறிஸ்து என்ற நிஜமான ஆசாரியரை குறித்ததால், திருச்சபையின் ஒவ்வொரு அங்கத்தினரும் இந்த ''நியாயத்தீர்ப்பில்'' தேர்ச்சி பெறவேண்டும். அழைக்கப்பட்டவர்கள் அநேகராக இருந்தாலும், மரணபரியந்தம் உண்மையுள்ளவர்களாக இருந்து ஜெயம் கொண்டவர்களாக, உண்மையான திராட்சைக் கொடிகளாக கிறிஸ்துவின் சரீர அங்கத்தினர்களாக இறுதியாக ஏற்றுக்கொள்ளப் படும்வரை யாரும் **தெரிந்தெடுக்க**ப்படமாட்டார்கள். (வெளி. 3:21) இத்தகையோர் மாம்சத்தில் பூரணப்பட்டிருக்க வேண்டும் என்பதல்ல. ஆனால் இருதயத்தாலும், விருப்பத்தாலும், எண்ணத்தாலும் பூரணப்பட்டிருக்க வேண்டும். இப்போது பூரணமற்ற மண் பாத்திரத்தில் வைக்கப்பட்டிருந்தாலும், இந்த பொக்கிஷம் அக்கினிச் சூளையில் இடப்பட்டு சோதிக்கப்பட்ட சுத்தத் தங்கமாக இருக்க வேண்டும்.

## தெய்வீக அங்கீகாரம் வெளியரங்கமாகுதல்

"அன்றியும் கர்த்தருடைய சந்நிதியி-ருந்து அக்கினி புறப்பட்டு, ப-பீடத்தின்மேல் இருந்த சர்வாங்க தகனப-யையும் கொழுப்பையும் எரித்துவிட்டது; ஜனங்களெல்லாரும் அதைக் கண்டபோது ஆரவாரித்து முகங்குப்புற விழுந்தார்கள்." - லேவி. 9:24. அதாவது வணங்கினார்கள். இது வேறுவிதமாக சொல்லப்பட்டுள்ள அதே கருத்துதான். அக்கினி தேவனுடைய அங்கீகரிப்பை குறிக்கிறது. மரணம், கல்லறை ஆகியவற்றி-ருந்து ஜனங்கள் பெற்றுக்கொள்ளப் போகும்

விடுதலையின் பரிசாக தேவனின் பார்வையில் ப- இருப்பதை உணர்ந்து கொள்வார்கள் என்பதற்கு அடையாளமாக ஜனங்கள் அங்கீகரிப்பதை இது காட்டுகிறது. அவர்கள் உணரும்போது யேகோவாவையும், அவரது பிரதிநிதியான ஆசாரியரையும் தொழுதுகொள்வார்கள்.

இது இன்னும் நிறைவேறவில்லை என்பது தெளிவாகிறது. தேவன் அக்கினியினால் இன்னும் மகா பாவநிவாரண நாளுக்கான ப-யின் அங்கீகரிப்பை **வெளிப்படுத்த**வில்லை. மகாராஜா மற்றும் அவருடைய பிரதிநியை, வணங்கும் விதத்தில் ஜனங்கள் சத்தமிட்டு முகங்குப்புற இன்னும் விழவில்லை. உலகம் இன்னும் பொல்லாங்கனுக்குள் இருக்கிறது. (1 யோவா. 5:19). இப்பிரபஞ்சத்தின் தேவன் ஏறக்குறைய அனைத்து மனுக்குலத்தையும் இன்னும் குருடாக்கி வருகிறான். (2 கொரி. 4:4) இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் இன்னும் மூடிக் கொண்டிருக்கின்றது. (ஏசா. 60:2) உயிர்த்தெழுத-ன் மாற்றத்தால் பிரதான ஆசாரியரின் சரீரம் என்று சொல்லப்படும் சபையின் அங்கத்தினர்கள் முதலாவதாக இரண்டாம் திரை (உண்மையான மரணம்) வழியாக மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிக்கும்வரை நாம் இந்த நிழ-ல் குறிப்பிடப்பட்டுள்ள மகத்தான திரும்பப்பெறும் ஆசீர்வாதங்களை எதிர்பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. இந்த நிழ-ல் குறிப்பிடப்பட்டுள்ள “ஆசீர்வாதம்” மிகுந்த உபத்திரவக்காலம் வரும் வரைக்கும் நிறைவடையாது. அதற்கு பின்னர், உலகத்திலுள்ள நன்றாக சிட்சிக்கப்பட்ட, தாழ்மையுள்ள அனைவரும் தங்களை ஆசீர்வதிக்கப்போகும் ஆபிரகாமின் வித்தாகிய கிறிஸ்துவை எதிர்பார்த்துக் கொண்டும், காத்துக் கொண்டும் இருப்பார்கள்.

எவ்வளவு அழகாக, இவ்வித நிழல்கள், எல்லா ஜனங்களுக்குமான சாத்தியப்பட்ட ஒரு முழுமையான ஈடுப-யையும், ஆசீர்வாதத்தையும், சீர்திருத்தலையும் படமாக சித்தரிக்கின்றன!

உயிருடன் இருப்பவர்களுக்கும், மரித்தவர்களுக்கும் இடையே இந்த நிழல்களில் பிரிவை ஏற்படுத்தும் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. பிரதான ஆசாரியரின் ப-கள் முடிவு பெற்று ஆசீர்வாதம் ஆரம்பம் ஆகும்போது, உயிருடன் இருப்பவர்கள் மட்டும் அதிகப்பலனை அடைவார்கள் என சிலர் யூகிக்கலாம். ஆனால் இல்லை என்று நாம் சொல்கிறோம். ஏனெனில் தேவனுடைய மதிப்பீட்டில் உயிருடன் இருப்பவர்களும், மரித்தவர்களும் ஒரே மாதிரியானவர்களே.

இவர்கள் அனைவரும் மரித்தவர்கள் என்றே தேவன் பேசுகிறார். அனைவரும் ஆதாமிற்குள் மரண **தீர்ப்பிற்குள்**ளானவர்களே. இப்பொழுது எந்த ஒரு மனிதனும் பெற்றுள்ள வாழ்வின் ஒரு சிறுபொறியானது மரித்த-ன் ஒரு கட்டமே ஆகும். ஆதாமின் பாவத்தின் நிமித்தமாக இது மரணத்திற்குள்ளான ஒரு இனமாகும். ஆனால், நிஜமான இந்த "பாவநிவாரண நாளில்" நீதியான ஆசீர்வாதங்கள் மற்றும் ஜீவன் சகலருக்கும் விரிவாக்கப்படும். இது சகலரும் கீழ்படியக்கூடிய நிபந்தனைகளின்மேல் நடக்கும். ஆதாமிடம் அவன் இழந்துபோன ஜீவன், சுதந்தரம், தேவனின் கிருபை ஆகியவற்றை ஜீவனை கொடுக்ககூடியவரான மீட்பரிடமிருந்து பெற்றுக்கொள்வான். மரணத்திற்குள் சென்றவர்களும், "மரண இருளின் பள்ளத்தாக்கிலே" நடந்து கொண்டிருப்பவர்களும் இதில் அடங்குவர்.

இது அனைத்து மக்களையும், அனைத்து மனுக்குலத்தையும் மரணம் மற்றும் பாவத்தின் ஆதிக்கத்தி-ருந்து விடுவித்து, பூரண சந்தோஷத்திற்கும், சிருஷ்டிகரோடான பூரண **ஒப்புரவாகுதலுக்கும்** அவசியமான பூரணத்திற்கு அவர்களை திரும்பச்செய்யும் நிஜமான பாவப-களுக்கான பொருளாக இருக்கிறது.

ஆபிரகாமின் வித்துக்குள்ளாக பூமியின் சகலஜாதிகளும் பெற்றுக் கொள்ளப்போகும் ஆசீர்வாதம் இதுதான். இந்த நற்செய்திதான் ஆபிரகாமிற்கு பிரசங்கிக்கப்பட்டது. "மேலும் தேவன் விசுவாசத்தினாலே புறஜாதிகளை (அனைத்து மனுக்குலம்) நீதிமான்களாக்குகிறாரென்று வேதம் முன்னாகக் கண்டு, உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப் படும் (நீதிமான்களாக்கப்படும்) என்று ஆபிரகாமுக்குச் சுவிசேஷமாய் (நற்செய்தியாய்) முன்னறிவித்தது ....அந்த சந்ததி கிறிஸ்துவே (முத-ல் தலை, பின்பு சரீரம்). நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால் (அங்கத்தினர்கள்), ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்." (கலா. 3:8,16,29) ஆனால், இந்த "சந்ததி" நிழ-லே காண்பிக்கப்பட்டதுபோல, ஆசீர்வாதம் தொடங்கும் முன்பே நிறைவும் பெற்றிருக்க வேண்டும். எல்லா ஆசீர்வாதங்களும் பிரவாகித்து வெளியே வருவதற்குமுன் பாவநிவாரணம் முடிக்கப்பட வேண்டும்.

"மகாபரிசுத்த ஸ்தலத்தில்" பிரதான ஆசாரியன் **ஒருவனே** வருடத்திற்கு ஒருமுறை பாவநிவாரணத்திற்காக பிரவேசித்தான் என்பதை அவனும் உடன் ஆசாரியர்களும் பாவங்களுக்காக முழுநிவிர்த்தி செய்யும் நாளுக்குப் பின்பு வரும் நாட்களில் உள்ளே செல்லவில்லை

என்று தவறாக எடுத்துக்கொள்ளக்கூடாது. மாறாக, பிரதான ஆசாரியன் அதற்குப்பின் மற்ற நாட்களிலும் அடிக்கடி பிரவேசித்தான். இஸ்ரயே-ன் நலனுக்காக நீதியின் மார்க்கவசத்தையும், ஊரீம், தும்மீம் என்பவற்றைப் பயன்படுத்தியும் யேகோவா தேவனிடத்தில் மன்றாடும் போதெல்லாம், இந்த மகாபரிசுத்தஸ்தலத்திற்குள் இந்த பிரதான ஆசாரியன் நுழைந்தான். பிறகு, அவர்கள் அடிக்கடி பாளையத்தைக் கலைத்து புறப்பட்டு போகும்போது, லேவியர்கள் சுமந்து செல்ல அனுமதிக்கப்படும்முன், ஆசாரியர்கள் உள்ளே நுழைந்து திரைகளை எடுத்து, உடன்படிக்கைப்பெட்டியையும், பரிசுத்தமான சகல பணிமுட்டுகளையும் மூடினார்கள். - எண் 4:5-16

மறுபடியும் (பாவநிவாரண நாள் முடிந்தபின்பு) ஒரு இஸ்ரயேலன் ஆசாரியர்களிடம் ஒரு பாவப-யை கொண்டுவரும் போதெல்லாம், அதை அவர்கள் அனைவரும் "மகாபரிசுத்த ஸ்தலத்தில்" புசித்தார்கள். (எண். 18:10) எனவே, நிஜத்தில் தற்போதைய பாவநிவாரணநாள் நிறைவுபெற்ற பின்பு "இராஜரீக ஆசாரியக்கூட்டம்," "மகா பரிசுத்தத்தில்" அல்லது **பூரண ஆவிக்குரிய நிலையில்** இருக்கும். அங்கே தங்களது சொந்த மீறுதல்களுக்காக (பாவநிவிர்த்தி நாளன்று நீக்கப்பட்ட அசல் அல்லது ஆதாமின் பாவத்திற்காக அல்ல) இந்த உலகத்தால் கொண்டுவரப்பட்ட பாவப-கள் ஏற்றுக்கொள்ளப்படும் (புசிக்கப்படும்). இந்த பூரண ஆவிக்குரிய நிலையில், ஊரீம் மற்றும் தும்மீம் மூலம் இஸ்ரயேலருக்கு முடிவுகளும், பதில்களும் கொடுக்கப்பட்டது போன்று, ஆசாரியக்கூட்டம் ஒவ்வொரு விஷயத்திலும் அறிவுறுத்தும்.

***



THE LAMB FOR A BURNT-OFFERING

“தகன ப–க்கான ஆட்டுக்கடா”

## அத்தியாயம் 6

# “பாவநிவாரண நாளை” தொடர்ந்து வரும் ப□கள்

இவைகள் ஆயிரவருட அரசாட்சியில் நடக்கும் மனந்திரும்புதல்கள், பொருத்தனைகள், உடன்படிக்கைகள் ஆகியவற்றிகு நிழலாக சொல்லப்பட்டிருக்கின்றன – ஜனங்களின் தகனப–கள் – அவர்களுடைய சமாதான ப–கள் – அவர்களுடைய போஜனப–கள் – அவர்களுடைய குற்றநிவாரண ப–கள் – ஆண் பெண் வித்தியாசங்கள் இனி இல்லை என்பதற்கான நிழல்கள்.

பாவநிவாரண நாள் ப–களுக்குப்பிறகு **ஜனங்களால்** (இஸ்ரயேல் – இந்த உலகம்) தங்களது சுயமான சொந்தக் கணக்கில் கொடுக்கப்படும் ப–கள், அடுத்த யுகத்திற்கான இஸ்ரயேல் கொடுக்கும் பொதுவான ப–களை குறிக்கின்றன. அதன்பின்பு, இது மகிமையடைந்த இராஜரீக கூட்டத்தாருக்கு சமர்ப்பிக்கப்படும். எப்படியானாலும், தற்போது மிகச்சிறிய ஆரம்பத்தையே பெற்றுள்ளது. இவ்வாறு ஐசுவரியம் உடைய உலகபிரகாரமான மனிதன், தேவனுடைய பொருட்களுக்கு ஒரு உக்கிராணக்காரனாக இருக்கிறான். அந்த செல்வத்தை இப்போது பயன்படுத்தலாம்; அதன்மூலம் தனக்கு நண்பர்களை உருவாக்கலாம். சாத்தானுடைய ஆட்சியின் இந்தயுகம் முடிக்கப்படும்போது, கிறிஸ்துவின் ஆட்சி ஆரம்பமாகிறது (அதில் அவர் இனிமேல் உக்கிராணக்காரனாக இருக்கமாட்டார்). இவ்வாறாக அவர் யாருக்கு உதவினாரோ அவர்களை ஆசீர்வதிப்பார். ஐசுவரியனான இந்த உலகப்பிரகாரமான உக்கிராணக்காரர்கள் (பிசாசு அல்லது இந்த யுகத்தின் தேவன்) புத்திசா–களாக இருந்தால் இவ்வாறாக அவர்கள் பெற்றுள்ளதை அதிகமாக பயன்படுத்துவார்கள். இந்த ஆசாரியர்களில் சிறியவருக்கு எவன் ஒருவன் ஒரு கலசம் தண்ணீராவது தருகின்றானோ அவன் கிறிஸ்துவின் இராஜ்யம் ஒழுங்குப்படுத்தப்பட்டு அதன் ஆட்சி ஆரம்பமாகும் போது எந்தவிதத்திலும் தனது பரிசுப்பொருளை இழக்காதிருப்பான். ஏனென்றால் அவன் அப்படிப்பட்டவனாக இருக்கின்றான். – லூக்.16:1–8; மத். 10:42

“பாவநிவாரண நாள் ப–கள்” என நாம் குறிப்பிடும் வகுப்பில் சேராத ப–கள், ஆயிரம் வருட அரசாட்சிக்குரிய விவரிக்கப்பட்ட பங்களிப்புகள் மற்றும் ப–களாகும்.

நிழ–ல் “பாவநிவாரண நாள்” ப–கள், மற்ற அனைத்தையும் முந்திக்கொண்டதாலும், எல்லா இஸ்ரயேலர்களுக்கும் தேவனால் ஏற்றுக்கொள்ளக்கூடிய பொதுமன்னிப்புக்கான ஒரு **அடிப்படையாக** இது இருந்தது. ஆனால் “பாவநிவாரண ப–கள்,” “குற்றநிவாரண ப–கள்,” “சமாதான ப–கள்” என மற்ற ப–கள் தனிப்பட்டவர்களால் அந்த நாளுக்குப் பின்னும் தொடர்வதால், நிஜமும் அவ்வாறே இருக்கும். இந்த சுவிசேஷ யுக ப–கள், உலகமாகிய “ஜனங்களை” நீதிக்குள்ளாக்கப்பட்ட நிலைக்கு கொண்டுவந்த பின்பும் பாவங்களும், மீறுதல்களும் இருப்பதால் அவற்றை அறிக்கையிட்டு திருத்திக்கொள்ள இந்த பிந்தைய ப–கள் அவசியமாகின்றன.

கிறிஸ்துவின் ப–யின்மூலம் ஆதாமியப்பாவம் (Adamic sin) நீக்கப்பட்டதை பாவநிவாரணநாள் ப–கள் குறித்தன. ஆனால் ஆயிரவருட யுகத்தில் பாவநிவாரண ப–யின் பயன்கள் இந்த உலகத்திற்கு கிடைக்கச்செய்யும்போது, அவர்கள் படிப்படியாக முந்தைய பூரணத்திற்கும், ஜீவியத்திற்கும், தேவனுடன் இசைந்த நிலைக்கும் திரும்ப கொண்டுவரப்படும்போது, தவறுகள் செய்யப்பட்டு அதற்கு எந்தவகையிலாவது அவர்கள் பொறுப்பாகிறார்கள். அதற்கு அவர்கள் மத்தியஸ்தரான கிறிஸ்து மூலமாக தேவனோடு இசைந்தநிலைக்கு மீண்டும் வருவதற்கு முன்பாக மனந்திரும்புதலுடன் சில திருத்தங்களை செய்ய வேண்டும்.

அடுத்த யுகத்திலும் பிரதிஷ்டை செய்யப்படவேண்டும். ஆனால் மாற்றப்பட்ட உலக அரசாங்கத்தால் இப்பொழுது இருப்பது போல, **மரணத்திற்குள்ளான** பிரதிஷ்டை அல்லாமல் ஜீவனுக்குள்ளாக செய்யப்படுகிற ஒன்றாக அது இருக்கும். ஏனெனில் தீமையினுடைய ஆட்சி முடிவடையும்போது, வ–, வேதனை, துக்கம் மற்றும் மரணம் போன்றவைகளும் ஒரு முடிவிற்கு வரும். ஒருவன் பிரதிஷ்டை செய்யவேண்டுமாயின், அவன் தானே சுயமாய் தன் சக்திக்கு ஏற்றவாறு செய்யவேண்டும். இந்த காரியத்தை அடுத்ததாக செய்யப்பட்ட ப–கள் நிழலாகக் காண்பிக்கின்றன.

அடுத்த யுகத்தின் பாவமன்னிப்பிற்கு, பாவநிவாரண நாளின் ப–கள் **அடிப்படையாக** இருப்பதனால், நிழலான காரியத்தில் ஒரு

பாவி கொண்டு வரும் ப–, “பாவநிவாரண நாளின்” ப–களுக்கு பொருத்தமாக இருக்கவேண்டியது அவசியமாகிறது. மன்னிப்பிற்கான அடித்தளம் புதியதாக இருப்பதால், இவை “பாவநிவாரண நாள்” ப–களை குறிக்கும் ஒரு அங்கீகரிப்பாகும். எனவே, “பாவநிவாரண நாளுக்குப்” பிறகான ஜனங்களின் எல்லா ப–களும், பின்நோக்கிச் சுட்டிக் காட்டப்படுகின்ற அல்லது அந்த நாளின் ப–களை அங்கீகரிக்கின்றவையாக இருப்பதை நாம் காண்கின்றோம். இந்த ப–கள் கால்நடையாகவோ, ஆடாகவோ அல்லது பறவையாகவோ (காட்டுப்புறாக்கள் அல்லது புறாக்குஞ்சுகள்) அல்லது மெல்–யமாவாகவோ, ப– செலுத்துபவர்களின் **தகுதிக்கு** ஏற்ற ப–ப்பொருட்களாக இருக்கலாம்.

ஆயிரவருட யுகத்தின் போது, **எல்லா மனிதரும்** “சத்திய அறிவுக்குள்ளாக” வந்து, இவ்விதமாக, ஆதாமிய மரணத்தின் சாபத்தி–ருந்து (கண்டிப்பு அல்லது தண்டனை) விடுதலை அடைவதற்கான முழு வாய்ப்பைப் பெறுவார்கள். (1 தீமோ. 2:4) ‘**மரணம்**’ என்பது தற்போது மானுடம் சந்திக்கின்ற நோய், வேதனை, பூரணமின்மை என்பவையாக நாம் நினைவுகூறும்போது, மானுடத்தின் பூரணத்தை ஒரு முழு இரட்சிப்பிற்கு கொண்டு வருவதை தேவனுடைய திட்டம் உள்ளடக்கியுள்ளதை நாம் பார்க்கிறோம். அருகாமையில் வைக்கப்பட்ட வாய்ப்புக்களை வேண்டுமென்றே மறுப்பவர்கள் அல்லது ஒதுக்கித் தள்ளுபவர்கள் மட்டுமே இரண்டாம் மரணத்தில் மரிப்பார்கள். ஆனால் பூரணம் படிப்படியாக வரும். அதனை அடைவதற்கு பாவிகளின் **மனஉறுதி** தேவைப்படும். மறுபடியும் பூரணத்திற்குச் செல்ல **அவனால் முடிந்ததைச் செய்ய வேண்டும்**. அவனுக்கு **தேவைப்படும்** அனைத்து உதவிகளும் கிடைக்கும். இதை இந்த ப–கள் பொதுப்படையாகக் காண்பிக்கின்றன. ஒவ்வொரு மனிதனுடைய **திறமைக்கு** ஏற்றபடி அவை இருந்தன. எவ்வாறாயினும், பாவம் மற்றும் அபூர்ணத்தால் தரம் தாழ்த்தப்பட்ட ஒவ்வொருவரும் சத்தியத்தை அறிகின்ற அறிவை அடையும்போது தேவனுக்கு அவர்களே தங்களை ஒப்புக்கொடுக்க வேண்டும். இது அவனிருக்கும் நிலைமையை சுட்டிக்காட்டும் அர்ப்பணிப்பாகும். நிழ–ல் புறாக்களை கொண்டுவந்து ப–யிட்ட ஏழைகள் ஒழுக்கத்தில் ஏழைகளும், குறைவுள்ளவர் களாயிருந்து **நீதிமானாக்கப்பட்டவர்களைக்** குறிக்கிறது. ஆட்டுக்கடாவை அர்ப்பணித்த மற்ற **அனைவரும்** சிறிதளவில்

கீழ்நிலையை அடைந்தவர்கள் என்பதைக் குறிக்கிறது. காளையைப் ப-யிட்டவர்கள், மனித இயல்பில் **பூரணநிலையை** அடைந்திருப்பதை எடுத்துக் காண்பிக்கிறது. பாவநிவாரண நாளின் ப-களில் இயேசுவின் ப-யான, பூரண மனுக்குலத்தைக் குறிப்பிட காளை பயன்படுத்தப்பட்டது போலவும், (அதிக கொழுப்பு) ஒரு ஆட்டுக்கடா (வலுவற்றது, மெ-ந்தது), பரிசுத்தவான்களின் அபூரணமான மனித இயல்பை குறிப்பிட பயன்படுத்தப்பட்டது போலவும், அந்த மிருகங்கள் இதேபோல் பிரதிஷ்டையின்போது அர்ப்பணித்தவர்களை (ஆயிரம் வருடயுகத்தில் விசுவாசிக்கின்ற உலகம் – இஸ்ரயேல்) குறிப்பிடுகின்றது. ஆனால் வருங்கால தகனப-கள் மற்றும் சமாதான ப-கள் கர்த்தருக்கு தங்களை **பிரதிஷ்டை** செய்து அர்ப்பணிக்கின்ற ஜனங்களை குறிப்பிடுகின்றன என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். பாவநிவாரண நாளில் **நிவாரணத்தைப்** பெற கொடுக்கப்படும் பாவநிவாரண ப-களை அவை குறிப்பிடவில்லை. உண்மையில் அவைகள் குற்றநிவாரண ப-களே. ஒருவகையில் அவை தனிப்பட்டவர்களுக்கான பாவநிவாரண ப-களாகும். ஆனால், இவை நாம் இனி பார்க்கப் போகின்ற பாவநிவாரண நாளில் அளிக்கப்பட்ட தேசத்திற்கான பாவநிவாரணங்களி-ருந்து முற்றிலும் வேறுபட்டவையாகும்.

ஆயிரவருட யுகமுடிவின்போது, உலக மானுடரில் தேவனுடைய கிருபையை ஏற்றுக்கொள்ள விரும்புபவர்களை பூரண நிலைக்கு கொண்டுவந்த பிறகு, அவர்கள் இனிமேலும் ஞானத்திலோ, நடத்தையிலோ அல்லது சரீர ரீதியிலோ குறைபாடுள்ளவர்களாக காளையை அர்ப்பணிக்க இயலாத **ஏழைகளாக** யாரும் இருக்கமாட்டார்கள். அனைவரும் பூரண மனிதராக இருப்பார்கள். **காளைகளால்** அடையாளப்படுத்தப் பட்டுள்ளபடி அவர்களது அர்ப்பணிப்புகள் **பூரணமாக** இருக்கும். தாவீது, இதைக்குறித்து சொல்லுகிறதாவது: ‘‘அப்பொழுது தகனப-யும் சர்வாங்க தகனப-யுமாகிய நீதியின் ப-களில் பிரியப்படுவீர்; அப்பொழுது உமது பீடத்தின்மேல் **காளைகளைப்** (பூரணமான ப-களை) ப-யிடுவார்கள்.” (சங். 51:19) தாவீதின் இவ்வார்த்தைகள் சொல்லர்த்தமான, இரத்தம் சிந்துகிற மற்றும் நிழலான ப-களை போதிப்பதாக எடுத்துக் கொள்ளலாகாது. அதேவேளையில் ப-யை நீர் விரும்புகிறதில்லை. (நிழலான ப-யும் இல்லை. பொருளாக இருக்கும் ப-யும் இல்லை.

ஏனெனில் ஒரேதரம் அனைத்துப்பாவங்களுக்காக ப- செய்யப் பட்டுவிட்டது) "....தேவனுக்கேற்கும் ப-கள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்" (சங்.51:16,17) என்று அவன் கூறுகிறான். அனைத்து ப-களும் செய்யப்படுகிறவனுடைய முழு சித்தத்தின்படியும் விருப்பத்தின்படியும் தான் இருக்க வேண்டும். - லேவி. 1:3

மிருகத்தின் மரணம், அர்ப்பணிக்கும் பணியின் நிறைவைக் காண்பிக்கின்றது. அதாவது, மனுக்குலத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும் தன்னுடைய சித்தத்தை அர்ப்பணிக்க வேண்டும். ஆனால் இது மானுட சாயலை அழிப்பதாலோ, (பாளையத்திற்கு புறம்பே மாம்சத்தை சுட்டெரித்தல்) அல்லது "மகா பரிசுத்தத்திற்குள்" புதிய சாயலுக்குள் ஜீவனை எடுத்துச் செல்வதாலோ இது பின்பற்றப்படாது. பாவநிவாரணப-களில் காண்பிக்கப்பட்டபடி ஆசாரியர்கள் மாத்திரமே அங்கே பிரவேசிக்கிறார்கள். பிரதிஷ்டை செய்யப்படும்போது அவர்கள் மானுடர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அதேநிலையில் பூரணப்படுத்தப்படுகின்றனர். ஜீவிக்கும் உரிமை பிரதான ஆசாரியர் அவர்களை கிரயத்துக்கு வாங்கியதால் அவர்களுக்கு கிடைக்கிறது. இவருடைய சரீரத்தின் அங்கத்தினர்களால் ஜெயங்கொள்ளும் திருச்சபை குறிக்கப்படுகின்றது. பிரதிஷ்டைகள் ஈடுப-யில் ஒரு பாராட்டுதலை குறிக்கின்றது. தேவனுடைய பிரமாணத்திற்கு அர்ப்பணிப்பவர்கள் அவருடன் இசைவுடனும், கிருபையுடனும், நித்திய ஜீவனுடன் தொடர்ந்து வாழலாம் என்ற நிபந்தனையுடன் ஏற்றுக்கொள்ளப்படுகின்றனர்.

## ஜனங்களின் தகன ப-கள்

ஆசாரியர்களின் தகனப-கள், ப-பீடத்தின்மேல் தொடர்ந்து வைக்கப்பட்டு, அக்கினி அணைந்து போகாமல் இருக்கச் செய்யப்பட்டது. சர்வாங்க தகன ப-க்குரிய பிரமாணம் என்னவென்றால்: "சர்வாங்க தகனப-யானது இராமுழுவதும் விடியற்காலமட்டும் ப-பீடத்தின்மேல் எரியவேண்டும். ப-பீடத்தின் மேலுள்ள அக்கினி எரிந்துகொண்டே இருக்க வேண்டும்... ப-பீடத்தின் மே-ருக்கிற அக்கினி அணையாமல் எரிந்து கொண்டிருக்க வேண்டும் ; ஆசாரியன் காலைதோறும் அதின்மேல் எரியும்படி கட்டைகளைப் போட்டு, அதின்மேல் சர்வாங்க தகனப-யை வைத்து... தகனிக்கக்கடவன். ப-பீடத்தின்மேல் அக்கினி எப்போதும் எரிந்து கொண்டிருக்கவேண்டும்; அது ஒருபோதும்

அவிந்துபோகலாகாது.” - லேவி. 6:9,12,13

இவ்விதமாக, ப-யிடப்போகிறவனுக்கு உணர்த்தப்படும் உண்மையாதெனில், ப-பீடம் முன்கூட்டியே பரிசுத்தமாக்கப்பட்டு, அல்லது ஒதுக்கிவைக்கப்பட்டு, பாவநிவாரணநாளின் ப-களை தேவன் ஏற்றுக்கொண்டதால் அவர்களுடைய ப-கள் ஏற்றுக்கொள்ளத் தக்கவையாக இருக்கும். லேவியர். 1-ல் விவரிக்கப்பட்டுள்ளபடி இந்த ப-பீடத்திற்கு இஸ்ரயேலன், தனது மனப்பூர்வமான ப-யைக் கொண்டுவந்தான். வழக்கமான முறையில் இது செய்யப்பட்டது. துண்டுகளாக வெட்டி கழுவப்பட்ட இந்த மிருகம், தலையுடன் ப-பீடத்தில் கிடத்தப்பட்டு தேவனுக்கு இனிமையான சுகந்த வாசனையான ஒருப-யாக முழுவதுமாக எரிக்கப்பட்டது. இது யேகோவாவுக்கான ஒரு நன்றியறிதலான ஜெபத்திற்கு நிழலாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது அவர்களது மீட்கும் பொருளான கிறிஸ்துவின் உடைக்கப்பட்ட சரீரத்தில் வெளிப்பட்டுத்தப்பட்டுள்ள அவரது இரக்கம், ஞானம் மற்றும் அன்பிற்கான ஒரு ஒப்புதலாகும்.

## ஜனங்களின் சமாதான ப-கள்

இந்த ப- மாட்டுமந்தை அல்லது ஆட்டுமந்தையி-ருந்து எடுக்கப்பட்டது. இது ஒரு பொருத்தனையின் (உடன்படிக்கை) நிறைவேறுதலாகவோ அல்லது மனமார்ந்த “ஸ்தோத்திர ப-யாகவோ” இருக்கும். அர்ப்பணிப்பவனால் யேகோவாவுக்கு இதனுடைய பகுதி கொண்டுவரப்பட வேண்டியிருந்தது. “கர்த்தருக்குத் தகனப-யாகப் படைப்பவைகளை அவன் கைகளே கொண்டு வரவேண்டும். மார்க்கண்டத்தையும், அதனோடுகூட அதின்மேல் வைத்த கொழுப்பையும் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டும் ப-யாக அசைவாட்டும்படிக்குக் கொண்டு வரக்கடவன்.” அப்பொழுது ஆசாரியன் அந்தக் கொழுப்பை ப-பீடத்தின்மேல் தகனிக்கக்கடவன். ஆனால் மார்க்கண்டமும், தோளும் ஆசாரியனுடையதாகும். ப-யிடக் கொண்டுவந்தவன் அதை புசிக்க வேண்டும். லேவி. 3 மற்றும் 7:11-18, 30-34

எந்தமனிதன் முழுசமாதானத்திற்கும், ஒத்திசைவுக்கும் வருகின்றானோ (அனைவரும் இதைச் செய்யவேண்டும் அல்லது **இரண்டாம் மரணத்தில்** அறுப்புண்டு போவார்கள்) அவன் புசிக்கவோ அல்லது ஒரு உடன்படிக்கையை தேவனுக்கு முன்பாக அவருக்கு

முழுவதுமாக ஒப்புக்கொடுக்கும் விதத்தில் நிறைவேற்ற வேண்டும். இவ்வாறு பூரணப்பட்ட பின்பு மறுபடியும் பாவம் செய்வானேயாகில், அவன் மரணமடைய வேண்டும் (இரண்டாம் மரணம்). - லேவி. 7:19-21 ஐ வெளி. 20:9,13-15 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்.

இந்த ப-யோடுகூட, எண்ணெயிலே பிசைந்த புளிப்பில்லா அதிரசங்களையும், எண்ணெய் பூசப்பட்ட அடைகளையும் படைக்க வேண்டும். இது, படைப்பவன் கிறிஸ்துவின் குணத்தின் மேல் கொண்ட விசுவாசத்தைக் காண்பிக்கிறது. கிறிஸ்துவின் குணத்தை இவனும் பெற்றுக் கொள்வான். புளிப்புள்ள அப்பம், அர்ப்பணம் செய்யும் சமயத்தில் அபூரணமாக இருப்பதாக ஒத்துக்கொள்வதைக் குறிக்கின்றது. புளிப்பு என்பது பாவத்திற்கு ஒரு நிழலாக இருக்கிறது. லேவி. 7:11-13

## ஜனங்களின் போஜன ப-கள்

எண்ணெயிலே பிசைந்த, மெல்-ய மாவினால் செய்யப்பட்ட புளிப்பில்லா அதிரசங்கள் ஆகிய இவை, கர்த்தருக்கு ஆசாரியன் மூலமாக படைக்கப்பட்டன. இவைகள் அநேகமாக, உலகம் அவரது சபையின் மூலமாக கர்த்தருக்கு ஏறெடுக்கும் ஸ்தோத்திரங்களையும், ஆராதனையையும் குறிப்பிட்டன. “சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்க-லும் மகிமை உண்டாவதாக.'' (எபேசியர் 3:21) இவை ஆசாரியரால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. ப-பீடத்தில் ஒரு மாதிரிக்காக செலுத்தப்படுவது, யேகோவா தேவனால் அங்கீகரிக்கப்பட்டதும் ஏற்றுக்கொள்ளப்பட்டதுமாக இருந்தது என்பதை காண்பித்தது.

## ஜனங்களின் குற்றநிவாரண ப-கள்

“ஒருவன் கர்த்தருக்குரிய பரிசுத்தமானவைகளில் குற்றஞ்செய்து, அறியாமையினால் பாவத்துக்குட்பட்டால்... ஒருவன் செய்யத்தகாதென்று கர்த்தருடைய கட்டளைகளினால் விலக்கப்பட்ட யாதொன்றைச் செய்து பாவத்துக்குட்பட்டால், அதை அவன் அறியாமையினால் செய்தாலும் அவன் குற்றமுள்ளவனாயிருந்து, தன் அக்கிரமத்தை சுமப்பான்... பழுதற்ற ஒரு ஆட்டுக்கடாவை ஆசாரியனிடத்தில் கொண்டுவருவானாக.” குற்றத்தினிமித்தம் ஆசாரியன் விதிக்கும் பணமும், **அதோடு ஐந்தில் ஒருபங்கும்**, அவனுடைய ப-யாகும். ஆசாரியன் அவனுக்காக

**பாவநிவர்த்தி** செய்வானாக. ஒருவன் தன் அயலானின் வஸ்துவை பழுதாக்கினாலோ அல்லது ஏமாற்றினாலோ, அவன் அந்த முதலை கொடுக்கிறதுமல்லாமல், அதினோடு ஐந்தில் ஒரு பங்கை கூட்டி (இருபது விழுக்காடு வட்டி) அதற்குரியவனுக்கு கொடுக்க வேண்டும். ஒரு ஆட்டுக்கடாவை குற்றநிவாரண ப-யாக கர்த்தரிடத்தில் கொண்டு வருவானாக. லேவி. 5:15-19; 6:1-7

இது ஒவ்வொரு தவறான செயலுக்கும் பரிகாரம் தேடப்பட வேண்டும் என்றும், வட்டியோடும், மனந்திரும்புதலோடும் அவன் தேவனிடத்தில் சென்று மன்னிப்பை சபையின் மூலம் (ஆசாரியத்துவம்) பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதையும் போதிக்கின்றது. குற்றமுள்ளவன் தன் சொந்த ஆபூரணத்தை உணர்ந்து, மீட்கும் பொருளாக கொடுக்கப்பட்ட ஆட்டுக்கடாவின் மதிப்பையும் அறிந்து கொள்ள வேண்டும் என்பதையும் போதிக்கிறது.

ஆனால், இந்த குற்றநிவாரண ப-க்கும், "பாவநிவாரண நாளின்" பாவநிவாரண ப-க்கும் உள்ள வித்தியாசத்தை அறிந்து கொள்ள வேண்டும். பிந்தினது **தேவனுக்கு** (நீதி) "மகா பரிசுத்த ஸ்தலத்தில்" "விசேஷ ப-களாக" படைக்கப்பட்டது. முந்தினது **ஆசாரியர்களிடத்தில்** படைக்கப்பட்டது. இவ்வாசாரியர்கள் பாவநிவாரண நாளின்போது, ஜனங்களை மீட்டுக்கொண்டவர்கள். ஜனங்களின் அங்கீகாரம் அவர்களின் மீட்பருக்கு அளிக்கப்படும். ப-யின் ஒரு பாகத்தை ஆசாரியன், ஞாபகார்த்தமாக பாவநிவாரண நாளில் (சுவிசேஷயுகம்) இரட்சிப்பின் திட்டத்தை செயற்படுத்தினதை நினைவுகூறும் வகையில் பரலோகப்பிதாவிற்குப் படைத்தான். மற்றவற்றை தானே எடுத்துக் கொண்டான்.

கிறிஸ்துவின் (மனித வாழ்க்கை) விலையேறப்பட்ட இரத்தத்தால் மீட்கப்பட்ட முழு உலகமும், தங்களுடைய குற்றங்களின் மன்னிப்புக்காக தங்களைத் தாங்களே, ராஜரீக ஆசாரியக் கூட்டத்தாரிடத்தில் படைப்பார்கள். இவ்வாசாரியர்கள் பிரதிஷ்டையினாலே, அவர்களுக்கு **மன்னிப்பு** கிடைக்கிறது. இதற்கு சீஷர்களுக்கான இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள் பொருந்தகிறது: "அவர்கள் மேல் ஊதி, பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்; எவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படும். எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருக்கிறீர்களோ, அவைகள் அவர்களுக்கு

மன்னிக்கப்படாதிருக்கும் என்றார்.” – யோவா. 20:23

இந்த ‘‘சமாதானத்திற்கு கொண்டுவரும் பணியானது’’ பாவநிவாரணத்தின் எல்லா ப–களும் நிறைவேறியுள்ள நிலையில் உள்ளபோது முற்றிலும் அடுத்த யுகத்திற்கு சம்பந்தமுள்ளதாக இருக்கிறது. பாவநிவிர்த்திக்கு வேண்டிய அனைத்து ப–களும் செலுத்தின பிறகு, இப்பொழுதும் “ராஜரீக ஆசாரிய” கூட்டத்தின் எந்த சரீர அங்கமானாலும் மனந்திரும்பி விசுவாசிக்கிறவனைப் பார்த்து, நம்முடைய தலையாகிய இயேசுகிறிஸ்து சொன்னதுபோல், “உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது” என்று சொல்லலாம். மேலும், இந்த ஆசாரியர்கள் மன்னிப்பு எதற்கு எந்த நிலையில் வழங்கப்படுகிறது என்பதற்கான விதிகளையும், நிபந்தனைகளையும் இப்பொழுது நன்றாக **அறிந்திருப்பதினாலே** இந்த நிபந்தனைகள் பின்பற்றப்பட்டுள்ளதைப் பார்க்கும்போதெல்லாம் அவர்கள் அதிகாரத்தோடே பேசலாம்.

நாம் பார்த்ததுபோல, பாவநிவாரண நாளின் படைப்புகள் எப்போதும் எரிக்கப்பட்டன. (லேவி. 6:30; எபி.13:11). ஆனால் பின்பு செய்யப்பட்ட குற்றநிவாரண ப–கள், எரிக்கப்படாமல், ஆசாரியர்களால் புசிக்கப்பட்டன (ஏற்றுக் கொள்ளப்பட்டன).

## ஆண் பெண் வித்தியாசங்கள் ஒழிகின்றன

‘‘பாவநிவாரண ப–யின் (குற்றநிவாரண ப–) பிரமாணம் என்னவென்றால்: ...அதை ப–யிடுகிற ஆசாரியன் அதைப் புசிக்கக் கடவன்... ஆசாரியரில் **ஆண்மக்கள்** யாவரும் அதைப் புசிப்பார்களாக.” – லேவி. 6:25–29

வேதாகமத்தில் தேவனும், பரிசுத்த தூதர்களும் **ஆண்களாக** இருப்பதாக சொல்லப்பட்டிருக்கின்றது. அதேநேரத்தில், பரிசுத்தவான்கள் அனைவரும் சேர்ந்து ஒரு பெண்ணாக, இயேசுகிறிஸ்து என்ற கணவனுக்கு நியமித்திருக்கும் **‘‘கன்னியாக’’** சித்தரிக்கப்பட்டுள்ளது. ஆனால் மனித குலத்தில் பெண் என்பவள் (இனப்பெருக்கத்திற்காக தற்கா–கமாக பெண் ஒரு மனிதனின்று வேறுபட்டிருந்தாலும்) உண்மையில் தேவசாயலாகப் படைக்கப்பட்ட மனிதனின் ஒரு பகுதிதான். இருவருமே தனியான நிலையில் முழுமையாக இல்லை. பூரணநிலையிலுள்ள மனிதனுடைய பெயர் ஆதாம் என்று அழைக்கப்பட்டது போல, அவர்கள் இருவர் ஆனபிறகு, **அவர்களை**

“ஆதாம்” என்று தேவன் அழைத்தார். தலைமை ஸ்தானம் ஆணை சேர்ந்தது. இந்த ஆண் மனிதனே தன்னுடைய சொந்த சரீரமாகிய பெண்ணுக்குப் பாதுகாவலனாக அல்லது பாதுகாக்க வேண்டியவனாகிறான். (எபே. 5:23,28) இந்த ஆண்பெண் பாகுபாடு, ஆதாமை பூரணம் அற்றவனாக மாற்றவில்லை. மாறாக, அவனுடைய பூரணநிலைகளை இரண்டு பாகமாக பிரித்து, அவற்றுக்கிடையே அவனே இன்னும் தலையாக இருந்தான்.

வேதம் சொல்கிறது : உரைத்தவைகள் எல்லாம் “நிறைவேறி தீருங்காலங்கள்” முடியும்போது, அனைத்தும் (ஆண், பெண்) **முந்தின சீருக்கு** கொண்டுவரப்படும்; பூரண நிலைக்கு, அதாவது ஏவாள் ஆதாமி-ருந்து பிரித்தெடுக்கப்படும் முன் இருந்த நிலைக்கு கொண்டு வரப்படும். ஆண்களும் பெண்களும் தங்கள் தன்மைகளை இழந்துவிடுவார்களா இல்லையா என்பது நமக்கு தெரியாது. ஆனாலும், ஒவ்வொருவரும் தாங்கள் இப்பொழுது இழந்திருக்கும் குணங்களை பெற்றுக் கொள்ளுவார்கள். இந்த கருத்து உண்மையாக இருக்குமேயானால், பெண்களுடைய மென்மையான, இனிமையான தன்மையும், ஆண்களுடைய, வீழ்ந்து போகக் காரணமான முரட்டுத்தன்மையும் **சீர்திருத்துத-ன்** காலத்தில் சமமாக, பூரணமாகக் கலக்கப்பட்டு இணைக்கப்படலாம். இந்த இரண்டு இனங்களின் தன்மைகள் கலந்து உருவாக்கப்படும் மனிதனே தேவன் ஆதியில் வடிவமைத்த பூரணமனிதனாக இருக்க முடியும். நம்முடைய அன்பு இரட்சகர், அவர் மனிதனாக இருந்தபோது, முரட்டு சுபாவமாகவோ அல்லது மென்மையான தன்மையுடையவராகவோ இருக்கவில்லை. அவருக்குள்ளாக, அறிவாற்றலும் பலமும் பரிசுத்தமும், இரக்கசுபாவமும், பெண்ணுக்கே உரிய உண்மையான பாசமும் **கலந்தவராக** இருந்தார். இவரல்லவா நம்முடைய சந்ததிக்காக மரித்து, ஆண் பெண் ஆகிய இருவரையும் இரட்சித்த **பூரண மனிதன்?** அவர் **மனிதனாக** இருந்தபோது அவருக்கு துணைவியாக யாரும் இருக்கவில்லை என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இயேசுகிறிஸ்து ஆதாமிற்கு (ஆண் மற்றும் பெண்) ஈடுப-யாக தம்மை ஒப்புக் கொடுத்தபோது, அவர் தமக்குள்ளே பூரணராக இருந்திருக்க வேண்டியது அவசியமல்லவா? இவ்வாறாக ஏவாளோ அல்லது அவளின் தலையான ஆதாமோ இந்த மகத்தான ஈடுப-யில் குறிக்கப்படவில்லை. தாய் ஏவாள் மீட்கப்படவில்லை என்றால் அது மற்ற வேத வசனங்களோடு ஒத்துப் போகாது.

சுவிசேஷ திருச்சபை வேதாகமத்தில் **''மணவாட்டியாக''** சொல்லப்பட்டுள்ளது. **மனிதனாகிய** இயேசுகிறிஸ்துவின் மணவாட்டியாகச் சொல்லப்படவில்லை. ஆனால் உயிர்த்தெழுந்து, மேலாக உயர்த்தப்பட்டவருக்கே மணவாட்டியாக சொல்லப்படுகிறாள். ஆவியின் நிலைக்கு தேவனுடைய ஆவியால் ஜெநிப்பிக்கப்பட்டு புதிய சிருஷ்டிகளாகிய நாம், ஆவியின் நிலையில் இருக்கும் இயேசுவுக்கே நியமிக்கப்பட்டிருக்கிறோம். நாம் அவருடைய நாமத்திலும், மகிமையிலும், சிங்காசனத்திலும் பங்கு பெறபோகிறோம். சபையானது, ப-யான மனிதனாகிய இயேசுகிறிஸ்துவின் மணவாட்டியல்ல, ஆனால் அவரது இரண்டாம் வருகையில் அவருடையவள் என சொந்தம் கொண்டாட போகிற மகிமையடைந்த கர்த்தராகிய இயேசுவின் மணவாட்டியாகும். ரோமர் 7:4

ஆணுக்கும் பெண்ணுக்கும் அடுத்த யுகத்தில் எப்படியோ அப்படியே கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் - திருச்சபை மகிமை அடைந்தவுடன் பெண்மை தன்மை அனைத்தும் நீக்கப்படும். "நாம் அவரைப் போலவே இருப்போம்." (1 யோவா. 3:2) - அவருடைய சரீர அங்கங்களாக... ''நமது நீதியாயிருக்கிற யேகோவா'' என்பது **அவளுடைய** நாமம் (கர்த்தரின் நாமம்)." (எரே. 33:16; 23:6 ஆங்கில வேதாகமத்தைப் பார்க்கவும்) திருச்சபையானது மகாப் பெரிய தீர்க்கத்தரிசியின் சரீரமாகவும், ஆசாரியனாகவும், ராஜாவாகவும் என்றென்றைக்கும் இருக்கிற பிதா அல்லது ஜீவனை உலகிற்கு கொடுக்கிறவருடைய ஒரு பாகமாக இருக்கும். ஏசா. 9:6

இதே கருத்தைத் தான் வேதாகமம் முழுவதிலும் நாம் பார்க்கிறோம். ஆசாரியர்களில் **ஆண்கள்** மட்டுமே ப-யிடக்கூடிய பணிகளை செய்தனர். எல்லாவற்றுக்கும் மேலாக குற்றநிவாரண ப-களை **புசிப்பவர்களும்** ஆண்கள் மட்டுமே. அவர்கள் மாத்திரமே ஆசரிப்பு கூடாரத்தில் பிரவேசித்து திரைக்கப்பால் போனார்கள். அதேபோல பரிசுத்த ஆவியின் ஏற்பாட்டில் இந்த சுவிசேஷ யுகத்தில் "அவர் சிலரை (ஆண்) அப்போஸ்தலராகவும் சிலரை (ஆண்) தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் (ஆண்) சுவிசேஷகராகவும், சிலரை (ஆண்) மேய்ப்பராகவும் (ஆண்) போதகர்களாகவும் சுவிசேஷ **ஊழியத்தின் பணிகளைச்** செய்யும் பரிசுத்தவான்களின் தகுதிக்காகவும், அபிஷேகம் பண்ணப்பட்டவரை கட்டி எழுப்பிவிடவும் ஏற்படுத்தினார். (எபே. 4:11,12 Diaglott) கிரேக்க வேதாகமத்தில் உள்ளதுபோல ஆங்கிலவேதாகமத்திலும் (தமிழ்

வேதாகமத்திலும்) **'ஆண்'** என்று வந்திருக்க வேண்டும். நமது இரட்சகர் மற்றும் அப்போஸ்தலர்களின் நியமனங்களும் இதை ஒத்திருக்கின்றன. "உபதேசம் பண்ணவும், புருஷன்மேல் **அதிகாரஞ் செலுத்தவும்**, ஸ்தீரியானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை'' என்று அப்போஸ்தலன் 1 தீமோத். 2:12ல் தெளிவாக கூறுகிறார். இந்த காரியமானது, கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் இப்போது நிலவும் உறவை சரியாக விவரிக்கிறது என்பதை நாம் உணர்கின்றோம். இவ்வுலகத்தின் முடிவில், ஜெயங்கொள்ளுகிறவர்கள் மகிமை அடைந்தபிறகு, கர்த்தரோடுகூட ஒரே சரீரமாக ஆக்கப்பட்டு, "சகோதரர்" என அழைக்கப்படுவர் என்பதற்கு இது விளக்கமாக இருக்கிறது.

இருப்பினும் இது சபையில் இருக்கும் சகோதரிகள் ஆண்களுக்கு ஈடாக தங்கள் சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்கு பிரியமுமான ஜீவப-யாக ஒப்புக்கொடுத்து, இராஜரீக **ஆசாரியத்துவத்தில் அங்கத்தினர்களாக** இருந்து முக்கிய **ஊழியப் பணியைச்** செய்யவில்லை என்று குறிப்பிடவில்லை. கர்த்தருக்கு அவர்களும் சகோதரர்களைப் போலவே சரிசமமாக விரும்பத் தக்கவர்களாக உள்ளனர். ஏனெனில், உண்மையாகவே கிறிஸ்துவுக்குள்ளாக "புதிய சிருஷ்டிகளாக" நாம் ஆனதும் (2 கொரி. 5:17; கலா. 3:28) ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள அனைத்து வேறுபாடுகளும் இனம், நிறம் ஆகியவையும் தெய்வீகப் பார்வையில் நீக்கப்பட்டுவிட்டன. ஆனாலும், நிழலான, பாடமான காரியங்கள் தொடரப்பட வேண்டும். எனவே, இந்த அம்சங்கள் கிறிஸ்துவின் சபையின் ஊழியக் காரியங்களின் சிறந்த மற்றும் முக்கியமான பாகங்களில் உறுதியாக கடைப்பிடிக்கப்படுகின்றன.

இதற்கு மாறாக எதிராளியான சாத்தான் எப்போதும் மனிதனை மதம் மூலமாக கட்டுப்படுத்தி பெண்களிடத்தில் ஆண்கள் வைத்திருக்கும் அன்பையும் மதிப்பையும் மாற்றுகிறான். கன்னி மரியாளை தெய்வநிலைக்கு உயர்த்தி, கத்தோ-க்கர் மத்தியில் வணங்கவும் வைத்து விட்டான். இதேபோன்று எகிப்தியர்களின் கடவுள் ஐசிஸ் என்னும் ஒரு பெண் தேவதை ஆவாள். அப்போஸ்தலனாகிய பவு-ன் காலத்தில், எபேசுவிலே இருந்தது 'தியானாள்' (டயானா) என்னும் ஒரு பெண் தேவதை. சாத்தான் இன்னும் ஏதேன் தோட்டத்தில் பெண்ணிடத்தில் நடந்து கொண்டதுபோல இப்போதும் பெண்ணிடத்திலும் பெண் மூலமாகவும் நடந்து கொள்ள விரும்பவில்லையா? ஆவியுலகில் அவனது பிரதான ஊடகங்களாகவும் (mediums) வேதாந்தம் மற்றும்

கிறிஸ்தவ விஞ்ஞானத்தில் அவனது பிரதான சீடர்களாகவும், தீர்க்கதரிசிகளாகவும் பெண்கள் இருப்பதில்லையா?

சாத்தான் பெண்களை தனது பிரதிநிதிகளாக ஏற்றுக் கொண்டுள்ளதும் கூட அவர்களுக்குச் சாதகமாக இல்லை. மாறாக, வேதாகம விதிமுறைகளை அறிந்து மிக ஜாக்கிரதையாக அவற்றை பின்பற்றி மதித்து நடக்கிற நாடுகளில், பெண்கள் சமூகத்திலும் அறிவிலும் மிக மேலான நிலையில் உள்ளனர். பெண்மைத் தன்மைக்காக அவர்கள் மிக அதிகமாக மதிக்கப்படுகின்றனர்.

## எனது ப-

“உமது ப- பீடத்தின் மேல் வைக்கப்பட்டது, ஓ என் தெய்வீக கர்த்தாவே,
இயேசுவின் நிமித்தம், இன்று இந்த வெகுமதியை ஏற்றுக் கொள்ளும்.
உமது ஸ்தலத்தை அலங்கரிக்க என்னிடம் ஆபரணங்கள் இல்லை,
உலகம் போற்றும் எந்த ஒரு ப-யும் செய்வதிற்கில்லை,
ஆனால் என் நடுங்கும் கரங்களுக்குள் நான் இங்கே கொண்டுவந்தேன்,
இது எனது சிந்தை, மிகவும் அற்பமாக தோன்றக் கூடிய ஒரு காரியம்;
பின்பு நீர் மட்டுமே, ஓ கர்த்தாவே, புரிந்து கொள்ளுபவராக இருக்கிறீர்
எப்படி, நான் இதை தங்களுக்குச் சமர்ப்பிக்கும் போது நான்
என்னுடைய எல்லாவற்றையும் சமர்ப்பிக்கிறேன் என்பதை.

“அங்கு மறைவாக உள்ள உம் தேடும் கண்கள் காண்கிறது
மனயெழுச்சியின் பாடுகள், மகிழ்வின் காட்சிகள்,
எனக்குள்ள யாவும் எதுவும் மற்றும் சந்தோஷங்களும்
ஆழ்ந்த அன்பும் நம்பிக்கையின் ஆவல் மற்றும் எதிர்பார்ப்புகள் முடிவற்றவை.
அவை கண்ணீரில் நனைந்து பெருமூச்சினால் மங்கின,
சௌந்தர்யமானது வெறுமையை தோற்றுவிக்கும் வரையில்
நான் என் உறுதியில் பற்றுள்ளவன்
இப்போது பொய்கள் அழிகின்ற உம் பாதபடியி-ருந்து
ஜெபமானது ஏறெடுக்கப்படுகிறது – உமது சித்தம் செய்யப்படுவதாக!

“எடுத்துக்கொள்ளும் ஓ பிதாவே! எனது தைரியம் தோல்வியுறும் முன்பே;
அதை உமது சித்தத்துடன் இணைத்துக் கொள்ளும்
திரும்ப நான் அதை எடுத்துக்கொள்ள இயலாதவாறு;
இதயமும் தைரியமும் தோல்வியுறும்போது நான் பறந்து போவேன்.
எனவே என்னை மாற்றும், பரிசுத்தப்படுத்தும் உம்முடையதைப் போல,
எனது சித்தத்தை தெய்வீக அன்பின் கிருபை பெற்றதைப் போல நீர் செய்யும்,
இது எனது சொந்த சித்தம் என்பதை அறியாமலும், உணராமலும் இருப்பேனாக,
ஆனால் எனது சித்தம் உம்முடையதோடு இணைந்திருக்க அங்கீகரியும்.”

# அத்தியாயம் 7

# “தீட்டுப்பட்டவர்கள் மேல் தெளிக்கப்படும் கிடாரியின் சாம்பல்”

## எபிரெயர் 9:13

பாவநிவாரண நாளிலே செய்யப்படும் ப-களிலே இதுவும் ஒன்றல்ல – அதைத் தொடர்ந்து வரும் ப-களிலும் செய்யப்படுவதல்ல – இந்த ப-யின் மூலம் நிழலாகச் சொல்லப்படும் வகுப்பார் – இந்த நிழலை மதித்து ஞானஅர்த்தமாக சொல்லும் ஆசாரியரில் ஒருவரான அப்போஸ்தலனாகிய பவுல் – ஜனங்களை சுத்திகரிப்பதற்காக சாம்பலைத் தெளித்தல் (ஆயிர வருட அரசாட்சியில் நடக்கும்) – இச்சுத்திகரிப்பு எவ்வித பலனை விளைவிக்கும்.

இஸ்ரயேலருடைய நியாயப்பிரமாணத்தில், எண்ணாகமம் 19ம் அதிகாரத்தில், நுகத்தடிக்கு உட்படாததும், பழுதற்றதும், ஊனமில்லாததுமான ஒரு சிவப்பு கிடாரி (பசு)யை தெரிந்து கொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இது பாவநிவாரண நாளிலோ அல்லது அதற்கு பின்பு செய்யப்படும் ப-களிலோ படைக்கப்படும் ப-யாக இருப்பதில்லை. இது ஒரு ப-யே அல்ல. ஏனெனில் இக்கிடாரியின் எந்த பாகமும் ப-பீடத்தில் ப-யிடப்படுவதுமில்லை, அதை ஆசாரியர்கள் உண்பதுமில்லை. இது ப-யிடப்பட்டது. ஆனால் இது அதே அர்த்தத்திலோ, பிரகாரத்திலோ மற்ற ப-கள் இடப்படுவது போல இது எவ்விதத்திலும் ப-யிடப்படுவதில்லை. இது ஆசாரியரால் கொல்லப்படுவதுமில்லை. அதன் இரத்தம் பரிசுத்தஸ்தலத்திற்கோ அல்லது மகா பரிசுத்தஸ்தலத்திற்கோ எடுத்துச் செல்லப் படுவதுமில்லை. இச்சிவப்பு கிடாரி இஸ்ரயேலரின் பாளையத்திற்கு புறம்பே கொண்டு போகப்பட்டு, அங்கே கொல்லப்பட்டு, மாம்சம், கொழுப்பு, சாணி இன்னும் மற்ற பாகங்கள் சுட்டெரித்து சாம்பலாக்கப்பட்டன. எடுத்து வைத்த இரத்தத்தை ஆசாரியன் தன் கைவிர-னால் கொஞ்சம் எடுத்து ஆசாரிப்பு கூடாரத்துக்கு **எதிராக** (திருத்திய மொழிபெயர்ப்பு மற்றும் லீசர்) ஏழுதரம்

தெளித்தான். எரித்த கிடாரியின் **சாம்பல்** பரிசுத்தஸ்தலத்திற்குள் கொண்டுவரப்பட வில்லை; பாளையத்திற்கு புறம்பே மற்றவர்களுக்கு பயன்படும் வகையில் ஒரு குவியலாக குவிக்கப்பட்டது. நியாயப்பிரமாணத்தின் படி, சாம்ப–ன் ஒரு பாகத்தோடு தண்ணீரை ஒரு பாத்திரத்தில் கலக்கி, அந்த கலவையில் ஈசோப்பை முக்கி எடுத்து சுத்திகரிப்புக்காக மனிதர்கள் மேலும், வஸ்திரங்களின் மேலும் கூடாரத்தின் மேலும் அவர்களது தீட்டு நீங்கிட தெளிக்கப்பட்டது.

பாவநிவாரண நாளில் செய்யப்பட்ட ப–கள், சுவிசேஷ யுகத்தில் நடக்கும் காரியங்களுக்கு நிழலாக இருப்பதாக நாம் பார்த்திருக்கின்றோம். (இராஜரீக ஆசாரியத்துவம், கிறிஸ்து, தலை மற்றும் சரீரம் ஆகியவற்றால் நிறைவேற்றப்பட்டது). இந்த கிடாரி எந்த காரியத்திற்கும் தொடர்புடையதல்ல. தற்போதைய யுகத்தின் எந்த ப–களையும் குறிக்கவில்லை. எனவே, பாவநிவாரண நாளுக்குப் பிறகு இஸ்ரயேல் ஜனங்களின் சார்பாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ப–களுக்கு இது வேறுபட்டதாயிருந்தது. ஆகவே நாம் இப்போது காண்பித்திருக்கிறது போல மக்கள் முழுவதும் மனந்திரும்பி, ஆயிரவருட அரசாட்சியில் அவர்கள் தேவனிடத்தில் செய்து கொள்ளப் போகிற உடன்படிக்கைகளுக்கும், பொருத்தனைகளுக்கும் இவை நிழலாக இருக்கின்றன. ஆசாரியர்களால் பிரகாரத்தில் கொடுக்கப்பட்ட ப–களுக்கு, எரிக்கப்படும் இந்த கிடாரி சம்பந்தமுடையதல்ல. இந்த சிவப்புக் கிடாரியின் மூலம் காண்பிக்கப்பட்ட உண்மைப் பொருளை வேறு எங்காவதுதான் நாம் பார்க்க வேண்டும். ஏனெனில் இந்த வார்த்தை ஏதாவது ஒருவகையில் ஆசாரியர்களை நிழலாக காண்பிக்குமாயின், ஆசாரியரில் யாராவது ஒருவர் அதை உண்மையை உணர்த்தும் வகையில் கொன்றிருக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

அப்படியானால், இந்த சிவப்புக் கிடாரியின் ப– எதை காண்பிப்பதாக உள்ளது? “பாளையத்திற்கு” புறம்பே துன்புறுத்தப்பட்டு, தேவஜனங்களை, ஆயிரம்வருட யுகத்தில் அவரது ஜனமாகப் போகின்றவர்களையும் சேர்த்து சுத்திகரிக்கவும் பரிசுத்தமாக்கவும் வரம் பெற்றிருக்கும், எந்த வகுப்பாரை அல்லது எந்த மனிதர்களை இந்த கிடாரி நிழலாகக் காண்பிக்கின்றது?

நம்முடைய பதில் : ராஜரீக ஆசாரியக் கூட்டத்தாரல்லாத, “பாளையத்திற்கு” புறம்பே நீதிக்காக பாடுபட்ட தேவனுடைய மக்களடங்கிய ஒரு வகுப்பாரையே இக்கிடாரி நிழலாகக் காண்பிக்கின்றது.

இம்மக்களுடைய சுருக்க வரலாற்றையும் துன்பங்களையும் எபி. 11ம் அதிகாரத்தில் அப்போஸ்தலன் பவுல் கொடுத்திருப்பதை நாம் காணலாம். அதைக் குறித்து அப்போஸ்தலன் சொல்லும்போது “பின்னும் நான் என்ன சொல்லுவேன்? கிதியோன், பாராக், சிம்சோன், யெப்தா, தாவீது, சாமுயேல் என்பவர்களையும், தீர்க்கதரிசிகளையுங்குறித்து நான் விவரஞ்சொல்ல வேண்டுமானால் காலம் போதாது. விசுவாசத்தினாலே அவர்கள் ராஜ்ஜியங்களை ஜெயித்தார்கள், நீதியை நடப்பித்தார்கள், வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள், சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள், அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள், பட்டயகருக்குக்குத் தப்பினார்கள், பலவீனத்தில் பலன் கொண்டார்கள்; யுத்தத்தில் வல்லவர்களானார்கள், அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள். ஸ்தீரிகள் சாகக்கொடுத்த தங்களுடையவர்களை உயிரோடெழுந்திருக்கப் பெற்றார்கள்; வேறுசிலர் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு, விடுதலைப் பெறச் சம்மதியாமல், வாதிக்கப்பட்டார்கள்; வேறுசிலர் நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அநுபவித்தார்கள்; கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், பரீட்சைப் பார்க்கப்பட்டார்கள், பட்டயத்தினால் வெட்டப்பட்டு மரித்தார்கள், செம்மறியாட்டுத் தோல்களையும், வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக்கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அனுபவித்தார்கள்; உலகம் அவர்களுக்குப் பாத்திரமாயிருக்கவில்லை.” எபி. 11:32-38

இங்கே, கிடாரி நிழலாகக் காண்பிக்கின்ற பொருத்தமான ஒரு வகுப்பாரை நாம் பார்க்கிறோம். இவ்வகுப்பார், ஆசாரிய வகுப்பாராக இல்லாதிருப்பினும் பாளையத்திற்கு புறம்பே தங்கள் ஜீவனை அர்ப்பணித்தவர்களாக உள்ளனர். கனத்தில் எவ்விதத்திலும் குறைவுள்ளவர்களல்ல. ஆனாலும் இவர்கள் ஆசாரிய வகுப்பாரல்ல. இவர்கள் பிரதான ஆசாரியனின் சரீரத்தில் எந்த அங்கமாகவும் இல்லை. அதனால், பாவநிவாரண நாளில் செய்யப்படும் பாவநிவிர்த்தி ப-யில் இவர்களுக்கு எவ்வித பங்கும் இல்லை. பரிசுத்தஸ்தலமும், மகா பரிசுத்தஸ்தலமும் நிழலாகக் காண்பிக்கும் ஆவிக்குரிய நிலையிலும் இவர்களுக்கு பங்கு இல்லை. இவ்விதம் ‘‘ராஜரீக ஆசாரியக்’’ கூட்டத்தாரில் முற்பிதாக்கள் அங்கத்தினர்களாக இருக்க மாட்டார்கள் என்று நாம் சொல்லுவது சிலருக்கு குறிப்பிடத்தக்க விசேஷித்த ஒன்றாக தோன்றலாம். அதேபோல, ராஜரீக ஆசாரியரில் குறிப்பிட்ட எண்ணிக்கைக்குமேல் அதிகமாக இருக்கும் தேவனுடைய

உண்மையான ஊழியக்காரர்கள், அந்த ராஜரீக ஆசாரியக் கூட்ட வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள் என அதே உறுதியுடன் நாம் சொல்லுவோம். நாம் சொல்லக்கூடிய இந்த காரியம் தேவனின் வார்த்தையிலும் சொல்லப்பட்டிருக்கின்றது. ‘‘இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சி பெற்றும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையாமற்போனார்கள். அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு **விசேஷித்த நன்மையானதொன்றைத்** தேவன் **நமக்கென்று** முன்னதாக நியமித்திருந்தார்.” - எபி 11:39,40

இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் பிரவேசிக்குமுன்னே, (வரும் பாவநிவாரணத்தில் விசுவாசத்தால் நீதிமானாக்கப்பட்ட) ஆவிக்குரிய லேவியர்கள் இருந்தார்கள் என்னும் கருத்து நமக்கு எளிதாக விளங்குகிறது. எனினும் கர்த்தராகிய இயேசு உலகத்தில் பிரவேசிக்கும் முன்பு ஆவிக்குரிய ஆசாரியர்கள் இருந்திருக்க முடியாது என்பதையும் நாம் அறிதல் வேண்டும். ஏனெனில், அவரே தலை அல்லது பிரதான ஆசாரியர், எல்லாவற்றிலும் தலைசிறந்தவர். எவரும் அவரது சகோதரர் மற்றும் இராஜரீக ஆசாரியத்துவத்தின் உறுப்பினர்கள் ஆவதற்கு முன்பாகவே அவரது **‘‘சரீரத்தின்’’ கறைகளையும்,** “அவருடைய வீட்டாரின்’’ பாவங்களையும் போக்க பிராயச்சித்தம் செய்தார். இயேசுகிறிஸ்து தாமே, தமக்கு முன்பாக ஜீவித்த விசுவாசிகளை குறித்தும், தமக்கு உடன் சுதந்திரவாளிகளாக தமது அடிச்சுவட்டில் நடந்து தம்மைப் பின்பற்றுகிற விசுவாசிகளைக் குறித்தும் குறிப்பாக பிரித்து சொல்-யிருக்கிறார். யோவான் ஸ்நானகனைக் குறித்து அவர் சொல்லும்போது, ‘‘ஸ்திரீகளிடத்தில் பிறந்தவர்களில் யோவான் ஸ்நானகனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை; ஆகிலும், பரலோக ராஜ்ஜியத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறானென்று உங்களுக்கு மெய்யாகவே சொல்லுகிறேன்” (மத். 11:11) என்றார். இந்த யோவான்ஸ்நானன் மரணபரியந்தம் பாளையத்திற்கு புறம்பே உபத்திரவப்பட்ட சிவப்புக்கிடாரி வகுப்பைச் சேர்ந்தவன். ஆனால், பாவநிவாரண நாளில், பிரகாரத்திலுள்ள தேவனின் ப-பீடத்தில் கொழுப்பு, ஜீவ உறுப்புகள் அர்ப்பணிக்கப்பட்டு, மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் எடுத்துச் செல்லப்பட்ட இரத்தம் முதலான மேம்பட்ட ப-களாகி, இயேசு கிறிஸ்துவில் புதிய சிருஷ்டிகளாகி அவரது சரீரமாகிய சபையாகி, அவருடைய உடன் சுதந்திரவாளிகளானவர்களைக் காட்டிலும் அவன் மேம்பட்டவன் அல்ல.

இவ்விதம் முற்பிதாக்கள் எவ்விதத்திலும் பாவநிவாரணத்தில் பங்கு இல்லாமற்போனாலும் **பாவத்தி-ருந்து சுத்திகரிக்கும்** பணியில் சம்பந்தமுள்ளவர்களாக இருக்கிறார்கள். சத்திய ஜலத்தோடு கலந்து ஈசோப்பால் குற்றங்களை சுத்திகரிக்கும் அவர்களது சாம்பலானது (ஞானம், மரணபரியந்தம் அவர்களது விசுவாசத்தை நினைவுகூறுதல்) தேவனோடு முழுஇசைவை ஏற்படுத்திக்கொள்ள விரும்பும் அனைவரையும் சுத்திகரித்து ஸ்திரப்படுத்துவதில் மதிப்புமிக்கதாக உள்ளது. “தீட்டுப்பட்டவர்கள் மேல் தெளிக்கப்படும் கிடாரியின் சாம்பல், சரீரசுத்தியுண்டாகும்படி பரிசுத்தப்படுத்தும்.” (எபி. 9:13) முற்பிதாக்கள். கடந்தகால விசுவாசத்தின் இந்த பாடங்கள் மூலமாக நம்மிடம் முக்கியத்துவம் பெறாமல் அப்போஸ்தலன் குறிப்பிடும், பாவநிவாரண நாளின் “காளை மற்றும் வெள்ளாட்டுக்கடா” ஆகியவற்றின் இரத்தத்தின் மூலம் பாவநிவாரண நாளில் அளிக்கப்பட்ட பாவப–களுடன் அவர்கள் சம்பந்தப்பட்டிருந்ததாலேயே அவர்கள் முக்கியத்துவம் பெற்றனர். (கிடாரியின் **சாம்பல்** என நிழலாகச் சொல்லப்படும்) முற்பிதாக்களின் பாடங்கள் அவர்களது விசுவாசத்தால் நினைவுகூறப்பட்டு நமக்கு தற்போது பெரியஅளவில் சுத்திகரிக்கும் வல்லமையாக இருப்பது மட்டுமல்ல, ஆயிரவருட யுகத்தின்போது அது மிகப்பெரிய அளவில் பொருத்தமானதாகவும் மனுக்குலத்திற்கு ஒரு ஆசீர்வாதமாகவும் அமையும். ஏனெனில் நாம் முன்பு பார்த்தபடி, தேவனுடைய திட்டமென்னவெனில், முற்பிதாக்களில் மிகப்பெரியவனாக இருக்கிறவன் தேவனுடைய ராஜ்ஜியத்தில் சிறியவனாக இருப்பவனைக் காட்டிலும் கனத்தில் குறைவுள்ளவனாக இருப்பதாக நாம் பார்த்தாலும், அந்த ராஜ்ஜியத்தில் அவன் தேவனுடைய முக்கிய காரியஸ்தனாக, பிரதிநிதியாக, உயர்ந்த ஸ்தானத்தில் இருப்பான். எப்படியெனில், அவர்கள் “பூமியெங்கும் பிரபுக்களாக இருப்பார்கள்,” பிரதிநிதியாக மாத்திரமல்லாமல், அவர்கள் மூலமாகத்தான் “பூமியின் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்.” இப்படியாக, முற்பிதாக்களின் விசுவாசத் தன்மையை குறிப்பிடும் ஒன்றாக சேர்த்து, குவிக்கப்பட்ட சாம்பல், எதிர்காலப் பயனுக்காக வைக்கப்பட்டிருக்கிறது; இவ்வாறு, அனுபவத்திலும், விசுவாசத்திலும், கீழ்ப்படித–லும், நம்பிக்கையிலும் இன்னும் அதிக காரியங்களிலும் வரப்போகிற மனுக்குலம் விலைமதிக்க முடியாத பாடங்களை கற்றுக்கொள்வதற்காக சேர்த்து வைக்கப்படுகிறது; அது அவர்களை சுத்திகரித்து, பரிசுத்தமாக்கும். ஆனாலும் பாவநிவாரண நாளின் ப–களில்லாமல் அல்ல; அதற்கு சம்பந்தமுள்ளதாயும் அதன்

அடிப்படையிலும் அவ்வாறு பரிசுத்தமாக்கப்படும். - சங். 45:16.

கிடாரி எரியும்போது **சாட்சியாக** பார்க்கிற ஆசாரியன் கேதுருக் கட்டையையும், ஈசோப்பையும், சிவப்புநூலையும் எடுத்து, கிடாரி எரிக்கப்படுகிற நெருப்பின் நடுவிலே போடுகிறான். ஈசோப்பு சுத்திகரிப்பைக் காண்பிக்கின்றது. எப்பொழுதும் பச்சை நிறமாகவே இருக்கும் கேதுரு கட்டை நித்திய ஜீவனைக் குறிக்கிறது. சிவப்பு நூல் கிறிஸ்துவின் இரத்தத்தைக் குறிக்கின்றது. இவ்வாறாக எரிதழ-ன் மத்தியிலே எறியப்படும் இம்மூன்றும் முற்பிதாக்கள் மேல் குவிக்கப்பட்ட அவமானங்களைக் குறிக்கிறது. உலகம் முற்பிதாக்களுக்கு பாத்திரமாக இருக்கவில்லை. இவ்விதம் கல்லெறியுண்டு, வாளாலறுக்கப்பட்டு இழிவான காரியங்கள் அனைத்தையும் அனுபவித்தார்கள். அவர்கள் விசுவாசத்தின் மூலம் கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தின் புண்ணியம், சத்திய சுத்திகரிப்பு, வரமாகிய நித்திய ஜீவன் ஆகியவைகளை சுதந்தரித்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டவர்களாகிறார்கள். உதவி ஆசாரியன் (ஆரோன் அல்ல. இவன் இயேசு கிறிஸ்துவிற்கு முன்னடையாளமானவன்) பின்பு கிடாரி எரிந்ததை பார்த்து அங்கீகரித்து, அதன் இரத்தத்தில் சிறிது எடுத்து ஆசரிப்பு கூடாரத்திற்கு எதிராக தெளிக்கிறான். இந்த **உதவி ஆசாரியன்** அப்போஸ்தலனாகிய பவுலுக்கு நிழலாயிருக்கிறான். இந்த அப்போஸ்தலன் தேவனுடைய உதவியால் (எ-யேசர் என்றால் “தேவனால் உதவி செய்யப்படுகிறவன்” என்று பொருள்) பாவநிவாரண நாளின் பாவ நிவாரண ப-களை நமக்கு காண்பித்ததுமல்லாமல், முற்பிதாக்களுக்கு நிழலாயிருக்கிற சிவப்பு கிடாரியின் பொருளையும் நமக்கு தெளிவாக சுட்டிக் காட்டுகிறான். (எபிரெயர் 11) இந்த பரம அழைப்பிற்குரிய காலத்தில் வாழாதிருந்தாலும், பிரதான ஆசாரியனுடைய அங்கங்களாக இருக்கும் சிலாக்கியத்தை அவர்கள் பெறாமல் போனாலும், ஆசரிப்புக் கூடாரத்தின் நிலைமைகளுக்கு அவர்களது வாழ்க்கை பூரணமாக ஒத்திசைந்துள்ளதை காண்பிக்க ஆசரிப்புகூடாரத்தை நோக்கி இவ்வாறாக இரத்தத்தை தெளிக்கிறான்.

சிவப்பு கிடாரியானது நுகத்தடி வைக்கப்பட்டதாக இருந்தது. நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படுத்தப்படாமல் இருந்த நீதிமானாக்கப்பட்டவர்களை இது நிழலாகக் காண்பிக்கின்றது. அநேக முற்பிதாக்கள் இந்த நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ் பிறந்து அதனுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிய வேண்டிய நிலையில் இருந்து

மாம்சத்தின் அபூரணத்தால் ஆக்கினைக்கு உள்ளாகி இருந்திருந்தாலும், தேவன் அவர்களை விசுவாசத்தின் மூலமாக, நீதிமானாகிய ஆபிரகாமின் பிள்ளைகளாக ஆக்குகிறார். அப்போஸ்தலனும் இதைக்குறித்து “இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சி பெற்றார்கள்” என்று சாட்சி கூறுகிறார். நன்றாய் செய்தாய் - இது தேவனை அவர்கள் சந்தோஷப் படுத்தினார்கள் என்பதற்கு சாட்சியாகும். ஆகவே, தேவனும் அவருடைய வாக்குத்தத்தின்படியே ஆசீர்வதிக்கிறார். தேவன் அக்காலத்திலேயே ஆசீர்வாதங்களை கொடுக்காதிருப்பினும், அவர்கள் காத்திருந்து ஆபிரகாமின் ஆவிக்குரிய வித்தாகிய கிறிஸ்துவின் மூலமாக அவர்கள் பெற்றுக்கொள்ளப் போகின்றனர். இந்த ப-யானது ஒரு கிடாரியாக (பசுவாக) இருக்க வேண்டும். **காளையாக** அல்ல. **காளை** மட்டுமே பாவநிவாரண நாளில் ப-யிடப்படுகிறது. **சிவப்பு** பசுவாக இருக்க வேண்டும் என்பதானது, முற்பிதாக்களும் பாவமற்றவர்களல்ல என்பதையும், எனவே, பாவநிவாரண நாளுக்கு முன்பாகவே அவர்கள் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் என்பதையும், மற்றவர்களைப் போலவே இவர்களும் பாவிகள்தான் என்பதையும் நமக்கு போதிக்கிறது. மேலே விவரிக்கப்பட்டவைகள் மூலம் அவர்கள் **விசுவாசத்தால்** சுத்திகரிக்கப்பட்டு நீதிமான்களாக்கப் பட்டவர்கள் என்ற உண்மை விளங்குகிறது.

இந்த சிவப்பு கிடாரியின் சாம்பல் மற்றவர்களை அதாவது **மரணத்தோடு** தொடர்புடையவர்களை சுத்திகரிக்கும் செயல் வினோதமாக உள்ளது. இந்த சாம்பல் தனிமனிதனுடைய பாவத்தை போக்கும்படி ஏற்படுத்தப்பட்டதல்ல. தனிமனிதனுடைய பாவம் பாவநிவாரண நாளின் ப-கள் மூலம் மாத்திரமே சுத்தகிரிக்கப்படும். மாறாக, தேவனுடைய (ஆயிரவருட யுகத்தில்) ராஜ்ஜியத்தில், **ஆதாமின் மரணத்திற்குரிய** தீட்டி-ருந்து தங்களை விடுவித்துக் கொண்டு மானுட பூரணத்தை விரும்புகிறவர்கள் முற்பிதாக்கள் மூலமாக பெறப்போகிற சுத்திகரிப்பையே இது குறிப்பிடுகிறது. விழுந்துபோன மனிதனுடைய நிலை, மரணத்துடன் தொடர்பு கொண்டதாக உள்ளது. வம்சாவழியினால் உண்டான சரீரத்தின் பலவீனங்களும், கறைகளும் மரணத்திற்கு தொடர்புள்ளவையாக உள்ளன. இவையெல்லாவற்றி-ருந்தும் விடுபட சிவப்பு கிடாரியின் சாம்ப-னால் தேவனுடைய ஜனங்களாக ஆகவுள்ள அனைவரும் சுத்திகரித்துக் கொள்வார்கள். சிவப்புக் கிடாரியின் சாம்பல் சுத்தமான ஒரு இடத்தில் கொட்டி வைக்கப்பட்டதுபோல, முற்பிதாக்களின்

சகல கஷ்டமான அனுபவங்களும் அடுத்த நிலையில் பிரபுக்களாக வைக்கப்படும்போது ஆசீர்வாதங்களும், போதனைகளும் அடங்கியதாகக் காணப்படும். மன்னிக்கப்பட்ட ஒவ்வொரு பாவியும், தான் முழுவதும் சுத்திகரிக்கப்பட வேண்டுமானால், தண்ணீரில் (சத்தியத்தில்) மாத்திரம் தன்னைக் கழுவிக் கொள்ளாமல், இந்த ''பிரபுக்களின்'' போதனைகளையும் தனக்கு முன்பாக வைத்துக் கொண்டு, ஜீவிக்க வேண்டும். இப்போதனைகள் கிடாரியின் சாம்பல் தூவப்படுதல் மூலமாக விசுவாசம், அனுபவத்தினால் கற்றுக்கொண்ட கீழ்ப்படிதல் ஆகியவற்றை குறிப்பிடுகின்றன. – யாத். 12:22; லேவி. 14:4, 49; சங். 51:7; எபி. 9:19

# மாபெரும் இரட்சிப்பு

“விலை தரவேண்டியதில்லையா? இல்லை, இம்மிகூட இல்லை.
எதையும் கொடுக்கவேண்டியதில்லையா? இல்லை, துளிகூட இல்லை.
செலுத்த வேண்டியது, கொடுக்க வேண்டியது எல்லாவற்றையும்
தேவனுடைய சொந்த ஆசீர்வாத வழியிலேயே இயேசு கொடுத்துவிட்டார்.

“கொடுத்துத் தீர்க்க வேண்டியதில்லையா? எல்லாம் கொடுத்து தீர்த்தாகிவிட்டது.
கோபப்பட ஒன்றுமில்லையா? சமாதானம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.
இயேசு ஒருவரே பாவிகளுக்கு ஆதாரம்;
அவரது சிலுவை இரத்தத்தால், சமாதானத்தை உண்டுபண்ணியிருக்கிறார்.

“திகில் என்னாச்சு? அதற்கு இடமே இல்லை.
அவரது கிருபையின் உணர்வு இதயத்தில் நிரம்பியுள்ளது.
எனது சமாதானம் இன்பமானது, திகட்டவே திகட்டாது,
அது எனது இதயத்தை களிப்பினால் பொங்கச் செய்கிறது.

“குற்றமே இல்லையா? இல்லை, ஒரு கறை கூட இல்லை;
எப்படி இரத்தம் ஒருவனைக் கூட விடக் கூடியதா?
எனது மனம் சுத்திகரிக்கப்பட்டுள்ளது. எனது ஆவி சுதந்திரமாயிருக்கிறது.
தேவனுக்கும் எனக்கும் விலையேறப்பெற்ற இரத்தமாயிருக்கிறது.

“எனது எதிர்காலம் என்ன? அது மகிமையும் அழகும் உடையதாயிருக்கிறது.
நீதிமானாக்கப்பட்டு, பரிசுத்தப்படுத்தப்பட்டதால் நான் மகிமையில் பங்கு பெறுவேன்
அவரது இரத்தத்தால் முத-ல் மீட்கப்பட்டேன், பிறகு அவரது கிருபையால்
சிம்மாசனத்தில் அமர்த்தப்பட்டேன்.
எனது ஆண்டவருடன் அவருக்கே, அவரது மணவாட்டியாக,
சொந்தமாக்கப்படுவேன்.

“அடுத்து என்ன என்று நீ கேட்கலாம்? ஓ, மகிமை என்னை தொடரும்;
நாளை விடிய-ல் பூமி களிகூறும்.
ராஜரீகமும் ஆளுகையும் வருகிறது, ஆளுகை செய்யவும், ஆசீர்வதிக்கவும்.
வருத்தமும், அழுகையும், துன்பமும் மரணமும் பறந்துபோகும்.”

# அத்தியாயம் 8
# குறிப்பிடத்தக்க இதர நிழல்கள்

பிரகாரத்தின் தூண்கள் – வெள்ளைத்திரைகள் – வெள்ளிக் கொக்கிகள் – பரிசுத்த ஸ்தலம், மகாபரிசுத்த ஸ்தலங்களின் நிலைக்கதவுகள் – பொன் மேஜை – பொன் குத்துவிளக்கு – ஆழ்ந்த காரியங்களை அறியும் ஆவிக்குரிய ஆசாரியர்களும், அதை அறிந்து கொள்ளாத ஆவிக்குரிய லேவியர்களும் – பொற்ப–பீடம் – மகா பரிசுத்த ஸ்தலத்தில் உள்ள உடன்படிக்கை பெட்டி – அதில் அடங்கியுள்ள பொருட்களும் அவற்றின் முக்கியத்துவங்களும் – கிருபாசனம் – இரண்டு கேரூபீன்கள் – கறைபடாத ஆசாரியன் – யுகா யுகங்களாக மறைவாயிருந்த இரகசியம்.

முன்பு சொல்லப்பட்ட பகுதிகளில் சில முக்கிய விளக்கங்களை வேண்டுமென்றே நீக்கியிருக்கிறோம். ஆசரிப்பு கூடாரம், அதன் வேலைகள், அதனுடைய சிறப்பு முத–ய பொதுவான திட்டத்தை கவனமாகப் படித்து அறிந்து கொண்டவர்கள், நல்லபடியாக இன்னும் அதிகம் அறிந்துகொள்ள பயனுள்ள சில விளக்கங்களை இப்பொழுது பார்க்கலாம்.

“பிரகாரத்தில்” வெள்ளைத் திரைகளைத் தாங்கி நிற்கும் **தூண்கள் நீதிமானாக்கப்பட்ட விசுவாசிகளைக்** குறிக்கிறது. ஏற்கனவே நாம் பார்த்தது போன்று “பிரகாரம்” நீதிமானாக்கப்பட்ட நிலையைக் குறிக்கிறது. அந்த தூண்கள் மரத்தினாலானவை. அழியக்கூடியவை. இவ்வகுப்பார் உண்மையில் மானுட நிலையில் பூரணராக இல்லை என்பதை இது காண்பிக்கின்றது. மனிதனுடைய பூரணமான நிலையை தாமிரம் நிழலாகக் காண்பிக்கிறது. பூரண மனிதர்களை குறிப்பதற்கு அந்த கம்பங்கள் தாமிரத்தினாலோ அல்லது தாமிரத் தகட்டால் மூடப்பட்டதாகவோ இருக்க வேண்டும். ஆனால், அவைகள் மரத்தால் செய்யப்பட்டு தாமிரத்தினால் செய்யப்பட்ட கட்குழிகளில் நிறுத்தப்பட்டன. பாவநிலையி–ருந்தாலும், அவர்கள் நின்று கொண்டு இருப்பது மனித பூரணநிலையில் என்பதை குறிக்கிறது. **விசுவாசத்தினால்**

**நீதிமானாக்கப்படுதலை** இதைத் தவிர வேறு எவ்விதமாகவும் காண்பிக்க முடியாது.

"பிரகாரத்தில்" உள்ள தூண்களினால் தாங்கப்பட்ட **வெள்ளைத் திரைகள்** நீதிமானாக்கப்பட்டு பரிசுத்த நிலையிலான அதே நீதி மற்றும் புனிதத்தன்மையை அருமையாக விவரிக்கிறது. இப்படி, நீதிமானாக்கப்பட்டவன் உலகத்திற்கு ("பாளையம்") தூய பஞ்சு திரையை தொடர்ந்து காண்பித்துக் கொண்டு நிற்கவேண்டும் என்பதை நிழலாகக் காண்பிக்கின்றது. இந்த தூய பஞ்சு திரை கிறிஸ்துவின் நீதியால் அவர்களை மூடிக்கொண்டிருப்பதைக் குறிப்பிடுகின்றது.

**வெள்ளிக் கொக்கிகளால்** தூண்கள் திரைகளை பிடித்திருக்கின்றன. இவ்வெள்ளிக் கொக்கிகள் சத்தியத்திற்கு அடையாளமாக இருக்கின்றன. வெள்ளியானது **சத்தியத்திற்கு** பொதுவான அடையாளமாகும். "பிரகாரத்தில்" தூண்கள் நிழலாகக் காட்டும் நீதிமானாக்கப்பட்டவர்கள் **உண்மையாகவே** இயேசு கிறிஸ்துவின் நீதி, தங்களுடைய எல்லா பலவீனங்களை மூடுகிறது என்று உரிமை கொண்டாடக் கூடியவர்களாக உள்ளனர் என்பதை குறிக்கிறது. (யாத். 27:11-17) மேலும் **சத்தியத்தின்** உதவியால் தான் அவர்கள் தொடர்ந்து நீதிமானுக்குரிய நிலையில் நிற்க முடிகிறது.

ஆசரிப்பு கூடாரத்தின் பரிசுத்த ஸ்தலத்தின் நுழைவாயிலுள்ள **நிலைக்கால்கள்**, முதல் "திரை"யால் மூடப்பட்டுள்ளன. இத்தூண் "பிரகாரத்தில்" உள்ள தூண்களுக்கு முற்றிலும் வேறுபட்டிருக்கின்றன. இவைகள் அர்ப்பணம் செய்த பரிசுத்தவான்களுக்கு – ''கிறிஸ்துவுக்குள்ளாக இருக்கும் புதிய சிருஷ்டிகளுக்கு'' நிழலாகயிருக்கின்றன. இவைகளுக்கும், ''பிரகாரத்தில்'' உள்ள தூண்களுக்கும் இடையே உள்ள வேறுபாடு, நீதிமானாக்கப்பட்ட விசுவாசிகளுக்கும், பரிசுத்தமாக்கப்பட்ட விசுவாசிகளுக்கும் இடையிலான வேறுபாட்டைக் குறிக்கிறது. நீதிமானாக்கப்பட்டவனின் **மரணத்துக்குள்ளான அர்ப்பணம்** நாம் பார்த்தபடி பரிசுத்தஸ்தலத்திற்குள் பிரவேசிக்கும் வழியாகும். மனித சிந்தை, மாம்ச எண்ணம் என்பவற்றை மரிக்கச் செய்யும் முதலாம் திரையாகும். ஆகையால் இத்தூண்கள் இந்த மாற்றங்களை விவரிக்க வேண்டும். அவ்வாறே இவை செய்கின்றன. ஏனென்றால், இத்தூண்கள் தெய்வீகச் சாயலை குறிக்கும் விதத்தில், பொன்னினால் மூடப்பட்டுள்ளன. அவைகள் தாமிரத்தால் செய்யப்பட்ட கட்குழிகளில் நிறுத்தப்பட்டுள்ளன.

இது ''இந்த பொக்கிஷத்தை (தெய்வீக சாயல்) எவ்வாறு மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்" (2 கொரி. 4:7) என்பதைக் குறிக்கின்றது. அதாவது நம்முடைய புதிய சாயல் இன்னும் அந்த **நீதியாக்கப்பட்ட மனித சாய-ல்தான்** நிலை கொண்டிருக்கிறது. "பரிசுத்த ஸ்தலத்தில்" நாம் நின்று கொண்டிருக்கிறபோது, இன்னும் புதிய சிருஷ்டிகளாக பூரணப்படவில்லை என்பதை இது தெளிவாக, மிகச் சரியாக நமக்கு காண்பிக்கிறது. இதை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். - யாத். 26:37

**''மகாபரிசுத்த ஸ்தலத்தின்'' கதவு நிலைக்கால்கள்** "இரண்டாம்" திரைக்குள் இருக்கிறது. இவைகள், மாம்சத்தி-ருந்து (திரை) முற்றிலும் விலகி, ஆவிக்குரிய பூரண நிலையை அடைந்து கொள்பவர்களைக் குறிக்கின்றது. இந்தக் கம்பங்கள் இந்த காரியத்தை உணர்த்தும் வகையில் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன. ஏனெனில், இக்கம்பங்கள் தெய்வீக சாயலுக்கு ஒப்பாக பொன்னால் மூடப்பட்டு, இனிமேலும் தாமிரத்தினால் செய்யப்பட்ட கட்குழிகளில் நிறுத்தப்படாமல் - இனிமேலும் மனித சாயலை சார்ந்திராமல் - அவைகள் வெள்ளியினால் (உண்மை, சத்தியம், மெய்மை) செய்யப்பட்ட கட்குழிகளில் நிறுத்தப்பட்டுள்ளன. அதாவது, நீங்கள் திரைக்குள்ளாக வந்துவிட்டால், ஆவியின் பூரண நிலையை அடைந்து கொள்வீர்கள் என்னும் காரியத்தை நமக்கு சொல்வதாக இருக்கிறது. நாம் உண்மையிலேயே மெய்யான புதிய சிருஷ்டிகளாக்கப்படுகிறோம். - யாத். 26:32

"பரிசுத்த ஸ்தலத்தில்" சமூகத்து அப்பங்களை தாங்கி நிற்கும் **பொன்மேஜை** ''ஜீவவசனத்தை பிடித்துக் கொண்டு'' (பி-. 2:14) கிறிஸ்துவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டு, ஊழியஞ் செய்கிற திருச்சபைக்கு - இயேசுகிறிஸ்துவும் அப்போஸ்தலரும் உட்பட்ட சபைக்கு நிழலாயிருக்கிறது. ஆவியின் உடன்படிக்கைக்குள்ளாக வரும் அனைவரையும் போஷிப்பதும் பலப்படுத்துவதும் அவர்களை பிரகாசிப்பிக்கச் செய்வதும் இந்த யுகத்தில் உண்மையான சபைக்கு மகத்தான பணியாக உள்ளது. கிறிஸ்துவின் மணவாட்டி தன்னை ஆயத்தம் பண்ணிக் கொள்ள வேண்டும். (வெளி. 19:7) இந்த யுகத்தில் இவ்வுலகத்திற்கு சாட்சி கூறுவது இரண்டாம்தரமான, எதேச்சையான ஒன்றாகும். உலகம் முழுமைக்குமான தேவனுடைய ஆசீர்வாதம் "ஏற்ற காலத்தில்" சுவிசேஷ யுகம் (மெய்யான பாவநிவாரணநாளின் ப-)

முடிந்த பிறகு தொடரப் போகிறது.

பொன்மேஜைக்கு நேர் எதிரே இருக்கும் **பொன் குத்துவிளக்கு** அல்லது விளக்குத் தண்டானது, பரிசுத்த ஸ்தலத்தில் இருக்கும் அனைவருக்கும் வெளிச்சம் கொடுக்கின்றது. இந்த விளக்குத்தண்டு பசும்பொன்னினால் அடிப்பு வேலையாய் செய்யப்பட்ட ஒரே பொருளாக இருக்கிறது. இது ஏழு கிளைகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு கிளையும் ஒவ்வொரு விளக்குவீதமாக மொத்தம் ஏழு விளக்குகளை தாங்கிக் கொண்டிருக்கின்றன – ஏழு ஒரு பூரண எண்ணாக அமைகிறது. இவ்வகையான குத்துவிளக்கு திருச்சபையை, தலை தொடங்கி "சிறுமந்தையின்" கடைசி அங்கம் வரைக்குமுள்ள அனைவரையும் நிழலாகக் காண்பிக்கின்றது. அவர் தெய்வீக சாயலுக்கு (பொன்) பங்குள்ளவர்களை மானுடரி–ருந்து பிரித்து எடுக்கிறார். நம்முடைய கர்த்தர் சொல்கிறார்: "நீ கண்ட ஏழு குத்துவிளக்குகளும் ஏழு சபைகளாம்." (வெளி. 1:20) இந்த ஒரே திருசபையைத்தான், ஏழு நிலைகள் அல்லது வளர்ச்சிகள் கொண்ட ஆசியாமைனரில் உள்ள ஏழு சபைகளாக அடையாளமாக சொல்லப்பட்டிருக்கின்றன – (வெளி. 1:11) ஆம். இந்த "ராஜரீக ஆசாரிய கூட்டத்தாரைத்தான் – உண்மையான வெளிச்சத்தை தாங்கி செல்கின்ற இவர்களைத்தான் – பெயரளவில் அல்ல ஆவிக்குரிய முதற்பேறானவர்களாக பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற இவர்களைத்தான் இந்த குத்துவிளக்கு, உண்மையான திருச்சபைக்கு நிழலாகக் காண்பிக்கின்றது.

இதன் வேலைப்பாடு மிக அழகாக இருந்தது. ஒரு கனியும் ஒரு பூவுமாக ஒன்றையொன்று தொடருமாறு செய்யப்பட்டிருக்கிறது. இது திருச்சபை கடைசிவரைக்கும் கனி கொடுக்கவும், அழகாயிருக்கவும் வேண்டும் என்பதை நிழலாக காட்டுகின்றது. ஒவ்வொரு கிளையிலும் உள்ள விளக்கு பகுதி வாதுமை கொட்டைக்கு ஒப்பான வடிவத்தில் அமைக்கப்பட்டிருந்தன. அதன் முக்கியத்துவத்தை ஆரோனின் கோலை குறித்து பார்க்கும்போது அறிந்து கொள்ளலாம்.

குத்துவிளக்கு ஒ–வ எண்ணெயால் எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கும். அதற்கு வேண்டிய எண்ணெய் "இடித்து" பிழிந்த தெளிவான ஒ–வ எண்ணெயாக இருக்க வேண்டும். இந்த எண்ணெய் பரிசுத்த ஆவியைக் குறிக்கிறது. இதன் வெளிச்சம் சத்திய ஆவி எனும் பரிசுத்த விழிப்புணர்வை குறித்தது. இந்த வெளிச்சம் ஆசாரியர்களுக்கு மட்டுமே. மற்ற எவரும் அதை பார்க்கவோ அல்லது அதனால் பலன்

அடையவோ அனுமதிக்கப்படவில்லை. இவ்விதம் திருச்சபையாருக்கு சத்திய அறிவூட்ட கொடுக்கப்பட்ட தேவ ஆவி அல்லது சிந்தையைக் குறிக்கிறது. தேவனுடைய ஆழ்ந்த சத்தியங்கள் வெளிப்படுத்தப்படும். ஜென்மசுபாவமான மனுஷனுக்கு அவைகள் மறைக்கப்பட்டிருக்கிறது. (1 கொரி.2:14) அவன் ஒரு சாதாரண விசுவாசியாக நீதிமானாக்கப்பட்டவனாக இருந்தாலும் (லேவியன்) அது அவனுக்கு மறைக்கப்பட்டிருக்கும். ஆகவே, "ராஜரீக ஆசாரிய கூட்டத்தார்" மாத்திரமே "பரிசுத்த ஸ்தலத்தில்" மறைத்து வைக்கப்பட்டிருக்கின்ற, தேவனுடைய ஆழ்ந்த ஆவிக்குரிய காரியங்களை அறிந்துகொள்ள அனுமதிக்கப்பட்டனர். ஆசாரியர்கள் (கிறிஸ்துவின் சரீரமாக, தங்களை அர்ப்பணித்தவர்கள்) எப்பொழுதும் "பரிசுத்த ஸ்தலத்திற்குள்" போகவர அனுமதிக்கப்பட்டவர்களாயிருக்கின்றனர். அது அவர்களுடைய உரிமையாக இருக்கிறது. அது அவர்களுக்காகவே ஆயத்தமாக்கப் பட்டிருக்கிறது. (எபி. 9:6) மாம்ச சிந்தை அவர்களுக்கும், பரிசுத்தப் பொருட்களுக்கும் இடையே திரையாக இருப்பதால் லேவி வகுப்பார் அவற்றை பார்க்க முடியாமல் இருக்கின்றனர். இக்குறையை போக்க வேண்டுமாயின், தங்களைத் தாங்களே ஒப்புக்கொடுத்து மனித சித்தம் மற்றும் சுபாவத்தை முழுமையாக ப- கொடுக்க வேண்டும்.

பிரதான ஆசாரியனாகிய ஆரோனும் அவனுக்குப் பின்னால் வந்த அவன் குமாரரும் சாயங்காலம் தொடங்கி விடியற்காலம் மட்டும் கர்த்தருடைய சந்நிதானத்தில் அந்தக் குத்துவிளக்கை சீராக எரியவைக்க வேண்டும். (யாத். 27:20, 21; 30:8) ஆகவே, நம்முடைய பிரதான ஆசாரியர் நம்மை தினந்தோறும் கிறிஸ்துவின் சிந்தையால் நிரப்பி பழைய வேண்டாத கசடை அறுத்தெறிந்து வருகிறார். அந்த விளக்குத்திரியின் மூலம்தான் பரிசுத்த ஆவி செயல்படுகிறது.

## ஆவிக்குரிய ஆசாரியர்களும் லேவியர்களும்

புற சமய மக்களுக்கு இயற்கையானவற்றைத் தவிர வேறு எந்த காரியங்களையும், தேவ வார்த்தையைப் பற்றிய ஆழமான ஆவிக்குரிய உண்மைகளை பகுத்துப் பார்க்க முடிவதில்லை என்று நாம் சில நேரங்களில் திகைக்கின்றோமோ? மனிதனுடைய இரட்சிப்பையும் முந்தின சீருக்கு கொண்டுவருதலையும் அறிந்திருக்கிற அவர்கள், தெய்வீக, பரம அழைப்பை ஏன் அறியாம-ருக்கிறார்கள்? இந்த ஆசரிப்பு கூடாரப் பாடங்கள் ஏன் இப்படி உள்ளது என்பதை நமக்கு தெரிவிக்கின்றன.

அவர்கள் ''விசுவாசக் குடும்பத்தாரின்'' நீதிமான்களாக்கப்பட்ட சகோதரர்களாக உள்ளனர். ஆனால் கிறிஸ்துவில் சகோதரர் அல்ல; முழுவதுமாக அர்ப்பணிக்கவில்லை; ப-யாகுபவர்களும் இல்லை. அவர்கள் லேவியர்களாக இருக்கின்றனர். பிரகாரத்தில் இருக்கும் அவர்கள் ஆசாரியர்களாக தங்களை அர்ப்பணிக்காததினாலே, தங்களுடைய மனித உரிமைகளை ப-யிடாததினாலே அவர்கள் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்க முடியாத நிலையில் உள்ளனர். அதனால் அவர்கள் ஆசாரியர்களுக்காக ஆயத்தம்பண்ணி வைக்கப்பட்டிருப்பவை களை அறியாமல் இருக்கிறார்கள். "தேவன் தம்மில் அன்பு கூறுகிறவர் களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளை (இயற்கையான) கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் **மனுஷனுடைய** இருதயத்தில் தோன்றவுமில்லை. (அர்ப்பணிப்பின் மூலம் புது சிருஷ்டிகளாக்கப்பட்டு தெய்வீக சாயலைத் தரித்து கொள்வதற்காக அழைக்கப்பட்டிருக்கிற) **நமக்கோ** தேவன் அவைகளை தமது ஆவியினாலே (விளக்கின் வெளிச்சத்தினாலே) வெளிப்படுத்தினார். ஏனெனில் அந்த ஆவி எல்லாவற்றையும், தேவனுடைய (மறைத்து வைக்கப்பட்ட) **ஆழங்களையும்** ஆராய்ந்திருக்கிறது (வெளிப்படுத்து கிறது)." - 1 கொரி. 2:9,10

பெயர் கிறிஸ்தவ சபை நீதிமான்களாக்கப்பட்ட மற்றும் பரிசுத்தமாக்கப்பட்ட வகுப்பினராகிய லேவியர்கள் மற்றும் ஆசாரியர்களையும், மாயக்காரர்களையும் எப்போதும் உள்ளடக்கியது. அப்போஸ்தலன் பவுல் எழுதின கடிதங்களில், சில பகுதிகள் நீதிமானாக்கப்பட்ட ஆனால் முழுவதும் அர்ப்பணிக்காத லேவியர்களுக் காகவே சொல்லப்பட்டிருக்கின்றன. இவ்வாறாக "கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் **சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்"** (கலா. 5:24) என்று கலாத்தியருக்கு அவர் எழுதுகிறார். இவ்விதம் ஒரு சிலரே சுவிசேஷ அழைப்பிற்கு இணங்கி, தங்கள் மாம்சத்தை சிலுவையில் ப-யாக அறைந்திருக்கின்றனர் என்று அப்போஸ்தலன் சொல்வதாக தெரிகிறது.

அதே போல, ரோமருக்கு ''அப்படியிருக்க, சகோதரரே (கிறிஸ்துவுக்குள் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டவர்கள் - லேவியர்கள்) நீங்கள் உங்கள் சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவப-யாக (ஆசாரியர்கள் ஆவதற்கு நீங்கள் உங்களை முழுவதுமாக அர்ப்பணியுங்கள்) ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று

தேவனுடைய இரக்கங்களை (கிறிஸ்துவின் மூலமாக நாம் நீதிமான்களாவதற்கு வெளிப்படுத்தப்பட்ட) முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்" - என்று எழுதுகிறார். (ரோமர். 12:1) பாவத்தை விட்டு விலகி, இருதயத்தில் சுத்தமாகி, கிறிஸ்துவுக்குள் தேவனுடைய கிருபையை ஏற்றுக்கொண்டவர்கள், இயேசுவிற்குள்ளான விசுவாசத்தினால், இலகுவாக நீதிமான்களாக்கப்படுகின்றனர். தேவன் அவர்களை பாவமில்லாதவர்களாக, அல்லது பரிசுத்தமானவர்களாக அங்கீகரித்துக் கொள்கிறார். இந்த பாவநிவாரண நாளில் (சுவிசேஷ யுகத்தில்) ராஜரீக ஆசாரியக் கூட்டத்தின் அங்கங்களின் எண்ணிக்கை நிறைவடையும் வரைக்கும், இவ்விதமாக தங்களை ப-செய்கிறவர் களை, தேவன் இயேசுகிறிஸ்துவின் மூலமாக அங்கீகரித்துக் கொள்ள சித்தமுள்ளவராயிருக்கிறார். "**ஏற்றுக்கொள்ளக்கூடிய** சமயம் இதுவே" - அத்தகைய ப-கள் ஏற்றுக்கொள்ளத்தக்க நேரம் இது. உண்மை! நாம் இப்போது பார்த்தபடி உலகத்தின் ப-களை தேவன் ஏற்றுக்கொள்ளுவார். ஆகவே கிரயம் கொள்ளப்பட்ட தங்களை தேவனுக்கு அளிப்பதே அனைவரும் பின்பற்ற வேண்டிய சரியான வழியாகும். இந்த யுகம் முடிந்தபிறகு, **மரண** பரியந்தமுமான எந்த ப-யும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. புதிய உலகத்தின் சட்டமுறைகள் துவக்கப்பட்டபின்பு, இவ்வித ப-கள் சாத்தியமல்ல.

ஆரம்பகால சபைகளில் (தற்கால, உலகப்பிரகாரமான கலப்படங்கள் நிறைந்த குழப்பமான ''பாபிலோன்'' சபைகளில்) பெரும்பாலோர் மரணபரியந்தம் தங்களை தேவனுக்கு அர்ப்பணிக்கவில்லை எனத் தெரிகிறது. ஆகையினால், அவர்கள் நிஜமான ராஜரீக ஆசாரிய கூட்டத்தாராக இல்லை. மாறாக, வெறும் லேவியர்களாக, **பணிவிடைகளை** மாத்திரம் செய்து, **ப** -செய்யாதவர்களாக இருக்கிறார்கள்.

நியாயப்பிரமாணத்தின் நிழலை நாம் திரும்பி பார்க்கும்போது, பணிவிடை செய்வதற்காக 8580 லேவியர்கள் நியமிக்கப்பட்டதாகக் காண்கிறோம். ஆனால் ப-யிடுவதற்காக நியமிக்கப்பட்ட ஆசாரியர்கள் ஐந்துபேர் மாத்திரமே. (எண். 4:46-48; யாத்.28:1) நிழ-லே சொல்லப்பட்டிருக்கிற மற்ற சிறப்பம்சங்கள் போல இதுவும் நீதிமான்களாக்கப்பட்ட விசுவாசிகள், சுய ப-யின்மூலம் அர்ப்பணித்தவர்கள் ஆகியோரின் விகிதாச்சாரத்தை விவரிப்பதற்காக உருவாக்கப்பட்டது. பெயர் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை தற்போது

இலட்சக்கணக்கில் இருந்தாலும், மாயக்காரர்களை ஒதுக்கினால் மீதமுள்ள ஆயிரத்து எழுநூறு பேருக்கு ஒருவர் ஜீவப-யாக ஒப்புக்கொடுக்கிறவர் என்று எடுத்துக்கொண்டால் (இந்த எண்ணிக்கை குறைவாக இருப்பினும், நிழ-ன்படி ஒரு சரியான கணக்காகும்) கர்த்தர் தவறான அறிவிப்பு தரவில்லை என்பது தெரிகிறது. இராஜ்யத்தைப் பெற்றுக்கொள்பவர் ("ராஜரீக ஆசாரியக் கூட்டம்") ஒரு "சிறு மந்தை" (லூக்கா. 12:32) என்று அவர் சொன்னார். உண்மையில்லாத, அசட்டை செய்த மூன்றில் இரண்டு ஆசாரியர்களை தேவன் மரணத்திற்கு* அடையாளமாக அடித்ததை நினைக்கும்போது 8580 ஆசாரியர்களுக்கு 3 பேர் என்ற கணக்கு 2800 லேவியர்களுக்கு ஒரு ஆசாரியன் என்பதாக இருக்கும்.

விசுவாசிகள் தங்கள் பாவங்களை நீக்கிப் போக்குவதற்காக முயற்சிகள் செய்வதினாலேயே அவர்கள் "ஆசாரியர்களாகி" விட முடியாது. ஏனெனில் லேவியர்களும் ஆசாரியர்களும் இருதயத்தில் விருத்தசேதனம் செய்து கொள்ளவேண்டும், "மாம்ச அசுசி" (பாவங்கள்) நீங்கினவர்களாக இருக்க வேண்டும். இவற்றையெல்லாம் "பிரகாரத்தில்" உள்ள தண்ணீர் தொட்டி நிழலாகக் காண்பிக்கின்றது. இந்த தண்ணீர் தொட்டியில்தான், லேவியர்களும் ஆசாரியர்களும் தங்களை கழுவிக்கொள்வார்கள். தாழ்மை, பெருந்தன்மை, இரக்கம் நிறைந்த ஆவி ஆகியவை எப்பொழுதுமே தேவனுக்கு அர்ப்பணித்த நிலையைக் குறிக்காது. இக்குணங்கள் இயற்கையான பூரண மனிதனுக்கே **(தேவனுடைய சாயல்)** உரியது. எப்பொழுதாவது அவர்கள் விழுந்துபோகும் விபத்தில் கொஞ்சமாக நிலைத்திருக்கிறார்கள். ஆனால் இவ்வித சாட்சிகள், பெயர்ச் சபைகளில் முழுமையான அர்ப்பணிப்புக்கு ஆதாரமாகக் கொள்ளப்படுவதில்லை.

---

* நித்தியஜீவனை **எப்பொழுதாவது**, **எந்த** நிலையிலாயினும் பெறப் போகிறவர்களுடைய அந்த மேலான நிலையை நாம் தெளிவாக அறியவரும்போது, ஒருசிலர் மாத்திரமே தங்களுடைய வாழ்க்கையில் **பூரண அன்பை** கடைப்பிடிக்கின்றார்கள் என உணர்கிறோம். ஆரோனின் **இரண்டு** குமாரர்கள் தேவனால் அழிக்கப்பட்டனர், அவர்கள் அர்ப்பணிக்கப்பட்டும் ஆவியில் பிறந்தும் தங்களுடைய இருதயத்தில் பாவஞ்செய்கிற அநேகருக்கு ஒப்பாக ஏன் இருக்கக்கூடாது என்ற கேள்விக்கு நாம் நடத்திச் செல்லப்படுகிறோம். அவர்கள் ஜீவனுக்கு பாத்திரர்களாக இல்லாமல் இரண்டாம் மரணத்திற்கே பங்காளிகளாயிருக்கின்றார்கள் என்றும் தீர்மானிக்கலாம்.

விசுவாசிகள் அரசியல் பணிகளிலோ அல்லது சீர்திருத்தும் பணிகளிலோ தங்களைத் தாங்களே வெறுத்து, தங்களை முழுமையாக ஈடுபடுத்தும் செயல், அவர்கள் தேவனிடத்தில் தங்களை முழுமையாக அர்ப்பணிக்கின்றார்கள் என்பதற்கு சாட்சியாக இராது. அது ஒரு குறிப்பிட்ட **பணிக்கு** செய்யப்படும் அர்ப்பணிப்புக்கு சாட்சியாகத்தான் அமையும். தேவனிடத்தில் அர்ப்பணித்தல் என்பது, எந்த வேலையானாலும், எங்கு வேண்டுமானாலும் செய்தலைக் குறிக்கும். "என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்" – **உம்முடைய** சித்தம் **உம்முடைய** வழியில் என்ற ரீதியில் செய்யப்பட வேண்டும். அப்போதுதான், அவருடைய வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்ட திட்டத்தை தேடுவதையும், நேரம் அனைத்தையும் அவருக்காக அவருடைய ஊழியத்திற்காக, அவர் ஏற்படுத்தி வைத்திருக்கின்ற திட்டத்திற்கு இசைவாக செய்யப்படுவதையும் தான் அர்ப்பணிப்பு என்ற காரியம் உறுதிப்படுத்தும்.

ஆசரிப்பு கூடாரத்திற்குள் இருக்கும் மகிமையையும் அழகையும் சிலர் மாத்திரமே பார்த்தார்கள் என்பதற்காக வியக்க வேண்டாம். ஆசாரியர்கள் மட்டும்தான் அவற்றைப் பார்க்க முடியும். லேவியர்கள் அவை விவரிக்கப்படுவதைக் கேட்பதன்மூலம் மட்டுமே அறிய இயலும். அவர்கள் மறைக்கப்பட்ட வெளிச்சத்தையும் அழகையும் பார்த்ததேயில்லை; ''சமூகத்து அப்பங்களை'' அவர்கள் உட்கொண்டதேயில்லை. ''பொற்பீடத்தில்'' ஒருக்காலும் ஏற்றுக்கொள்ளப்படுகிற சுகந்தவர்க்கங்களை இட்டதில்லை. இவையெல்லாவற்றையும் செய்ய வேண்டுமாயின் தேவனுக்கு முழு அர்ப்பணிப்பு என்ற திரையின் வழியாக பாவநிவாரண நாளில் ப–செய்ய வேண்டும்.

''பரிசுத்தஸ்தலத்தில்'' இருக்கும் **''பொற்பீடம்''** இப்பொழுது ப–செய்து கொண்டுவருகிற திருச்சபையாரை "சிறுமந்தையை" நிழலாகக் காண்பிக்கின்றது. இந்த பீடத்தி–ருந்து இயேசுகிறிஸ்து மூலம் தேவனுக்கு விருப்பமான சுகந்த வாசனை எழும்புகிறது. ஆசாரியர்கள் மனமுவந்து செய்யும் பணிகளின் பிரயாசங்கள் தேவனுடைய மகிமைக்காக ஆசாரியர்கள் செய்யும் ஊழியங்கள், அவர்களது துதிகள், மனமுவந்து கீழ்ப்படிதல் போன்ற எதுவும் தேவனுடைய மகிமைக்காக செய்யப்படுகின்றன. தேவனுக்கு பிரியமான சுகந்தத்தை அளிப்பவர்கள்

(1 பேது. 2:5) "மகாபரிசுத்த ஸ்தலத்தை" பிரிக்கின்ற "திரைக்கு" வெகுஅருகில், அவர்களது பிதாவிற்கு மிக அருகில் வருகிறார்கள். **அவர்கள்** ஏதாகினும் விண்ணப்பங்கள் செய்யவேண்டியிருந்தால், சுகந்தவர்க்கங்களோடு படைக்கப்படும். "சகல **பரிசுத்தவான்களுடைய** ஜெபங்களோடும் செலுத்தும்படி மிகுந்த தூபவர்க்கம்" – (வெளி. 8:3) படைக்கப்படும். தேவனுடைய ஆசாரியர்களின் ஜெபங்கள் மிகுந்த சக்தி வாய்ந்தவை. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தூபவர்க்கத்தை தொடர்ந்து எரியவைத்துக் கொண்டிருந்தார். "நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன்" என்று சொல்கிறார். (யோவான். 11:42) அவரது சரீர அங்கத்தினர்களாகிய உடன் ஆசாரியர்கள் விசுவாசம், அன்பு, தேவனுக்கு கீழ்ப்படிதல் என்ற தூபவர்க்கத்தை தொடர்ந்து அளித்து வந்தால் அவர்கள் செவிசாய்க்கப்படுவார்கள். இவ்வாறாக தங்களது உடன்படிக்கையை கடைப்பிடிக்காதவர்கள் தங்கள் கோரிக்கைகள் அங்கீகரிக்கப்படும் என்று எதிர்பார்க்கக்கூடாது. "நீங்கள் என்னிலும் என் வார்த்தை (போதனைகள்) உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்." – (யோவா. 15:7) இயேசுகிறிஸ்துவின் போதனையாகிய வழிகாட்டுதலை நமது வேண்டுகோளுக்கும், எதிர்பார்ப்புக்களுக்கும் எடுத்துக்கொள்வது அவசியம் என்பது தெளிவாகிறது. **தவறான** காரியங்களை, தேவனின் திட்டத்திற்கு இசைவாய் இல்லாதவற்றை கேட்கலாகாது என்பதை மறக்கக்கூடாது. ஆனால் இதை அநேகர் உணராதிருக்கின்றனர்.

''மகாபரிசுத்த ஸ்தலத்தின்'' (பூரணமான, தெய்வீக நிலை) மகிமையைக் குறித்து நாம் ஏற்கனவே சில நிழலான காரியங்கள் மூலமாக பார்த்தோம். அதை எந்த **மனிதனும்** அணுக முடியாது. (1 தீமோ. 6:16) ஆனால், ராஜரீக ஆசாரியக் கூட்டம், கிறிஸ்துவின் முழுச்சரீரம், தன்னுடைய பணியாகிய தூபவர்க்கங்களை படைத்தவுடனே – நிறைவேற்றினவுடனே இயேசுகிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டிகளாக இருந்த இவர்கள் தெய்வீக சாய-ல் பங்கு பெறுவார்கள். தூபவர்க்கத்தின் புகை அவர்களுக்கு முன்பாக யேகோவா தேவனுடைய பிரசன்னத்திற்கு செல்கிறது. அவர்களும் "திரைக்கு" அப்பால் பிரவேசித்து, இயேசுகிறிஸ்துவின் மூலம் தேவனால் ஏற்றுக்கொள்ளப் படுகிறவர்களாவார்கள்.

## மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள்

மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் இருக்கும் ஒரே பொருள் **உடன்படிக்கை பெட்டி** அல்லது “சாட்சி பெட்டி” ஆகும். (எபி. 9:2-4 ஐயும் டைக்லாட் அடிக்குறிப்பையும் பார்க்கவும்) இதன் பெயர், யேகோவா தேவனுடைய திட்டத்திற்கு உருக்கொடுப்பதை விளக்குவதாக தெரிகிறது. தேவனின் சிருஷ்டிப்பு ஆரம்பமாவதற்கு முன்னதாக - அவரது திட்டம் மிகச்சிறிய அளவு வளர்ச்சியடைவதற்கு முன்பதாக அவர் தம்மிடம் வைத்திருந்த திட்டம் இது. தேவனின் மாறாத திட்டத்தை இது குறிப்பதாக இருக்கின்றது. கிறிஸ்துவுக்குள்ளாக (தலை மற்றும் சரீரம்) மனுக்குலத்திற்காக தேவன் முன்குறித்திருந்த, மறைவாயிருந்த இரகசியமாகிய* கிருபையின் ஐஸ்வரியங்களைக் கொண்ட **தேவனுடைய நித்திய திட்டத்தை** இந்த உடன்படிக்கை பெட்டியானது நிழலாகக் காண்பிக்கின்றது. இது தெய்வீக சாய-ல் பங்குபெறப் போகிறவர்களாகிய இயேசுகிறிஸ்துவுக்கும், அவருடைய மணவாட்டிக் கூட்டத்தாராகிய “சிறுமந்தைக்கும்” அடையாளமாக உள்ளது. பரம அழைப்பின் பந்தயப் பொருளாகிய வல்லமையும், மகிமையும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவிற்கும், அவருடைய அங்கங்களுக்கும் முன்பாக, மனமகிழ்ச்சியாக வைக்கப்பட்ட ஒன்றாக இருக்கிறது.

முன்னமே சொல்லப்பட்ட பிரகாரமாக, இது செவ்வக வடிவில், பொன்தகட்டால் மூடப்பட்ட பெட்டியாக இருக்கின்றது. பொன், மகிமையடைந்த திருச்சபை பெறும் தெய்வீக சாயலுக்கு ஒப்பாக இருக்கின்றது. இப்பெட்டிக்குள், நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகள் அடங்கிய இரண்டு பலகைகள் (உபா. 31:24), ஆரோனின் துளிர்த்த கோல் (எண். 17:8), மற்றும் பொற்பாத்திரத்தில் மன்னா (யாத். 16:32) ஆகிய பொருட்கள் இருந்தன. தேவனுடைய பூரண நியாயப்பிரமாணத்தை கிறிஸ்து எவ்விதமாக முழுவதுமாக நிறைவேற்றுவார் என்பதையும், நியாயத்தை வழங்கும் உரிமை எவ்வாறு அவருக்கு கொடுக்கப்படுகிறது என்பதையும் இந்த பிரமாணம் நிழலாக காண்பிக்கிறது.

நியாயப் பிரமாணத்தின் நீதியானது, உண்மையில் நம்முடைய தலையாகிய இயேசுகிறிஸ்துவில் நிறைவேறியது. மேலும் அது

---

* வேதாகமப் பாடங்கள் தொகுதி 1, அதிகாரம் 5

கிறிஸ்துவில் **புதிய சிருஷ்டிகளாக** இருப்பவர்களிலும் நிறைவேறினதாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. இப்புதிய சிருஷ்டிகள் ''கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களாக உள்ளனர்." (ரோமர் 8:1) அதாவது இவர்கள் புதிய சிந்தைக்கு கீழ்ப்படிந்தவர்களாக நடப்பவர்கள். நம்முடைய பழைய மனுஷனுடைய பலவீனங்களை நாம் தினந்தோறும் சிலுவையிலறைந்து வருகிறோம். அவைகள் மறுபடியும் புதிய சிருஷ்டிகளாகிய நம்மை தாக்காதவாறு நாம் முன்னமே ஈடுப-யின் மூலமாக மீட்கப்பட்டுவிட்டோம். கிறிஸ்துவுக்குள்ளாக இருக்கும் வரைக்கும் அவைகள் நம்மை மறுபடியும் சூழ்ந்து கொள்ளாது.

"நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறுகிறது" (ரோம. 8:4) என்று எழுதியிருக்கின்றபடி, நம்முடைய ஓட்டத்தின் இறுதிநிலையை (பூரணத்தை) இது குறிப்பிடுகிறதாக எண்ணப்படுகிறது. ஏனெனில் நாம் உண்மையான பூரணத்திற்கடுத்தப் பாதையிலும் அதைநோக்கியும் நடந்து கொண்டிருக்கிறோம். அதை அடையும்போது, மகாபரிசுத்த நிலையை அடைவோம். இதை உடன்படிக்கை பெட்டியானது நிழலாக காண்பிக்கின்றது.

## உடன்படிக்கை பெட்டிக்குள் அடங்கியுள்ள பொருட்கள்

**''ஆரோனின் துளிர்த்த கோல்''** ராஜரீக ஆசாரிய கூட்டத்தாராகிய கிறிஸ்துவின் எல்லா அங்கங்களின் தெரிந்தெடுக்கப்பட்ட குணநலன்களைக் காண்பிக்கின்றது. எண்ணாகமம் பதினேழாம் அதிகாரத்தைப் படிப்பதினாலே, ஆரோனின் துளிர்த்த கோ-ன் பொருளை நன்கு அறிந்து கொள்ளமுடியும். அது, ஆரோனையும் அவன் குமாரரையும் யேகோவா தேவன் ஏற்றுக்கொண்டதை காண்பிக்கின்றது. இந்த ஆசாரியத்துவம் கிறிஸ்துவிற்கும் திருச்சபையாருக்கும் நிழலாயிருக்கின்றது. ஆசாரியனின் மத்தியஸ்தர் வேலையை இவர்கள் மாத்திரமே செய்ய இயலும். ஆகவே, இந்த கோல், "ராஜரீக ஆசாரிய கூட்டமாகிய" கிறிஸ்து (தலை மற்றும் சரீரம்) அங்கீகரிக்கப்பட்டதை காண்பிக்கின்றது. கோல் துளிர்த்து வாதுமைப் பழங்களைக் கொடுத்தது. வாதுமை மரத்தின் ஒரு வினோதம் என்னவென்றால், இலைகள் தோன்றுவதற்கு முன்னமே பழ-மொக்குகள் தோன்றிவிடும். இதேபோலத்தான் "ராஜரீக ஆசாரியகூட்டமும்" அவர்கள் இலைகளாகிய பிரயாசங்களை செய்வதற்கு முன்னமே, ப-கள் அல்லது **கனிகளை** கொடுக்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள்.

**பொற்பாத்திரத்தில் உள்ள மன்னா**, தேவனுடைய கிறிஸ்துவின் சுயாதீனமான சாகாமையை அடையாளமாக காண்பிக்கின்றது. "ஜெயங்கொள்ளுகிறவனுக்கு நான் **மறைவான மன்னாவை** புசிக்கக் கொடுப்பேன்" - (வெளி. 2:17) என்று நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சொல்லும்போது சந்தேகமில்லாமல் சாகாமையைத் தான் கொடுப்பதாக கூறுகிறார்.

இஸ்ரயேலர்கள் ஜீவித்திருக்கும்படி, வானத்தி-ருந்து இறங்கின அப்பம்தான் இந்த மன்னா. இது தேவன் கிறிஸ்துவின் மூலமாக உலகத்திற்கு கொடுத்த ஜீவ அப்பத்தைக் குறிக்கிறது. இஸ்ரயேலர் குறைவுபடாமல் பட்டினியால் சாகாதிருக்க வேண்டுமெனில் அவர்கள் தினந்தோறும் மன்னாவை சேகரித்தபோல, **உலகத்தாரும்** தாங்கள் என்றென்றும் ஜீவித்திருக்க வேண்டுமானால், ஜீவனையும் கிருபையையும் தேடவேண்டியது மிகவும் அவசியம் ஆகும்.

இயேசுகிறிஸ்துவிற்கு உடன்-சுதந்தரர்களானவர்களுக்கு, அபிஷேகம் பண்ணப்பட்ட சரீரஅங்கங்களுக்கு தேவன் அதேவிதமான ஆனால் மற்றவர்களுக்கு கொடுக்கப்பட்டதி-ருந்து வித்தியாசமான ஒரு விசேஷமான மன்னாவைக் கொடுக்கிறார். அது "மறைவான மன்னா." இந்த கலசத்திலுள்ள மன்னாவுடைய ஒரு வினோதம் என்னவெனில் அது **கெட்டுப்போகாது**. ஆகவே, இது திருச்சபையாகிய "வித்தின்" எல்லா அங்கத்தினர்களுக்கும் தேவன் வாக்களித்த சாகாமை, கெட்டுப்போகாத தன்மை ஆகியவற்றை நிழலாகக் காண்பிக்கிறது. இஸ்ரயேலரை போஷிக்க கொடுக்கப்பட்ட மன்னா, **கெட்டுப்போகாம**-ல்லை. அதனால்தான் அது தினந்தோறும் சேகரிக்கப்பட வேண்டியதாயிருந்தது. அதேபோலத்தான், இஸ்ரயேலராக அங்கீகரிக்கப்பட்ட மனுக்குலம் கீழ்ப்படிந்து தேவனுடைய ஜனங்களாகி உத்தமமாக ஜீவித்தால், தேவனால் நித்திய ஜீவன் வழங்கப்படுவார்கள். ஆனால் நிபந்தனையின் பேரில்தான் வழங்கப்படும். மீண்டும் புதுப்பித்துக் கொள்ளும் வகையில்தான் அமைந்திருக்கும். ஆனால் சாதகமில்லாத தற்கால சூழ்நிலையில் விசுவாசமுள்ள ஜெயம்கொண்டோரான "சிறுமந்தைக்கு" **கெட்டுப்போகாத**, சாவாமை* வழங்கப்படும். - வெளி. 2:17

ஆகவே இந்த பொன் உடன்படிக்கை பெட்டியில், தெய்வீக

---

* வேதாகம பாடங்கள் - தொகுதி 1 பக். 185 (ஆங்கிலம்)

கிறிஸ்துவில் வெளிப்படப்போகிற தேவனுடைய மகிமை நிழலாகச் சொல்லப்பட்டிருக்கிறது. துளிர்த்த கோல் தெரிந்து கொள்ளப்பட்ட ஆசாரியக் கூட்டத்தையும், நியாயப்பிரமாண பலகைகள் நீதியான நீதிபதியையும், பொற்கலசத்தில் இருக்கும் கெட்டுப்போகாத மன்னா சாவாமையையும், தெய்வீக சாயலையும் நிழலாகக் காண்பிக்கின்றது.

இந்தப் பெட்டிக்கு மேல், மூடியாக அமைந்திருப்பதுதான் **கிருபாசனம்**. இது கெட்டித் தங்கத்தினால் செய்யப்பட்ட ஒரு பலகையாகும். இதன் இரு முனைகளில், அதே உலோகத்தால் செய்யப்பட்ட இரண்டு கேரூபீன்கள், அவை நிற்கும் பலகையின் மையத்தை நோக்கியவாறு, சிறகுகள் மேல்நோக்கி தூக்கப்பட்ட நிலையில் பறக்க தயாராக உள்ளதைப் போல அமைக்கப்பட்டிருந்தன. இந்த கேரூபீன்களுக்கு இடையில், ‘‘கிருபாசனத்தின் மேல்’’ யேகோவாவினுடைய பிரசன்னத்தைக் காண்பிக்கும் ஒரு பிரகாசமான ஒளி இருந்தது.

உடன்படிக்கைப் பெட்டி இயேசுகிறிஸ்துவை குறித்தது போன்று கிருபாசனம், மகிமையின் வெளிச்சம் மற்றும் கேரூபீன்கள் அனைத்தும் சேர்த்து, “கிறிஸ்துவிற்கு தலையாக தேவன் இருக்கிறார்” (1 கொரி. 11:3) என்றபடி யேகோவா தேவனை குறிப்பிடுகிறது. இயேசு கிறிஸ்துவிற்கு எப்படியோ அதே போலத்தான் யேகோவா தேவனுக்கும், குணங்களை வெளிப்படுத்தும் பொருட்களினாலே அவர் இங்கே நிழலாக காண்பிக்கப்பட்டார். “ஷெகினா மகிமை” என்று அழைக்கப்பட்ட அந்த வெளிச்சம் யேகோவா தேவனே அகில உலகத்திற்கும் வெளிச்சமாக இருக்கிறதையும் இயேசுகிறிஸ்து உலகத்திற்கு வெளிச்சமாக இருப்பதையும் குறிப்பதாக உள்ளது. இது வேதாகமத்தில் ஏராளமான வசனங்களின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. “கேரூபீன்கள் மத்தியில் வாசம் பண்ணுகிறவரே, பிரகாசியும்.” சங். 80:1; 1 சாமு 4:4; 2 சாமு 6:2; ஏசா. 37:16.

மனிதத்தன்மை யேகோவாவின் பிரசன்னத்தில் பிரவேசிக்க முடியாது. எனவே, ராஜரீக பிரதான ஆசாரியன், ஆரோனால் அடையாமாகச் சொல்லப்படும் தலையும் சரீரமுமாக சேர்ந்த **புதிய** சிருஷ்டிகளாக “**தெய்வீக சாய-ல்** பங்குள்ளவர்களாக,” (மனிதத் தன்மையை சிலுவையில் அறைந்து, புதைத்தவர்களாக) அற்புதமான அந்த மகிமைக்குள் தோன்றுவதற்கு முன்பு, மாறியாக வேண்டும்.

பொன்னினாலான பலகையாக இருக்கும் கிருபாசனமானது (அல்லது மிகச் சரியான கிருபாதார ப-, ஏனெனில் தெய்வீக நியாயத்தின் தேவையை **திருப்தி** செய்ய ஆசாரியன் அதன்மேல் ப-யின் இரத்தத்தை சமர்ப்பிக்க வேண்டும்) யேகோவா தேவனுடைய முக்கிய குணநலனாகிய **நியாயத்தைக்** குறித்தது. தேவனுடைய சிங்காசனம் **நியாயத்தின்** மேல் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. "நீதியும் நியாயமும் உம்முடைய சிங்காசனத்தின் ஆதாரம்." - சங். 89:14; யோபு 36:17; 37:23; ஏசா. 56:1; வெளி. 15:3.

அப்போஸ்தலனாகிய பவுல் இயேசுகிறிஸ்துவைக் குறித்துச் சொல்லும்போது கிருபாதார ப- அல்லது கிருபாசானம் என்ற வார்த்தைக்கு **ஹிலாஸ்டெரியான்** என்ற கிரேக்க வார்த்தையை உபயோகிக்கிறார். தம்முடைய நீதியைக் காண்பிக்கும் பொருட்டாகவும், தாம் நிதியுள்ளவரும், இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்குகிறவருமாய்... "கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே ப-க்கும் கிருபாதார ப-யாக* அவரையே ஏற்படுத்தினார்." (ரோம. 3:25,26) மனித இரட்சிப்பிற்கு தேவனுடைய நியாயம், ஞானம், அன்பு மற்றும் வல்லமை மிக அதிகமாக உதவுகிறது என்பதைத் தான் மேற்கண்ட வசனத்தினால் இங்கே அறியப்படுகிறது. அனைத்துக் காரியங்களும் தம்முடைய குமாரனாகிய கர்த்தர் இயேசுவினால் மனுக்குலத்திற்கு அளிக்க தேவன் பிரியப்படுகிறார். இப்படியாக நிழ-லும், மகாபரிசுத்த ஸ்தலத்தி-ருந்து வெளியே வரும் பிரதான ஆசாரியன் யேகோவா தேவனுடைய நியாயம், ஞானம், அன்பு மற்றும் வல்லமைக்கு உயிருள்ள பிரதிநிதியாக இருக்கிறான். இவன் தெய்வீக கருணை, மன்னிப்பு, சமாதானம் ஆகியவற்றுக்கு உயிருள்ள பிரதிநிதியாக இருக்கிறான். தெய்வீகம் தெரியாதபடி மானுட பார்வையி-ருந்து மறைக்கப்பட்டிருந்தாலும், அத்தெய்வீகத்தின் குணநலன்கள் அனைவருக்கும், ஜீவிக்கும் கிருபாசனமான நமது பிரதான ஆசாரியன் மூலமாக வெளிப்படுத்தப்படுகின்றது. இவரே, இவ்வுலகத்தின் முடிவில் இம்மனுக்குலத்திடம் நெருங்கி அவர்கள்

---

* பொதுவான மொழிபெயர்ப்பு ஆங்கில பைபிளை மொழிபெயர்த்தவர்கள் 'ஹிலாஸ்டெரியான்' என்ற கிரேக்க வார்த்தையை கிருபாதாரப- என்று தவறாக மொழிபெயர்த்துள்ளனர். ஆனால் ஹிலாஸ்மாஸ் (hilasmos) (திருப்பியடைதல்) என்ற வார்த்தையை 1 யோவா. 2:2 மற்றும் 4:10 வசனங்களில் சரியாக கிருபாதார ப- என மொழிப் பெயர்த்துள்ளனர்.

அனைவரையும் தெய்வீக கிருபையின் ஐசுவரியத்தை புரிந்து கொள்ளச் செய்கிறார்.

**இரண்டு கேரூபீன்கள்**, அவரது வார்த்தையில் வெளிப்பட்டது போல யேகோவா தேவனுடைய இரண்டு முக்கிய குணங்களாகிய தெய்வீக அன்பு, தெய்வீக வல்லமை ஆகியவற்றைக் குறிக்கின்றன. இவை நியாயம் என்ற அடிப்படைக் கொள்கையில் அன்பு மற்றும் வல்லமையும் சேர்ந்து ஒரே நிலையில், ஏகமனதாக இசைவாக அமைய உதவுகின்றன. அவைகள் எல்லாம் **ஒரே துண்டினால்** செய்யப்பட்டிருக் கின்றன. நியாயம் முழுமையாக திருப்திப்படும் வரை அன்போ, வல்லமையோ செயல்பட முடியாது. பின்பு அவை உதவி செய்யவும், எழுப்பவும், ஆசீர்வதிக்கவும் பறக்கின்றன. அவைகள் கிருபாசனமாகிய நியாயத்தை நோக்கி, எப்போது செயல்படுவது என்பதற்காக காத்திருப்பதுபோல அவை செட்டைகளை விரித்து, தயாராக காத்திருக்கின்றன.

பிரதான ஆசாரியன், பாவநிவாரணத்தின் இரத்தத்தை எடுத்துக் கொண்டு நெருங்கி வந்தபோது, அந்த இரத்தத்தை கேரூபீன்களின் மேல் வைக்கவில்லை.

தெய்வீக வல்லமையோ, தெய்வீக அன்போ தனியாக ப–யைக் கேட்கவில்லை. ஆகவே பிரதான ஆசாரியன் இரத்தத்தை கேரூபீன்களின் மேல் தெளிக்க வேண்டிய அவசியமில்லை. தேவனுடைய பண்பாகிய **நியாயம்** மாத்திரமே பாவத்தை போக்கக் கூடியதாக இருக்கின்றது. அந்த நியாயம் சொல்வது என்னவெனில் ‘‘பாவத்தின் சம்பளம் மரணம்’’ என்பதே. பிரதான ஆசாரியன் பாவிகளுக்கான **ஈடுப-யை** செலுத்தினாரென்றால், அது நியாயத்திற்காக கொடுக்கப்பட்ட ஒன்றுதான். இதைத்தான் “கிருபாசனத்தின்” **கிருபாதாரப- மேல்** தெளிக்கப்பட்ட இரத்தம் எடுத்துச் சொல்கிறது.

தெய்வீக அன்பு, இரட்சிக்கக்கூடிய முழுதிட்டத்தை வகுக்க தூண்டியது. தேவன் இவ்வுலகத்தை அன்பு கூர்ந்ததினாலே, தம்முடைய ஒரேபேறான குமாரனைக் கொண்டு நியாயத்திற்கு வேண்டிய ஈடுப– கிரயத்தை கொடுக்கும்படி செய்தார். எனவே, பாவம் பிரவேசித்ததுமுதல், அன்பானது இரட்சிக்கும் பணியில் கிரியை செய்து கொண்டு வருகிறது. ஆமாம், “உலகத் தோற்றத்திற்கு முன்னே” இக்காரியம் செயற்பட்டு வருகிறது. – 1 பேது. 1:20

"கலகக்கார மனிதனை இரட்சிக்க
**அன்பு**தான் முதலாவது வழியை வகுத்தது."

பாவநிவாரண நாளின் ப-கள் (காளை மற்றும் வெள்ளாட்டுக்கடா) நிறைவேறும்போது, அன்பு அதன் பலன்களை பார்க்க காத்துக்கொண்டிருக்கிறது. இரத்தம் தெளிக்கப்படும்போது நியாயம் கத்துகிறது. இது போதும்; எல்லாம் முடிந்தது! அதன்பிறகு, அன்பும், வல்லமையும் கிரியை செய்ய ஆரம்பிக்கும். **மீட்கப்பட்ட** மனுக்குலத்தை ஆசீர்வதிக்க தங்களுடைய இறக்கைகளை விரிக்கும். நியாயம் திருப்தி செய்யப்படும் பொழுது அன்போடு இணைந்து நிற்கும் வல்லமையானது, அதே கிறிஸ்துவின் மூலம், தேவனுடைய கிருபைகளால் நிறைந்த உடன்படிக்கை பெட்டியின் மூலம் கிரியை செய்ய ஆரம்பிக்கும்.

**தெய்வீக** குடும்பத்தின் உறவும் ஒற்றுமையும் – குமாரனையும் அவருடைய மணவாட்டியையும் நிழலாகக் காண்பிக்கும் உடன்படிக்கைப் பெட்டிக்கு மூடியாக பிதாவாகிய தேவன் இசைவாக குறிப்பிடப்படுகிறார். இந்த மூடி, பெட்டிக்கு தலையாக இருக்கின்றது. சபைக்கு கிறிஸ்து தலையாயிருப்பதுபோல, முழு கிறிஸ்துவிற்கு தேவன் தலையாயிருக்கிறார். (1 கொரி. 11:3) இந்த ஒற்றுமையைக் குறித்துதான் இயேசு, ''நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன். உலகத்துக்காக வேண்டிக்கொள்ளாமல், நீர் எனக்கு தந்தவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறேன் ; "நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்ளுகிறேன்" (யோவா. 17:9,21) என ஜெபித்தார்.

## கறைபடாத ஆசாரியன்

கண்ணிலோ, கையிலோ, மூக்கிலோ, கா-லோ அல்லது வேறு எந்த பாகத்திலோ அல்லது ஆசாரியத்துவத்தின் அங்கமாகிய எவரும் கறையுள்ளவர்கள் அதிகப்படியான கைவிரலோ அல்லது கால்விரலோ இருந்தாலும் ஆசாரியனின் (பிரதான ஆசாரியன்) ஊழியத்துக்கு வரமுடியாது.

இது எதைக் காண்பிக்கிறதெனில், மகிமையடைந்த கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கம் ஒவ்வொன்றும் எவ்வித குறையுமில்லாமல் பூரணமாக இருப்பார்கள் என்பதையே. அதேப் போல, "சிறுமந்தையார்" தேவைக்கு

அதிகமாகவோ அல்லது குறைவுபட்டோ இராமல், முன்குறிக்கப்பட்டபடியே மிகச்சரியான எண்ணிக்கையில் இருப்பர். ஒருமுறை கிறிஸ்துவின் சரீரம் நிறைவடைந்தவுடன் அதன்பின்பு அது அதிகப்படுத்தப்பட மாட்டாது. உபரியாகாது. எனவே, விசேஷமாக கிறிஸ்துவின் சரீர அங்கமாக ஆவதற்கு “பரம அழைப்பிற்கு” “அழைக்கப்பட்ட” அனைவரும், தங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் (சிறுமந்தையின் அங்கங்களாக) உறுதி செய்யும்படி, பந்தையப் பொருளை அடையும்படி சீராக ஓடவேண்டும். அசதியாக இருந்து யாராவது பரிசை இழந்தால், வேறு ஒருவர் அந்த இடத்தை ஜெயம் கொள்வார். ஏனெனில், சரீரம் முழுமை அடையும்; ஒரு அங்கம் கூட குறைவு படாது. அதிகமும் ஆகாது. “ஒருவனும் **உன் கிரீடத்தை** எடுத்துக் கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றி கொண்டிரு” (வெளி. 3:11) என்பதைக் கவனிக்க வேண்டும்.

## “ஆதிகாலங்களுக்கும், தலைமுறை தலைமுறைகளுக்கும் மறைவாயிருந்த இரகசியம்”
### - கொலோ. 1:25 -

ஆசரிப்புக்கூடாரத்தின் அலங்காரமும் மகிமையும் – அதனுடைய பொற்சுவர்கள், அதனுடைய பொன் பணிமுட்டுகள், மற்றும் அதனுடைய வினோதமான வேலைப்பாடுள்ள திரைகள் அனைத்தும் **ஜனங்களின்** பார்வைக்கு முற்றிலும் மறைத்து வைக்கப்பட்டிருந்த இக்காரியம் சிலருக்கு ஆச்சரியத்தை அளிக்கிறது. சூரிய வெளிச்சம் கூட அதனுள் பிரவேசிக்க முடியாதவாறு ஆசரிப்பு கூடாரம் அமைக்கப்பட்டிருந்தது. பரிசுத்த ஸ்தலத்தில் இருந்த ஒளி குத்துவிளக்கி–ருந்தும், மகாபரிசுத்த ஸ்தலத்திற்கு வேண்டிய ஒளி ஷெகினா மகிமையி–ருந்து மாத்திரமே கிடைக்கப் பெற்றது. ஆனால் இதனுடைய பணிகளி–ருந்து நாம் பெற்ற பாடங்களுடன் இது பூரணமாக பொருந்துகிறது. தேவன், நிழலாயிருக்கிற அதை மூடி, அதனுடைய மகிமையையும் அலங்காரத்தையும் யாரும் பார்க்க முடியாத தோல்களினால் மூடினார். அதுபோல, ஆவிக்குரியவற்றின் மகிமைகளையும், அலங்காரங்களையும், தங்களை அர்ப்பணித்த நிலையிலுள்ள “ராஜரீக ஆசாரியக் கூட்டத்தார்” மாத்திரமே காண முடியும். இவர்கள் உலகத்திலும், வெளியிலும் இருக்கிறவர்கள் பார்த்து மெச்ச முடியாது மறைக்கப்பட்ட ஆனால் மகிமையான நிலைக்குள் நுழைகிறார்கள். அவர்களின் மகிமையான நம்பிக்கைகளும்,

அவர்களுடைய **புதிய சிருஷ்டியின்** நிலையும் மற்றவர்களி-ருந்து மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றன.

"ஆ இவைகளெல்லாம் ராஜரீக வழிகள்,
    அனைவரும் ஒரு ராஜாவின் பிள்ளைகள்,
அழியாத தெய்வீக கிரீடத்தின் சுதந்தரர்கள்,
    மேலும் இதோ ! களிப்புடன் அவர்கள் பாடுகிறார்கள் !

"பின் ஏன் அவர்கள் அங்ஙனம் தோன்றுகின்றனர்?
    ஏன் அவர்கள் அவ்வளவு நிந்தனையுடன் இருக்கிறார்கள்?
ஏனெனில் அவர்களது மகிமையின் வஸ்திரம் தென்படவில்லை,
    உலகம் அதை உணரவில்லை."